உ

சிவமயம்

தமிழ்ப் புராணகாப்பியமாகிய

சங்கர விலாசம்

விசயை நகரத்துச்

சிதம்பரநாத பூபதியால்

இயற்றப்பெற்றது.



செய்யுள்களின் பொருளைத் தொகுத்துக் கூறும்

தலையங்கங்களுடன்

யாழ்ப்பாணம் கொக்குவில்

இரகுநாதைபர் சோதிடபரிபாலனமடத் தலைவர்

பிரமஸ்ரீ ச. இ. சிவராமலிங்கையர் புத்திரரும்,

ஆரியதிராவிட பண்டிதருமாகிய

சி. இரத்தினசபாபதிஐயரால்

ஏட்டுப் பிரதியினின்றும்

எழுதப்பெற்று,

சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.


9154 C.C

சகஸ்ர கசசுo, ஈசுரஸ்ர கார்த்திகைமீ.

Copy Right]

1937.

[விலை ரூபா 2-00.



ஆரியதிராவிட பண்டிதர்

பிரமஶ்ரீ இ. சி. இரத்தினசபாபதி ஐயர்.

பதிப்புரை.



சில வருடங்களின் முன்னர் எமது பாட்டனாராகிய பிரமஸ்ரீ சங். இசகுநாதையரவர்களாற் சேர்த்துவைக்கப்பட்டு, சோதிடபரிபாலன மடத்துப் புத்தகக் கருவூலத்தில் இருந்த பழைய ஏட்டுப் பிரதிகளைப் பார்வையிட்டபோது, "சங்கர விலாசம்" என்னும் பெயருடைய ஓர் ஏட்டுப் பிரதியைக் கண்டேன். இது விருத்தப் பாக்களால் தமிழில் இயற்றப்பெற்ற ஓர் புராண சரிதமாகவும், பாக்களும் இன்னோசை யுடையனவாய் இராமாயணம் கந்தபுராணம் போன்ற சொன்னயமும் பொருணயமுமுடையனவாகவும் காணப்பட்டன.

அதனால், இந்நூலில் விருப்பங்கொண்ட யான் இப் புராணம் இதுவரை யாராலாவது அச்சிடப்பட்டிருக்குமோ என விசாரித்த விடத்து, எவ்விடத்தாவது அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, இதை அச்சிட்டு வெளிப்படுத்தினால் இதன் செய்யுளங்களை அறிஞர் தெரிந்துகொள்வரென்றும், இதனை இயற்றிய புலவரது பெயரும் பிரசித்தியடையுமென்றும், தமிழ்மொழிக்கும் சைவசமயத்துக்கும் உறுதியுண்டாகுமென்றும் எண்ணினேன்.

ஆனால், மடத்திலிருந்த ஏடு தமிழ்எழுத்தில் மிக அழகாக எழுதப்பெற்றிருந்தாலும் ஒற்றுப்புள்ளியிடாமையினாலும், எகர ஏகாரங்கள் ஒன்றுபோல எழுதப்பட்டதினாலும் புதிதாக ஏட்டைப் பார்த்தெழுதுவது கஷ்டமான வேலையாயிருந்தது. என்றாலும், அகராதி முதலியவற்றின் உதவியோடு ஒருவாறு ஏட்டைப் பார்த்துக் காகிதத்தில் எழுதத் தொடங்கினேன். இவ்வேடு மிகப் பழையதானதினாலும், பல காலமாக உபயோகிக்கப்படாதிருந்ததினாலும் இதில் அநேக இடங்கள் செல்லுக்கிரையானவைகளாகவும், பலவிடங்களில் ஏட்டிதழ் இருந்தும் எழுத்துகள் வண்டுதப்பெற்றனவாகவுமிருந்ததினால் வாசிக்க முடியாமல் இருந்தது. இச் சமயத்தில்தான், சில காலத்தின் முன் ஏட்டுப் பிரதியிலுள்ள இலக்கண இலக்கிய நூல்களைக் காகிதத்தில் எழுதி அச்சிடுவித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், வித்துவான் தாமோதரம்பிள்ளை, மகாமகோபாத்தியாயர் பிரமஸ்ரீ உ. வே. சாமிநாதையர் முதலியவர்களுத்துணைச் சிரமமுற்றிருப்பதென்பதை உய்த்துணர்ந்தேன். இந்தக் கஷ்டம் உண்மையில் அநுபவத்திலறிந்தவருக்கே தெரியும். நிற்க,

இதனை எவ்வாறேனும் வெளிப்படுத்திவிடவேண்டுமென்று எண்ணிய நான் செல்லரித்த இடங்களுக்கும் வண்டுதப்பெற்ற இடங்களுக்கும் மற்றொரு ஏட்டுப் பிரதி அகப்பட்டால் இலகுவில் அப் பகுதியைக் கண்டெழுதிவிடலாமென்றெண்ணி ஏட்டுப் பிரதி விசாரித்தபோது எனக்குத் தெரிந்த இடங்களில் எங்கும் கிடைக்கவில்லை. ஆகவே, யாராவது வைத்திருந்தால் அனுப்பக்கூடுமென நினைத்து, ஆங்கீரசஷ புரட்டாதிமீ சோதிடபரிபாலினிப் பத்திரிகையில் இதனைக் குறித்து ஓர் வேண்டுகோள் விடுத்தேன். அது வருமாறு:—

"சங்கர விலாசம் என்ற பெயருள்ள நூலொன்று எமது சோதிடபரிபாலன மடத்துப் பழைய ஏட்டுப்பிரதிகளொன்றிற் காணப்படுகின்றது. இதனை இயற்றியவர் சிதம்பரநாதபூபதி என்று இதன் கடவுள்வாழ்த்தின் ஈற்றுச் செய்யுளாற் புலப்படுகின்றது. இந்நூல் "சகாப்தம் கசுஉ-க்குமேற் செல்லாநின்ற விக்கிரமஷ சித்திரைமீ கஙஉ வெள்ளிக்கிழமை மிருகசீரிடமும் பஞ்சமியும் பெற்ற தினத்தில் எழுதிமுடிந்தது" என அவ்வேட்டுப் பிரதியிற் காணப்படுவதால், இது கி. பி. 1700-ம் ஆண்டு அதாவது இற்றை 232 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. இந்நூல் புராணசரிதங்களினின்று தொகுத்துச் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இதனில் அடங்கிய அத்தியாயங்களையும் அவ்வவற்றின் செய்புட்டொகைகளையும் ஈண்டுக் காட்டுகின்றும்:—

* * *

இவற்றால் இந்நூல் சைவசமயிகளாகிய நம்மவர்க்குரிய அரிய நூல் என்று தெரியவருகிறது. இதனை இதுவரை யாராவது அச்சிட்டிருக்கின்றார்களோ இல்லையோ எனத் தெரியவில்லை. எம்மிடம் உள்ள ஏட்டுப்பிரதி மிகப் பழையதாகவும் பலவிடங்களில் செல்லரித்தும் வண்டுதப்பெற்றும் காணப்படுகின்றது. ஆதலால் அப் பிரதியைக் கொண்டு எல்லாச் செய்புட்களும் எழுதிக்கொள்ள முடியாது. வேறு யாரும் இந்நூற் பிரதிகள் வைத்திருப்பரேல் அவர்கள் தயை கூர்ந்து எமக்கு அனுப்பிவைப்பார்களானால் அவற்றோடு ஒப்புநோக்கி இந்நூலைப் பதிப்பித்தல் இயலும். புதிய புதிய நூல்களை உண்டாக்குவதிலும் அரும் பெரும் பழைய நூல்கள் அழிந்துவிடாவண்ணம் போற்றுவதே மேலான செயலாகும்." என்பதாம்.

இவ் வேண்டுகோளை வெளியிட்டும் அது எடுள்ளார்மாட்டுக் கிடைக்காமையினாலோ—அல்லது ஓரிடத்தாவது இதன் ஏட்டுப்பிரதி யில்லாமையினாலோ ஒருவராவது பதிலளித்திலர். நிற்க,

ஏட்டைப் பார்த்துக் காகிதப்பிரதியில் எழுதியவிடத்து, செல்லரிக்கப்பெற்றும், எழுத்துச் சிதைந்து மிருந்த பகுதிகளை விட்டு அச்சிடுவதானால் அது வாசிப்போர்க்கு உற்சாகத்தைக் குறைக்குமென நினைந்து என்னறிவுக்கெட்டியவண்ணம் இயைந்த சொற்களைப் பகரக் குறியீட்டினுட் சேர்த்துப் பாட்டைப் பூர்த்திசெய்து எழுதினேன் என்றாலும், யான் சேர்த்த சொற்கள் தகுதியானவை என்று துணிந்து

கூறமாட்டேன். அறிஞர் ஆராய்ந்து அவற்றிற்கு இன்ன இன்ன சொற்கள்தான் இருக்கவேண்டுமென்று கூறினால் ஒப்புக்கொள்ளச் சித்தமுடையவனாக இருக்கின்றேன்.

நிற்க, இந்நூலை ஏட்டுப் பிரதியினின்றும் காகிதத்தில் எழுதி முடித்து, அதன் பின் அச்சிடத் தொடங்குவதுதான் நல்லது என்று முதலில் நினைக்தேன். ஆனால், எனது தொழில்முயற்சிகளுக்கிடையில் அதற்காகும் அவகாசம் மிகச் சொற்பமாக இருந்தபோதிலும், இது முழுவதும் எழுதிமுடியக் காலம் அதிகம் நீட்டிக்கும்போற் றோன்றினமையினாலும், அவ்வளவு நீட்டித்த காலத்தின் பின் அச்சிடுவதானாலும் இடையில் ஏதும் இடையூறுகள் ஏற்பட்டு வெளியிடப்படாதேபோகவும் கூடுமாதலாலும், ஏட்டினின்று காகிதத்தில் எழுதியவற்றை அவ்வப்போதே ஒரு சஞ்சிகையில் வெளியிட்டுவந்தால், வெளியிட்ட பகுதிகளிலுள்ள செய்யுள்களாவது பலரால் அறியப்படுமென்றும், அன்றியும் வெளிவந்த பகுதியிலுள்ள குணங்களையும் குறைகளையும் அறிஞர் எடுத்துக் கூற முடியுமென்றும் எண்ணி, சோதிடபரிபாலினிப் பத்திரிகையில் ஆங்கீரசஷ புரட்டாதிமீ கஙஉ முதல் ஏட்டினின்றும் எழுதிய அவ்வப்போதே வெளியிட்டுவந்தேன். ஆனால் அதில் வெளியிட்டதினால் நான் எதிர்பார்த்தபடி குணத்தையோ குற்றத்தையோ எவரும் கூறினாரல்லர். இதற்குக் காரணம் தமிழ் ஆராய்ச்சியாளரிடம் ஒருபோதும் இச் சஞ்சிகை கிடைக்காததினாலிருக்கலாம். ஆனால் சமயப்பற்றுள்ளவர்கள் பலர் இது தொடர்பாக வெளியிட்டுவருவதை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்து வாங்கிப் படித்தனர்.

ஏட்டிலிருந்தபடி செய்யுளை மாத்திரம் அச்சிட்டுவந்தால் கற்றோர்க்கன்றிச் சொற்ப அறிவுடையவர்களுக்கு எதுவும் விளங்காதென்று கருதிச் செய்யுள்களிற் கூறப்பட்ட சாராம்சத்தை அவ்வச் செய்யுள்களின் மேல் தலையங்கமாக எழுதி அச்சிடுவித்தேன். இந்த வசனங்கள் அவசரமாக எழுதப்பட்டனவாதலால் சொற்பிழை முதலியன இருக்கக்கூடும். அவற்றை அறிஞர் திருத்திக்கொள்ளுவார்களாக.

இப் புத்தகம் ஆங்கீரசஷ புரட்டாதிமாதத்தில் முதன்முதல் சோதிடபரிபாலினியில் வெளியிடத் தொடங்கி, இந்த ஈசுவருடம் கார்த்திகைமாதத்தில் வெளியிட்டு முடிந்தது. இவ்வளவுகாலஞ் சென்ற பின்பாவது இப் புத்தகம் முழுவதும் வெளிபானதையிட்டுப் பெருமான் திருவருளைத் துதிக்கின்றேன்.

இப் புத்தகத்துக்கு உரையெழுதி வெளியிட்டால் நலமென்று இதனை வாசித்தோர் சிலர் கூறினர். மூலப் புத்தகம் வெளிவருவதே மிகுந்த கஷ்டமாக இருந்ததினாலும், உரையுமெழுதி வெளியிடுவதானால் இன்னும் காலம் நீட்டித்துவிடுமாதலாலும், புத்தகம் வெளியாக வேண்டுமென்னும் அவாக்கொண்டு இதனை வெளிப்படுத்தினேன். தமிழபிமானமுடையவர்கள் உதவிசெய்வார்களானால் கூடிய சீக்கிரம் உரையுடனும் சீர்திருத்தங்களுடனும் மறு பதிப்பை வெளியிடக் கூடும்.

புதிய புதிய நூல்களை ஆக்குவதிலும்பார்க்க, எமது பழைய புலவர்களால் அரிதின் இயற்றப்பெற்றனவாய் இதுவரையில் அச்சிடப்படாதிருக்கும் தமிழ்நூல்களை அடியோடு மறைந்துவிடாதபடி அச்சிட்டு வெளியிடுவது சிறந்ததென்பதை எவரும் ஒப்புக்கொள்வரென்று நினைக்கின்றேன். இவ்விதம் வெளியிடும் நூல்கள் வெளியிடுவோருக்கு மிகுந்த செலவை உண்டாக்குமாதலினாலும், அதற்குத் தகுந்தபடி அப் புத்தகம் விலையாவதில்லையாதலினாலும் இதுபோன்ற புத்தகங்களை வெளியிட எவரும் பின்னிற்கவேண்டியிருக்கிறது. பாஷாபிமானமுள்ள தமிழ்ப்பிரபுக்கள் தங்களால் இயன்ற பொருளுதவி புரிவதினாலும், வித்தியாபகுதியார் இத்தகைய நூல்களை ஏற்ற உயர்வகுப்புகளுக்குப் பாடபுத்தகமாக நியமிப்பதினாலும் இவைகளை வெளியிடுவோர்க்குப் பொருண்முடையுண்டாகாதிருப்பதுடன், மேன்மேலும் இத்தகைய நூல்களை வெளியிட எவர்க்குமார்வமுண்டாகும்.

தமிழ்க்கல்வியை யூட்டி அதின் இன்சுவைகளைத் தெரிந்தனுபவிக்குமாறு செய்ததினால் இந்நூலை வெளியிட எனக்கு விருப்பமுண்டாகச் செய்த எனது ஆசிரியரும், இந்தியாவிலும் இலங்கையிலும் மிகச் சிறந்த தமிழ் வித்துவான் என்று பாராட்டப்பெறுகின்றவரும், இரகுவம்மிசவுரை, தோல் காப்பியம் எழுத்ததிகாரம்—நச்சினார்க்கினிய உரைவிளக்கக் குறிப்புரை முதலிய நூல்களை வெளியிட்டவருமான புன்னாலைக்கட்டுவன் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களுக்கு எனது அன்பார்ந்த வணக்கம் உரித்தாகுக.

சோதிடபரிபாலனமடம்
கொக்குவில்
ஈசுராஜு கார்த்திகைமீ

இப்படிக்கு
சி. இரத்தினசபாபதி ஐயர்.



நூல் வரலாறும், நூலாசிரியர் வரலாறும்.

சங்கர விலாசம் என்பது சிவபிரானுடைய திருவிளையாட்டு அல்லது திருவருட்பிரகாசம் என்று பொருள்படும். விலாசம் என்பதற்கு விளையாட்டு, அழகு, பிரகாசம் முதலிய பல பொருள்களுள. சிலர், விலாசம் என்பது நாற்பெயராகுமிடத்து நாடகநூலினைக் குறிக்குமென்றும், அரிச்சந்திர விலாசம், டம்பாச்சாரி விலாசம் முதலியன அதற்குச் சான்றென்றும் உரைப்பர். அவர் ஸ்ரீகிருஷ்ண விலாசம் முதலான பல காவியங்கள், வடமொழியில் விலாசமென்னும் பெயரோடிருத்தலை அறிந்திருந்தால் இவ்வாறு கூறமாட்டார். இது சிவபுராணங்களில் கூறப்படும் விசேடங்களைத் திரட்டி வடமொழியில் இயற்றப்பெற்ற சங்கரவிலாசம் என்ற நூலைத் தமிழ்மொழிபெயர்த்து விருத்தப்பாவால் ஆக்கப்பெற்றதென்பது இதன் வரலாற்றுச் செய்யுளாற் புலப்படுகின்றது.

இதில் சிவபிரானை விசேடித்துக் கூறப்படும் கதைகளுள்ள பன்னிரு அத்தியாயங்களும், பஞ்சாக்கரம், விபூதி, உருத்திராக்கம் என்பவற்றை விசேடித்துக் கூறும் கதைகளுள்ள மூன்று அத்தியாயங்களும், சோமவாரவிரதமகிமையைக் குறித்த கதையினைக் கூறும் ஓர் அத்தியாயமும், சிவஸ்தலங்களாகிய சிதம்பரம், திருவாரூர்க் கமலாலயம், காஞ்சீபுரம், திருக்காளத்தி, ஸ்ரீசைலம், உருத்திரகோடி என்பவற்றின் கதைகளைக் கூறும் ஐந்து அத்தியாயங்களும், கோதாவரி தீர்த்தச் சிறப்பைக் கூறும் ஓர் அத்தியாயமுமாக இருபத்து மூன்று அத்தியாயங்கள் காணப்படுகின்றன. கடவுள் வாழ்த்து, பதிகம் என்பவற்றின் செய்யுட்டொகைகளுட்பட மொத்தம் கசஎஉ செய்யுள்களால் இது இயற்றப்பட்டிருக்கின்றது.

இதனை இயற்றியவர் "விசயை நாரணன்சொற் சிதம்பரநாத பூபதி" என்று இதன் வரலாற்றுச் செய்யுளாற் புலப்படுகின்றது. இவர் அரசவமிசத்தவர் என்பது பூபதி என்னும் பட்டப்பெயரால் ஊகிக்கலாம். பாவலர்சரித்திர தீபகம், தமிழ்ப்புலவர் சரித்திரம், தமிழ்ப்புலவர் வரலாறு முதலிய சரித்திரவரலாற்று நூல்களில் இவரைப்பற்றி யாதும் கூறப்படவில்லை இச் சங்கரவிலாசம் வெளியாகாததினால் இவர் சரித்திரத்தை எவரும் அறிகிலர் என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது.

அன்றியும், இவர் தமது தீக்ஷாகுருவாகத் திருப்பரங்குன்ற முனிவர் என்னும் பெயருடையாரொருவரையும், ஞானசாரியராகச் சத்தியஞானி என்னும் பெயருடையாரொருவரையும், இலக்கிய இலக்கண ஆசிரியர்களாக ஈசானதேவன் தத்துவநாதன் என்பவர்களையும் கடவுள்வாழ்த்தில் கூறியிருக்கிறார்.

இவரது காலம் எதுவென்று ஆராய்ச்சியாளர் கண்டுபிடிக்கக் கூடும். பெரும்பாலும் பிரமோத்தரகாண்டம், காசிகாண்டம் முதலான புராணசரித நூல்களும் தலபுராணங்களும் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துத் தமிழில் யாக்கப்பட்ட காலத்தில்தான் இதுவும் இயற்றப்பட்டிருத்தல்வேண்டும். இதன் கடவுள்வாழ்த்து முதலானவற்றை அவற்றுடன் ஒப்புநோக்குவோர்க்கு இது இலகுவில் புலப்படும்.

இச் சங்கரவிலாசம் எழுதப்பட்ட ஏட்டுப்பிரதியினீற்றில், "சகாப்தம் கசுஉஉ-க்கு மேற் செல்லாநின்ற விக்கிரமஞ்சித்திரைமீ கருவ வெள்ளிக்கிழமை மிருகசிரிடமும் பஞ்சமியும் பெற்ற தினத்தில் எழுதி முடிக்கது" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனால் அவ்வேட்டுப் பிரதி எழுதப்பெற்றே உகள வருடங்களாயின என்று தெரிகிறது. ஆகவே, இந்நூல் இயற்றி ஏறக்குறைய ரு00 வருடம் வரையில் இருக்கக்கூடுமெனத் தெரிகிறது. அறிஞர் சிறிது ஆராய்ச்சிசெய்தால் இவர் காலத்தையும் சரிதத்தையும் அறிதல் அவ்வளவு கஷ்டமன்று.

இந்நூற் செய்யுள்களிலுள்ள வர்ணனைகளையும், நயங்களையும் இங்கு எடுத்துக் கூற இயலாது. இதனை ஒருமுறை வாசித்தவர்கள் இது தமிழ்க் காப்பியத்தின் நிரையில் வைக்கற்பாலதென்பதை ஒப்புக் கொள்வரென்று நினைக்கின்றேன்.

சி. இ.



வித்துவப்பெரியார் அபிப்பிராயங்கள்.

மஹாமஹோபாத்தியாய தக்ஷிணத்திய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்
எழுதியனுப்பிய கடிதம்.

அன்புள்ள ஐயா,

உபயகுசலோபரி.

தாங்கள் சென்ற மாதம் 25-ஆம் தேதி எழுதியனுப்பிய கடிதமும் விடுத்த 'சங்கரவிலாசம்' என்னும் புத்தகமும் வந்துசேர்ந்தன. புத்தகம் அனுப்பியதுபற்றி நன்றியறிவுடையேன்.

இங்கே உள்ள வேலைமிகுதியாலும் வெளியூர்ப் பிரயாணங்களாலும் அப் புத்தகத்தை முற்றும் படித்துப் பார்க்க இயலவில்லை. சிறிதளவே படித்தேன். படித்தளவில் எனக்குச் சில அபிப்பிராயங்கள் தோற்றின.

இந்நூல் ஸ்ரீராகை என்னும் பெயரையுடைய சங்கரநயினார்கோயிலில் எழுந்தருளிய ஸ்ரீசங்கரநாராயணரைச் சார்த்தி இயற்றப்பெற்றது. இதனை இயற்றியவர் அத்தலத்துக்கருகிலுள்ள விஜயநாராயணமென்னும் ஊரில் வாழ்ந்தவர். பூபதி என்னும் சிறப்புப்பெயர் வேறு சில புலவர்களுக்கும் வழங்கியதுண்டு. நான் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ள நூல்களாகிய திருவாரூர்க்கோவை, திருமயிலை யமகஅந்தாதி என்பவற்றின் ஆசிரியர்கள் பூபதி என்னும் சிறப்புப்பெயருடையவர்கள்.

மேலே குறித்த விஷயங்களைக் குறித்து விரிவாக எழுத இப்பொழுது அவகாசமில்லை. சங்கரநயினார்கோயில் விஷயமாக இரண்டு பிரபந்தங்களை நான் வெளியிட்டிருத்தலின் எனக்கு இவ்வுண்மை தெரியவந்தது.

தாங்கள் இந்நூலை வெளியிட்டது தமிழுலகுக்கு உபகாரமே.

4-ஆம் பக்கத்தில் உள்ள 19-ஆம் செய்யுளில் 'விசையைநாரணன்சொற்' என்பது 'விசயநாரணஞ்சேர்' என்று இருக்கலாமென்று தோற்றுகிறது. 5-ஆம் பக்கத்தில் உள்ள 13-ஆம் பாட்டில் 'செவ்வாயரவுடை மடந்தை' என்பது 'செவ்வா யாவுடை மடந்தை' என்று

இருக்கவேண்டும். சங்கரநயினார்கோயிலில் எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருநாமம் ஸ்ரீ கோமதி என்பது. அஃது ஆவுடையம்மை எனத் தமிழில் வழங்கும். 'தருவனத்தரு சிராசை' என்றது சங்கரநயினார்கோவிலைக் குறிக்கும். அது சங்கரன்கோயிலெனவும் வழங்கும். தென்பாண்டிநாட்டாருக்கு அது மிகவும் முக்கியமான ஸ்தலம். சங்கரனென்றது சங்கரநாராயணரைக் குறிக்கும். மேலே ஆலய சம்பந்தமான மற்ற விஷயங்களை விரிவாக, சங்கரநயினார்கோயில் அந்தாதி, சங்கரலிங்கவுலா என்னும் இரண்டு புஸ்தகங்களின் முகவுரையில் எழுதியிருக்கிறேன்.

இங்ஙனம்

அன்புள்ள

வே. சாமிநாதையர்.

தியாகராச விலாசம்
திருவேட்டீசுரன்பேட்டை.
11—11—1937.

வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் எழுதிய அபிப்பிராயம்.

சங்கரவிலாசம் என்னும் இந்நூல் சிவனுடைய விளையாட்டு என்றவது மகிமை என்றவது பொருள்படுவதொரு புராணசரிதமாகும். விலாசம் விலாசத்தை யுணர்த்துவது எனப் பொருள்படும்.

இந்நூலை இயற்றியவர் பெயரும், அவரூரும், இந்நூல் எவ்வாறு செயப்பட்டதென்பதும்,

"பொலன்கிரி குழைத்த பான்புரா ணத்திற்
புகல்கதை விசிட்டமோர்ந் தெடுத்து
நலம்பெறத் திரட்டுஞ் சங்கர விலாச
நற்றமிழ் வடித்தினி துரைத்தான்
வலம்புரிக் குலங்கள் சூலுகுந் தலற
வழிநரு மலரினே திமங்கள்
சிலம்புதண் பழன விசயநா ரணஞ்சேர்
சிதம்பர நாதபூ பதியே"

என்று இந்நூலுள் வரும் வசனாற்றுச் செய்யுளா னறியக்கிடக்கின்றன. இதனை இயற்றிய சிதம்பரநாதபூபதியின் குலம் விளங்கவில்லை. இவரைப் பற்றிய சரிதம் ஒன்றும் வேறு நூல்களாற் றெரியப்படவில்லை.

இவர் குருபக்தியிற் சிறந்தவரென்பது கடவுள்வாழ்த்துட் கூறிய குருவணக்கச் செய்யுட்களா னறியலாகும்.

இந்நூல் செய்தார் காலம் இதுவென்பது நன்கு புலப்படவில்லை. இவர் இலக்கண இலக்கியங்களில் மிகுந்த பயிற்சியுடையாராதலோடு செய்யுள் இயற்றுவதிலும் அதிக பயிற்சியும் இயற்கைவன்மையும் உடையவரென்பதும், இந்நூற் செய்யுட்கள் யாவும் சொற்சுவை பொருட்சுவை நிரப்பினவாய் இராமாயணம், கந்தபுராணம், வில்லிபுத்தூராழ்வார் பாரதம் முதலிய காப்பியங்களோடு ஒத்த நடையுடையன என்பதும் இந்நூற் செய்யுட்களைப் படித்த அறிஞர்க்கு உணராதே போகா. ஆதலின், அதனைப்பற்றி நாம் விரித்துரைப்பது மிகையேயாகும்.

இந்நூலுட் சொல்லப்படுஞ் சரிதங்கள் சிவனுடைய மகிமையை உணர்த்துவனவாதலின், சைவசமயிகளாலே இந்நூல் மிகப் போற்றிப் படிக்கத்தக்கதொன்றேயாகும். இந்நூலைப் படித்தவர்கள் தவம சிவபூசை அதிதிபூசை முதலியவற்றின் வரும் பயனையும், விபூதி பஞ்சாக்கரம் உருத்திராக்கம் என்பவற்றின் மகிமையையும், அரசிபற் சிறப்பு கற்பின் சிறப்பு முதலியவற்றையும், அவசியம் அறியவேண்டிய பல சரிதங்களையும் அறிந்துகொள்வார்கள். இந்நூன் முகப்பில், பின்னர் நூலுட் கூறுஞ் சரிதங்களைத் தொகுத்துப் பதிகமாக இந்நூலாசிரியர் செய்திருப்பது இந்நூலைப் படிப்போர்க்கு மிகவும் உபயோகமானதே.

இத்தகைய இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்தியவர், கொக்குவிலில் பஞ்சாங்ககணிதராயிருந்த இரகுநாதையரவர்கள் வழித்தோன்றலும், தற்போது பஞ்சாங்ககணிதராயிருக்கும் சிவராமவிங்க ஐயரவர்களின் புத்திரருமாகிய பண்டிதர் ஸ்ரீமான் இரத்தினசபாபதி ஐயர். இவர் ஒரே ஏட்டுப்பிரதியைக் கொண்டு அச்சிட்டு வெளிப்படுத்தியதாக இந்நூற் கெழுதிய பதிப்புரையிற் கூறியுள்ளார். அன்றியும், அவ்வேட்டுப் பிரதி செல்லானரிக்கப்பட்டும் வண்டுதப்பெற்றுஞ் சிதைவடைந்துள்ளதாகவுங் கூறியுள்ளார். சிதைவடைந்த ஒரே ஏட்டுப்பிரதியைக் கொண்டு ஆராய்ந்து எத்துணையுந் தூய்மையாகப் பதித்துதவிய ஐயரின் அறிவின் பெருமையும் ஊக்கமும் தமிழறிஞர்களாற் போற்றத்தக்கனவே. செல்லரித்ததனாற் பல பாக்களிலுள்ள சொற்கள் சிதைவடைந்தமை இந்நூற்கு ஒரு பெருங்குறையே. ஆயினும் சிதைவடைந்த அவ்வவ்விடங்களுக்குத் தமது புத்திநுட்பத்தானே பொருத்தமோர்ந்து ஓசைக்கும பொருட்கும் இயைபுறச் சொற்களை அமைத்திருப்பது

ஐயரது அறிவின் பெருமையைக் காட்டும். ஐயர் அமைத்த சொற்கள் சிற்சில இடங்களிலே ஒருபோது பொருத்தமற்றனவாகக் காணப்படின் அதனை ஒரு பெருங்குறையாக அறிஞர்கள் கொள்ளமாட்டார்கள். என்னையெனின், ஆசிரியர் இயைத்த சொல் இதுவென்று உணர்ந்து பொருத்தல் எவர்க்கு மரிதாகலின். அங்ஙனேல் இருந்தவாறே பதிப்பித்துவிடலாமே எனின்? அதுவே முறையாயினும், படிப்போர்க்கு உபகாரமாகும் பொருட்டே அவ்வாறு செய்தனர். ஆயினும் ஐயர் தம்மேல் அக்குற்றம் வாராமல் பகரக்கோட்டில் அடைத்துவிட்டது மிகவும் போற்றத்தக்கதே. இன்னும் ஐயர் ஒவ்வொரு செய்யுட் கருத்துரைகளையும் அவ்வச் செய்யுட்களின் மேலிடத்தே தந்திருப்பதும் படிப்போர்க்கு மிகவும் உபகாரமுடையதேயாம். ஐயர் சுன்னகம் பிராசீனபாடசாலையிலே யாம் படிப்பித்தகாலத்திலே எம்மிடம் தமிழும், வேதவிசாரத பிரமஸ்ரீ வி. சிதம்பர சாஸ்திரிகளிடம் சம்ஸ்கிருதமும் கற்று, அவ்விருபாஷையிலும் பண்டித பரீட்சையிற் சித்தியடைந்தவர். கற்றவளவி லமையாது இத்தகைய நூல்களே ஆராய்ந்து பதிப்பித்துவருவது ஐயர் தம் அறிவை வளர்ப்பதற்கு ஒரு காரணமாகுமென்று எண்ணுகின்றேம். இதுபோன்ற நூல்களே, தமிழ்வளர்ச்சியை விரும்புஞ் சங்கங்கள் ஆதரிப்பின் அஃது தமிழ்வளர்ச்சிக்குப் பெரிதும் ஏதுவாகும் என்று எண்ணுகின்றேம். ஐயர் இன்னும் இத்தகைய நூல்களைப் பதிப்பித்துத் தமிழ்நாட்டிற்கு உபகரிக்க அருள்செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

புன்னாலைக்கட்டுவன்
சுசாஸ்திர கார்த்திகைமீ

சி. கணேசையர்.

திரிபாஷாவிற்பன்னரும்
சுன்னகம் பிராசீனபாடசாலை ஸ்தாபகரும்
மாகாண வித்தியாதிகாரியுமாகிய

பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள் சொல்லிய

சிறப்புப்பாயிரம்.

சங்கர விலாச நேசன் சிதம்பர நாதன் சாற்றுஞ்
சங்கர விலாச நன்னூல் தாலபத் திரத்தி னீக்கிச்
சங்கர விலாச மன்னத் தகுமுறை யச்சிட் டுந்தான்
சங்கர விலாத ரத்ந சபாபதி கலைவ லோனே.

அரசினர் வருமானவரிக்கந்தோரில் உத்தியோகம் வகிப்பவரும்
தமிழ்நூல் ஆராய்ச்சியாளருமான

ஸ்ரீமான் மு. இராமலிங்கம் அவர்கள் எழுதிய

மதிப்புரை.

கொக்குவில் சோதிடபரிபாலனமடத்தைச் சேர்ந்த பண்டிதர் பிரமஸ்ரீ சி. இரத்தினசபாபதிஐயர் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற சங்கரவிலாசம் என்னும் நூலைப் படித்து மிக மகிழ்ச்சியெய்தினேம். சங்கரவிலாசம் என்பது சிவபெருமானுடைய விளையாட்டு அல்லது மேன்மை எனப் பொருள்படும் ஓர் புராணசரிதம். இஃது சிவபுராணங்களில் கூறப்படும் விசேஷங்களைத் திரட்டி வடமொழியில் இயற்றப்பெற்ற சங்கரவிலாசம் என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்து 1435 விருத்தப் பாக்களால் விசையை நாராயணன் சிதம்பரநாதபூபதி என்பவரால் கி. பி. 1700-ம் ஆண்டளவில் ஆக்கப்பெற்றதென்பது,

"பொலன்கிரி குழைத்த பான்புரா ணத்திற்
புகல்கதை விசிட்டமோர்ந் தெடுத்து
நலம்பெறத் திரட்டுஞ் சங்கர விலாச
நற்றமிழ் வடித்தினி தரைத்தான்
வலம்புரிக் குலங்கள் சூலளைந் தலற
வழிநரு மலரினே திமங்கள்
சிலம்புதண் பழன விசையைநா ரணன்சொற்
சிதம்பர நாதபூ பதியே"

என்னும் இதன் வரலாற்றுச் செய்யுளாற் புலப்படுகின்றது. இதில் சிவபெருமானே விசேடித்துக் கூறப்படும் கதைகளுள்ள பன்னிரண்டு அத்தியாயங்களும், பஞ்சாக்கரம், விபூதி, உருத்திராக்கம் என்பவற்றை

விசேடித்துக் கூறும் கதைகளுள்ள நான்கு அத்தியாயங்களும், சோமவாரவிரதமகிமையைக் கூறும் அத்தியாயமொன்றும், சிவஸ்தலங்களாகிய சிதம்பரம், திருவாரூர்க் கமலாலயம், காஞ்சீபுரம், திருக்காளத்தி, ஸ்ரீசைலம், உருத்திரகோடி என்பவற்றின் கதைகளைக் கூறும் ஐந்து அத்தியாயங்களுர், கோதாவரித் தீர்த்தச்சிறப்பைக் கூறும் ஓர் அத்தியாயமுமாக இருபத்துமூன்று அத்தியாயங்கள் காணப்படுகின்றன. இதிலுள்ள செய்யுள்கள் சொன்னயம் பொருணயம் முதலிய பன்னயங்களும் பொருந்தியுள்ளன. மாதிரிக்காகத் திருக்கயிலைச் சிறப்பைக் கூறும் பாட்டொன்றை ஈண்டுக் குறிக்கின்றும்.

செங்கட் குருதி பிதிரொழுகச் செருவி னெதிர்ந்து சினச்சிங்கம்
வெங்கட் கரியி னிணமருப்பு விசைத்துப் பிடுங்கிக் குருத்துடைக்க
வங்கட் சொரிபு மணிநிலவு மகலக் குவட்டுக் குடுமிதவழ்
திங்கட் கொழுந்தி னிளநிலவுந் திகழ்ந்து திகழ்ந்து தலைமயங்கும்.

இத்தகைய பெருமைவாய்ந்த ஒரு நூல் கைச்சரவைபாய்ச் சோதிடபரிபாலனமடத்துப் புத்தகக் கருவூலத்திற் கிடந்து மேலும் செல்லுக்கிரையாகிக் கெட்டழியாமற் காக்கும் நோக்கமுடன் இதனை அச்சேற்றித் தமிழுலகத்திற்கு அளித்த தொண்டிற்காக மேற்கூறிய ஐயர் அவர்களுக்குச் சைவநன்மக்கள் என்றும் கடமைப்பட்டவர்களாவர். ஏட்டிலிருந்தபடி செய்யுளை மாத்திரம் அச்சிடாது சொற்ப அறிவுடையவர்களுக்கும் மாணவர்களுக்கும் இந்நூல் விளங்குமாறு செய்யுள்களிற் கூறப்பட்ட சாராம்சத்தை அவ்வச் செய்யுள்களின் மேல் தலைப்பங்கமாக எழுதிப் பதிப்பித்திருப்பது மிகவும் பாராட்டற்குரியது பொதுவாக இத்தலைப்பங்கங்கள் இந்நூலினைக் கற்பார்க்கு இன்பத்தை ஊட்டிப் பயன் விளைப்பனவாகும் என்பதில் ஐயமில்லை.

இவ்வரியநூல் இப்பொழுது வெளியிடப்படாவிடின் அருகிவிடுமென அஞ்சி வெளியிட்டமையின் செந்தமிழ்ச் சைவ அபிமானிகள் ஒவ்வோர் பிரதியையேனும் அபிமானித்து வாங்கிப் படிப்பார்களாக. பதிப்பாசிரியரவர்கள் இதுகாறும் அழிந்துபட்ட நூல்களு ளொன்றுகக் கருதப்பட்ட இந்நூலினைப் பதிப்பித்து வெளியிட்டதுபோல் பல நூல்களைப் பதிப்பித்துத் தமிழ்த்தொண்டும் சைவத்தொண்டும் புரிந்து பல்லாண்டு வாழச் செந்தமிழ்த்தெய்வம் திருவருள் பாலிப்பதாக.

"Ayodhiya"
Manning Place,
Wellawatte.
8-11-1937.

மு. இராமலிங்கம்.

அணிந்துரை.

[இலங்கை அரசாங்க சிவில்சேர்விஸ் உத்தியோகத்தினின்றும் இளைப்பாறிய பெரியாரும், இலங்கைச் சமாதான நீதிபதியும், தமிழ் நூலாராய்ச்சியிற் சிறந்தவரும், சரித்திர நூலாசிரியரும் ஆகிய **முதலியார் ஸ்ரீமான் செ. இராசநாயகம் அவர்கள்** எழுதியது.]

அநாதிமலமுத்த பதியாகிய பரமசிவன் தமக்கொரு பிரயோசனமுங் குறியாது அநாதிமலபத்தராகிய ஆன்மாக்களுக்கு மலநீக்கமும் சிவதத்துவ விளக்கமும் உண்டாகும் பொருட்டுப் பஞ்சகிருத்தியங்களைச் செய்வர். இது அவ்விறைவன் திருவருட்பாற்பட்டு நடக்குந் திருவிளையாடல் என நூல்கள் கூறுகின்றன. இத் திருவிளையாடல் மேலே கூறிய ஆன்மாக்களினது உய்தி கருதியதென்ப. கோயிற்புராணத்தில்,

"சுருதிவழி யொழுகினர்கள் சுவர்க்கத்தா ராகமநூற்
சரியைகிரி யாயோகர் சாலோக சாமீப
வருவுவமை யினராக வுதவுதுமெம் மூடனுகும்
பெருகியஞா னிகளெம்மைப் பெற்றூர்போக் கற்றூரே"

எனவும், சிவஞானசித்தியாரில்

"தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்
சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோ
ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ
ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றே
ரூனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா
மொடுங்கும்போ தான்முனிலா தொழியினுற்ப வித்து
ஞானநெறி யடைந்தடைவர் சிவனே யங்கு
நாதனே முன்னிற்கி னணுகுவர்நற் றூளே"

எனவுங் கூறியபடி, ஆன்மாக்க ளீடேறுதற்கு இறைவனே ஆன்றோர்களையதிட்டித்துநின்றுசரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு சோபானங்களை வகுத்துக் கூறி, அவற்றின் நெறிகளையும் விளக்கிவைத்துள்ளார்.

"ஆவலாலெமக் காமலர் மாங்க ளாக்கலு மலர்பறித் தம்மலால்
தாவிலாவகை தார்பல சமைத்தல் தணப்பிலெம் புகழ்சாற்ற லன்புடனும்
மேவுமாலய மலகிடல் மெழுகல் வினங்குநல்விளக் கிடுதலெம் மடியார்க்
கேவலானவை செய்தலிச் சரியை யியற்றவல்லவர்க் கெம்முல களிப்போம்"

"கந்தவர்க்கமுங் கிளர்மணப் புகையுங் கவின்கொள் தீபமும் புனிதமஞ்சனமும்
கொந்தவிழ்ந்தநன் மலருமற் றுளவும் கொண்டுமாயையின் குணங்களொன் றிலாை
யைந்துசுத்திசெய் தகம்புற மிறைஞ்சி யங்கியின்கடன் கழித்தருள் வழிநின்
றிந்தநற்பெருங் கிரியையன் புடனே யியற்றவல்லவ ரெம்மரு கிருப்பார்"

"மூக்குணம்புல னைந்துட னடக்கி மூலவாயுவை யெழுப்பிரு வழியைச்
சிக்கெனும்படி யடைத்தொரு வழியைத் திறந்துதாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த
தக்கவைஞ்செழுத் தோரெழுத் தருவாந் தன்மைகண்டரும் பெருவெளிக் கேதான்
புக்கழுந்தின ரெமதருப் பெறுவார் புவியில்வேட்டுவ னெடுத்தமென் புழுப்போல்"

"பரந்தவான்கலை முழுதுமா கமதூற் பகுதியும்பல சமயசாத் திரமுந்
தெரிந்துதேர்ந்தில் வாய்ந்தமுப் பொருளின் செய்தியேபொரு ளெனமனந் தெளிந்து
புரிந்துபோந்துள சீற்றறிவனைத்தும் போக்கி யவ்வறி வெனச்சிவ போதம்
விரிந்துதோன்றுநெஞ் சுடையவித் தகரே மேன்மை யானநம் மெய்ப்பதம் பெறுவார்"

என்னும் பிரமாணங்களால் முறையே யந்நால்வகை நெறிகளு மறியக் கிடக்கின்றன.

மேற்கூறிப்போந்த நான்கு பாதங்களுள்ளும், சரியை, கிரியை யென்னு மிரண்டுங் கூடி, சிவதருமமென் வொரு பெயரான் வழங்கவும் பெறும். மக்கள் புறச்சமயங்களிலே நின்று செய்த புண்ணியங்களினாலே, பின் வைதிக மார்க்கத்திலே புகுந்து, வேதத்திலும் அதின் வழிநூலாகிய மிருதி முதலியவற்றிலும், பிராமணர் முதலிய நான்கு வருணத்துக்கும், பிரமசரிய முதலிய நான்கு ஆச்சிரமத்துக்கும் விதித்த பசுபுண்ணியங்க ளைச் செய்து, சுவர்க்கத்திற் சென்று போகந்துய்த்து, மீண்டு பூமியிலே பிறப்பார்கள். அவர்கள் முன் செய்த வைதிக புண்ணிய மிருதியினாலே சைவாகமத்தால் உணர்த்தப்படும் சைவத்திற் பிரவேசித்து, சரியை கிரியை யோகங்களை முறையே யனுட்டித்து, அவற்றின் பலன்களாகிய சாலோக்கிய, சாமீப்பிய, சாரூப்பிய பதவிகளைப் பெறுவார்கள்.

இத்தகைய விசிட்டங்களையுடைய இவைகட்குச் சைவ புராணங்க ளிலே பல கதைகளைக் கூறி அவைகளை நிரூபணஞ் செய்யப்பட்டிருக் கிறது. அக் கதைகளைக் கூறினோர் சூதமுனிவர் என்றும், கேட்டோர் பல முனிவர்களென்றும், இடம் நைமிசாரண்யம் என்றும் கூறப்படுகின்

றது. இவை யாவும் வடமொழியினின்றே கிடைக்கின்ற தன்றித் தமிழ் மொழியில் இதுசம்பந்தமாக விளக்கப்பட்ட கதைகள் இல்லா தொழிந் தமை புராணங்கள் வடமொழியி லாக்கப்பட்டதா லென்க.

இப்பொழுது வெளிவந்த இந்நூல் பல புராணங்களினும் பரந்து பட்டுக் கிடக்கும் சிவதருமத்தை விளக்குதற்கு எடுத்துக் கூறிய சிலவற் றைத் தொகுத்து விருத்தச் செய்யுளையில் சிதம்பரநாதபூபதி என்ப வரால் செய்யப்பட்டது. இதற்குச் சங்கர விலாசம் என்பது நூற்பெயர். அது சங்கரனுடைய திருவிளையாடல் அல்லது திருவருட்பிரகாசம் எனப் பொருள்படும். இதனை வெளியிட்டோர் இந்நூன்முகத்தே இதன் வரலாறு கூறியிருக்கின்றார்கள். அதனை ஆண்டுக் காண்க. இந் நூலில் நூல் வரலாறும் ஆக்கியோன் பெயருங் கூறிய செய்யுளில்,

"பொலன்கிரி குழைத்த பரன்புராணத்திற்
புகல்கதை விசிட்டமோர்ந் தெடுத்து
நலம்பெறத் திரட்டும் சங்காவிலாச
நற்றமிழ் வடித்தினி தரைத்தான்
வலம்புரிக் குலங்கள் சூலுளைத்தலற
வழிதரு மலரினை திமங்கள்
சிலம்புதண்பழன விசையையா ரணன்சொற்
சிதம்பர நாதபூ பதியே"

என இந்நூலைப்பற்றிய வரலாறு காணப்படுகின்றது. இதுபற்றிப் பதிப் பாளர் வரலாற்று முகத்தே கொடுத்த விபரத்தில், சங்கர விலாசம் என் னும் இந்நூல் வடமொழியில் செய்யப்பட்டிருந்ததாகவும், அதனைத் தமிழ் யாப்பில் மொழிபெயர்த்தோர் சிதம்பரநாதபூபதி யென்றுங் கண்டுள் ளார்கள். இந்நூலினைப்பற்றி அறிதற்குத் தங்கள் "சோதிடபரிபாலினி" என்னும் பத்திரிகையில் ஒரு வேண்டுகோளை வெளியிட்டதாகவும், எவ ரும் ஒன்றுந் தெரிவித்திலரென்றும் சொல்லியிருக்கின்றார்கள். தமிழ் நாட்டி லெங்கு முலாவும் வேறு பத்திரிகைகளிலும் வெளியிட்டிருந்தால் ஏதும் பெற்றிருப்பார்களென நினைக்கின்றேன். சங்கரவிலாசம் என்னும் நூல் இதுபோல வடமொழியிலில்லா தொழியின் புராணக் கதைத் தொகுப்பும், தமிழில் நூலும் சிதம்பரநாதபூபதியே செய்தாரென அநுமானிக்கவும் இடமுண்டு.

இது நிற்க, வித்தியாரண்யர் என்னும் ஒருவர் சங்கரவிலாசம் என் னும் நூலை இயற்றியிருக்கிறார். அவர் துங்கபத்திராநதிக் கரையிலே உள்ள பம்பை என்னுங் கிராமத்திற் பிறந்தவர். காலம் இற்றைக்கு 550 வருடங்களுக்கு முன், வித்தியா நகரத்தில் அரசு வீற்றிருந்த

ஹரிஹரராயர் காலத்தவர். புக்கண்ணனென்னும் மாடமேய்ப்பாளுக்குத் திருமகளால் அரசு கிடைக்கச் செய்தவர். அவனுக்கு மந்திரியாயும் இருந்தவர். சகல சாஸ்திரங்களினும் வல்லவர். பராசரமாதவீயஞ் செய்தவரிவரே. மாதவாச்சாரிய ரென்பது மிவரையே. இவர் வடமொழி வாணர். இவர் செய்த சங்கரவிலாச மென்னும் வடமொழி நூல் 40,000 சுலோகங் கொண்டது. இதுவன்றி வேதம், உபநிஷத், சூதசங்கிதை முதலிய நூல்களுக்கும் பாஷியகாரர். இவர் செய்த பாஷியங்களுக்கும் வியாக்கியானங்களுக்கும் கணக்கில்லை. இவர் செய்த சங்கரவிலாசம் இத் தமிழ்நூலுடன் ஒப்புடையதாயின் அதன் மொழி பெயர்ப்பெனக் கூறத் தடையில்லை. இந்தியாவிலே எமக்குத் தெரிந் தோர் சில்லைக் கேட்டும் நூலகப்படவில்லை. அகப்படும் வரை ஏது மொரு முடிவுக்கு வருதல் முடியாது.

வேதாந்ததேசிகர் காலத்தில் அவருடன் சற்றுப் பின் அவருடன் சமயவிஷயத்தில் மாறுபட்ட மற்றொரு வித்தியாரண்யர் சங்கரவிஜயம் என்னும் நூலை இயற்றியிருக்கிறார். இவர் காஞ்சிபுரத்தில் பிறந்து அங்கு வசித்தவர். இவர் காலம் இற்றைக்கு 669 வருடங்களுக்கு முன். மதத்தால் சுமார்த்தராவர். இவர் செய்த நூல்கள் வேதபாஷ்யம், சூதசங்கிதாபாஷ்யம், சங்கரவிஜயம், நிதானசங்கிதை, காலமாதவீயம் முதலியன.

சென்னை "Government Oriental Manuscripts Library" யில் இத் தமிழ்ச் சங்கரவிலாசப் பிரதியில்லை. அதுவுமன்றிக் கனம் உலகநாத பிள்ளையவர்களால் அச்சிட்டு வெளியிட்டிருக்கும் தஞ்சை சரஸ்வதிமால் புத்தகங்களின் அட்டவணையிலும் இந்நூல் குறிக்கப்படவில்லை.

ஆசிரியரது காலத்தைப் பார்க்கும்போது பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகவே தெரிகிறது. முதலாவது அத்தியாயம் 8-ம் செய்யுளாகிய

"சீத வண்புயல் சிவனரு ளுருவெனச் சிறந்து
காதல் கொண்டொரு வழிப்பட வின்னெறி கடந்து
மோது தெண்டிரைக் கருங்கட லெறிபுனன் முகந்து
மாத வன்றரு வருவினில் மயங்கிமீண் டதுவே" என்பது

"நீற ணிந்த கடவு ணிறத்தவா
னூற ணிந்துசென் றூர்கலி மேய்ந்தகிற்
சேற ணிந்த முலைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டதே"

என்னும் இராமாயணச் செய்யுட் கருத்தோடு படிகொண்டுளது. இக் கருத்து இராமாயணத்துக்கு முன் மேக வருணனைக்கு வேறிலக்கியத்தில் பயின்றுளதாகத் தெரியவில்லை. ஆதலால் இந்நூலாசிரியர் கம்பருக்குப் பிற்பட்டவரே.

பதிப்பாளர் பிரமோத்தரகாண்டம், காசிகாண்டம் முதலியன மொழிபெயர்த்த காலத்தில் இந்நூல் செய்யப்பட்டதாகலாமென அநுமானித்தார்கள். வரதுங்கபாண்டியனும், அதிவீரராமபாண்டியனும் முறையே அந்நூல்களை இயற்றியவர்களாவர். அவர்கள் காலம் சகம் 1486-க்குச் சரியான கி. பி. 1564 அளவிலாகும். ஏட்டுப்பிரதியினீற்றில் எடெழுதி முடித்த காலக்கணக்கை யொட்டிப் பார்க்கும்போது, பிரமோத்தரகாண்டம், காசிகாண்டம் இயற்றப்பட்ட காலத்துக்கு 135—140 வருடங்களுக்குப் பின் எடெழுதப்பட்டதாக ஏற்படும்.

ஆசிரியர் தடித்த சைவப்பற்றுள்ளவராகத் தெரிகிறது. நூல் முழுவதும் சிவபரத்துவ உண்மையை நிலையிட்டு, விட்டுணுவைப் பசுவர்க்கத்தில் வைத்துக் கதைகளை அமைத்துச் செல்லும் அமைதியைப் பார்க்கும்போது, சித்தாந்த நூல்கள் செய்யப்பட்டுச் சைவமதம் பிரபலமுற்றிருந்த 14-ம் நூற்றாண்டின் பின்னரே இது செய்யப்பட்டதாகவேண்டும். ஆகும்போது, பதிப்பாளர் கொண்ட அநுமானப்படி 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியாய்க் கொள்வதிலோர் இழுக்கில்லை. சிற்சில விடங்களில் கூர்மபுராணத்தின் மணம் வீசுதலையும் படிப்போர் அறியலாம்.

இந்நூலகத்துச் சைவமதப்பற்றுடையார்க்குவப்புடைய சிவபிரானுடைய முதன்மையைக் குறிக்கும் கதைகளும், விரதங்களும், சிவசின்னங்களின் பெருமையும், அவற்றாலாம் பயனும் அழகாக எடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. சில நீதிகளும் பொலிந்து விளங்குகின்றன.

"தொல்லுலகில் வாழு முயிர்த்தொகையிற் சொல்லரிய
கல்வி யுடையோரே மேலோ ரவர்களினும்
பல்வகையா லென்னைப் பரவு மடியவரே
மல்ல லுறந்தகைமை வந்த வழக்குடையோர்" பக்: 154

"ஈசனை வழுத்தி யஞ்செழுத் துணராப்
பாதக ரன்றியிக் கொடிய
மாசறு நிரயங் காண்பரோ" பக்: 148

எனவும் வருவன எவராலும் உவந்தேற்கும் பொன்மொழிகளாம்.

இன்னும் இந்நூலில் வரும் மதிற் சிறப்பு, ஆற்றுச் சிறப்பு, மருத நிலச் சிறப்பு, சோலை, மாடம், வயல், ஓடை, காவிரிநதி முதலியவற்றின் வருணனைச் சிறப்புக்களில் ஆசிரியர் மேற்கொண்டுள்ள தற்குறிப்பேற்ற வணிகளும் பிறவும் மிக்க நயமுஞ் சுவையும் பொருந்தியுள்ளன. பிறர் செல்லாத வழிகளிலெல்லாம் நுண்மதி கொண்டு நுழைந்து புலவர்களுக்குப் பெருவிருந்தாக அணிசெய்திருக்கின்றார்கள். பாக்களின் சுவையும், நடையின் விழுப்பமும், சந்தங்களின் வனப்பும், ஓசையின்பமும் பொலிந்து மிளிர்கின்றன. இடையிடையே ஆசிரியர் கவிகளிற் செய் திருக்கும் வேலைகளைப் பார்க்கும்போது சிறந்த அகலக் கவியாய்க் கீர்த்தி பெற்ற ஒருவராகவே மதிக்கலாம். தாருகாவனத்தின் வருணனைகளும் ஓடையின் வருணனைகளும் கவியுலகம் கண்டு களிக்கும் மாட்சிமையுடை யன. அவற்றினொன்றிது:—

> "மண்டு தீஞ்சுளைக் குடக்கனி மருங்கினின் மதியக்
> கொண்ட லூடுபோய்த் தட்டற வுருவிமேற் குலவி
> யண்ட கோடிகள் யாவையு மயிர்தினை யடங்கப்
> பண்டு தாங்கிய பரமனைப் பொருவின பனசம்" பக்: 27.

ஆசிரியர் சைவாகமங்களிலும் சித்தாந்த நூல்களிலும் இணையற்ற அறிஞராகத் தெரிகிறது. அதனை இந்நூலை யொருமுறை வாசிப்போர் எளிதில் அறியலாம்.

பதிப்பாளர் ஏட்டில் எழுத்துச் சிதைந்த விடங்களுக்கு எழுத்தும் சொல்லும் பொருத்திப் பாட்டை முடித்துச் செல்வது பெரும்பாலு மெவ்வகை முரணுமின்றி அமைதிபெற்றிருக்கின்றது. பழமை பேணுங் கிழமையுடையோர் பதிப்பாளர் மேற்கொண்டு செய்துள்ள இவ்வரிய வேலையைப் போற்றுதொழியார். அதுபோற் சைவ உலகமும் இவ்விறை பணியை இனிதுதவிய ஐயரவர்கட்குப் பெருங் கடமைபூண்டுளது. அக் கடமையின் உடைமையைக் கழித்தல் இந்நூலை வாங்கிக் கற்றலே யாம்.

104, Barnes Place,
Colombo.
10—2—38.

சே. இராசநாயகம்.

முகவுரை.

நூல்.

இந்நூல் சங்கர விலாசம் என்னும் பெயர்த்து. பாதகண் டத்திலுள்ள தென்னிந்தியாவைச் சேர்ந்த விசயநாராயணபுர வாசி யாகிய சிதப்பரநாதபூபதியால் இயற்றப்பெற்றது. அரிய புராண காவியநெறி பூண்டது. இலட்சக்கணக்கான கிரந்தங்களால் ஆரிய மொழியினும் பல்லாயிரம் பாக்களினுற் றமிழ்மொழியினும் ஆக்கப் பட்டுள்ள சிவபுராணங்களின் சாரங்களை யொருங்கே திரட்டிச் சுருங் கச் சொல்லல் விளங்கவைத்தல் என்னும் அழகமைய ஆக்கப்பட்டது. இயற்றமிழ் மேன்மையுடையது. சொற்சுவைத் தொடர்புள்ளது. விருத்தப்பாவின் விசிட்ட நிறைந்தது. யாப்புறுதி கொண்டது. அணிநல மமைந்தது. பொருட்சுவை பொலிந்தது. கற்போர் கேட் போர் உற்றுணர்வோர் என்னும் முத்திறத்தினருக்கும் இனிமை பயப் பது. தமிழ்மக்கள் அனைவருக்கும் இன்றியமையாதது. செந்தமிழ்ச் சீருடையது.

சங்கர விலாசம் என்பது சங்கரன் + விலாசம் எனப் பகுக்கப்படும். சங்கரன் என்றால் சுகங் கொடுப்பவன் என்பது பொருள். விலாசம் என்றால் அதிசய மேன்மை என்பது பொருள். எனவே, ஆன்மாக்கள் அனைவருக்குஞ் சுகங் கொடுப்பவராகிய சிவபெருமான் தம்மை அன் போடு வழிபடும் அடியாருக்கு அருள்செய்த அதிசய மேன்மைகளை விதந்து வற்புறுத்திக் கூறும் நூல் என்பது பொருளாயிற்று.

இதில் சுகமென்பது ஐம்புலன் வழியாக விடயங்களால் நுகரப்படு கின்ற தேகசுகத்தைக் குறிக்கின்றதா? அன்றி மனதிற் கப்பாற்பட்ட மெய்யுணர்வினு னுகரப்படுகின்ற ஆன்மசுகத்தைக் குறிக்கின்றதா? அன்றி இவ்விரு சுகங்களையு மொருசேரக் குறிக்கின்றதா? என்று விசா ரிக்கப்படுகிறது. நித்தியசுகங் கொடுத்து ஆன்மாக்களைக் கடைத்தேறு விக்குமாறு பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்தருளுகின்ற சிவபெருமான் கொடுக்குஞ் சுகமாதலின், இச் சுகம் பஞ்சப்புலன் வாயிலாக விடயங் களா னுகரப்படுகின்ற அநித்தியமான தேகசுக மன்றென்பதும் நித்திய மான ஆன்மசுகம் என்பதும் எளிதில் விளங்குகின்றன.

அதிசய மேன்மை என்றல் விடய சுகானுபவ விருப்புடைய தேவர் மக்கள் முதலியோராற் செய்தற்கரிய மேன்மை என்பது கருத்து.

1. (நூனுதலியபொருள்) எடுத்துக்கொண்ட காரியம்.

இந்நூல், சிவபெருமான் ஆன்மாக்கண்மீது கொண்ட காருண்ணிய மேன்மை, இம்மேன்மையினற் சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்னுந் திட்பம், சிவலிங்கபூசைத் திறமை, சிவபத்தியின் முறைமை, கற்பின் பெருமை, அதிதிபூசையினருமை, வழிபாடுமார்க்கம், பஞ்சாக்ஷரசெப மகத்துவம், சிவசின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கம் என்பவற்றின் மகிமை, சோமவாரவிரதமான்மியம், புண்ணியதீர்த்த விசிட்டம், அற்புத தலவுறுதி என்பவற்றை வரன்முறையாக விளக்குகின்றது. இதனல் இந்நூல் உள்ளுறையாக எடுத்துக்கொண்ட காரியம் ஆன்மலாபம் என்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது.

2. இயைபு.

மேலோதிய தீர்த்தஸ்நானம், தலமூர்த்தி தரிசனம் என்பவை அகத்தூய்மையையும், சிவலிங்கபூசை பஞ்சாக்ஷரசெபம் விபூதி உருத்திராக்கமணிதல் என்பவற்றுற் றீவினை நீக்கமும், வழிபாடு அதிதி பூசை விரதம் என்பவற்றல் மன்வொடுக்கமும், சிவபத்தி கற்பு என்பவற்றுற் றிடசித்தமும் உண்டாகும். இத் திடசித்த நிலையினல் தத்துவ வாராய்ச்சியுண்டாய் அது வாயிலாக மெய்யுணர்ந்து கடைத்தேறுதல் கூடுமாகலின், இந்நூலில் எடுத்துக்கொண்ட காரியங்கள் யாவும் ஆன்ம சுகமடைதற்குப் பெரிதுமோரியைபுடைத்தென்பது விளங்குகின்றது.

3. தகுதி.

இந்நூலைக் கற்றற்குங் கேட்டற்குந் தகுதியுடையார் யாவரெனின், ஐம்புலன் வழியாக நுகருகின்ற விடயானுபவங்களின் மொத்துண்ணுதவரும், தமக்கு ஊழானமைந்த இன்பதுன்பமென்னு மிரண்டினையும் பொறுமையோடும் அனுபவிப்பவரும், காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மார்ச்சரியம் என்னுங் குற்றங்களைத் தருகின்ற அசுபவாசனையை நீக்க முபல்பவரும், சத்தியம் அறிவு தருமம் இரக்கம் சாந்தம் பொறை என்பவற்றைத் தருகின்ற சுபவாசனையின் முபல்வேரும், தெய்வவழிபாடு பெரியோர்வழிபாடு அடியார்பத்தி குருபத்தி

என்பவற்றையுடையவரும், கல்வியினலும் கேள்வியினலும் அறிந்த அறிவொழுக்கங்களை அரிதாய் முயன்றும் அனுசரிக்கவேண்டுமென்னும் வேணவாவுடையவரும் ஆசாரசீலருமேயாம்.

4. பயன்.

இந்நூலைக் கற்றுங் கேட்டும் தெளிந்து ஒழுகுதலால் உண்டாகும் பயன் யாதெனின், அசுத்தவாசனைநீக்கம், சுத்தவாசனையனுசாரம், மனத்தூய்மை, தீவினைநீக்கம், நல்வினைவளர்ச்சி, காமியத்தவவெறுப்பு, நிட்காமியத்தவ விருப்பம் என்பவை உண்டாம். இப் பேறுகள் காரணமாகச் சிவபத்தி யுண்டாகும். இச் சிவபத்தி காரணமாக வைராக்கியம் உண்டாம். இவ்வைராக்கியங் காரணமாகச் சாதன சதுட்டய அனுசாரமுண்டாம். இதனற் சித்தமுண்டாம். இதனற் றத்துவவிசாரணை உண்டாம். இதனல் மெய்யுணர்வுண்டாம். இதனல் நித்தியசுகமாகிய வீடுபேறுண்டாம். இதுவே ஆன்ம ஈடேற்றமாகும். ஆகவே, இந்நூல் சைவசமயிகளுக்கு இன்றியமையாது வேண்டப்படுவதொன்றும்.

பதிப்பாசிரியர்.

அத்தியாய அட்டவணை.

		செய்யுட்டொகை	பக்கம்
	காப்பு		க
	கடவுள் வாழ்த்து	ககூ	க
	பதிகம்	கஙூ	ச
க.	உபமன்னியர் திருப்பாற்கடல் பெற்ற அத்தியாயம்	கருஉ	சூ
உ.	சிவன் தாருகாவனத்தில் பலியிரந்த அத்தியாயம்	எச	உஎ
ங	சுசீவதமுனிவர் காலனைக் கடந்த அத்தியாயம்	ஙச	ஙஎ
ச.	சிவன் தாருகாவனத்திருஷிகளுக் கருள்புரிந்த அத்தியாயம்	ருக	சஙூ
ரு.	ததீசிப்பிரமரிஷி வச்சிரயாக்கை வரம்பெற்ற அத்தியாயம்	எஙூ	ருக
சூ.	நந்திகேசுரர் சரிதையுரைத்த அத்தியாயம்	ககஅ	சூரு
எ.	விட்டுணுக்குப் பிருகுசாபம் வந்த கதையுரைத்த அத்தியாயம்	கூகூ	அக
அ.	விட்டுணு மன்மதனைப் பெறச் சிவார்ச்சனை பண்ணின அத்தியாயம்	உச	க0க
கூ.	விட்டுணு சக்கரம் பெறச் சிவார்ச்சனைபண்ணின அத்தியாயம்	உஅ	க0ரு
க0.	வசுசுருதன் பத்தியோக மகிமையுரைத்த அத்தியாயம்	ருஉ	ககO
கக.	பிருங்கி பிரதக்கிண மகிமையுரைத்த அத்தியாயம்	க0சூ	ககள
கஉ.	இராசா பிரதக்கிணம் பண்ணின கதையுரைத்த அத்தியாயம்	ஙச	கஙச
கஙூ.	பஞ்சாக்கரமகிமையுரைத்த அத்தியாயம்	அஙூ	கசக
கச.	சுத்துயமினன் சிவநாமம்பகர்ந்த மகிமையுரைத்த அத்தியாயம்	ஙக	கருசூ
கரு.	விபூதிமகிமையுரைத்த அத்தியாயம்	எரு	கசூக
கசூ.	உருத்திராக்கமகிமையுரைத்த அத்தியாயம்	உஉ	களச
கள.	சோமவாரவிரதமான்மியமுரைத்த அத்தியாயம்	சூO	களஅ
கஅ.	கமலாலயமான்மியமுரைத்த அத்தியாயம்	கூஅ	ககூக
ககூ.	காஞ்சீபுரமான்மியமுரைத்த அத்தியாயம்	கூச	உOஅ
உO.	திருக்காளத்திமான்மியமுரைத்த அத்தியாயம்	உள	உஉரு
உக.	ஸ்ரீசைலமகிமையுரைத்த அத்தியாயம்	ககூ	உஉஅ
உஉ.	உருத்திரகோடிமகிமையுரைத்த அத்தியாயம்	கரு	உஙக
உங.	கோதாவிரிமகிமையுரைத்த அத்தியாயம்	ஙள	உஙச
	ஆக மொத்தம் செய்யுட்கள்	கசஙரு	

உ

சிவமயம்.

சங்கர விலாசம்.

காப்பு.

விநாயகர்.

மழைதொடுஞ் சிகரம் பூத்த மந்தரஞ் சுழல வோங்கி
யிழைபடர்ந் திமைக்கும் பொம்ம லிளமுலைப் பவளச் செவ்வாய்க்
குழைகடந் துலவும் வேற்கட் குலவரைக் குமரி யீன்ற
புழைகெடுந் தடக்கை நால்வாய்ப் பொருப்பினைப் போற்றல் செய்வாம்.

சரஸ்வதி.

உள்ளகெக் குருகு மன்ப ருறுபவப் புனலை நீக்கித்
தெள்ளுமன் பினிய தீம்பாற் றெளிசுவை பருகித் தேக்கும்
வெள்ளிவெண் கமலக் கோயில் விளங்கிய கலைக ளோதும்
பிள்ளையோ திமத்தின் பாதம் பெரிதுவந் தகத்துள் வைப்பாம்.

கடவுள் வாழ்த்து.

சிதம்பர நடேசர்.

நிலவு வார்கலை நிறைமதி யெனச்சடை நிலவக்
குலவு வார்திரைப் பகிரதி குறுங்குளி கொழிப்பப்
பலவு மாருயிர் தழைத்திடப் பைம்பொனம் பலத்தி
னுலவு நாடகத் தொருவனை யுள்ளம்வைத் துவப்பாம். (க)

பார்வதியம்மை.

கொழுத்த தீங்கனித் தேறலு மமுதமுங் குழைத்துப்
பழுத்த பான்மொழிப் பனிவரை யுயிர்த்தருள் பாவை
முழுத்த நான்மறை மொழிதரு முடிவின்வீற் றிருக்கு
மழுத்து பஞ்சடிப் பல்லவஞ் சென்னிமீ தணிவாம். (உ)

விநாயகர்.

கடங்க வுட்குழி கடன்மடை கிறந்தெனக் கவிழ்த்து
முடங்கு வெண்பிறை முடியின னகைநிலா முகிழ்க்கப்
படங்கொள் பாந்தளம் புயவரை யெட்டினும் படர்ந்து
நடங்கொள் வாரணச் சேவடி நாவினும் புகழ்வாம். (ங)

முருகப்பிரான்.

கவந்த முங்கொடுங் கணங்களுங் கைகலந் தாட
நிவந்த நீண்மதிட் சூர்நகர் பொடிபட நெடுவே
லுவந்த சேவக னென்மனப் பாறைபுக் குலவிச்
சிவந்த தண்டையஞ் சீறடி சென்னிமீ தணிவாம். (ச)

திருஞானசம்பந்தர்.

வங்க வெண்டிரை மறிகடன் மயிலைமா நகரின்
வெங்கண் வாளரா தீண்டிய வேல்விழி மடந்தை
யங்க மின்புரை யழகுரு வமைதர வழைத்தீதான்
பங்க யச்செழுந் தாணைமலர்ச் சேவடி பணிவாம். (நி)

திருநாவுக்கரசர்.

உரவு மொண்சிலை புணைபென வளக்கர்மீ துகைத்து
விரவு வண்புகழ் மேதினி வரைப்பெலாம் விளங்க
வரவ கன்கண னடியிணைக் கன்புபூண் டருளிப்
பரவு முத்தமிழ் நாவினுக் கரசினைப் பணிவாம். (சு)

சுந்தரமூர்த்தியர்.

அந்த ரத்திமை யோர்களு மதிசயித் திடவே
மந்த ரத்துணை வளமுலைப் பாவைவாழ் மணியிற்
சந்தி ரச்சடை மவுலியைச் சந்தினுக் கிசைத்த
சுந்த ரப்பெயர்க் குரிசில்பொன் னிணையடி தொழுவாம். (எ)

வேறு.

மாணிக்கவாசகர்.

பாடற் சுரும்ப ருழுதுழக்கும் பசுந்தீன் மடிக்கு மலங்கலினுன்
கூடற் பதிகாத் தினிதளிக்குங் குரிசின் மகிழக் குதிரைமிசை
யாடற் பரம னெழுந்தருள வமிழ்தத் தருஞ்சொற் றமிழ்தெரித்தீதா
ணாடற் கரிய தணைச்சரண நாட்பொற் கமலந் தலைக்கொள்வாம். (அ)

வேறு.

திருமாளிகைத்தேவர் முதலானோர்.

அதிர்திரைக் கடலி னஞ்ச மமுதென வருந்து மெந்தை
புதுமதிக் கண்ணி கங்கை புணைமுடி துளக்கிக் கேட்ப
மதுரமுத் தமிழாற் பாடு மாளிகைத் தேவ ரடி
சதுரமெய்த் தவத்தோர் பைம்பொற் முண்மலர் தலைமேற் கொள்வாம்.

வேறு.

அறுபத்துமூவர்.

நெடிய வெண்டிரை நேமி வளைதரும்
படியி னெண்ணரும் பத்தி புரிந்தர
னடிவ ணங்கு மறுபத்து மூவர்பொற்
கடிம லர்ப்பதங் கைதொழு தேத்துவாம். (க0)

வேறு.

ஆசாரியர்.

திருப்பரங்குன்றமுனிவர்.

பருகுநாத் தெவிட்டிக் கணைத்தெதி ரெடுத்துப்
பாட்டளி பேட்டொடுங் துயில
முருகுகொப் பிளிக்கு மிதழிசே வினியனை
முறையொடும் பூசனை புரியத்
திருவருள் புரிந்தெங் குடிமுழு தாண்ட
திருப்பரங் குன்றமா முனிவன்
மருமலர்க் கமலச் சேவடித் துணைகள்
வணங்கியெஞ் சென்னிமீ தணிவாம். (கக)

வேறு.

சத்தியஞானி.

கத்திகைக் கருமென் கூந்தற் கன்னிய ரிடத்தி லார்வம்
வைத்துமும் மலத்தி னுழ்ந்து மருளுரு தெளியேற் கின்ப
முத்தியை வழங்குஞ் சைவ முனிவரன் கயிலை வாழுஞ்
சத்திய ஞானி செம்பொற் சரணினை தலைமேற் கொள்வாம். (கஉ)

வேறு.

ஈசானதேவன்.

அல்லலுற் றழுங்கும் பிறவியங் கடலி னுழ்ந்திடு மிருவினை யுணராப்
புல்லொழுக் கினர்பாற் பொருந்திடா திதழிப் புனிதனை நாவினுற் புகழச்
சொல்லுமுத் தமிழி னிலக்கணப் பகுதி தொகுத்தளித் தென்னையாண் டருளு
மெல்லையிட் டளவா வின்பவீ டுணரு மீசான தேவனைப் பணிவாம். (கங)

வேறு.

தத்துவநாதன்.

அங்கமலப் பீடிகையோன் மணிநாவில் வீற்றிருக்கு மமுதந் தூற்றுங்
திங்களுதற் கலைமடந்தை யென்னுவி லுறைந்தரசு செலுத்தச் செய்தான்
பைங்கண்மழ விடையுகைக்கும் பரமனிரு பதங்கருதிப் பரவு மையன்
பொங்குபெருங் கருணைபொழி தத்துவநா தன்மலர்த்தாள் புந்தி வைப்பாம். (கச)

வேறு.

வாழ்த்து.

மாதவ முனிவர் வாழ்க மனுமுறை யரசர் வாழ்க
மேதினி வளங்கண் மல்க விண்முகின் முறையிற் பெய்க
மூதுணர் வளிக்குஞ் சைவ முழுநெறி தழைத்து வாழ்க
வோதிய பரமன் காதை யுலகெலாம் பொலிக மாதோ (கஙி)

அவையடக்கம்.

பிறைமுடிச் சடில நாதன் பெருமையிவ் வளவைத் தென்றே
முறைதெரிந் துரைக்கி லாதி முகுந்தனு மொழிதற் பாற்றே
வறைகட லுலகோர் தத்த மறிவள வளக்க லாமே
னிறையறி வில்லா வஞ்சச் சிறியனு நிகழ்த்த லாமால். (கசு)

மாதவச் சூதன் சொன்ன மாக்கதை வடித்து மாநீர்ப்
பூதலத் தெளியேன் றீய புன்சொலாற் புகலுங் தன்மை
தாதிணர்க் கமலம் வெய்யோன் பருவஞ்செய் தகைமை செய்வா
னேதமுற் றிருக்குங் கீட மின்மினி யிசைத்த லன்றே. (கஎ)

இருளற விளங்கிக் காலு மெரிமணி பொதிந்த பொல்லா
மருளுறு மழுக்கி னுய கலியும்வண் கைக்கொள் வார்போற்
றெருளுறு மேலோர் ஞானச் சிவனருட் காதை யாற்சொற்
பொருளறிந் துரையா நாயேன் புன்சொலுங் கொள்வ ரம்மா. ()

வேறு.

நூல்வரலாறும், ஆக்கியோன் பெயரும்.

பொலன்கிரி குழைத்த பரன்புரா ணத்திற்
புகல்கதை விசிட்டமோர்ந் தெடுத்து
நலம்பெறத் திரட்டுஞ் சங்கர விலாச
நற்றமிழ் வடித்தினி துரைத்தான்
வலம்புரிக் குலங்கள் சூலுளைந் தகற
வழிநரு மலரினே திமங்கள்
சிலம்புதண் பழன விசையைநா ரணன்சொற்
சிதம்பர நாதபூ பதியே. (ககூ)

கடவுள்வாழ்த்து முற்றும்.

பதிகம்.

திருமலி கனக மன்றிற் சிவன்கழல் வழிபட் டேத்த
மருமல ரெடுப்பான் வேண்டி வள்ளுகிர்ப் புலிக்கால் பெற்ற
வருமறை முனிவன் மைந்த னமலனே யருச்சித் தன்பாற்
பருமணி கொழிக்குந் தெய்வப் பாற்கட லடைந்த வாறும். (க)

சந்திர மவுலி பெந்தை தனித்தேரு வடிவ மாகிப்
பைந்தரு வன்தி லெப்திப் பலிதனே யிரந்த வாறு
மந்தமு முதலு மில்லா வண்ணலைச் சுவேதன் போற்றி
மந்தர மனைய திண்டோண் மறலியைக் கடந்த வாறும். (உ)

தருவனத் தடைந்து பின்னர்த் தழல்விழிப் பரமன் செய்ய
பொருவரு தவத்தி னோர்க்குப் புகலருள் புரிந்த வாறு
பருமல ரிதழி யோனை வணங்கியே வயிர மேனி
யருளுயர் ததீசி னூய வகங்களித் தடைந்த வாறும். (ஙு)

டணிமதி முடியிற் சூடும் பரமனே வணங்கி நந்தி
தனிவர மடைந்தி யார்க்குந் தலைமைபெற் றுயர்ந்த வாறு
முனிவரோடும் பிருது நீக்கா மொழிந்திடுஞ் சாப வெந்தீக்
கனிகற வுயிர்க்குந் தண்டார்க் கரியவற் கடைந்த வாறும். (ச)

மணிகிற வண்ணன் வென்றி மதனனே யளிக்க நாடிப்
பணிகெடுஞ் சடையிற் சூடும் பரமனே வழுத்தும் வாச
மணிகிளர் பருதி மானு மாழிபெற் றுய்ய வன்னுன்
றிணிகெடுங் கரங்கள் கூப்பிச் சிவனெவக் தித்த வாறும். (ஙு)

சத்திபத் துவச னன்பிற் றருவசு சுருத வேக்தன்
பத்தியோ கத்தின் றன்மை பரிவொடும் பகர்ந்த வாறு
மூத்தியைக் கருதும் வேத முனிவரன் பிருங்கி வேணி
யத்தனே வலஞ்செய் தின்ப வருட்கதி யடைந்த வாறும். (கூ)

புற்றிடத் துறையு மூக்கட் புனிதனைத் திருவா ரூரின்
மற்றடக் கினிதாள் வேந்தன் வலஞ்செய்த லுரைத்த வாறு
மூற்றவஞ் செழுத்தால் ஞானச் சதானந்த யோகி யென்பான்
பற்றிவெங் கிரயத் தோர்கள் பவந்தொலைத் துயர்த்த வாறும். (எ)

சுடரெறி வேலி னுன்சுத் துயம்மின னென்னும் வேந்தன்
கடுவுறழ் மிடற்றீ ரூமங் கழறிய துரைத்த வாறு
மடலவிழ் சுமலச் செந்தார்க் கருணனு மறையோன் றூய
பொடிகொள்வெண் பூதி யாலே புகரற விளங்கு மாறும். (அ)

மழுவல னுயர்த்த வண்ணல் வயங்கிய விழியிற் றோன்றுங்
கெழுமுசீர் மணியின் றன்மை கிளர்வுற வுரைத்த வாறுங்
தழைதரு தருமன் மிக்க தானிய பட்ட னன்பின்
விழுமிய சோம வார விரதனோற் றுயர்ந்த வாறும். (கூ)

ஆடலஞ் சிலையிற் செம்பொ னணிவரை குழைத்த நாதன்
மாடநீள் கமலை மூதூர் மான்மிய முரைத்த வாறுங்
கோடிய ரிமய மீன்ற கோற்றொடி யரனைப் போற்றும்
பீடியர் வளங்கூர் காஞ்சிப் பெருமையை யுரைத்த வாறும். (கo)

கைச்சிலை பெயினர் கோமான் கனியிதழ் சுவைக்குஞ் சூட்டு
னெச்சிலுண் டவன்கா ளத்தி மகிமையை யிசைத்த வாறு
முச்சிசெங் கதிரிற் றோய வுயிர்சிறீ சயில மென்னும்
வச்சிர மிழைக்கும் வெற்பின் மான்மிய முரைத்த வாறும். (கக)

அருத்திபி னிந்து காந்தத் தலந்தொறும் விரவெண் டிங்கள்
விரித்திள நிலவு கால விடும்புனற் றிவலி தோய்ந்து
திருத்திவா யலகு கொட்டிப் பசுங்கிளி சிறக ராற்று
முருத்திர கோடி வெற்பின் மான்மிய முரைத்த வாறும். (கஉ)

விரிதிரை சுருட்டு கோதா விரிவர வுரைத்த வாறு
மரிமதர் நெடுங்கட் செவ்வா யரவுடை மடந்தை பங்கன்
றருவளந் தருசீ ராசைச் சங்கர னருளா லோங்கும்
பொருதிரை யுலகில் யாரு முணர்வுறப் புகல வுற்றேன். (ஙக)

பாயிர முற்றும்.

முதலாவது
உபமன்னியர் திருப்பாற்கடல்பெற்ற வத்தியாயம்.

நைமிசாரணியச் சிறப்பு.

நிலவு வேணியன் காஞ்சிமா நகரிடை நின்று
மலரி னுன்முகன் விடுத்திடு தருப்பைபோய் வளைந்து
குலவு வெங்கலி யடைந்திடா திவணெனக் குனித்த
விலகு மாதவம் விளங்கிய தெய்வத விருக்கை. (க)

மீன் மறைத்துமேன் மண்டல மெளியெலாம் விரிந்து
பான் மறைத்தவெண் ணிலவுமண் டலமிசை படர்ந்து
வான் மறைத்தெழு பொதும்பரின் மழலையங் கிளிக
ணுன் மறைத்தொகை மொழிதரு நயிமிசா ரணியம். (உ)

நைமிசாரணியத்தில் முனிவர் புகுதல்.

அத்த லத்திக லனங்கமே லங்கணை கடிந்த
வித்த கத்திரு முனிவரர் வேள்வியாங் கியற்றக்
கைத்த லத்தொரு தண்டமுங் கமகமுந் தாங்கி
முத்தி வைப்பென வனேயரு முறைமுறை புகுந்தார். (ங)

நைமிசாரணியத்தில் சூதமுனிவர் வருதலும், அவ்விடத்து முனிவரர் சிவகதைசொல்லும்படி கேட்டலும்.

அன்ன காலையிற் றிசைமுகத் தொருவனே யனைய
சொன்ன மாதவச் சூதமா முனிவன்று தோன்ற
மன்னு தாபத ரிருக்கையிற் றெமக்குமா மதியச்
சென்னி வானவ னிருங்கதை செப்புதி யென்றார். (ச)

சூதமுனிவர் சிவகதையின் பெருமை கூறல்.

ஆதி மாதவத் துறையுளீர் நன்றுநன் றறைந்தீர்
சீத வார்புனல் வேணியன் கதையொன்று தெரிக்கி
லோத நான்மறை யுரைத்திடு முத்தியை யுதவும்
பூத நாயகன் காதையின் பெருமையார் புகல்வார். (ஞ)

சூதமுனிவர் புராணங்களிலிருந்தெடுத்துச் சிவகதை கூறுவேனெனல்.

முன்னு மெம்பிரான் புராணங்க ளொருங்குற மொழிந்தே
னின்னு மன்னவை யிடத்துணர் விசிட்டமோர்ந் தெடுத்துப்
பன்னி மாக்கதை சிலவதி சயமுறப் பகர்வேன்
றுன்னு செஞ்சடை முனிவரீர் கேட்கெனத் தொகுத்தே. (ட)

சூதமுனிவர், உபமன்னியர் பாற்கடலடைந்த கதையினைக் கூறத்தொடங்கல்.

வேத நான்கையும் விளம்பிய வியாதனைப் பரவி
யாதி நந்திமெய்ச் சனற்கும ரனுக்கறைந் தனனென்
ரோது சீருப மன்னரியர் பாற்கட லடைந்த
காதை யன்பொடுஞ் சூதமா முனிவரன் கழறும். (எ)

மேகங்கள் நீர்கொண்டு செல்லல்.

சீத வண்புயல் சிவனரு ளுருவெனச் சிறந்து
காதல் கொண்டொரு வழிப்பட விண்ணெறி கடந்து
மோது தெண்டிரைக் கருங்கட லெறிபுனல் முகந்து
மாத வன்றிரு வுருவினில் வயங்கிமீண் டனமே. (அ)

மேகங்கள் குடகுமலையில் மழைபொழிதல்.

அரவ கன்படர் முடக்கிய சடையினன் கங்கை
விரவு வெங்கன லொளிபெனத் திசைதொறு மின்னிப்
பரவு புங்கவன் றுடியினி லதிர்ந்துயிர்ப் பயிர்க்கோர்
புரவு கொண்டவன் கருணையிற் குடகினிற் பொழிந்த. (கூ)

குடகுமலையினின்றும் பெருகிவரும் மழைவெள்ளச் சிறப்பு.

பொழிந்த வெண்புனல் குடகுயர் குவட்டின்மேற் புரண்டு
சுழிந்து வீழ்தரு மருவிவண் டிமிர்பசுந் துளவோன்
விழைந்து விண்டொடக் கிளர்ந்தநாண் மணிமுடி விடுக்க
வழிந்து வார்திரைச் சுரநதி வருவதொத் துளதால். (கo)

கரி மருப்புதிர் தளமுங் கனகமுங் கதிர்கான்
றெரி யிமைத்திடு மனவமும் வயிரமு மெறிந்து
பொரி யரைச்செழுஞ் சூதமும் பனசமும் புரட்டி
விரி திரைக்கடல் கிழிபட விரைந்துசென் றதுமே. (கக)

வெள்ளம் மருதநிலத்தட் பாய்தல்.

பொருது மேபலை புரட்டிய பொன்னிமா நதிபோய்
மருத மாநில வளங்கெழு வயலெலாம் வழங்கிப்
பெருகு கேணியுங் குளங்களும் பலபல பெருக்கி
யிரு நிலத்தவர்க் குயிரென வெழுந்தலா வியதால். (கஉ)

மருதநிலச் சிறப்பு.

பள்ள வாய்மடை யுடைத்துழும் பழனங்கள் பரந்து
வெள்ள நீர்புகு முழக்கமும் விரிசிறை யடித்துப்
புள்ளி னஞ்சிலம் பேதையும் பூட்டுமேர் தரந்து
மள்ளர் வாய்விடு மமலியுங் கடலொலி மறுத்த. (கங)

மகளிர் சிறப்பு.

அந்தணர் மகத்தி லெய்து மமரர்க ளரம்பை மாதர்
வந்தன ரிவண்கொ லென்னு மருளுரு தொலிநீர் வைப்பின்
பைந்தொடி யவரென் றன்னுர் படைநெடுஞ் சுடர்வேற் கண்ணுஞ்
செந்தளிர்ச் சிலம்பு பூண்ட சீறடிச் சுவடுங் காட்டும். (கo)

கன்னலுஞ் சிலேவே ளன்ன காளையர் புயங்க ளென்னு
மின்னவிர் பொலன்செப் பைம்பூண் மிளிர்வரை மின்ன னார்செம்
பொன்னெளிர் திதலைத் துத்திப் புணர்முலை பூசு சாந்தஞ்
சென்னிமற் றவர்கள் பொன்னஞ் சேவடிச் சிவந்த பஞ்சே. (கக)

சோழநாட்டுச் சிறப்பு.

ஆயிரந் தடங்கண் வேந்த னரசுவீற் றிருக்கு நாடும்
பாயிர மறையோ னுடும் பசுந்துழாய் முகுந்த னுடி
மாயிரு ஞால மேத்தும் வளவனு டதனுக் கொவ்வா
தூயவண் டமிழோர் யாரே யதன்வளந் தொகுக்கற் பாலார். (கஉ)

வேறு.

தில்லைநகரச் சிறப்பு.

இஃகி யான்புகழ்ந் தேத்திய வளவனுட் டினுக்கோர்
தங்கு மாமணித் திலகமொத் துளதுபொற் சபில
நங்கை பங்குடை நாயகன் றிருநட நடிக்குந்
திங்க ளஞ்சடை யெம்பிரான் றெய்வமா நகரம். (கங)

அகழிச் சிறப்பு.

தலங்கொ ணீண்மதிட் கிடையிடை குயிற்றிய தாளந்
துலங்கு வெண்கதிர் விரித்தலிற் சுற்றுபே ரகழி
யலங்கல் வேணிய னருந்தவன் புதல்வனுக் களித்த
கலங்கு வார்திரைப் பாற்கடல் கிடந்தது கடுக்கும். (கச)

மட லுடைத்தலர் தாமரை வளங்கெழு மகழி
லடன் மதக்கரி யுழக்குத லலைசுருட் டெறியுங்
கடல் கலக்குறத் தடவரை திருப்புதல் கடுக்கும்
படர் வளைக்குல மமுதமென் குமிழியைப் பகரும். (கஞ)

மதிற் சிறப்பு.

ஓங்கு கற்பகப் பொன்னகர் நெளிந்திடா தூறுதி
தாங்கு தற்குயர் தமனியத் தடிப்படை சமைத்துத
தேங்கு தேமலர்க் கிழவனன் றமைத்தது சிறக்கும்
வாங்கு பேரலை யகழிசூழ் கிடந்தபொன் மதிளே. (கசு)

கோபுரச் சிறப்பு.

கற்றை வேணிய னுடலஞ் சேவடி காண்பான்
கொற்ற வெங்கதிர்த் திங்களோ னன்முகன் குலிசன்
மற்றை வானவ ரனைவரும் வருவதற் கமைத்த
பொற்ற செங்கதிர்ப் பொற்படி யனையகோ புரங்கள். (கஎ)

மாடச் சிறப்பு.

நெருங்கு வெண்சுடை ராயிர மதியென நிலவி
வருங் கதிர்ப்படை வச்சிர மடுத்துவா னவர்கோன்
முருங்கு வெஞ்சிறை யரியுநாள் வரைக்குல முழுது
மொருங்கு வந்திருந் தனையவிண் ணுயர்நெடு மாடம். (கஅ)

கொடிச் சிறப்பு.

கொழித்த செங்கதிர் மணிநெடு மாடவெண் கொடிகள்
கிழித்து மஞ்சுதொட் டசைவன கிளர்ந்தமே னிலத்தி
னிழைத்த நுண்ணிடை மடந்தையர் வளர்த்தவெள் ளெகினஞ்
சுழித்த வானதி படியமேற் சுழல்வன துலக்கும். (கக)

மாடங்களில் வசிக்கும் மகளிர் சிறப்பு.

புயல் கிடந்தொளிர் மேனிலை யிடந்தொறும் புகுந்து
முயல் கிடந்தொளிர் வெண்மதி மடந்தையர் முகங்கள்
கயல் கிடந்துள மதிகொலோ விவையெனக் கருதி
யயல் கிடந்துபார்த் தழகினு லதிசயித் தயரும். (சo)

ஓவி யங்கெழு முயர்மணி மாளிகை யுறையும்
பூவை கேட்குறிற் புறம்படு மென்றுமே னிலைபோய்க்
கோவை வாயித முண்டுபொற் குவிமுலை குழையப்
பாவை மார்மகிழ் கலவிக ளாடவர் பயில்வார். (சக)

சந்திரகாந்தக் கற்களினின்று நீரொழுகுதல்.

இந்து காந்தவெண் மணிகளி னிழைத்த மேனிலத்தின்
வந்து வெண்மதி தவழ்தலின் மறிபுனல் வழிந்து
சிந்து குங்குமச் சேறுசெய் தெருவெலாம் கழீக்கொண்
டிந்து தெண்டிரை யாறலைத் தெங்கணு மொழுகும். (சஉ)

மகளிர் முத்தமாலிகை யெறிதல்.

கால மஞ்சிவர்ந் திலகிய கொடுமுடி கலந்த
நீல வொண்சுடர் மணிசெய்பொற் குன்றின்மே னெடுங்கட்
கோல மங்கையர் கலவியில் வெறுத்தெறி குளிர்வெண்
மாலை நித்திலம் வீழ்வன வருவிகண் மானும். (சங)

வீதிச் சிறப்பு.

முரி தடந்திரை முத்தவெண் ணிலவுமிழ் முகப்பும்
பொருவில் செம்மணிப் பூரண கும்பமும் பொலன்ற
ளெரி பசும்பொனின் கமுகமு மினியதீங் கரும்பும்
விரியு நெட்டிலைக் கதலியும் வளங்கெழும் வீதி. (சச)

கடைவீதிச் சிறப்பு.

உரைகொ ளாடக மாகதக் குவையம்றிங் துதறுந்
திரைகொ ணித்திலம் பவளமென் செறிமயிர்க் கவரி
விரைகொள் சந்தன மான்மதம் விண்முகில் விரவும்
வரைகொள் காசகின் மலிதரு பாவண மறுகே. (சடு)

யானை குதிரைகளின் சிறப்பு.

கொண்ட லிற்கத மதகரி குளிறிய குரலும்
திண்டி றற்கருங் கொய்யுளைப் புரவியின் சிலைப்பு
மெண்டி சைப்பரப் படங்கலுந் துளங்கிட விமையோ
ரண்ட முங்கடந் தப்புறத் தெல்லையு மதிரும். (சகு)

ஆடவர் மகளிர் ஒழுக்கச் சிறப்பு.

ஐந்து தேங்கணைக் குமரனி லழகெனப் பழிச்சு
மைந்தர் யாவரு மறைகெறி வழக்கினை வழுவார்
கந்த நாண்மலர்க் கன்னியர் யாவருங் களபச்
சந்த மாமுலை யருந்தகற் பினுந் தலையார். (சள)

வேறு.

சிதம்பர தலச்சிறப்பு.

கருக்கிளர் பிறவித் தடங்கட லினுக்கோர் கழலெனும் புனைநடித் துயர்த்த
வுருக்கிளர் பெரு மான் பவளவாய் மலர்ச்தே யொருவன்யா னிவரிலென் றுரைக்க
கருக்கிளர் தடங்கைச் சதுமறை முனிவர் தண்ணளி சுரந்தவீற் றிருக்குஞ்
திருக்கிளர் மடமூ வாயிரம் பொலிந்து திருந்திய தில்லைமா நகரம். (சஅ)

வலங்கெழு பருதிச் சக்கரக் கடவுண் மணிமுடி குடங்கையிற் கிடத்திக்
கலவ்குசெங் குருதிப் புலவுவாய் கமழுங் கதிர்ப்படை மழுவலா னடத்தி
னிலவ்கொளி மணியி னரிச்சிலம் பெடுத்த வினைப்பதத் தொன்றுகண் டிறைஞ்சத்
தலம்புழ்ச் சபைமுன் வரகிடர் தருஞர் தனிகர் பெரும்பற்றப் புலியூர். (சக)

தீங்குறும் பகத்தி னடைவுசெய் கொடிய தன்மதன் செழுந்துவர்க் கனிவாய்
வீங்கிளங் குவவுக் குறுமுலை மடவா ராடலை விருப்பிடை குதலை
மாங்கர வசைத்த சடைமுடிப் பரம னம்பலத் தருணடங் தெரியப்
பாங்கிரு விழியா லேக்கிவீ டடைந்த பழம்பதி சிதம்பர நகரம். (நி)

மையலங் கரடக் கடமலி யுகைத்து மானவேற் சேரலர் பெருமா
னையன திலகு பொதுநடம் பரவ வரும்வழி யருஞ்சுமை பொறுத்த
வெய்யதுற் சகனு மந்நக ரடைந்து மெலிவொடு மிளைப்பினில் வருந்து
பொய்யுடம் பகலச் சிவகதி யடைந்த பொருவிலாப் புண்ணிய நகரம். ()

பாயிருண் மடித்துப் பருகுசெங் கதிரின் பகைகெடப் புனற்கடும் பகழி
மாயிரும் புவியி லனுதினம் விடுக்கு மறையவர் பிதிர்தினத் தளித்த
வேயிரும் புழுக்க லலகெடுத் துதற விருமறைக் கிழவன்வாய்ப் படலாற்
காயிரும் பவம்போய்க் கரடம்வா னுலகங் கலந்தவக் கடவுண்மா நகரம்.

குமரிவண் டுழக்கக் குறுமுகை நெகிழ்ந்து கொழுநறு வொழுதண் டெரிய
லமரெனப் பணைத்த முழவுறழ் தடந்தோ ளரசர்சிகான் கவடநா டளிப்போன்
கமழ்மறி திமிரு மூடலினிற் சுதைபோய்க் கனகவொண் ணிறம்பெறக் கொடித்த
தபரவெண் டிரைய வரநதி பெருகு தடந்தரு தரும்புர மூதூர். (நிங)

மலர்தலை யுலக முழுவதுஞ் சுமக்கு மணிமுடிப் பஃறலைக் கவைநா
நிலவுகொப் பிளிக்கு நெட்டிடற் புயங்க முனிவர னிலபெற வழுத்திக்
கலகமிட் டடர்ந்து குழைபொரு தடங்கட் கவுரிகண் டுளங்களி கலிக்க
வுலவுமத் திருக்கூத் தருள்கவென் றிரங்க வெப்பிரா னுலவுமா நகரம்.

முரிகரு மருப்புக் கவையடி யெருமை முலைவழிந் தொழுகிய நறும்பால்
பருகிவெள் ளெகினப் பாற்பினங் களிக்கும் பண்ணைசூழ் கமலையம் பதியி
லருமறை துதிக்குங் காசிமா நகரிற் பிறப்பது பிறப்பது பரிதாற்
றெரிசனை யளவிற் பரகதி யளிக்குஞ் சிற்பரன் சிதம்பர நகரம். (நிரு)

வம்பினைக் கறுத்துப் புடைத்தடி பரந்து வட்டமிட் டவிரிழை சுமக்குங்
கும்பமொத் தெழுந்த பணைமுலைக் கனிவாய்க் கோற்றொடி யுமையவள் கொழுநன்
செம்பொனிற் றிகழு மாடநீள் புரிசைச் சிதம்பரத் திருநகர்ப் பெருமை
யப்புயத் தரசுஞ் சுருதியு மளத்தற் கமைவதோ யாவரே யளப்பார். ()

வேறு.

சிதம்பரப்பதியிலுள்ள வியாக்கிரபாதமுனிவர் வரலாறு கூறல்.

இன்னணம் பகர்ந்த தெய்வச் சிதம்பரத் தெந்தை யார்செம்
பொன்னடிக் கமலம் வாழ்த்திப் பூசனை புரிந்து போற்ற
மன்னிய தருக்க மோறு மருமல ரெடுப்பான் வேண்டி
யுன்னரும் புலிக்கால் பெற்ற வொருவனற் றவத்தின் மிக்கான். (நிள)

கண்களித் தளவில் ஞானக் கருணையா னந்தஞ் சிந்தப்
பெண்கொடி யிமைய மீன்ற பெய்வளை யொருபால் வைத்த
தண்பிறை மிலைத்த சென்னிச் சங்கர னடன மன்பாற்
பண்பொடுந் தெரிசித் தேத்தும் பத்தியிற் றலைமை பூண்டோன். (நிஅ)

ஓதுநூற் கல்வி சொல்லு மாகம வொழுக்கஞ் சில
நீதியி னிரக்க முண்மை பொறையறந் திறம்பா நீர்மை
யீதலே முதலா யுள்ள வினைத்தையு மியல்பிற் சார்ந்தோன்
வேதமா முனிவன் சைவ வியாக்கிர பாத னென்பான். (நுகூ)

வியாக்கிரபாதமுனிவர் புத்திரப்பேறு.

நினைவரும் புலன்கள் யாவு மொருவழி நிறுவி யெம்மான்
கனைகழற் கழலே யென்றுங் கடைப்பிடி யாகக் கொண்டு
வினைவழி யகற்றி யேழு பிறப்பையும் விலக்கு மென்ன
மனையறந் தழுவி ஞான மைந்தனை மகிழ்வி னீன்றான். (கூ0)

அப் புத்திரருக்கு உபமன்னியரெனப் பெயரிடுகையும், இளமைப் பருவமும்.

ஓங்கரும் புதல்வற் கேற்ப வுபமன்னு வென்னு நாமம்
வாங்குதெண் டிரைநீர் சூழும் வையகம் புகழச் சாற்றி
நீங்கரும் சிலம்பு தண்டை யரைவட நிலவச் சேர்த்தித்
தேங்கமழ் திலகந் தீட்டித் திருவொடும் வளர்க்கு நாளில். (கூக)

உபமன்னியர் அன்னையோடு மாதுலராகிய வசிட்டாசிரமம் செல்லல்.

கன்னிவண் டுறையு மாலைக் கருங்குழன் மடந்தை யாய
வன்னைதன் முன்னர்த் தோன்று மருமறைக் குரவ னுளுஞ்
சின்னெறி பலவுந் தீர்ந்த வசிட்டனைக் காண்பான் றெய்வப்
பன்னசா லையிற்புக் கெய்தப் பாலனு மெய்தி னனுல். (கூஉ)

வசிட்டர் உபமன்னியரைக் கண்டு மகிழல்.

கண்டனன் வசிட்டன் வாரி யுச்சியுங் கவிளு மோந்து
கொண்டனன் மருகன் றன்னைக் குறங்கின்மீ திருத்திக் கோலப்
பண்டரு மழலைத் தேற லமுதெனப் பருகிக் காதா
லுண்டன னளவி லாத வுவகையூத் தொளிர நின்றான். (கூங)

அருந்ததி, மருகராகிய உபமன்னியருக்குக்
காமதேனுவின் பாலூட்டலும் அணிசெய்தலும்.

கற்பக நகரத் துள்ள கடவுண்மாச் சுரபித் தீம்பா
லற்பொடு மினிது சேக்கி யஞ்சனம் விழியிற் போக்கிப்
பொற்புறு குஞ்சி கோதிப் புழுகுநெய் யிழுதி நாட்டி
நற்பணி புனைந்தா ணம்பிக் கருந்ததி பென்னு நங்கை. (கூச)

இவ்வாறு வசிட்டாசிரமத்தில் தங்கிச் சிறார்களோடு விளையாடிய
உபமன்னியர் தாயாரோடு தங்கள் பதிக்கு மீளல்.

இத்தகை யிவர்க ளாற்றச் சிலபகல் வசிட்ட னீன்ற
புத்திரர் தங்க ளோடும் புழுதியாட் டயர்ந்து தீம்பால்
சித்தமன் பயர மாந்தி யிருந்தனன் றிருப்பித் தாயர்
வைத்தபொன் னிருக்கை சார மைந்தனும் வந்து சார்ந்தான். (கூடு)

உபமன்னியர் தாயாரிடம் பசியிகுதியால் ஆவின்பால் தரும்படி கேட்டல்.

சார்ந்தபின் பசியின் வெந்தீத் தலைக்கொளத் தளர்ந்து வாடிச்
சோர்ந்தன னமுத மன்ன சுவைநறுந் தீம்பால் கேட்டே
யார்ந்தசீர் கொழித்த கற்பி னினைமுகங் குறித்து நோக்கி
வார்ந்தநீர் கண்கள் மல்க வாய்திறந் தழுது நின்றான். (கூசு)

தாய் மகனைத் தேற்றி, காட்டிடை ஆவின்பால் கிடையாதென்றல்.

அய்யனே யரசே ஞான வமுதமே யழகு பூத்த
செய்யனே பசிய பொன்னே தீஞ்சுவை கனிந்த தேனே
சையநொந் துருக வாடி யழுவது தகைமைத் தாமோ
வெய்யனேன் கெடுத்த பாவி யென்செய்வே னென்று மீண்டும். (கூள)

விழிசொரி தாரை மாரி வெள்ளநீர் கரத்தால் மாற்றி
வழிசுவைத் தீம்பா லிந்த வனத்திடை கிடையா தென்னப்
பழிகெழு கொடிய வேற்கட் பைந்தொடி பகர வந்த
மொழிசெவிப் படலுங் கேளா தழுதனன் முழங்கிப் பின்னும். (கூஅ)

மகன் மீண்டும் அழ, தாய் சென்மாவைக் கரைத்துக் கொடுத்தல்.

அருந்தவப் பயனு மைந்த னழுவதுக் கிரங்கி யன்னை
வருந்தினள் விலக்கக் கேளா னென்றுநென் மாவை யள்ளித்
திருந்திலை வள்ளத் தாக்கிக் கரைத்துநற் றீம்பா லைய
பொருந்தநீ யுண்க வென்று கொடுத்தனள் புதல்வன் றன்பால். (கூகூ)

சென்மாப் பாலைப் பருகிப் பார்த்து, இது தானுண்ட தீம்பாலன்றெனல்.

காதலாற் கொடுத்த மாவைக் கனியிதழ் வைத்து நோக்கி
யாதிது வன்னை சூடு மினிமையு மில்லை யந்த
மாதுலன் மைந்த சோடு மருந்திய மதுரத் தீம்பால்
கோதறு மினிமை யுண்டு கொதித்தலு முண்டா லென்றான். (எ0)

தாய் சென்மாப் பாலைக் கொடுத்த காரணங் கூறல்.

என்றலு மவனை யீன்றாள் சிலமொழி யிசைப்ப தானு
ணன்றுநீ யழுதுவாடி நலிந்திடுங் குறையை மாற்றத்
துன்றுசெஞ் சாலி மாவை யளித்தனன் சுவைக்குந் தீம்பா
லன்றவர் செய்கை யெல்லாம் யானெடுத் தறையக் கேண்மோ. (எக)

மாதுலன் மைந்தர் சிவனருள் பெற்றமையால் காமதேனுவின் பால்
பெற்றனரென்றும், மகனுக்கு அஃதின்மையால் சுரபிப் பால்
கிடைக்கவில்லையென்றும் கூறல்.

வரநதி துளும்புஞ் சென்னி வரதனை வழுத்தி யன்பா
லிருவிசும் புறையுந் தெய்வச் சுரபியு நிதியு மீட்டும்
பெருவள மனைத்தும் பெற்றார் மாதுலன் மைந்தர் பேறு
தருசிவ பூசை முன்னர்ச் செய்திடா தவனீ பென்றாள். (எஉ)

அதனைக் கேட்ட உபமன்னியர் தாமும் சிவனருள் பெற்றுப் பாற்கடலிலே பெறுவேனென்றல்.

உரைத்திடி மொழிபுட் கொண்டான் சிவனெனு மொருப னுண்டேல்
விரைக்கழ லருச்சித் தந்த மாதுலன் வியந்து பெற்றோர்
தரைத்தரு சுரபி யன்றோ பெற்றன ரதன்மேற் றத்து
திரைத்திருப் பாலி னுந்தி பெறுவது திண்ண மென்றான். (எக)

உபமன்னியர் தவஞ்செய்யச் சோலையிற் புகுதல்.

அடிதயர் செய்கை யெல்லாந் துறந்தன னன்னை பொற்றா
டொழுதுவீழ்ந் திறைஞ்சி நின்று வலஞ்செய்து தொலைவி லாத
முழுநெறித் தவஞ்செப் வான்போய் முரிதிரை முகந்து மாரி
பொழிபுப னுறங்கு சோலைத் தவவனம் வேலு புக்கான். (எச)

சோலையின்கண் பர்ணசாலை யமைத்தல்.

அவ்வன மடைந்து மைந்த னடலரும் புலன்க ளெல்லாஞ்
செவ்வழிப் படித்தி வேறோர் சிந்தனை பொன்று மின்றிக்
கொவ்வையங் கனிவாய் பங்கன் குரைகழ லருச்சித் தீதத்தத்
திவ்விய விருக்கை பொன்று சமைத்தனன் சிவந்த கைபால் (எரு)

உபமன்னியர் இலிங்கம் தாபித்துப் பூசித்தல்.

அகனில முழுதும் வாழ வாகம சைவ மல்லா
திகல்கொள்புன் சமய மெல்லா மிழிபட விணைபில் ஞானச்
சகளநிட் களமாய் நின்ற சதாசிவ மூர்த்த மாய
புகலரு மிலிங்க மொன்று புரிந்தனன் பூசை செய்தான். (எசு)

புண்ணிய மனைத்துங் கூட்டித் திரண்டுருப் பொலிந்த ஞானக்
கண்ணுதற் கடவு ளானைக் கபிலைபஞ் சயிலச் செந்தீ
வண்ணனை பென்னை யாளும் வரதனை வழுத்தி காளு
மெண்ணரு மெழுத்தோ தைஞ்சு மெண்ணின னிருந்த காலை. (எள)

உபமன்னியர் தவஞ்செய்யுங்காலத்தில் பேய்கள்வருதல்.

வெஞ்சின முருத்து நாட்டம் வெந்தழல் கொழுந்தச் சேந்த
குஞ்சியு மடித்த வாயும் பிறையெனக் குனித்த பல்லுஞ்
செஞ்செவே விளங்கித் தோன்றச் செருவினைத் தடர்ந்து சீறி
யஞ்ச மெய்த் தவத்தி னுன்முன் னலனைக ளடைந்த வன்றே. (எஅ)

உபமன்னியர் பேய்களைக் காணுதலும், அவைகளின் சாபநீக்கமும்.

வந்தெதிர் வணங்து நின்ற வலகைகள் வடிவ நோக்கி
யந்தணன் மழுவ லாள னஞ்செழுத் தடைவை யெண்ணிச்
சிந்தையி னினைந்து பார்த்தான் தீர்ந்தது சாபம் வெம்பேய்
முந்திய வுருவ மாறி முனிவரா ரியி னூரால். (எக)

சாபநீங்கிய முனிவர் உபமன்னியருக்குக் கூறல்.

அன்னவ ருவகை பொங்கிக் களித்தன ராசி கூறிப்
பொன்னணிர் தருண மேனிப் புங்கவ முனிவ ரேறே
நின்னைவந் தடைய யாங்கள் பெற்றது நிகழ்த்தற் பாற்றோ
வென்னமா தவங்கள் செய்தே மென்றன ரிறைஞ்சி நின்றே. (அ0)

கங்குலி னிருளை வாரிக் கைமடித் துண்டு காலுஞ்
செங்கதிர்ப் பருவம் செய்பாத் தெய்வதப் பொகுட்டுப் பொன்னம்
பங்கபா சனத்துப் புத்தேள் பகர்மக மியற்றுஞ் சாலை
யங்கியாம் வணக்க மின்றி யடைந்தன மடைந்த காலை. (அக)

மையறு மகன்ற கேள்வி மரீசியெங் குழுவை நோக்கி
வெப்பமும் பேப்ப ளாகச் சபித்தனன் வெருவி யாங்கள்
கையினை முகிழ்த்துக் காட்டித் துதிபல கழறி யைய
வெய்துமிச் சாபந் தீர்வ தென்றென விரங்க வன்னன். (அஉ)

காண்டகு வனப்பின் மிக்க கனகநற் பொதுவி லெக்கை
தாண்டவ நடிக்க வன்பு தலையழிந் திரந்து நின்று
வேண்டிய முனிவன் சைவ விபாக்கிர பாதன் மைந்த
னீண்டசெஞ் சடையி னுனைக் காண்குறி னீங்கு மென்றான். (அங)

மருந்தெனப் புவனம் யாவு மம்மர்தீர்த் தருளா நின்ற
விருந்தவ முனிவ நின்னை யிறைஞ்சுநாள் காறுந் தீது
தருந்தகை யலகை யாகித் திரிந்தனந் தாழா தின்று
பெருந்தகை முனிவ ராணைந் தவத்தினும் பெரிய துண்டோ. (அச)

உருவமும் வயது மென்னை பொலிகட லுலகிற் றோன்றிக்
கருவிகள் கலந்து மூப்பு நரைதிரை கலந்திட் டாலுந்
திருவருண் முயங்கு ஞானந் திறம்பின ரவரே பாலர்
பருவமெய்ஞ் ஞானம் பெற்ற பாலரே விருத்த ராவார். (அடு)

அம் முனிவர்கள் தம் வரலாறு கூறிய பின் உபமன்னியருடனிருக்க விரும்புதலும், அவர் அவர்களைத் தவஞ்செய்யும்படி செய்தலும்.

எனவெடுத் துரைத்தி யாங்க ளுனதுழை யிருக்க ஞான
வனகனை யருள்க வென்ன வருந்தவ மியற்று மைந்தன்
றனதுழை யிருத்தி யன்னோர் தவம்பல வியற்றச் செய்து
மனமகிழ் வரமே பின்னும் வரதனை யிறைஞ்சு நாளில். (அங)

உபமன்னியரிடம் அரக்கர் வருதல்.

கருமுகிற் றலையிற் சேர்ந்து கனலெனத் திரண்ட மேகம்
பிரிவறப் பொருந்த லென்னச் செப்பொளி பிறங்கு குஞ்சி
வருதலை யகன்ற பேழ்வாய் மலையெனப் பணைத்து வீங்கு
பொருபுயத் தரக்கர் வந்து வளைந்தனர் பொருவி லாண. (அள)

செங்கர முனக்கு வாய்ந்த சிறுத்தலை யெனக்குச் செய்ய
வங்கமுங் குடரு மந்த வரக்கனுக் கென்று தாமே
தங்களி லுரைத்துச் சீறித் தடம்புயங் குலுங்கக் கொட்டி
நுங்கவென் றருகு வந்து நோக்கினர் நோக்குங் காலை. (அஅ)

உபமன்னியர் தம்மைக் கொல்லவந்த அரக்கர்மேற் றிருவருள்நோக்கஞ்செய்தலும்.

அவர்கள் முனிவர்களாதலும்.

குருமதி நிலவு காலுங் கொழுஞ்சடைப் பவள மேனி
யொருவனல் லெழுத்தா மஞ்சு முணர்வினி லுணர நோக்கித்
திருவருள் புரிந்தான் பால னன்னவர் சாபந் தீர்ந்து
பொருவரு முருவந் தாங்கி முனிவராய்ப் பணிந்து போனார். (அக)

உபமன்னியரிடம் பூதங்கள் வருதல்.

ஆயவர் போய பின்ன ரொருபக லழன்று காந்து
தீயுமிழ் கொடிய செங்கட் குறியதாட் சிவந்த குஞ்சிக்
காய்சினங் கதழப் பொங்குங் கருவரை யனைய பூதர்
மேயினர் புதல்வன் முன்னர் வெஞ்சமர் விளைக்க வென்றே. (கூ0)

பூதங்களைத் தேவராக்குதல்

தேதான்றிய பூதர் தங்க டொகுதியைக் குறித்துத் தானை
யீன்றுல களிக்கு நாத னியல்பினஞ் செழுத்தை யோதி
யான்றரு ளுமுதப் பார்வை பளித்தனன் குமர னன்னோர்
கான்றபொன் னுலக மெய்தக் கடவுள ராயி னாரால். (கூக)

உபமன்னியரது தவத்தால் உலகம் தயருறுதல்.

இனையன வியற்றி மைந்த னெறிகதிர் பரப்பும் பொன்னம்
பனிவரை யுயிர்த்த செவ்வாய்ப் பரிமளக் கொடியோர் பாகன்
கனைகழற் சரணம் போற்றிக் கருதரு தவமே யீட்டக்
குனிதிரை யுலகங் கண்டு குணிக்கருந் துயரங் கொண்ட. (கூஉ)

உபமன்னியாது தவத்தைக் கண்டு
இந்திரான் சிவபிரானுக்குரைப்பதற்கு விரும்புதல்.

ஈதலா லியக்கர் சித்த ரிமையவர் முனிவோர் யாருங்
கோதிலான் றவத்தைக் கண்டு குணிக்கருந் தூபரு ளாழ்ந்தா
ராதலா லமரர் கோமா னித்தகை யனைத்து ஞானப்
பாதிமா மதிய வேணிப் பரமனுக் குரைப்பே னென்னு. (கூங)

சிவறு.

திருக்கயிலைச் சிறப்பு.

செங்கட் குருதி பிதிரொழுகச் செருவி னெதிர்ந்து சினச்சிங்கம்
வெங்கட் கரியி னிணமருப்பு விசைத்துப் பிடுங்கிக் குருத்துடைக்க
வங்கட் சொரியு மணிநிலவு மகலக் குவட்டுக் குடுமிதவழ்
திங்கட் கொழுந்தி னிளநிலவுந் திகழ்ந்து திகழ்ந்து தலைமயங்கும். (கூச)

பிறையிற் றயங்கு வளைமருப்புப் பேழ்வாய்த் தறுகட் கருங்கேழ
லறையிற் கிடக்கும் பெரும்பாந்த ளகழ்ந்து கிழிக்கப் பணச்சுடிகை
நிறையப் பொதிந்த மணிசிதறி நிலவு கதிரு நெடுமுகடு
மறையத் தவழுஞ் செழும்பருதி வழங்கு கதிருந் தலைமயங்கும். (கூரு)

தூங்கு மருவிக் கிடங்குதோறுந் துள்ளு மிளங்கன் றுளங்களிக்க
வீங்கு செருத்த லழுகருத்தி மேதிக் குலங்கள் கண்படுக்கும்
பாங்கர்க் கொளுவும் பசுங்கழையின் பனிவெண் மதியத் தழுதொழுகித்
தேங்கி பொழுகும் பேர்யாற்றிற் சிறைப்புள் ளினங்கள் விளையாடும். ()

கோட்டிற் கிடந்த விறற்படலங் குறுகிப் புழைக்கை தொடத்தடவி
மோட்டுக் கரடக் களிபரணை முருக்கிப் பிழிபு நறவாற்றிற்
பாட்டுச் சுரும்பர் நிரையிரியப் படருங் கொடிப்பூப் பறித்தெறிந்து
வேட்டுப் புணர்ந்த புதுப்பிடிகள் மிடைந்து மிடைந்து படிந்தாடும்.(கூள)

வண்ணங் கரிய கருமந்தி மணந்த பிணவி னெடுமகிழ்ந்து
தண்ணஞ் சுருட்டுங் குருத்தெறிந்து தழைபுங் கதலிக் கனியுண்டு
வண்ணங் குதலைக் குயின்மிழற்றித் தாலாட் டெடுப்பப் பணைபரப்பி
விண்ணம் படர்ந்து கனியுதிர்க்குந் தேமாம் பொழிலின் விழுதுபலவுஃ. ()

கொங்கு விரிய முகைவிரியுங் கொழுங்கற் பகப்பொன் னகரிழந்து
தங்கு நெடுங்க ணரம்பைபர்க டத்தங் கொழுநர் தமைநோக்கி
மங்குல் படியும் பொலன்குவட்டு மறியு மடமா னிளவருளை
செங்கை பிடித்துத் தருதிரெனச் செவ்வா யிரந்து கரமுகிழ்ப்பார். (கூக)

பொலன்கொள் கிளைபோம் பசியெரிவ் கழைக்கண் வெடித்துப் பொழிதாள
மலங்கு குலைய செங்காந்த ளணிமன் மலரின் மிசைவீழ்ந்த
னலங்கொள் வரைபா மகளொருத்தி நகுவெண் கதிரின் காழ்முத்த
மிலங்கு சுடர்ப்பூண் முலைக்கணிப வினகை பெறுத்தே யேற்பதுவாம். ()

அண்டர் மகளிர் குடைந்தாடி மருவி தவழும் பொலன்குவட்டுத்
தண்ட மதிபக் கொழுந்துதவழ் சோலைதோறுஞ் சுழல்கமஞ்சூற்
கொண்டல் படர்ந்து கனகமழை பொழிப விகலிக் கொழுங்காமர்
வண்டு படியா நறவெவ்கை மலரின் கனக மழைபொழியும். (க0க)

மன்றற் செழுஞ்சந் தனப்பொதும்பர் மலரிற் றவழ்ந்து வடிவாளின்
வென்றித் தூணைக்க ணரம்பைபர்கண் மேகக் குழலின் புழுகளைந்து
தென்றற் குழவி தளர்நடையிட் டசைந்து திரிந்து விளையாடிக்
குன்றத் தமரர் திணிதடந்தோட் குவட்டிற் படர்ந்து கொழுந்தேறும் ()

இந்திரான் திருக்கயிலையில் கோபுரவாயிலடைந்து
நந்தியம்பெருமானை வணங்கி உட்செல்லல்.

இனைய கயிலைத் தடவரையி னிடங்க ளணைத்துங் கடந்தும்தி
புனைய முகட்டிற் றிகழ்காப்பண் பொருகு மிருள்சீய்த் தெரியிமைக்கு
மனவ நெடுவ்தே புரவாயி லடைந்தா னந்தி மலரடியிற்
கனக நறுங்கற் பகப்பூதா தூவிப் பணிந்தான் கடைவிடித்தான். (க0ங)

இந்திரன் சிவபிரான் திருச்சந்நிதி புகல்.

நந்தி பணிக்க நனையவிழ்த்து நறவு பிலிற்றித் திவலிபடச்
சிந்து கருநா டினிதளிக்குந் தேவர் பெருமான் பிறைவடங்கு
மந்தி நிறத்துப் பவர்த்தசடை யம்மான் முனிவர்க் கருள்பெருகித்
தந்தி யுரிவை யரைக்கசைத்தோன் மகிழ்கூர் திருச்சன் னதிபுகுந்தான்.

சிவபிரானைப் பணிந்து போற்றல்.

சிரம்பொன் மலரி னலங்கன்முடி நிலத்திற் பணிந்து தெண்டனிட்டான்
கரங்கள் குவித்தான் கண்பனித்தான் கவுளிற் புடைத்தான் வலம்வந்தா
னிரக்கி நகைச்செந் தழற்கொழுந்தி யிமைப்பிற் கரிந்து பொடிசீறப்
புரங்க ளொருமூன் றெரித்தவனைப் பழிச்சிப் பழிச்சிப் புகன்றனனால். ()

சுடரும் வயிரப் படையோன்பாற் றிருநோக் களித்துத் துவள்கொடியிற்
படருஞ் சடையோன் புரந்தரனீ வந்த பரிசு பகர்திபெனக்
குடருந் தசையு மெறிந்துநிணங் குமிழி பெருகக் குறுகலர்மீ
தடரு மயிரா வணத்துலவு மரச னுரைப்ப தாயினன். (கo)

வேறு.

ஓங்காரத் துள்ளொளியே வேதத் தொடுங்காதா
யாங்காத லன்ப ரகத்தடங்கு மாரணனே
நீங்கா வுடற்கூ னிலவு திரைத்துருத்தி
தேங்கா வுவட்டெடுக்குந் தோடுசெம்மலேய. (கoள)

ஆகியா யீறுய் நடுவா யறியாத
சோதியா யெண்ணிறந்த தொல்லுயிர்க்குந் தோற்றமா
நீதியாய் நீதி நிலையாய் நிலைசிறிதும்
பேதியா தோங்கும் பெருங்கருணைப் பேராழி. (கoஅ)

கண்ணூர் கழைச்சிலையோற் காய்ந்தருளுங் கண்ணுதலே
நண்ணூர் புரமூன்றும் வேவ நகைத்தோனே
தண்ணு ரமுதீத மறைதான்குஞ் சாற்றுதழல்
வண்ணு வேரின்பம் வழிந்தூறும் வாரிதியே. (கoக)

வாமக் கனகவரை மங்கையொரு பங்காளா
தாமச் சுடரெரிபோர்ச் சூலத் தனிப்படையா
யீமப் பெருந்தழல்வாய் நின்றாடு மெம்மானே
காமத் தழலவித்தோ ருள்ளாடுங் காரணனே. (ககo)

இந்திரன் உபமன்னியரது தவத்தைப்பற்றிச் சிவபிரானுக்குக் கூறுதல்.

மற்றோர் நினைவின்றி யுன்மலர்த்தாள் வந்தனைக்கன்
புற்றோரன் கருணை யுபமன் னிய முனிவன்
கற்றோர் வணங்கு தவம்பழுத்த காட்சியினன்
சொற்றோறு நின்னஞ் செழுத்தன்றிச் சொல்லாதான். (கஉக)

ஆடுந் திரைப்பாற் கடல்பெறுவா னுசையினுற்
றேடுந் தவம்பெரிது செய்கின்றான் செய்வதனு
னீடும் புவன நிலையழிக்கி னின்றிரங்கி
வாடுங் கொடுந்துயர மம்ம முழுந்தனவால். (ககஉ)

பண்டோதும் வேதம் பகுத்துப் பகுத்தெடுத்துக்
கொண்டோ தினவெல்லா நின்மேற் குறிப்பாமா
லெண்டோட்ட பெருமை நினையல்லா லெவ்வுயிர்க்கு
முண்டோ தலைபுரப்பான் வேண்டு மொருபொருளே. (ககங)

மின்னுர் சடைமுனிவன் வேட்டவர நல்கிலையிற்
பன்னுரு மன்னு னியற்றுதவப் பான்மையினு
லின்னு வடைந்துலக மெல்லா மிறந்தனவாம்
பொன்னுர் சிறைவண் டிழுதுழக்கும் பூந்தாரோய். (ககச)

இந்திரன் வார்த்தையைக் கேட்டுச் சிவபிரான் திருவாக்த ஆரம்பம்.

மங்கை யபிராணி வாரேறு தண்களபக்
கொங்கை பணைத்தோறு தோளா னிவைகூறக்
கங்கை மணாளன் முடிதுளக்கிக் காமருபூஞ்
செங்கை யபயம் புரிந்து திருவாக்கு. (ககரு)

சிவபிரான் உபமன்னியருக்குப் பாற்கடல் கொடுப்பதாக இந்திரனிடம் கூறல்.

மந்தார மாலை மணிமுடியாய் மாதவத்தோன்
சிந்தா குலமணைத்துந் தீர்த்துத் திரைபுரட்டு
நந்தாத் திருப்பாற் கடலவற்கு நல்குவல்யான்
சந்தாப மெவ்வுலகு நீங்கவெனச் சாற்றினனே. (கஉக)

சிவபிரான் இந்திரனது கடிவத்தை யெடித்தல்.

பூணூர் தடந்தோட் புயல்வண்ணா னுன்முகத்தோன்
காணுத ஞானக் கருணைத் திருவுருவஞ்
சேணு டாசுரிமைத் தேவர் பெருமானின்
மாணு ருருவா பொளிவயங்க மன்னினனே. (கஉள)

வேறு.

நீலநெடு வரைதிவந்த பொலன்குவட்டு மழகிரண நிலவுதிகாலி
வாலகதிர் வதிந்தமைத்து வயங்கலென மறிதிரைநீர் மருங்குசூழ்ந்த
ஞாலமுழு வதும்புதைத்து விழுங்குபிழம் பிருளிரிய நகைக்குஞ்சோதிக்
கோலமணித் திருமவுலிச் செழுங்கதிர்க ளெண்டிசைபோய்க் குலவிவீச.

உருகுகொழுங் கிழிச்சிறைய வசும்புபசுஞ் பொன்னிழைத்த வொளிநஞ்செவ்வி
யிருகுழையுஞ் சுடரெறிப்ப வெழுகனைய திணிதடந்தோ ளிணைவெற்பேந்து
கருவிடராக் கடைபுரட்டு தூளையிற்றுக் கறையணற்செங் கனலிற்காந்து
பொருவரிய மணிச்சுடிகை நெடும்புயவ்வம் புயங்கபடம் பொலிந்துகாட்ட. (கஉக)

சினைமுதிரும் வயிறுளைந்து சங்கநிதி வாய்வெடித்துச் சிதறுமுத்தத்
தணைகதிர்விட் டொளிருமொரு கண்டசர மிளநிலவுச் சுடரிற்காட்ட
நனைபொதுளி நறைபொழுகு மந்தார முகிழ்த்தமலர் நறுந்தாரோடும்
வனைதருபைந் தருவளித்த பொன்னரியா மாலைமணி மார்பிற்சூழ.(கஉ0)

அணியினிசை வகுத்தவிரிந் திரநீல மிடைதிவள வருளுஞ்சிந்தா
மணியுதவு சிவந்தமணித் திருவுகர பந்தனஞ்சீர் மலிந்துமல்கத்
தணிவருபே ரொளிதழைக்கும் பொன்னுடை தளிமருங்கு தயங்கவாய்ந்த
பணிமுகத்தாள் பிணித்தமணித் திருவீரக் கழல்கழலிற் பரிவினூர்ப்ப. ()

திருகுசினந் தலைக்கொழுந்துப் பகைபரக்க ரிடிசெருவிற் சீறியாவி
பருகுநெடுங் குடரளைந்த நிணப்புலவு கழுவுதற்குப் படர்வானீட்டி
யருகுதிரை கலக்கிவர நதியுடைத்தும் பணைப்புழைக்கை யருவி தூங்கும்
பெருகுமதக் கவுட்சுவட்டு நான்மருப்பு வெள்ளாணைப் பிடரினேறி. ()

எண்ணரிய கணத்தலைவர் தேவர்திரு வுருவெடுத்தி தயிறைஞ்சிச்சூழ
விண்ணவரு முனிவரரு மங்கிழுகற் கடவுளரு மிடைந்து போற்ற
வண்ணலுரு வேவெறுத்துச் செங்கதிர்சா டரையிரட்ட வமிழ்தமூறும்
பண்ணமையாழ் பழலிமொழி யபிராணி கொழுநனெடுங் கவிகைபற்ற ()

சல்லரிதுந் துமியுடுக்கை குடமுழவ மிடக்கையொடு தடாரிபாய
பல்லியமார்த் தெழக்காளம் விருகொளிப் பவலம்புரிவெண் பணிலமர்ப்பச்
சில்லரிக்கட் கனியிதழ்வா யமரம்பையர்கள் வீணைபிசை திருத்திப்பாடச்
சொல்லரிய கனகமழை மலர்மாரி யிருமுகிலுஞ் சொரிந்து தூங்க. (கஉச)

இந்திரன் வடிவங்கொண்டு தோன்றிய சிவபிரானை உபமன்னியர் துதித்தல்

புண்டரிக மலர்ப்பாதப் பொருவில்முனி யளித்தருளும் புதல்வன்றன்பா
லண்டர்பிரா னெனக்கயிலை யமலர்பிரா னெழுந்தருளி யடைதலன்பாற்
கண்டனன்கண் ணுகற்பரனென் றறிந்திலனிற் றிரனெனவே சருகி யேத்திக்
கொண்டுபுரிந் தடியிணைவீழ்ந் திறைஞ்சியருந் துதிகள்பல துதித்துநின்றான்.(கஉந)

உபமன்னியர் வரங்கேட்காது நிற்றலும், இந்திரவடிவங்கொண்ட
சிவபிரான் யாதுவரம் வேண்டுமென அவரை வினவுதல்.

மறைமுனிவ னின்னணமே நிற்பதுகண் டவணிமதி வதனநோக்கிப்
பொறைநெறியின் முறைபோய முனிவரதிற் றவமெவராற் புகழ்தற்பாற்றே
குறைவறநீ கேட்டவரந் தருகுவன்யான் யாதுவரங் குறித்தாயென்னப்
பிறைமவுலிச் சடைகரந்து புரந்தரனி லழகொளிரும் பெருமான்சொன்னான். ()

உபமன்னியர் சிவபிரானிடமன்றி இந்திரனிடம் வரம்வேண்டே னென்றல்.

இனியமொழி தருமாற்ற முனிகுமரன் செவிப்புகலு மிமவேறன்னான்
றனிமழலென் விடையுயர்த்தோன் பதம்பரவுந் தலையதிலே தழைத்தல்வேண்டு
மனையவன்பொன் னடிவணங்கி நினைந்தவரம் பெறுகுவதே யன்றிநின்பாற்
புனைமுடிதாங் கரசுலக மளித்தாலு மடைவதற்குப் பொருந்தேனென்றான்.(கஉஎ)

அதைக்கேட்ட இந்திரவடிவத்தைக்கொண்டுள்ள சிவபிரான்
உபமன்னியர் வார்த்தையால் கோபமடைந்தவர்போலக் கூறல்.

மழலைமுனி யிவைமெழிதன் மிலூர்தி மொழிவினும்பாய் மதுரங்சேர்ந்திக்
குழலைமொழி யெனத்தருபொற் கெடிபாகன் செவிக்கடைபோய்க் குறுநகைதோறும்
வீழைவுதரு முளமிரங்கிக் களிப்பொழுகப் புறத்தினவன் விருப்பமோர்வா
னாழல்சிதறி விழிசிவப்பக் கோபமொடு மொருமாற்ற மறைவதானான். ()

வரந்தழைக்கு மெனதாணைத் தனித்திகிரி புறம்போக்கி வையமூன்றும்
புரந்தருளு மொருநாத னெனைக்குநிக ரெவரினிய போகந்துய்ப்போ
ரரந்தைமொழி பகர்ந்தனையாற் சிறுகுழவி பென்பதிவ ணறிந்தேதனென்பா
னிரந்தபெருங் கருத்தினிய வன்பர்பெறுந் தகையினிபா னிகழ்த்தக்கண்மோ. ()

இந்திரரான தம்மிடம் வரம்கேட்டால் கிடைக்கும்பேறினையெனல்.

செந்தளிர்க்கற் பகமுகிழ்த்த செழுந்துணர்வாய்க் கொழுந்தேறற் றிவலோதாற்றப்
பைந்தளிர்க்கை யரம்பையர்சா மரையிரட்டக் கணிகையர்கள் பாதமாடக்
கந்தமலர்க் கருங்குழற்கின் னரமடவர் யாழ்வடித்துக் கானம்பாடச்
சந்ததமு மிருந்திப நினைந்தனவெல் லாமளித்துச் சரணம்போற்ற. ()

மின்னவிருங் குருமணிச்சூட் டரவநெடும் படமோப விரிந்தவல்குற்
கன்னல்வரிச் சிலைதுழைத்த பிரைதுதற்செங் கனிபிழம்பாய்க் கலசவேர்கட்
பொன்னவிருந் திதலைமுலை யரமகளிர் புதுக்கலவிப் போகமாந்தி
யின்னறவக் கற்பகநாட் டளவையிலா வூழிகளித் தினிதுவாழ்வார். ()

அடுசினவெம் புலிபாடை மருங்கசைத்து வரியரவ மதன்மேல்வீக்கிச்
சுடுசுடலைப் பொடிபூசி விரிசடைமே லென்பறுகு தும்பைசூடிக்
கடுவிடமுண் டோமேடந்தி மணைகடொறும் பலியிரக்குங் கடவுளன்ப
ரிடுபலியுண் டவன்போலத் திரிவரது விரும்புவரோ வினைமிக்கார். ()

உந்தையெனக் குயிர்த்துணைவன் முனிவரரீ யாதலினு லுரிமைத்தாய
பைந்தனினைக் கானிடத்து வழிபாடே னத்துயரில் வருந்தலென்மேன
சிந்தணமற் றெதுநினைந்தாய் சிறுவநினக் கெண்ணரிய தெய்வப்போகம்
புந்திமகிழ்ந் தருந்துவதே தலைத்தருமம் யானவைகள் புரிவேனென்னா.

அவ் விந்திரவடிவமுடைய சிவபிரான் கூறிய வார்த்தைகளைக்கேட்ட
உபமன்னியர் கோபமடைதல்.

கொண்டல்படி கடங்கடல்வாய் மந்தரமத் தெறிதாறுங் குணிக்குங்காள
முண்டபிரா னிவைபுகல முனிவரன்வெந் தழற்கோப முருத்துச்சீறித்
[துண்டமதி] நுதல்குறுவேர்பொடிப்பவிழிப்பசுங்குருதி துளித்துச்சோர
விண்டகனி வாயதரந் [துடிதுடிப்ப] விம்மொழிகள் விதிர்ப்பதாகி. (கநச)

குறிப்பு:—இப் [—] பகரக்குறியிலுட்பட்ட பகுதிகள் ஏட்டுப் பிரதியில் செல்லரித்து விட்டன. வேறு ஏட்டுப் பிரதிகள் ஆகப்பட்டதுபடியால் வாசிப்போருக்குக் கருத்து விளங்கக்கூடியவாறு இயன்றவரை இயைந்த பகுதிகளைச் சேர்த்து அச்சிடப்பட்டது. மற்றோர் ஏட்டுப்பிரதி யகப்படுங்கால் இவை அதிலுள்ளபடி திருத்தப்படும்.

உபமன்னியர் கோபத்துடன் கூறுதல்.

அன்னையின நிலவெறிக்குங் கவர்மதியப் பவர்சடையோ னலர்த்தாளேத்தி
[முன்னையரு]ச் சனைபுரிந்த தில்லையென முன்மொழிதன் முடிந்ததாமாற்
பன்னகமே னியணிமலர்ப் பதம்வணங்[காப் பழிய]லாற் பரவக்காணே
னின்னலிவை வீளைவதுகொல் பழவினையின் முடர்ச்சியென வெடுத்தக்கூறி.)

இந்திரனுகிவந்து சிவபிரானைப் பழித்தவன்
ஓர் அசுரன் என உபமன்னியர் நினைத்தல்.

முத்தலைவேற் படையுயர்த்தோ னன்பர்தமக் கடிமைசெறி முழுதும்பூண்டோ
ரெத்தகைசெய் தியற்றுர்க ளவரளிப்ப ரிந்திரனோ கங்களெல்லாம்
பித்தனிவ னீதுரைத்தா னசுரனள விறந்தபெரு மாயமாய
வத்தனையும் புரிவனிந் திரனுகி யெனதுதவ மழிக்கவந்தான். (கஉசு)

உபமன்னியர் சிவநிந்தைபுரிந்தோரைத்
தண்டிக்கவேண்டுமென்று நினைத்தல்.

வென்றிபட லலகையிராக் கதர்பூத நிடையூழி விளைத்துமுன்னர்த்
துன்றினருஞ் சிவனையிகழ்ந் திலரிகழ்ந்தா னினைனைத் தூள்செற்றேரைக்
கன்றிநெடு நாக்கரிந்தோ [ரேழே]ழ தலைமுறையோர் கடவுணூடு
சென்றடைவ ரியாதார் வெந்நியத் திடையழுங்கித் திரிவ[ராமால்.] ()

உபமன்னியர் சிவநிந்தைபுரிந்தவனது நாக்கையறுத்து பின்
தாமுமிறக்கவேண்டுமெனநினைத்துத் திருநீற்றை அம்பாகச்செய்து தூவுதல்.

இன்னவினை நாக்கரிந்தா ருயிர்துறந்தே தியளியேனு மிறப்பீபெனன்னு
மன்னியவெண் டிருநீற்றைப் பரவி[பர னுமு]நெடு வாளிசெய்து
தன்னரிய மேனியினும் விடுத்துவிரி சிறைசசுரும்பர் தலையுங்கொன்றை
மின்னவிர்[செஞ்சடையோன்]பொன்மேனியினுஞ்பொடிவாளிமிடையத்தூர்த்தான்.

சிவபிரான் திருநீற்று அம்பைத் தடுத்து தமதுருவுடன் வெளிப்படுதல்.

தூர்த்தபொடி வாளிமுனி பேப[னியினிற் சே]ராது தோதகைபாகன்
பார்த்தகனைத் தடுத்தனனப் பரமனழல் மேனியினிற் படருநீற்றை
யார்த்தவரு [மேத்தரி]ய நந்திதடுத் தனனினைய வலையந்தன்னி
லீர்த்தபிரான் மழவிடைமேற் றனதருவ [மிசைவிளங்க வெர்ர்த்தி]தோன்றி. ()

உண்மையறியாரும் மற்றவர்களும் சிவபிரானுடன் தோன்றுதல்.

திருத்தகுபொற் புயநான்குஞ் சுடர்நயன மொருமூன்றுந் திவளுநீலத்
தூருத்திகழு மணி[வடஞ்சே ர]பபவர தமுமழுமா னுயர்த்தகையு
மருக்கொருகோடியெழுந் தெனநின்ரு னின்றிமையத் தமுதமன்ன
முருக்கித[ழார்] சாயன்மயி னினைநினைத்தா னருகுறமெய் குழவுநின்ரூர் (கஅo)

கள்ளொழுகு மலங்கலந்தார் மதிமுடித்த சடைமவுலிக் கடவுள்யாணை
யள்ளிலைவெண ணிணம்பிலிறு சுடர்நெடுவேற் படையுயர்த்த வலன்வாச
வள்ளிதழ்ப்பொற் பசுங்கமலச் செழுங்காடு முறைபூத்த மழைக்கார்வண்ணன்.
புள்ளெனின முகைத்ததிசை முகக்கடவுண் முதல்வரினோர் புடையிற்சூழ்ந்தார். ()

சுருதியளந் துணர்ந்தவியாக் கிரபாதன் வசிட்டமுனி தொ[டர்ந்துசூழு]ங்
கருதரிய முனிவர்குழா மணைவரும்வந் தீண்டினராற் கருணைமேனி
தருதிருவினனுக்கிணையாற் சைவ[முருச்சயந்தன்றனை]த்தந்தாள்வந்தாள்
பொருவருந்துந் துமிமுழங்கி வானவர்கள் பூமாரி பொழிந்தார்மாதோ.

உபமன்னியர் சிவபிரானைக் கண்டு தொழுது பரவசமாகுதல்.

ஆலவீட [முண்டொ]ழுகுங் கறைமிடற்றிருன் மழவிடைமே லமர்ந்தின்[ருன்]
[தோ]லமதின் செபல்நறித் தச்சொழுகணன் சேவடி[முடிமேற்கொண்டிறாஞ்]சான்
சீலமறைத் துதிமுழக்கி வலங்[கந்தே யெ]ய்புருகிச் சிந்தையன்னுன்
பாலனவப் பரவசத்த னுபினன்[வல் லியப்ப]தத்தோன் பயந்தபாலன். ()

உபமன்னியருக்காக அவ்விடத்திற் பாற்கடல் முதலிய கடல்கள் வருதல்.

புத்தமுதங் குமிழிபழ வெடுத்தெறிந்து கரைபொருது புரண்டுசாய
[தத்துதிரைப்] பாலாழி ததிக்கடனெய் கெழுமளக்கர் தணப்பிலாத
வொத்திதகனிர்தூறும் பழக்குவடபண்[கழைச்சாற் றேறு]ங்கல்தோடி
யெத்திசையும் பரந்தனவா லீசனடி யார்க்கெவையு மெளியவப்மா. (கசச)

சிவபிரான், பாற்கடல் முதலியவற்றை உமையம்மை உனக்கு கல்கினுளென்று
உபமன்னியருக்குக் கூறல்.

வ[ரந்திவெண்] டிவலைபட வரவநெடும் படமொடுக்கி மறியும்வேணி
பரசதியின் றுறைபோய முனிவரனே சிறுதரங்கம் பா[ய்ந்துபாய்ந்]து
விரவுதிரைப் பாலாழி முதலனைவெல் லாமுனக்கு வியந்துதந்தாள்
குரவநறுங் குழலுமையென் றிளநிலவுச் சிறுமுறுவல் கொட்டினுனல்.

உமையளித்த பாற்கடல் முதலானவற்றை தாய்தந்தை முதலியோருடன்
அனுபவிக்கும்படி உபமன்னியருக்குக் கூறுதல்.

பொருந்துபெருங் கிளைஞரொடுந் தாதையொடு மாவளித்துப் புலம்பாகின்ற
நிருந்திழைமா தன்னையொடுங் களித்தருந்தி யழியாத செல்வத்துய்த்துக்
கருந்தடங்கண் ணருந்ததியா ருயிர்க்குயிரா யுலகனைத்துங் க[ளிக்கா]கின்ற
வருந்தவத்தி னிலதெரிந்த வசிட்டமுனி புதல்வருக்கு மளித்தியென்னு. (கசசு)

உபமன்னியருக்குக் கணகாதாரந்தன்மை யருளல்.

அங்கண னீதுரைத்[தருளி]நினையளித்தோர்புவனமெலாமளித்தோர்ஞானப்
புங்கவனு நந்திதனக் கிணையாகிக் கணத்தலைவ [ராகும்பான்]மை
யிங்குனக்கின் றருள்புரிந்தே நித்தியமா மிளமைநல மீய்ந்தேமன்னுந்
தங்குதவ முனிக்காசீச சிவ[ண்டுவரம் வேண்]டியெனச் சாற்றிப்பின்னும். (கசஎ)

உபமன்னியரைச் சிவபிரானும் உமையம்மையாரும் எடுத்துத்தழுவி
வாழ்த்துக்கூறி விடுத்தல்.

ப[ணிக்கட]கக் கரத்தேந்தி யுச்சிமோந் திமையவரைப் பாவைசெ[ய்ய]
[மணிக்க]டகக் கரங்கொடுக்க வப்பரிசாற்[றன்மனதில் மகிழ்]வாணுக்கித்
தணிப்பருபே ருலகுதொழ வெந்நாளும் [வாழ்தியெனச் சா]ற்றியீச
ணணிக்கமலங்காங்கொடுத்தாள் வாழ்த்திவிடுத் தனன்கடல்சூழுவனிமீது.

உபமன்னியர் சிவபிரானையும் உமையம்மையாரையும் மறவாதிருக்கும் வரம்வேண்டல்.

வெய்யபு[லிப் பதமடைந்தோன்] பயந்தமுனி விழிகருணை வெள்ளஞ்சிந்தக்
கையினையுச்சியின்முகிழ்த்துத்தலையழிந்தவார்வநெடுங்[காதல்வைத்]தே
யையவொரு வரதினது பலர்ச்சரண மப்பிகையா மன்னுபாத
முய்யும்வகை மறவாதே யெனக்கி[ன்று தரு]கவென வுரைத்துநின்றான்.()

சிவபிரான் உபமன்னியர்வேண்டிய வரங்கொடுத்துக் கணங்களுடன் கயிலைக்குச் செல்லுதல்.

பிள்ளைமுனி யிதுபகர விணையரை மகிழ்வினுடும் பரிந்துநல்கித்
தள்ளுதடங் கட[ற்றுயின்]றேரன் முதலியவா னவர்கள்புடை சூழ்ந்துபோற்றக்
கள்ளமெறித் தலங்கிலேவேற் கடைகுழைந்த கருநெடுங்கட் கன்னியோடும்
புள்ளிகெழு புலவுகமழ் மழுப்படையோன் றடங்கயிலைப் பொருப்பிற்போனான். ()

உபமன்னியர் சரிதம்படித்தோ ரடையும் பயன்.

தண்டிவலை றவொழுகத் தாதளைந்து கான்மடுத்துத் ததையும்பாடல்
வண்டுமுரல் பசுந்தளவப் படலையினன் மணிமுடிமேன் மலர்[க]ள் வைத்தோன்
புண்டரிகச் சரணமுனி மகன்சரிதத் தோதொழுத்துப் புகலக்கேட்டோ
ரண்ட[மெலாம் படை]த்தபிரான் றடங்கயிலைக் கணநாத ராகிவாழ்வார். (கடுக)

வேறு.

சூதமுனிவரிடம் இக்கதையினைக் கேட்ட முனிவர் களிகூர்தல்.

தூரிச றுத்துயர் சூத முனிவான்
பரிவி [னோர்கடற் கா]தை பகர்தலு
மரிய மாதவ ரன்பொடுங் கேட்டனர்
தெருளு றுங்களி சிந்தை திளைத்தனர். (கடுஉ)

முதலாவது உபமன்னியர் திருப்பாற்கடல் பெற்ற அத்தியாயம் முற்றும்.

இரண்டாவது
சிவன் முருகாவனத்திற் பலியிரந்தவத்தியாயம்.

சூதமுனிவர் கதை கூற ஆரம்பித்தல்.

காத லிற்சிவன் முருகா வனத்திடை கலந்து
[நீதி னி]ற்பலி யிரந்திடுங் கதைதிரு நந்தி
மாத வச்சன [காதியர்க் கி]னிதறை வண்ண
மோது கேனெனச் சூதமா முனிவர னுரைக்கும். (க)

தாருகாவனச் சிறப்பு.

விண்ட நாண்மலர்ப் பொதும்பரி[ன் மிசையெழு]ந் திசைத்து
வண்டு கான்மடுத் துழுதுதேக் திவலைவாய் மடுக்குந்
துண்ட வான்மதி யூற்றிருந் [தொழுகு நீர்த்]துவலை
கொண்ட வாரமு திளஞ்சோ லங்கள்வாய் குதட்டும். (உ)

மங்குல் கண்படு தடஞ்சினை பரப்பிய [மாவி]ன்
பொகர் வெம்பசும் புரவியேழ் தனிநுகம் பூட்டு
தங்க மொட்டவைத் திணைக்கிய சில்லியந் தட்ந்[தேர்ச்]
செங்க திர்ச்கொரு வீடுசெய் தனவெனச் சிவணும். (ஊ)

மண்டு தீஞ்சுளைக் குடக்கனி மருங்கினின் மதியக்
கொண்ட லூடுபாய்த் தட்டற வுருவிமேற் குலவி
யண்ட கோடிகள் யாவையு மபிர்துணை யடங்கப்
பண்டு தாங்கிய பரமனைப் பொருவின பனசம். (ச)

அருந்த வம்புரி முனிவரர் மகத்தவி யமுதம்
விருந்து கூட்டுணத் தேவரை வருகென [விழை]ந்து
பொருந்து செந்தளிர்க் கரங்களா லழைப்பன போலுங்
திருந்து வானகர் படர்ந்தசை தருசெழுங் [தேமா]. (ரு)

குலவு கெட்டிலை மரகதத் துயலொளி கொழிப்ப
நிலவு பாந்தளம் பாளைவாய் கிழிபட நிறைந்து
[மலர்கொள் கா]ண்மடற் பூநறுந் தாறுகான் மடித்துக்
கலிம திக்கொரு சாமரை யிரட்டுவ கமுகம். (சு)

முடங்கு தெண்டிரை[த் தடந்]தொறுங் குவளைவாய் முழங்கி
யடங்கு வண்டினம் [பெடை]பொடுங் கிளர்தர வரற்ற
விடங்கர் பாழியங் கய[மதின் மெய்]தொட விரிந்து
மடங்கி வாலடித் தப்புறந் [தாவுவ] மலங்கு. (எ)

பொங்கு நீர்பொரு வாவியிற் கமலமென் போதிற்
றங்கி நீள்கரை மூல்லைதூங் தூணர்முகை தயங்க
லெங்க ணுயக னிடுபலிக் கெய்திடு மென்னுக்
கங்கை செங்கரத் தடிசில்வைத் தேந்துதல் கடுக்கும். (அ)

'கன்மமே பலந் தரும்'' என்ற கொள்கையையுடைய தாருகாவனத் திருடிகளைக் காப்பதற்குச் சிவபிரான் விருப்பங்கொள்ளல்.

இன்ன தன்மைய தாகிய தருவனத் தெய்திக்
கன்ம மேபலந் தருமெனக் கடவுளைக் கருதாப்
புன்மை சேர்சம யத்துழன் முனிவரர்ப் புரப்பான்
றுன்மை யன்புவந் திரங்கினன் புரிசடைத் தோன்றல். (கூ)

சிவபிரான் அழகிய வடிவம் கொள்ளுதல்.

கோடி மன்மதர் வனப்பொரு வழிகுறு கிடினு
நீடு பைங்கதிர் கோடிவந் துதிக்கினு நிமல
னூடு தண்டையம் புறவடி யழகினுக் கஞ்சி
யோடு மல்லது சிவனுமென் றெவர்க்கோ யுரைப்பார். (கo)

அருப்பு புண்டரக் கிற்றெளிர் நெற்றியி னழகோ
விரும்பு செஞ்சுடர் மணிக்குழை யசைதரும் விதமோ
சுருப்பு கூட்டினு மலங்கலந் தடவரைத் தோளோ
கருப்பு போன்மொழிப் பன்னிபர் நாண்கவர் வதுவே. (கக)

சிவபிரான் அழகிய பிச்சாண்டி வடிவத்துடன் தாருகாவனத்திற் செல்லுதல்.

என்ன வோர்வடி வெடுத்தன னெண்ணெயா ளெந்தை
பொன்ன மேனியில் வெண்பொடித் தூளிதம் புனைந்தா
னன்ன லார்கணைக் குருகிடத் திகப்பர னுகித்
தன்னி யேதிகர் தாருகா வனத்திடை சார்ந்தான். (கஉ)

தாருகாவனத்து மனைகடோறும் இருடிபன்னியர்களிடம் பலியிரத்தல்.

துண்ணெ னத்திசை திசைதொறு முழங்கிய துடியு
மண்ணை ருர்பொலன் கடிஞையு மலர்க்கரத் தேந்தி
பண்ணை வாமிசை மிழற்றுபு பவளவாய் பதைக்க
நண்ணி டுப்பலி யிரந்தனன் மனைதொறு நாதன். (கங)

சிவபிரானிடம் இருடிபன்னியர் காமங்கொண்டு நிலைகுலைதல்.

கண்டு நின்றனர் முனிவரர் விரும்புகா தலிமார்
கொண்டு நின்றனர் கணிப்பருங் காமவெங் கொழுந்தீ
விண்டு நின்றன ரன்னவ ரழகினை வியந்தே
யுண்டு நின்றனர் நாணமு மடமுமீ தொழிய. (கச)

காம மிக்குவந் தமலனைக் கண்ணுறக் கருதி
நாம வெங்கொலை வேல்விழி நித்தில நகையா
சேம வொண்கதிர்க் கடிஞையிற் பலியிடி வார்போற்
ரூம மைக்கரந் தளர்வுறத் தரைமகட் களிப்பார். (கரு)

கல்க்கு பாற்கட லமுதெனுங் கனிமொழி குழறி
யலக்க ணுற்றுவெங் காமநோய்ப் புணரியி னமிழ்ந்தி
மலர்க்க ரங்களிற் பெய்திடு வரிவளை யிழப்பா
நிலக்க மாடைபெற் றெளிர்மணிக் கலைகளு மிழப்பார். (கக)

குன்ற னப்பணைத் திளகிய வனமுலைக் குவட்டுத்
துன்று வெண்சுடர் பரப்பிய நித்திலத் தொடையு
லொன்று ருவகை கரிந்திடச் சாந்தமெவ் தொழிய
நின்று நின்றுபார்த் தயர்வுற நெட்டுயிர்ப் பெறிவார். (கஎ)

கந்த மென்மலர்க் கருங்குழற் கிழகுறுங் கமழ்கெய்
சந்த மென்முலைத் தடந்தொறுந் தடந்தொறுந் தடவி
யந்தி வெண்பிறைத் திருநுதற் கணிதர வெழுதுஞ்
சிந்து ரப்பொடி யங்கையாற் கூந்தலிற் செறிப்பார். (கஅ)

மருங்கு லிற்புனை காஞ்சியும் விரிசிகை வகையு
நெருங்கு வெம்முலைக் குரும்பையி லணிந்தொளி நிலவு
தருங் கதிர்ச்சுடர் மணிகெழு தமனியத் தணிவார்
சுருங்கு நுண்ணிடைப் புடைதொறும் புடைதொறுஞ் சூழ்வார். ()

சேந்த பஞ்சியிட் டனிச்சமென் மலர்தொடச் சிவக்கும்
பூந்து கிர்க்கொடி கிளைத்தன மெல்விரற் பொலந்தா
ளேந்து பொன்னரிச் சிலம்புசெங் கரத்திடை யிடுவார்
காந்த ளங்கரத் திடுதொடி பதங்களிற் கலப்பார். (உo)

வண்ண மேகலை கலையொடு நெகிழ்ந்தது மருங்கு
திண்ண மேயினி முலைத்துணைக் கிறுமெனச் சிலம்பி
யெண்ண மேகொடு பரிபுரந் தோவென விரங்க
விண்ண மேகமைக் குழல்சரிந் திடநடை விரைவார். (உக)

தளரு மின்னிடை மணிக்கலை பொருகரந் தகையக்
கிளரும் பொன்முலைக் கச்சின்மீ தொருகரங் கிடத்தி
யுளரும் வெந்துயர்ச் சுடுதழ லுள்புதுந் துலவ
வளரும் காமமுன் னிழுத்திடப் பின்னெடும் வருவார். (உஉ)

இலங்கு வெண்ணிற மூரலம் பலிக்கென விசைவீ
ரலங்கு சீர்கெழு தனப்பலி கொள்கிலீ ரந்தோ
துலங்கு பேரறி லென்னுகோ வுமக்கெனச் சொல்வார்
கலங்கி நெஞ்சயர்ந் தென்புமட் டிருகுபு கவல்வார். (உந)

பிள்ளை வெண்பிறை நுதலியர் மனைதொறும் பிச்சை
கொள்ளல் செய்துபொற் கடிஞையி னமுதுணக் குறிப்பீர்
பள்ள நீரெறி பரவையிற் படர்ந்தசெம் பவள
வள்ள வாயமு துண்ணுமென் றுருவழி மறிப்பார். (உச)

மார னங்கனைக் கூற்றமோ வெனச்சிலர் வலிப்பா
ரீர வெண்டிரை கொடிவிட மெனச்சில ரிசைப்பா
ராரம் வெந்தழற் பிழம்புகொ லெனச்சில ரறைவார்
வீர செம்முயிர்ப் பலிகொள்வ தெனச்சிலர் மெலிவார். (உடு)

பிச்சாண்டி வடிவங்கொண்ட சிவபிரானுல் தமது மனைவியர் நிலைகுலைந்தமையை முனிவர் காணுதல்.

இன்ன வாறிவர் விரகமுற் றிடரிடைப் படலும்
பொன்னு லாஞ்சடைப் புங்கவன் மோனமே புரிந்தான்
பன்னு நான்மறை முனிவரர் குழுக்கொடு பார்த்தார்
கன்னி பாகன்வண் பலியிரந் திடுஞ்செயல் கண்டார். (உசு)

முனிவர் சிவபிரானைச் சபித்தல்.

நன்று நன்றுநா மீட்டிய தவமென நவின்ரு
ரின்றி வன்செய்த குறைபிது வென்கொலோ வென்ரூர்
கன்றி வெஞ்சினக் கடையனல் விழிக்கடை கனலக்
குன்ற வில்லியைச் சபித்தனர் சாபவெங் கொடுந்தீ. (உஎ)

முனிவர் சாபம் சிவபிரானை யடையாது நீங்கல்.

விலகி வில்லுமிழ் சுடர்மணிச் சுடிகைவெம் பாந்தண்
மலர் கடுக்கையின் புடைபொதுங் கிடந்தி வகுத்துங்
கலை மதிச்சடை வானவன் றன்னுழைக் கலவா
தலர் செழுங்கதிர் முன்னெழுங் கங்குலொத் ததன்ற. (உஅ)

முனிவர்களது சாபவலிமைக் குதாரணங்கூறல்.

முனிவர் கூறிய சாபமுன் முளரியம் பொகுட்டுத்
தனிமு தல்வனைத் தொடர்ந்தது பிருகுசா பத்தாற்
குனி தடஞ்சிலை தாங்கிய பகுந்துழாய்க் குவட்டுப்
புனித னும்பிறப் பொருபது மடைந்தனன் புகலில். (உகூ)

ஈத லான்முனி சாபம்வந் தன்னவ னிசைத்து
மோது தெண்டிரைப் பாற்கடல் முதலிய துறந்து
மாது பாகனைக் காசியின் மதுரிய நறும்பால்
போது தோறும்வந் தாட்டினன் பூசனை புரிந்தான். (கூ0)

அழ லரும்பிய நுதல்விழி யந்தண னளிக்கப்
பழைய பாற்கட லடைந்தனன் பகர்துரு வாசர்
மொழியுஞ் சாபத்திற் பின்னரும் வனமுடி புனையா
விழிபு தங்கிய யாதவர் குலத்துவந் துதித்தான். (கூக)

அம்பொன் மால்வரை யிமயமீன் றளித்தவ ளமலன்
செம்பொன் மேனியிற் பாதியும் பெறச்சிவ விரத
மிம்பர் காட்டிய கவுதம னிசைத்தசா பத்தா
லும்பர் கோமகன் வெருவர வாண்குறி யொழிந்தான். (கூஉ)

கந்த நாண்பலர்க் கமலவட் டவணைவீற் றிருக்கு
மந்த ணுளனிற் சுருதிதேர் வசிட்டனன் றனைய
வந்த சாபத்தால் வலிதரு வசுக்களொண் மருகீ
ருந்து தெண்டிரை யடுத்தவா ருலகினிற் பிறந்தார், (கூங)

நீளி ருஞ்சடை முனிவரர் நிகழ்த்துசா பத்தால்
வாள ராவுரு வெடுத்தன னகுடன்மாண் டவியர்
மூளுஞ் வெஞ்சினந் தலைக்கொளச் சாபமுன் மொழியக்
கோளி லந்தக னுதித்தனன் சூத்திர குலத்தில் (கூச)

எத்தகைய சாபமும் ஈசனை யடையமாட்டாதெனல்.

வடித்த நான்மறை முனிவரர் வழங்கிய சாபம்
பிடித்து நின்றவ ரன்றிமற் றெவர்க்கே பிழைத்தா
செடித் தூசைப்படுத னிறைவனெவ் வுயிர்க்குமென் பதனுற்
றடுத்து நின்றன னெம்பிரான் விலக்கருஞ் சாபம். (கூடு)

தமது சாபம் சிவபிரானை யடையாமையைக் கண்ட தாருக வன முனிவர்கள் திகைத்தலும், சிவபிரான் மறைதலும்.

வெய்ய சாபம்வெண் பொடியணி விமலனை விரவாச்
செய்கை கண்டனர் முனிவரர் தளர்ந்தனர் திகைத்தா
ரய்ய னென்னுடைப் பவங்கடிந் தாட்கொளு மமலன்
மைய லங்கட கரியுரித் துடுத்தவன் மறைந்தான். (கூசு)

தாருகாவன முனிவர்கள் பிரமனிடம் இச்செயலை முறையிடுதற்குச் செல்லுதல்.

வெள்ளி மால்வரை வித்தகன் மறைந்தபின் வெருவி
யுள்ள மோர்ந்தனர் புகலருங் குறையெடுத் துரைப்பான்
றெள்ளு நான்மறை முனிவ ரனைவருந் திரண்டு
முள்ள சைக்கம லாலயன் மூதுல கடைந்தார். (கூஎ)

பிரமனைப் பணிந்து, சிவபிரான் விளைத்த செயலினைக் கூறுதல்.

ஆதி நான்முகத் தொருவனைக் கண்டக முருகிப்
போது தூய்மலர்ப் பொன்னடி பூசனை புரிந்து
சீத வெண்மதி மிலைத்தவன் செய்தன வனைத்து
மோதி னுர்துயர்ப் பெருக்கெறி யுவரிபுக் குடைந்தோர். (கூஅ)

பிரமன் அச்செயல் சிவபிரானது திருவிளையாடல் என்றறிந்து முனிவர்க்குப் பதில் கூறதல்.

உரைத்த வாசகங் கேட்டன னிட்டையி னீங்கித்
திரைத்த பாற்கட னஞ்சமுண் டவன்செய லென்னுக்
கரைத்த வன்பொடு மெழுந்திரு கரங்குவித் தமலன்
விரைத்த நாண்மலர்ப் பதநினைந் தெண்கணுன் விளம்பும். (நக)

தாருகாவனத்திற் பலியிரந்தவர் சிவபிரான் என்பதை அம்முனிவர்களுக்குக் கூறுதல்.

அருண வெங்கதி ரளவிய தருவனத் தடைந்து
தருண வெம்முலை மடந்தையர் மயல்கொளத் தவள
வருண வெண்பொடி பூணந்துவண் பலிகொள வந்தோன்
கருணை தங்கிய சிவனெனக் கருதினீ ரிலைபால். (சஅ)

ஆதி நாதனை யவ்வனத் தகன்றிட விடித்தீ
சேது மாதவ மியற்றியென் னிமயமீன் றளித்த
மாது பாகனை வழுத்திலா ருய்வரோ வழுங்கிர்
காத லார்கரத் தெய்திய செம்பொனைக் களைந்தீர். (சக)

அதிதிபூசை செய்யவேண்டிய விதத்தைக் கூறுதல்.

வரைந்த சாதியும் வண்ணமு மிழந்துவந் திடினு
மரந்தை நீக்கின் றதிதிகள் பூசனை யடைவே
விரைந்து செய்துகல் லில்லறம் விளைத்திடு விதியுங்
கரந்து சாபமும் விளைப்பரோ புலனெறி கடந்தோர். (சஉ)

அதிதிபூசையை முறைபடச் செய்து பேறடைந்த சுதரிசனரது கதையைப் பிரமன் கூறுதல்.

வேறு.

தங்கு மாதவர் தாரகை யிற்செழுந்
திங்கள் போலத் திகழ்ந்திடு செய்கையான்
றுங்க ஞானச் சுதரிச னன்மனை
மங்கை கற்பி னருந்ததி மானுவாள். (சங)

சுதரிசனரது மனைவியின் அழகைக் கூறுதல்.

விண்ட நீலம் விளங்கிய வாவியோ
மண்டு சைவலம் வார்ந்து வளர்ந்ததோ
பண்டை மாரன் படுகொலை வேழமோ
கொண்ட லோமென் கருங்கெடுங் கூந்தலே. (சச)

மின்னும் வெங்கணை யோவயில் வேல்கொலோ
மன்னு கோப மறலிகைப் பாசமோ
பின்னு மூசற் குழையிற் பிறங்குசெம்
பொன்னி னூலை புறமிடுங் கண்களே. (சடு)

ஆரு மின்ப வமுதுபெய் கும்பமோ
வேரி மாலை துயல்வரு மேருவோ
வார முத்து மதத்திறு பாந்தளெங்
கோர மிட்டடிக் கொண்டெழு கொங்கையே (சசு)

கூறு கொண்ட விழைவகிர்க் கோலமோ
வேறு பைம்பொ னிணர்த்தரு வல்லியோ
வீறு பொங்கொளி வீசிய மின்னெடி
மாறு கொண்டு துடங்கு மருங்குலே. (சஎ)

சுதரிசனர் தம் மனைவிக்கு அதிதிபூசை செய்முறைமையைக் கூறல்.

என்ன நல்லெழில் வாய்ந்த விலங்கிழை
தன்னை நோக்கி மகிழ்வொடு சாற்றுவா
னன்ன மன்னவள் கேட்[டி யதிதி]யிற்
கன்னி பாக னுருக்கொடு காட்டுவான். (சஅ)

ஆய காலவ் வதிதிகள் பூசனை
நேய மோடு நினைந்தன யாவையு
மேய நல்கி யெறிசுடர் வேற்படைச்
சேய ரிக்கண்ணி செய்குதி யென்றனன். (சகூ)

கணவரது கட்டளைப்படி சுதரிசனரது மனைவி அதிதிபூசை செய்துவருதல்.

மாத வஞ்செய் வரமுனி யாகிய
காத லனுரை மேற்கொடு கற்பினு
ளாத ரத்தி னதிதிகள் வந்தனை
யேத மின்றி யியற்றிய நாளினில். (நிஐ)

சுதரிசனரதும் மனைவியதும் அதிதிபூசைத் திறனையறிய இயமன் விரும்புதல்.

மூரித்த கோட்டு முகிலிற் பொலிதரும்
பருத்த மேதிப் பகடுகைக் குஞ்சர
னருத்தி யோடு மவர்புரி பத்தியின்
கருத்தி னுண்மை யறியக் கருதினன். (நிக)

இயமன் ஓர் பிராமணவேடந் தரித்து முனிவரில்லாத சமயத்தில் வருதலும், முனிவரது மனைவி சந்தனைபுரிதலும்.

வஞ்ச வேட மறையவ னாகிய
விஞ்சை மாதவ னீங்கிய வேலையி
லெஞ்சி டாத விருக்கைவந் தெய்தினு
னஞ்சி லோதிகண் டஞ்சலி பண்ணினாள். (நிஉ)

ஏசி லாணை யிறைஞ்சிப் பரிமளம்
வீசு சாந்தம் விரைமலர் மாலிகை
யாசி லாத வடிசில்க ளாதியாற்
பூசை செய்து முடித்தனள் பூங்கொடி. (நிஈ)

அப் பிராமணவேடதாரி, இப் பூசனையால் என்மனம் மகிழாது,
என்னை சேர்ந்தாற்றான் மகிழுமெனல்.

அரிய வந்தண செய்தபி னந்தகன்
றெரிவை கேட்டியென் சிந்தை களிப்பதற்
குரிய வந்தண யீதன் றுவப்பொடு
மருவ வேண்டு மெனவலித் தானரோ. (நிச)

அதைக்கேட்ட முனிவர் மனைவி, தனது நாயகன் அதிதிகள் விருப்பப்படி
பூசனைபுரியச் சொல்லியதை நினைந்து அக்கருத்துக் கிசையலாமோ
எனச் சிந்தித்தல்.

பகர்ந்த வாசகங் கேட்டனள் பைந்தொடி
யகங்கொ ளன்பி னதிதிகள் பூசனை
யிகழ்ந்தி டாத வரிசையி னின்புற
முகந் திருத்தி முறைபுரி வாயெனை. (நிநி)

உற்ற காதற் கொழுந னுரைத்தது
முற்று மேற்கொளல் கற்பின் முறையெனக்
கொற்ற வேற்கண் புதைத்தொரு கொம்பரிற்
பொற்பு வாய்ந்தவள் புந்தி [பொருந்தினள்.] (நிசு)

அச்சமயத்திற் சுதரிசனர் வருதல்.

வேறு.

துப்புறழ் குமுதச் செவ்வாய்த் துடியிடைக் களபக் கொங்கை
மைப்புய லனைய வோதி யின்னண [மெண்ணுங் கா]லை
முப்பொரு ளுணர்ந்து காம முதலிய குணங்க ணீத்த
செப்பரு முதல்வன் செம்பொற் றிருமனை வாயில் சேர்ந்தான். (நிஎ)

பிராமணவேட அதிதி முனிவரிடம் அவரது மனைவியை விரும்புவதாகக் கூறுதல்

முனிவரன் வருத லுணர்ந்தி மறலிபோய் முன்னர் நின்று
புனிதமா தவத்தோய் கேட்டி நின்மனைப் பூவை தன்னை
யினிதுறப் போகந் துய்த்தற் கருளுதி யென்ன வன்னான்
சுனிதரு மனத்த னாகி யளித்தனன் கற்பி னாளை. (நிஅ)

முனிவர், மனைவியை அவ்வதிதிக்குக் கொடுத்தலும், அவர்களது பக்தியை
இயமன் அறிதலும்.

ஆரமு தனையா ளின்ப மருந்திடு மவரே போல
வார்பொரு களபக் கொங்கை மடமயி லருகி னேர்பாற்
சீர்மனை யகவை நண்ணித் தீண்டல னாகி வைகிக்
கார்தரு குழலி கற்பு முனிவரன் கருத்துங் கண்டான். (நிஈ)

இயமன் சுயவடிவங் கொண்டு, உங்களது பக்தியைச் சோதிக்க
வந்தேன் என்று கூறுதல்.

சிந்தையின் மகிழ்வு கூர்ந்து திரும்பிமா முனிவன் றன்பால்
வந்தனன் மறையோன் வேட மாறினன் மறலி யாய
சுந்தர வுருவ மானு னளப்பருஞ் சுருதி தேரு
மெந்தைநின் பத்தி காண்பா னிவண்வர வெய்தி னேனால். (ஈ0)

மருதநீர் வேலி நாடு வளநகர் மகுடஞ் செங்கோல்
பொருவரு மாவி யீட்டும் புண்ணிய மளித்திட் டாலும்
பெருகுதெண் டிரைநீர் வைப்பின் மனையெனும் பெரிய வாழ்க்கைத்
திருவினை யெவர்க ளேனுங் கொடுப்பரோ சிவன்வந் தாலும். (ஈக)

யாவரு மியற்றற் கொண்ணு விருந்தவ மினையோன் றில்லாத்
தேவியைக் கொடுத்த லாகு மாதலி னின்னைப் போலப்
பூவல கத்தி னுகர் பொன்னினுட் டும்ப ராய
தேவுல கத்தி லுண்டோ தவநெறிச் செயலின் மிக்கோர். (ஈஉ)

இயமன் அவர்களைப் புகழ்ந்து தன்னிடமடைதல்.

விரிசடை முனிவ மாதை வி[ரும்பின] னல்லேன் றெய்வப்
புரிகுழல் மடந்தை யோடு மனையறம் புரிந்து வாழ்வா
யரியநின் பேர்சொற் றேர்க்கு மவமிருத் தில்லை யென்னுத்
தெரிவரு முறையிற் சாற்றித் தென்றிசைக் கடவுள் போனான். (ஈங)

இக் கதையினைக் கேட்ட தாருகாவனத் திருடிகள்
தாம் செய்த குற்றத்தை யறிந்து, பிரமனிடங் கூறுதல்.

இன்னதா மதிதி பூசை யிகழ்வரோ வென்ன வாசப்
பொன்னருங் கமலப் புத்தேள் புகன்றனன் பொருவி லாதான்
சொன்னவா சகத்தி னுண்மை தெரிந்தனர் முனிவர் சோர்ந்தார்
சென்னிமேற் கரங்கள் கூப்பிச் சிலமொழி பகர்வ தானார். (ஈச)

ஈரவெண் பிறைக்கோ டேற்ற வின்னமு தொழுகுங் கொன்றைத்
தாரெடுஞ் சடிலி மீது நிந்தையாற் சாபங் கூறிச்
சீர்பெறு தவங்கள் யாவுஞ் சிதைந்தன சிறியே மின்னு
மாருயிர் தரித்து வாழ்தல் வேண்டுமோ வறையுங் காலை. (சுஇ)

வண்ணமைக் கரிய கூந்தல் வாணிதன் கொழுநு ஞானப்
பண்ணமை வேத நீதி பகுத்தவ நினது செம்பொ
னண்ணலங் கமலப் பாதத் தடைக்கல மாக வந்தேந்
கண்ணுதற் பரமற் காளாய்க் காண்பதற் கருள்வா யென்றார். (சுஈ)

பிரமன் சுவபிராணை யடையு முறைகளை அவர்க் குணர்த்துதல்.

என்றுமா தவத்தோர் கூற நான்முகத் திறைவன் கூறுந்
துன்றுசெஞ் சடையீர் தெய்வச் சுருதியோர் குலத்து வந்தோர்
நன்றரு மறைக ளோர்ந்து நவின்றிடும் வயதீ ராறின்
மன்றலங் குழலி னுரை மணவினை விதியின் வேட்டே. (சுஉ)

சிறுவரைப் பயந்தன் னோர்க்கு வேண்டுவ தெரிந்து செய்து
மறுவறு பருவ மீரா றல்லதத் தொகையா மாதங்
குறைவறு தினமீ ராறே யாயினுங் குறித்துக் கொண்டல்
செறிபொழில் வனத்தி லெய்தி யாவினின் னமுதந் தேக்கி. (சுஅ)

புண்ணிய நதிதீ ரங்கள் புனிதமாந் தலங்கள் வைகி
யெண்ணுமக் கினிட்டோ [மம்]மென் றிசைத்திடும் வேள்வி யாதி
வண்ணவெண் ணிலவு வேணிப் பரமனே யாதி யாய
விண்ணவ ரனைத்துள் ளோர்க்கும் விதியின்வெள் ளமுத மூட்டி. (சுக)

அணிநிதி யாடை செந்நெ லகனில மடிசி லாதி
யுணவுக ளனைத்தும் வேத மறைபவர்க் குகவித் திங்கண்
மணிமுக டுரிஞ்சும் வெள்ளி வரைவரும் வரதன் செம்பொற்
றுணையடிக் கமலம் போற்றித் தொலைவிலாக் கதியிற் சார்வார். (எ0)

இத்தகை புரிதற் கெண்ணு மிருநிதி வளமில் லோர்கள்
சித்தநல் லிழுக்க மெய்தித் துறவறந் திருந்தச் செய்து
முத்தலை நெடுவே லேந்து முதல்வனைக் கனக வெற்பை
யத்தனைக் கழற்கா லேத்தி யளப்பருங் கதியி னுவார். (எக)

இவைபுரிந் தறியார் கூற்றி னீர்வையி னகப்பட் டேங்கித்
தவலுறு நிரயத் தெய்தி யழுங்குவர் சாத மன்றிப்
பவமகன் றினிய முத்தி பரிப்பரிவ் வறங்கள் வேண்டார்
சிவனெஞ் சிருத்தி யன்னோன் சேவடி வழுத்தி னோரே. (எஉ)

உரைதரு மறையின் வல்லான் சுவேதனென் றிருவ னுதிங்
திரைபொரு கங்கை யேற்ற சென்னிவா னவனை வந்தித்
திரைகட லெழுந்த வால விடமென வெதிர்ந்த நீல
வரைபொரு வபிரத் திண்டோண் மறலியைக் கடந்தா னன்றே. (எங)

சுடர்விடு மணிச்செஞ் சூட்டுப் பாந்தளந் தொடித்தோ ளானைப்
பொடியணி பவள மேனிப் புனிதனை யெவர்க் ளேனு
மடியினை வழுத்தல் செய்வோர்க் கரியதொன் றுளதோ வென்று
கடிமலர்த் தவிசின் மேவு கருணையங் கடவுள் சொன்னான். (எச)

இரண்டாவது
சிவன் முருகாவனத்திற் பலியிருந்த வத்தியாயம் முற்றும்.

மூன்றாவது
சுவேதமுனிவர் காலனைக்கடந்த அத்தியாயம்.

தாருகாவனத்து முனிவர்கள் சுவேதமுனிவர் காலனைக்கடந்த கதையினைக் கூறும்படி பிரமனைக்கேட்டலும், அவர் கூறத்தொடங்குதலும்.

முருகுயிர்த் தொழுகி வழிந்மு வளைந்து
மொண்டுவண் டினங்கள்வாய் மடுத்துப்
பருகிமொய்த் திரைக்குந் துணர்மலர் சொரியும்
பைந்தரு வனத்துமா தவத்தோர்
ரருமறைப் பொருளை விரித்துணர் சுவேத
னலங்குமுத் தலையவே லுயர்த்த
பொருவிலந் தகனைக் கடந்திடுங் காதை
புகலெனத் திசைமுகன் புகலும். (க)

சுவேதமுனிவரது குணவிசேடங்களைக் கூறுதல்.

ஓட்டற வுருக்கிக் குழைத்திடத் தெளிந்த
வொள்ளொளிக் கனகமொத் தொளிருந்
தோட்டல ரலங்கற் பிறைநிலாத் திளைக்குந்
தூவள்கொடிப் பவர்சடைப் பெருமான்
முட்டுணைக் கமலத் தன்புவைத் திருங்குந்
தண்ணளிப் பெருக்கெறி கடலான்
கோட்டமில் லறத்தின் முறைநெறி போய
குணத்தினன் சுவேதமா முனிவன். (உ)

சுவேதமுனிவர் தமக்கு இளமைப்பருவத்திற்றானே மரணகாலம் சமீபித்ததை அறிந்து, அதனைத் தடுப்பவர் சிவபிரானே எனத் தெளிந்து, அவரைநோக்கி அருச்சனைபுரிய நினைத்தல்.

கண்விழித் திமைக்கு மளவையிற் கோடி
கருதரும் பிறப்பினி லழுந்தித்
திண்ணமற் றுழலு முயிரிள மையினிற்
சிதையுநா ளடுத்ததென் றுணர்ந்தா
னெண்ணமுற் றிதனைத் தடுப்பதற் கொருவர்
சிவனல்லா தில்லையென் றிமைய
வண்ணல்வெற் பளித்த மடக்கொடி கொழுந
னருச்சனை புரிகுவா னினைந்தான். (க)

சுவேதமுனிவர் இலிங்கந்தாபித்துப் பூசித்தல்.

மூதுல கடங்க விழுங்கிருட் பிழம்பு
முழுதறக் கொழுங்கதிர் விரிக்கு
மாதவன் சுடர்த்தேர்ப் பசும்பரி தடுக்கு
மணிகிளர் சிகரமால் வரையின்
மீதுசென் றடைந்தோர் முழையின்வீற் றிருந்து
விண்ணவர் தொழவிடை யுகைக்கு
நாதனை யிலிங்க முகத்தினில் வழுத்தி
நாட்சில கழித்திடுங் காலை. (ச)

சுவேதமுனிவரைக் காலன் வந்தடைதல்.

துரிசறுத் துயர்ந்த சிந்தைமா தவத்தோ
னின்னுயிர் துறந்திடத் துணிந்தே
யெரிகனற் கொழுந்தீக் குருதிகொப் பிளிக்குங்
கண்களு மிதழ்மடித் ததுக்கும்
புரிமுறுக் கெயிறும் பொலியமைம் முகிலிற்
புலவுமூ விலைப்படை யுயர்த்துக்
கரியகூன் மருப்புக் கவையடிப் பகட்டிற்
கடுங்கொலைக் காலன்வந் தடைந்தான். (ஞ)

காலன்வந்ததற்குப் பயந்து சுவேதமுனிவர் சிவபிரானிடம் அபயமிட்டுப் பூசனைசெய்தல்.

வெஞ்சின முருத்துக் கொடியவெம் மறலி
யெதிர்ப்பட நோக்கினன் வெருக்கொண்
டஞ்சின னிரங்கி யழுதனன் சிவனுக்
கபயமென் றறைந்தன னிருந்தா
னஞ்சணி மிடற்ரு னடியரை யிவனு
நாடிவந் துயிர்துறந் திடுமென்
றெஞ்சலின் மனத்திற் கருதினன் பூசை
யியற்றின னஞ்செழுத் தெடுத்தே. (ரு)

இதனைக்கண்ட யமன் புன்சிரிப்புச்செய்து,
சிறுவனே! நீ அனைப்பூசித்தாலும், நான் உயிர் கவருவதை
அச்சிவனுலும் மற்றெவராலும் தடுக்க முடியாதெனல்.

ஆயதோ ரமையத் தந்தகன் சிறுபுன்
முறுவல்பூத் தரும்பின னறையு
நேயமோ டரனை வழுத்தியென் சிறுவ
னுதலா னீயிது நினைந்தாய்
பாயுமால் விடையூர் பரமனு மலங்கற்
பைந்துழாய்க் கரியமைம் முகிலு
மேயநான் முகனும் வரினுய்யான் கொடுபோ
மாருயிர் விலக்குத லரிதே. (எ)

இதைக்கேட்ட சுவேதமுனிவர் சிவன்றிருவடிகளைத் துணையாகப் பிடித்தவர்க்கு விதியினும் பயமின்று, அவர்கள் உன்னைக்கண் டஞ்சமாட்டார்களெனக் கூறுதல்.

ஈதெடுத் துரைக்கக் கேட்டருள் சுவேத
னெறிகதிர்க் கனிச்சியம் பெருமான்
பாதபங் கயமே கடைப்பிடித் தவர்க்கு
விதியினும் பயமுமொன் றுளதோ
தீதுறு கொடியோய் நின்னையுஞ் சுவரோ
வெனத்தெரித் துரைத்தனன் சிவனை
மாதுபங் கினனை யிறுகிடத் தழுவி
மறையினுற் ரூத்திரம் புரிந்தான். (அ)

இதனைக்கேட்ட யமன் கோபித்து அவர்மேற் பாசத்தை வீசி வலித்தல்.

கேட்டனன் மறலி பண்டமும் வெடிக்கக்
கிளுகிளுத் திருகரம் புடைத்து
நாட்டம்வெம் புகையும் வடவையுஞ் சிதற
மலையென வெதிர்நடந் தணுகி
மோட்டிளங் குவவுத் தடம்புயந் திருக
முடுகிமெல் லுடனடு நடுங்கப்
பூட்டினன் கொடிய பாசவெங் கயிறு
புண்ணியப் புனிதமா தவனை. (கூ)

வந்தனை புரிந்து விதியையு மெனது
வலியையு மறுத்திட நினைந்த
சிந்தனை யழகி திலிங்கமா முகத்திற்
சிவன்வரக் காண்கிலே னென்னை
புந்திகெட் டொழிந்த சிறுவதென் றிசைக்குப்
போதியென் றிறுக்குவெம் பாச
முந்துறத் தொடுத்து வலித்தனன் வலீக்கப்
பரமனை முழுவது நினைந்தே. (கூ)

பாசக்கட்டால் நெருக்குண்ட சுவேதமுனிவர் சிவபிரானை அபயமிட்டழைத்தல்.

அடையலர் கொடிய திரிபுர மெரிய
வழனகை முகிழ்த்தவா வபயம்
படைமத னெரிய நுதல்விழி விழித்த
பண்ணவா பரமனே யபயங்
கடல்படு சலதி விடமடித் தயின்ற
கண்ணுதற் கடவுளே யபயம்
புடைபடு மெயிற்றுப் பணியணி யணிந்த
புண்ணியப் புனிதனே யபயம். (கக)

சுவேதமுனிவரது அபயத்தைக்கேட்டுச் சிவபிரான் இலிங்கத்திலிருந்து வெளிவருதலும், யமன் வீழ்ந்திறத்தலும்.

இரங்கிமெய்த் தவத்தோ னின்னணம் பகர்த
லெம்பிரான் திருச்செவிப் படலும்
புரங்களிந் தெரியக் கதமுருத் ததுபோற்
புங்கவன் சினத்துருப் பொலிந்து
வரங்கெழு மிலிங்க மணிமுகத் தெழுந்து
மலைமகள் புடைவர வந்தான்
கரங்குவித் திறைஞ்சி நந்தியே முதலாங்
கணங்களெம் மருங்கினுங் கலந்தார். (கஉ)

செந்துவர்ப் பவளத் தடவரை யனைய
செம்மனின் றருள்செய நோக்கி
யந்தகன் வெருக்கொண் டஞ்சிமெய் நடுங்கி
யயர்ந்துநெட் டுயிர்ப்பெறிந் தாற்றி
முந்துநற் றவத்து முனிவன்றி ருமுன்
வீழ்ந்தன னுருயிர் முடிந்து
வெந்தசெம் பனைய குருதிவா யொழுகி
வேலிதொட் டிழிந்திடக் கிடந்தான். (கங)

வேறு.

இயமன் இறந்ததைக் கண்ட சுவேதமுனிவர் சிவபிரானை வணங்கித் துதித்தல்.

மல்லுயர் வயிரத் திண்டோண் மறலியா ருயிர்போய் மாண்டு
செ ல்லெனக் கிடக்கை கண்டு சிந்தையின் மகிழ்வு கூர்ந்து
சொல்லருஞ் சுருதி தேருஞ் சுவேதமா முனிவன் மேரு
வில்லியைத் தொழுது சூழ்ந்து விரைமலர்ச் சரணில் வீழ்ந்தான். (கச)

சங்கரா போற்றி தேவர் தலைவனே போற்றி யோவா
தெங்குமாய் நின்றாய் போற்றி யென்னுயிர்க் குயிரே போற்றி
மங்கையோர் பங்கா போற்றி வழித்துணை மருந்தே போற்றி
செங்கைமா னுயர்த்தாய் போற்றி சிற்பரா சிவனே போற்றி. (கஞ)

மாயையி னீங்கி ஞான வடிவெடுத் தவனே போற்றி
தாயென வுயிர்க்கட் கெல்லாந் தண்ணளி சுரந்தாய் போற்றி
பாய்திரைக் கடனஞ் சுண்ட பண்ணவா பரனே போற்றி
தீயவர்க் கரியாய் போற்றி சிற்பரா சிவனே போற்றி. (கசு)

கரியுரித் தூடுத்தாய் போற்றி கண்ணுதற் கடவுள் போற்றி
வரியர வசைத்தாய் போற்றி மதிமுடிச் சடிலா போற்றி
பொருசிலைக் கழைக்கை மாரன் பொடிபட விழித்தாய் போற்றி
திரிபுர மெரித்தாய் போற்றி சிற்பரா சிவனே போற்றி. (கள)

ரண்டுபே ரண்ட மெல்லா மீன்றளி புரந்தாய் போற்றி
மீண்டுமவ் வண்ட மாய்த்து வெண்பொடி பூசுந்தாய் போற்றி
மாண்டுவந் துதிக்கு மாய வண்பிறப் பறுப்பாய் போற்றி
சேண்டொடு விடையாய் போற்றி சிற்பரா சிவனே போற்றி. (கஅ)

சுவேதமுனிவர்மீது தேவர்கள் பூமாரி சொரிதல்.

என்றுதோத் திரங்கள் செய்தே யிருகண்ணீர் வழிந்து வாரப்
பொன்றிகழ் சடையி னுமைப் பூசனை புரிந்து நின்றான்
வென்றிவா னவர்க ளெல்லாம விமலனை வீழ்ந்து போற்றித்
துன்றுகற் பகப்பூ மாரி சுவேதன்மா முடியிற் பெய்தார். (கக)

திருநந்திதேவர் வேண்டுகோளால் சிவபிரான் இறந்த இயமனை உயிர்ப்பித் தருள்புரிதல்.

மறுவறு மதியஞ் சூடி மான்றனைப் பணிந்து நந்தி
சிறியவர் தீமை செய்தாற் பொறுப்பதுன் செய்கை யாமே
யறிவகன் மறலி யாவி யளித்தியென் றிரந்து வேண்டக்
கறைமிடற் றமல னெந்தை காதலாற் கருணை செய்தான். (உ0)

இயமன் எழுந்து சிவபிரானைத் துதித்துத் தனதிருப்பிடம் மீளல்.

கருமனு ருயிர்பெற் றுய்ந்து தலைநிலா முடியோய் நீசெய்
பெருமையா ரறிவார் நாயேன் பிழைபொறுத் தருள்க வென்று
மருமலர்ப் போது தூவி வரதனை மலர்த்தாள் போற்றித்
திருவருட் செங்கோல் பெற்றுத் தென்றிசை நகரஞ் சேர்ந்தான். (உக)

சிவபிரான் சுவேதமுனிவருக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்துத் திருக்கயிலைக் செழுந்தருளுதல்.

அரும்புமெய் யன்பு மாரூர்ச் சுவேதனை யருட்க ணோக்கி
விரும்புநல் விளைமை டாதி வேண்டிய வரங்க ணல்கிச்
சுரும்புபாட் டயரு நீலத் துழாய்முகின் முதலோர் போற்றக்
கரும்புறழ் மொழிபாள் பாகன் கயிலைமால் வரையிற் சார்ந்தான். (உஉ)

சிவழிபாட்டின் மேன்மையைப் பிரமன் கூறுதல்.

குருத்துவெண் ணிலவு வேணி வந்தனை குறித்துச் செய்வோர்
மிருத்துவுங் கடப்ப ரன்னே ரியற்றிடா வினையு முண்டோ
வருத்தியி னடைவர் செய்வ வறம்பொரு ளின்பம் வீடு
திருத்தகு பூசை யன்றிச் செய்வதொன் றுளதோ மேலாய். (உஊ)

அளப்பரு மகங்கள் கோடி யாற்றினு மழனீர் மூழ்கித்
துளக்கற நாப்ப ணின்று தொல்லைமா தவஞ் செய்தாலு
முளத்தினுங் கருதற் கெட்டா யோகுகள் பயின்றிட் டாலுங்
கொளத்தகு பத்திக் கல்லாற் குறுகிடான் குழக னன்றே. (உச)

ஆதலாற் பத்தியோடு மமலனை யருச்சித் தோர்க
ளேதிலாக் கருணை ஞானத் தின்பமுற் றெடுத்த வாக்கை
பேதமாய்க் கழியுங் காலை முத்தியும் பெறுவ தென்றுற்
காதலா லிதனை யன்றே கடைப்பிடித் தியற்றல் வேண்டும். (உடு)

தத்துவ வடிவ மாய சகளமா யனைத்து நீங்குஞ்
சுத்தநிட் களமாய்த் தோன்றுந் தொல்வடி விலிங்கமாகு
மத்தனை யிலிங்கந் தன்னில் வரன்முறை வழுத்தல் செய்த
லுத்தம மென்று வேதா கமமெடுத் துரைக்கு மாதோ. (உசு)

இன்னதை யன்றி யெல்லாத் தேவர்கட் கிறைவ னான
துன்னுநீள் சடிலத் தெந்தை பிரளயந் தொடுக்குங் காலை
மன்னுபே ரண்ட மெல்லா மொழித்தவை வழங்கிக் காப்ப
னன்னவைக் குருவ மூன்று மமலனை யமைவ னம்மா. (உள)

அவ்வுருத் தெரிக்குங் காலை யிராசதத் தருளின் மூர்த்தஞ்
செவ்விதி னுணரின் யாமாஞ் சிறந்தசாத் விகத்தின் கூறு
பவ்வமேற் றுயிலும் பச்சைப் பசுந்துழாய்ப் படலை மேகந்
திவ்விய தாம தத்தின் வடிவமாஞ் சிவந்த செந்தீ. (உஅ)

உடைத்திடு கருணை பொங்க வொருமுறை புவன மெல்லாம்
படைத்திடு வடிவங் காவல் பரித்திடு வடிவ மெல்லாம்
துடைத்திடு வடிவந் தன்னி லடங்குறு மதனுற் சோதி
மிடைத்திடு பெரியே யீசன் வியப்புறும் வடிவ மாமால். (உக)

அன்னதா லட்ட கோண மிரட்டிகோ ணளவை நீங்கா
மின்னுமண் டலங்க ளாதி சமைந்திடு வேதி நாப்பண்
மன்னுசெந் தழலிற் பூசை வரன்முறை வகுத்துச் செய்த
லென்னையா ளுடைய நாதற் கின்புறு பூசை யாகும். (ஙo)

ஓதுமிம் முறைக ளன்றி யொளிமணி குயிற்றுஞ் செம்பொற்
சீதநீர்க் கடங்க ளாதி யிடத்தினுந் திருந்து பூசை
காதலிற் புரிந்தால் ஞானக் கண்ணுதற் கடவு ளாய
நாதனன் புருகி யுள்ள நயந்துகொண் டருளா நிற்பன். (ஙக)

இனையபன் முறையிற் கூறு பூசைநும் மிருக்கை யெய்தி
மனமொருப் படவே செய்க மாதவத் துறையு ளீர்கா
ணனைமல ரிதழி சூடு நாயக னடன மூர்த்தி
நினைவதன் முன்ன ரெய்தி நின்றருள் புரிவ னன்றே. (ஙஉ)

பிரமனிடம் சிவபூசை முறைமையினைக் கேட்ட தாருகாவன முனிவர்கள் மனமகிழ்ந்து மீளல்.

பங்கயத் தவிசின் மூர்த்தி யின்னணம் பகர வார்வம்
பொங்கிய மனத்த ராகி முனிவரர் புனலார் வேணிச்
சங்கரன் மலர்த்தா ளேத்தத் தாருகா வனத்தில் வாய்ந்த
செங்கர முகிழ்த்து வீழ்ந்து திசைமுகற் றொழுது போனார். (ஙங)

வேறு.

இன்ன காதை சூதமுய்ந், துன்னி யோத மாதவர்
மின்னு ஞான வித்தெனு, மன்னு மாறு மல்கினர். (ஙச)

மூன்றாவது

சுவேதமுனிவர் காலனைக்கடந்த வத்தியாயம் முற்றும்.

நான்காவது
சிவன் தாருகாவனத் திருடிகளுக்
கருள்புரிந்த அத்தியாயம்.

சூதமுனிவர் சிவன் தாருகாவனத்திருடிகளுக்கருள்புரிந்த கதையினைக் கூறத்தொடங்கல்.

திரைத்தவர நதியுவட்டுஞ் செஞ்சடைவா னவன்மகிழ்ந்து
விரைத்தமலர்த் தாருவன மெய்த்தவரைப் புரந்தகதை
தரைத்தலத்தின் நந்திபுகழ்ச் சனற்குமர பகவானுக்
குரைத்தமுறை யுரைப்பலெனச் சூதமுனி யுரைத்தருளும். (க)

பிரமாவிடம் சிவன் பெருமையினைக்கேட்ட தாருகாவனத்திருடிகள் தமது இடத்தையடைந்து சிவனைக் குறித்துத் தவமியற்றல்.

வந்துமுனி வர்திரண்டு மலர்த்தாரு வனமடைந்து
முந்தைமலர்ப் பீடிகையோன் மொழிந்தநலும் வரன்முறைபே
யெந்தைபிரா னெனக்கனிந்தே யென்பலவு நெகிழ்ந்துருகிச்
சிந்தைபொருப் படநினைந்து சிவபூசைத் திறம்புரிந்தார். (உ)

தீயகொடும் பனிவாடை குளிரிறைப்பத் திரைவர்வி
மேயபெரும் புனன்மூழ்கி மெய்நடுங்கத் தனிநின்றார்
பாயுமடற் பசும்புரவி நுகப்பிணித்த படர்கொடித்தேர்க்
காயவெழு கதிர்சாந்த கங்குலினுந் துயிலொழிந்தார். (ஊ)

உண்ணரிய வுணவொழிந்து சைவலமுண் டொழுகுபுனற்
புண்ணியமா நதிதிரைத்த புனிதநெடுங் குன்றுதொறு
நண்ணியவீ ராசனத்து நயந்திருந்தஞ் செழுத்தோதிக்
கண்ணுதலை வரநினைந்து கனிந்துகனிந் துளங்கரைந்தார். (எ)

தாருகாவனத்திருடிகள் ஒருபருவமட்டுஞ் செய்த தவத்திற்கு மகிழ்ந்து சிவபிரான் தாருகாவனத்தையடைதல்.

இத்தகைமா தவர்வருந்தி யொருபருவ மியற்றிடலு
மைத்தருகார்க் களத்தமலன் மகிழ்ந்துதிகம் பரனுகி
வித்தகவெண் டிருநீற்று வெண்ணிலவு மெய்கொழிப்பத்
தத்தளிதா தாட்டயருந் தாருகா வனமடைந்தான். (ஏ)

நக்கினரூபமுடன் தாருகாவனமடைந்த சிவபிரானது திருவிளையாடல்.

மாதவர்க ளிருக்கைபுகுந் தோரிடைபோய் மகிழ்ந்தாடு
மேதமிலா வழகெறிப்ப வோரிடைபோ யிசைபாடுஞ்
சீதகிலாப் புன்முறுவ லோரிடைபோய்ச் செய்தருளுங்
காதலொடு மோரிடைபோய்ப் பிச்சையெனக் கரமேந்தும். (ஐ)

சிவபிரான் வந்தமையை முனிவரர் கண்டு மகிழ்தல்.

செங்கண்மழ விடையுயர்த்தோ னிவ்வண்ணந் திரிதரலும்
பைங்கண்மல ரளிகுடையும் படர்தாரு காவனத்தி
னெங்கணும்வீற் றிருக்கின்ற வரமுனிவ ரினிதார்ந்தா
ரங்கணனென் றறிந்தார்க ளாடினு ரகங்களித்தார். (ஒ)

முனிவர்கள் சிவபெருமானைப் புகழ்ந்து துதித்தல்.

வெண்டிவலை வரந்தியாய் வேணியாய் நின்பெருமை
முண்டகச்செந் திருநாபி முகுந்தனுக்குந் தெரியாதான்
மண்டுதுயர்க் கடற்பிறவி மாயவலை யிடைப்பட்டுக்
கொண்டகெறிச் சிறியோர்கள் குணித்துணர்தற் கெளிதாமோ. (அ)

முனிவர்கள் தாம் முன்செய்த அபராதத்தை மன்னிக்கும்படி கேட்டல்.

மைந்தசெது வினைத்தாலு மனங்கொளா தருள்பெருகித்
தந்தைமகிழ்ந் தினிதளிக்குந் தகையுரைக்கில் வழக்கன்றே
சிந்தைமகிழ்ந் தெளியேங்கள் செய்தபெரும் பிழைபொறுத்து
மெந்தைபொறுத் தருள்கவென வினைக்கமலச் சரண்வீழ்ந்தார். (கூ)

முனிவர்கள் துதித்தலுக்கிரங்கி சிவபிரான் தமது திருவுருவினைக் காட்டல்.

நறைக்கமலப் பொகுட்டுறையு நாயகனுத் தழப்பவரு
மறைக்கடலுட் படிந்தெடுத்துத் துதியமுதம் வழங்குதலும்
பிறைக்கனகச் சடைமவுலிப் பெருமானன் பினிதிரங்கிக்
கறைக்களமுந் தழல்விழியுங் கரநான்கு காட்டினனன். (கo)

தமது திருமேனியழகைக் காண்பதற்காக முனிவர்களுக்கு ஞானக்கண்ணைக் கொடுத்தல்.

வேறு.

அன்னமெய்த் திருவுரு வழகு காண்பதற்
குன்னருந் தவத்தினோர்க் குறுதிப் பேரொளி
துன்னிருந் தெய்வதச் சுடர்க்க ணல்கினன்
பன்னக வேணியான் படிவ நோக்கினர். (கக)

ஞானக்கண்ணுல் சிவபிரானது திருவுருவத்தைக் கண்ட முனிவர்கள் பரவசமடைதல்.

பார்த்தனர் பரவச மடைந்து பன்முறை
யார்த்தன ருலகையங் கடலு ளாழ்ந்தனர்
சேர்த்தனர் செங்கர முகிழ்த்துச் சென்னிமேற்
றார்த்தனர் மார்பிடை விழியின் சோரினீர். (கஉ)

முனிவர் சிவபிரானைப் பூசனைசெய்தல்.

கோதறு சுடர்மணிக் கும்ப நீரெடுத்
தாதர வொடுமுறை யாட்டி னர்கழற்
போதினை யருத்தியிற் பூசை செய்தனர்
மாதொரு பாகனை வணங்கி வீழ்ந்தனர். (கங)

முனிவர்கள் செய்த பூசையினுல் சிவபிரான் மகிழுதல்.

இத்தகை முனிவர ரிறைஞ்சு மேல்வையிற்
கொத்தலர் கருங்குழற் கொம்மை வெம்முலை
முத்தொளி நிலாமுறு வல் பங்கினன்
றொத்தல ரிதழியான் களிது ளங்கினன். (கச)

சிவபிரான் முனிவர்களுக்கு அறிவுறுத்துதல்.

அரியசொன் மறைபயி லருந் தவத்துளீர்
பிரிவற வுலகினிற் பிறக்கும் பெண்ணுருத்
தெரிதரிற் பனிவரை யுயிர்த்த தேமொழிப்
பரிமளப் பவளவாய்ப் பாவை பங்கினை. (கரு)

ஓதுகே ளுணுரு வினைத்து முற்றுணர்
நீதியே யெனதுபங் காகி நிற்பன
வாதலா லெவரையு மஞ்சை பேகியே.
சாதியா லிகழ்வரோ வீடு சார்ந்துளோர். (கக)

தெண்டிரை யுலகினில் ஞானத் தேறன்மோந்
துண்டொரு பித்தரிற் கலி யொழிந்துலாய்க்
கண்டிகை வெண்பொடி புனைந்து காட்டிய
தொண்டரைப் பழிப்பதுஞ் சுருதி சொற்றதோ. (கள)

பாலரிற் பித்தரிற் பலவுங் காட்டியே
சூலமு மழுவுமொண் டுடியுந் தாங்கிய
நீலமைக் களத்தெமை நிந்தை யின்றியே
சாலவும் வாம்பெறத் தழைக்கு மன்பினுல். (கஅ)

பாதக மொருவிநல் லொழுக்கம் பற்றியே
தீதுறு முண்டித ராகித் தெய்வவெண்
பூதியாற் ருனமும் புரிந்து கண்டிகை
காதுவண் சிரங்கரங் களத்துத் தாங்கியே. (கக)

விதிமுறை யடைந்தெமை மிக்க பூசைசெய்
மதியின சொம்முடை வடிவந் தாங்கியெம்
பதிதரு போகங்கள் பலவுந் துய்த்திடு
கதியினை யடைந்துமேல் வீடுங் காண்பரால். (உ0)

அத்தகை யடியரை யருச்சித் தேத்திலீர்
முத்தரி லெம்மையே முழுது மேத்திலீர்
மத்தரி லவர்களை வழுவி நீத்தவர்
பித்தரி லெம்மையே நீத்த பெற்றியோர். (உக)

நிந்தனை நீக்கியே நீவிர் நுங்கள்மெய்ச்
சிந்தையின் றிருக்கொழுந் தெம்மைச் சிந்தைசெய்
மைந்துறு மடியரை வழிபட் டேத்துவீ
ரந்தமில் பிறப்பெனு மாழி நீந்துவீர். (உஉ)

சிவபிரான் முனிவர்களுக்கு இவ்விதம் அறுவரைகளைக் கூறி, நீங்கள் வேண்டிய வரங்களைக் கேளுங்கள் எனக் கூறுதல்.

ஈண்டுநின் றெம்மடி யிறைஞ்சி நீவிர்செய்
பாண்டரு தீதியினு லுவகை பற்றினைந்
தூண்டுபே ரன்பினிற் சொற்ற நல்வரம்
வேண்டுவ தருவப்யாம் விளப்பு வீரெனு. (உங)

பண்ணைலா மொருவழிப் படுத்த பான்மொழிப்
பெண்ணைலா மொருபுறம் பரந்த பிஞ்ஞகன்
வெண்ணிலாக் கொழுஞ்சுடர் விரிக்கும் வேணியெம்
மண்ணலான் பகர்ந்தன வினைத்துங் கேட்டனர். (உச)

ஆசிலா முனிவரி லருள் பழுத்துளோர்
கோசிக னங்கிரா வசிட்டன் கோதமன்
காசிப னத்திரி பிருகு காய்சின
மேசறு புலத்தியன் புலக னென்பவர். (உடு)

முனிவர்கள் சிவபிரானிடம் கூறுதல்.

வெய்யவெங் கொலைபழுத் துமிழும் வேற்படை
யையனைப் பயந்தரு ளமல நீபகர்
செய்யவர்க் கழுதிரு செவி மடுப்பயாம்
பொய்யுறு பிறவிபாம் புணரி போக்கினும். (உசு)

மற்றொரு தவமினி வழங்கல் வேண்டுமோ
பொற்கழல் வழுத்தினின் பூசை செய்வது
பெற்றன மெமக்கொரு பிறப்பு முள்ளதோ
கற்றையஞ் சடைமுடிக் கருணை வள்ளலே. (உஎ)

முனிவர்கள் விபூதிமான்மியமும், நக்கினர் பெருமையும், சிவபிரானைப் பூசிக்கு முறையினைக் கூறு மாகமமும் தெரிவிக்கும்படி கேட்டல்.

பொங்கொளி கொளித்தவெண் பூதி மான்மியங்
தங்கிய சலயது தணந்து ளோர்தமை
யங்கண நின்னையத் தெடுக்கு மாகம
மிங்கியா முணர்வதற் கியம்பல் வேண்டுமால். (உஅ)

முனிவர்கள் கேட்டவற்றிற்குச் சிவபிரான் விடைகூறுதல்.

என்னநின் றகங்குழைந் திரங்கி நாண்மதிப்
பொன்னவிர் புரிசடைப் பொருப்பைப் போற்றினு
ரன்னவன் சிறுநகை பரும்பி யாங்கவை
மன்னிரும் பவளவாய் மலர்ந்து கூறுவான். (உக)

சிவபிரான் விபூதிமான்மிய முரைத்தல்.

இரைத்தெழு செப்பொளி யெறியுஞ் செந்தழ
லுரைப்பதே நம்முரு வாகு மூழிபி
னிரைத்தெழு முலகமோர் நொடியி னீடி யே
நுரைக்கட லமுதென நுங்க நீறெழும். (கo)

இலங்குமப் பொடிபரந் தெறிக்குந் தன்மையா
லலங்குபே ருலகெலா மசுத்த நீங்கிடுங்
கலங்குவெம் பிறவியங் கடலு லாழ்ந்தவர்
மலங்களுந் திடமரு மருந்த தாகுமே. (கக)

சுற்றிய பவமெலாந் தொலைக்கு நீர்மையாற்
சிற்பர மபம[தா மெம்]மிற் றெய்வதப்
பொற்பொளிர் விளர்ப்பொளி பொருந்து மாற்றலாற்
பற்பமென் றுருபெயர் படைத்து நின்றதே. (கஉ)

மறைபுகல் சோமமா மகத்துக் கேற்பன
வறைதரு மந்திர மாதி யுள்ளவை
பிறைநுத லுமையுருப் பிறங்கு செந்தழ
னிறையுமெம் முருவத னிலவு வெண்பொடி. (கங)

சிலைநுத லுமைபொடுஞ் சேர்ந்த யாமென
வுலகினி லமைதரு மதனை யோர்ந்துயிர்
புனைழி காலியிற் புணைந்த நீர்மையே
லகிலா வெம்முரு வடைந்த முத்தியோர். (கச)

கருத்தினும் விழியினுங் காண்கில் யாவரும்
வெருக்கொள வருப்பழி விணைஞ ராயினுந்
திருத்தகு வெண்பொடி புனையிற் றீவினை
முருக்கின ரவர்களே முத்தி நேடினோர். (கரு)

தகைபெறு விதிவழிச் சந்தி மூன்றினும்
பகர்தரு வெண்பொடி புனைந்த பான்மையோர்
மகபதி நான்முகன் வணங்கி வாழ்த்தவே
புகரறு கணந்தலை புரந்து வாழுவார். (கக)

சிவபிரான் சுக்கினர்களது பெருமையைக் கூறுதல்.

பொருவில்சற் கதிசரு பூதி மான்மியப்
பெருமையை யளவினிற் பேசற் பாலதோ
விரிசடை முனிவரீர் வியந்து நக்கினர்
தெரிவரும் பெருமையாஞ் செப்பக் கேண்மினோ. (கஎ)

நிலமகட் கரும்பொறை யென்ன நீடுவெம்
புலன்வழி சனிமனம் போக்கி வீரியத்
தலமருங் கொடியர்பொன் னுடை வீக்கினு
முலகினிற் காண்குரு தொழியு நக்கினர். (கஅ)

சிந்தைநீ ராற்புலத் தீயெ ழாதவித்
தந்துபே ரிருவினை யொப்ப நோக்கியே
விந்துவின் வீரிய மடக்கி மேதகை
வந்தருக் கினர்கள்பொன் னுடை வாய்த்தவர். (கூ)

இறப்பரும் புலன்வழி யெய்தி டாமையாற்
சிறப்புறு முனிவரர் தேவர் மற்றையோ
ருறப்பெறு முதலரின் றுடை துறந்தவர்
பிறப்பதற் குள்ளதோ பழியின் பெற்றியே. (சo)

இன்னவர் முத்தியி னெல்லை காண்குறு
மன்னமா தவத்துருக் கினர்க ளாயினோர்
முன்னரா தரித்தெமை முழுதும் போற்றினோர்
பின்னியாங் கவர்திறம் பகர்தற் பாலதோ. (சக)

சிவபிரான் தம்மைப் பூசிக்கு மாகம முறையினைக் கூறுதல்.

ஈங்கிது சிற்கமற் றெம்மை யேத்துமோர்
பாங்குறு மாகமம் பகரக் கேட்குதி
மோங்கிய வுலகெலா மொழித்துப் பின்னருந்
தீங்கற வன்னவை சிருட்டி செய்யுநாள். (சஉ)

விரதமும் யோகமும் விருப்பு முத்தியின்
சரதமா மரியபா சுபத சைவமுஞ்
சிரதல முறுப்பினிற் சிறந்த தென்னமெய்
காதல நெல்லியங் கனியிற் காட்டவே. (சங)

தெரிந்தியாம் படைத்தன மவையிற் சின்மயந்
தருந்தகை யுதவுபா சுபத சைவத்தி
னருந்தவத் துறையுளீ ராய்ந்து நிற்குனர்
பெருந்தனி முத்தியின் பேறு காண்பவர். (சச)

கணிக்குமிவ் வாகமங் கருதி யன்பினுற்
றணிப்பருந் தெக்கணஞ் சார்ந்த நீதியோர்
மணித்தரு வளநகர் வணங்க வேந்தரிற்
குணித்தணி மாதியுங் கொண்டு வாழுவார். (சரு)

உரைக்குமுத் தாநெறி யொழுக்க நின்றவர்
விரைச்செழு கமலபீ டிகையின் வேதியன்
றிரைக்கடற் றுயில்வளர் செங்கண் மாயவன்
வரைத்தறி யாப்பர முத்தி மன்னுவார். (சசு)

இவ்விதம் முனிவர்களுக்கு அருள்புரிந்து சிவபிரான் மறைதல்.

நீவிரிச் சமயத்தி னிலைநின் றேத்தியே
யோவிலா முத்தியி னுறைகு வீரென
மேவல ராருயிர் விழுங்கி வெண்ணிணத்
தூவுமிழ் சூலத்தான் சொல்லிப் போயினான். (சள)

சிவபிரானது உபதேசங்களைக் கேட்ட முனிவர் சிவபூசை முறையினுல் திருக்கயிலையை யடைதல்.

கருமதர் வரிநெடுங் கண்ணி பங்கின
னுரைதரு மாகமத் துரிமை மேற்கொடு
துரிசற யாவையுந் துறந்து மாதவர்
பரிவொடு நின்றரன் பதியை நண்ணினார். (சஅ)

இக் கதையினைக் கேட்டவர்கள் அடையும் பயன்.

ஆதிநான் மறைபயி லருந் தவத்தினோர்
சோதிவா னவனைவாழ்த் தெடுத்த சொற்றுதி
யோதினோர் கணங்களா யும்ப ரேத்தவே
காதலார் வெள்ளியங் கயிலை காண்பரால். (சகூ)

வெண்ணிலாக் கவிகையோன் விழவு செய்யுநாட்
பண்ணுலா மொழியுமை பாகன் முருகா
வண்ணன்மா தவர்க்கரு ளளித்த காதையை
நண்ணியே கேட்பவர் முத்தி நண்ணினோர். (நo)

சூதமுனிவரால் இக் கதையினைக் கேட்ட முனிவர்கள் மகிழ்ச்சியடைதல்.

என்றுமும் மலக்குறும் பெறிந்த வித்தகத்
துன்றுசெஞ் சடைமுடிச் சூத னெதிடக்
கொன்றைவே ணியன்செயல் குறித்து மாதவர்
நன்றுநன் றெனவுள நயந்து விம்மினர். (நக)

நான்காவது
சிவன் முருகாவனத் திருஷிகளுக் கருள்புரிந்த
வத்தியாயம் முற்றும்.

ஐந்தாவது
ததீசிப்பிரம இருஷி வச்சிரயாக்கை வரம்பெற்ற அத்தியாயம்.

சூதமுனிவர் ததீசிமுனிவர் கதையினைக் கூறத்தொடங்குதல்.

ஐயரி பரந்து மதர்மதர்த் திலகு
மம்பலத் தமர்புரி நெடுங்கட்
டையல்பங் கினன்பொற் சரணிலன் பிறைக்குந்
ததீசிமா முனிவரன் பெருமை
மெய்புணர் கருணைச் சனற்குமு ரனுக்கு
மெய்த்தவ நந்தியன் றுரைத்த
மையறு காதை புகலுகே னென்னச்
சூதமா முனிவரன் வழங்கும். (க)

குபனென்னும் அரசனது அரசியற் சிறப்பு.

யானைச் சிறப்பு.

கட்கடை யிறுதிக் கடைக்கன லெழுப்பக்
குழைச்செவிக் காற்றுவிட் டிறைத்து
முட்படை விலக்கி யெதிர்பொரு மரசர்
மூளையுங் குருதியுஞ் சிதறப்
பெட்புறு கிரண மணிநிலா மகுடம்
பிதிர்படப் பெயர்த்தடி மிதித்து
விட்புலன் றடவி மதிக்குள கெடுக்க
வெங்கரம் விடுக்குமா னையினான். (உ)

குதிரைச் சிறப்பு.

முத்தினிற் றிரண்டு குறுந்துளி சிதற
விலாழிகொப் பிளித்துமூ தண்டப்
பித்திகை குலுங்க மடமடத் தலறிப்
பிளக்கமாக் கணைகுரற் சிரித்துப்
பைத்தலை மடக்கி நாக்கடை புரட்டிச்
சேடனும் பதைபதைத் தொடுங்கத்
தத்துவெங் கவனக் கொய்யுளைக் கிரணத்
தமனியக் கலினவாம் பரியான். (ந)

கொடிச் சிறப்பு.

பேனவார் திரைக்குண் டகழிசூ ழுலகிற்
செருவலர் பெருங்குடார்க் கொடியு
மானவே லரசர் வரமணி மகளிர்
மங்கல நாணெடுங் கொடியுங்
கோனகர்ப் புரிசை வாயிலன் னவர்க
ணிறுத்திய கொற்றவெண் கொடியு
நானிலப் பரப்பு மிடையறக் கிடக்க
நடக்கும்வெற் றியங்கொடி யுயர்த்தோன். (ச)

வெண்கொற்றக்குடைச் சிறப்பு.

மீதலத் தழுந்திக் கூன்முது குழுக்க
வீங்குமோட் டாமைமேற் படர்ந்த
மூதுல கணைத்து மளவையிட் டறிய
முளரியோ னெல்லைதொட் டமைத்த
பூதரத் தளவை யாவையுங் கடந்து
புவியெலாம் பொதுவறப் புரந்து
மாதிரக் களிறுட் படுத்தியப் புறமுங்
கவித்திடு மதியவெண் குடையோன். (நு)

படைச் சிறப்பு.

மூடங்குவெண் பிறையி னகடுகீண் டுரிஞ்சி
மூட்டிய கொடிநெடுந் தடந்தேர்
வடங்கெழு கலனும் வயவர்கை புடைத்து
வாய்விடு மமலியும் வழங்கிக்
குடங்கையி லடக்கி யெடுத்துமா தவத்தோன்
குடித்துமீண் டுமிழ்தரக் குணிக்குந்
தடங்கடல் சிறுகப் பரப்பியெண் டிசைபோய்ச்
சமர்பொரு தானையங் கடலான். (கூ)

வேற் சிறப்பு.

ஆற்றலங் குவவுத் தடம்புயம் பொருமி
யங்கதம் பொடிபொடி யுதிரச்
சீற்றநின் றுருத்துச் சினவயப் புலியிற்
செருவினைத் தெதிரிடுங் கொடிய
மாற்றலர் குடருங் குருதியு மளைந்து
காகமும் பருந்தும்வாய் மடுப்பக்
கூற்றமு மருள வுறைவிடு நெடிய
கொலைபழுத் தொழுகுவேற் படையோன். (எ)

மூசுச் சிறப்பு.

தொங்கல்வெண் கவிகைப் புகர்முகத் தறுகட்
சூழியால் யானைவே லரசர்
செங்கைமெல் லணையிற் கதிர்முடி கிடத்தித்
திறைகொணர்ந் துணங்கிவாய் புலர்ந்து
தங்களிற் கலங்கி யுளந்துணுக் கெறியுந்
தன்மையி லிடைதணி விலவாய்
மங்குலிற் றயங்கிப் பசும்பொன்வார் விசித்த
மணிமுர சிரட்டுமுன் றிலினன். (அ)

ஆணைச் சிறப்பு.

வணங்கல ருளத்திற் றிருக்கிரு ளகற்ற
மறுவறச் செலுத்துபே ராணை
யிணங்கிய திகிரிச் சுடர்க்கொழுங் கதிரு
மிரவெனு மிரவுவிட் டகலக்
குணங்கொளக் கருத்தின் குறிப்புணர்ந் தளந்து
கொடுத்திடுங் கீர்த்திவெண் ணிலவு
மணங்கம ழெடுத்த வுலகெலாம் விரியப்
பொதுவற வரசுகாத் தளிப்போன். (கூ)

குபனென்னும் அவ் வரசனது பிறப்பும் பெருமையும்.

திருவுயிர்த் திரைக்கும் பாற்கடற் றுயிலுஞ்
செங்கணு னுந்தியங் கமலத்
தருமறைக் கிழவன் றும்மலிற் பிறந்தோ
னஞ்சிறைச் சுரும்பர்பாட் டயரு
மருமல ரலங்கற் சேட்டிளம் பருதி
மார்பினன் வயங்கொளி யெறிக்குங்
குருமணி வலயப் பொருப்புறழ் தடந்தோட்
குபனெனப் பெயரிய குரிசில். (கo)

சபாமண்டபச்சிறப்பும், அரசிருக்கையும்.

துயலொளி வயிரத் தொருகரு விருத்திச்
செம்மணிச் சுவர்த்தல மெழுப்பிப்
பயிலுமொப் பணியிட் டிந்திர நீலப்
பலகைசேர்த் துத்திரம் படுத்துச்
செயிறற விளங்கு மிந்துகாந் தத்தான்
வேய்ந்திடை செழும்பொனிற் றடவி
வெயிலுமி ழுரக மணிநிரை குயிற்றி
விரிகதிர்த் தூவிமே லமைத்து. (கக)

கண்வழுக் கறுத்து நோக்கிமெல் லெனவே
காண்மடுத் தடியிடுந் தோறுந்
தண்ணெனக் குளிர்ந்து மயிர்ப்புறம் பொடித்து
நடுக்குறச் சாணைதொட் டிழைத்த
வெண்ணிறம் பழுத்த படிவம்வைத் திணக்கி
விரிவெழுத் தனரத்தலம் வகுத்துப்
பண்ணுமண் டபத்து நாப்பணீர் பீடம்
பத்மரா கத்தினு லுயர்த்து. (கஉ)

ஆங்கரி யணையிட் டின்னிசை மகதி
யாழ்வடித் தணங்கனு ரிசைக்கப்
பாங்கிரு புறமுங் கவரிகா லசைப்பக்
கணிகையர் நாடகம் பயில

வாங்குதெண் டிரையிற் பல்லிய மியம்ப
மன்னவர் மணிமுடி வணக்கிப்
பூங்கழல் வழுத்தி முறைமுறை பரவப்
புரவல னரசுவீற் றிருந்தான். (கந)

அரசனவைக்களத்தின்கண் ததீசிமுனிவர் வருதலும், அரசன் உபசரித்தலும்.

வீழ்புல னடக்கித் துரிசறுத் துயர்ந்து
வேதவா ரிதிகரை கடந்த
தாழ்சடை மவுலித் ததீசிமா முனிவன்
வருதலுந் தாணேவந் தெதிர்ந்து
காழ்மணித் தாளத் தொடிக்கர முகிழ்த்துக்
கண்களித் தொளிறுநா வலம்போற்
கேழ்கிளர் தவிசிட் டிருத்தினன் பழைய
கேண்மையி னளவளா யிருந்தான். (கச)

அரசன் ததீசிமுனிவரைப் பார்த்துப் பிராமணர்களது பிரமமோ, அரசாது அறமோ பெரிதெனக் கேட்டலும், முனிவர் புன்னகைபுரிதலும்.

மூதுல கடங்க நடத்திய தனிக்கோன்
முரண்வலித் தடம்புயத் தரசன்
மாதவத் ததீசி திருமுக நோக்கி
மறையவர் பிரமமோ வரசர்
தீதற வியற்று மறங்கொலோ பெரிதென்
றுரைத்தியென் றிசைத்தனன் றிருந்து
போதமுற் றெழுந்த முனிமுகங் கோட்டிப்
புதுநிலாச் சிறுநகை புரிந்தான். (கஞ)

தனது கேள்விக்கு விடை பகராது, புன்சிரிப்புச்செய்ததைத்தற்கெனத் ததீசிமுனிவரை அரசன் கோபிக்க, அவர் மறையவரது பிரமமே மேலானதென்று கூறுதல்.

அன்னதை நோக்கி யதிகமீ தெனவே
யறைவதை யன்றிமற் றவையிற்
புன்னகை புரிந்த தென்கொலோ வென்று
புரவலன் கதமுருத் தெழுந்தான்
மன்னவ னுலகில் மனுநெறி வழாது
வளர்த்தது நன்றுநன் றெனவே
யுன்னருந் தவத்துத் ததீசிமா மறையோர்
பிரமமே யதிகமென் றுரைத்தான். (கசு)

அரசன் முனிவர் கூறியதை மறுத்து, மறையவரும் அரசனுக்கடங்குதல் வேண்டுமென, முனிவர் கோபித்து அரசன் மார்பின்கண் உதைத்தல்.

அவ்வுரை மறுத்து நிருபன்மா முனிவ
வந்தணர் விதிமா புதித்தோர்
திவ்விய வரசர் திசைவளம் புரக்குஞ்
செல்வமா மரபுவந் துதித்தோர்
பவ்வநீ ருலகி லரசரை மறையோர்
பாவுதல் வேண்டுமென் றிசைத்தான்
வெவ்வழற் கொழுந்த வருத்தனன் முனிவன்
வேந்தனை மார்பிடை யுதைத்தான். (கஎ)

முனிவர் உதைத்ததினால் கோபங்கொண்ட அரசன் விஷ்ணுவிடம் பெற்ற சக்காயுதத்தால் முனிவர் தலையை வெட்டி வீழ்த்தல்.

உதைத்திடு மளவிற் பசுந்துழாய்ப் படலை
யொருவனைப் பரவிவாங் கியதோர்
கதிர்க்கொடுங் திகிரிப் படையினு னிருபன்
முனிவனைச் சிரங்கடிந் திடலும்
வதைத்துமா தவத்தோன் பார்க்கவற் கருதி
மண்மிசை யிறந்துவீழ்ந் தனனுற்
பதைத்தன செவரு மிரங்கின ரழுதார்
பின்வரும் பான்மையோன் றுணைவார். (கஅ)

முனிவர் இறக்கும்போது தம்மை நினைத்து இறந்தமையை யறிந்த பார்க்கவர் வந்து முனிவருடலைப் பார்த்து வருந்தல்.

கருதிய யிறந்த முனிவனை நோக்கிப்
பார்க்கவன் கடிதுவந் திறவாச்
சுருதிய மறமுந் தலைதடு மாறத்
தொடுகட லுடுத்தபா ருலகிற்
குருதிகொப் பிளித்தா ருயிர்துறந் துணங்கு
கொள்கையை நோக்கினன் குறித்தா
னிருதுதொட் டெடுத்து மடியின்மேற் கிடத்தி
யழுதனன் மம்மருற் றழிந்தான். (கக)

பார்க்கவரால் ததீசிமுனிவர் உயிர்பெற்றெழுதல்.

மீண்டவன் கருத்தைத் திருப்பிமா முனிவோர்
விண்ணவ ரேவியோ செவரு
மீண்டிவன் சிவனை வழுத்திய பெருமை
யென்கொலோ வென்னகின் றிசைப்ப
மாண்டபே ருயிர்பெற் றுய்ந்திடச் சிரத்தை
மலர்க்கையாற் பொருத்தலுந் துணிந்த
நீண்டபே ருடலிற் பொருந்திமெய்த் ததீசி
பண்டுபோ லெழுந்த னின்றனன். (உ0)

பார்க்கவர் ததீசிமுனிவரிடம் அரசன் விஷ்ணுவினிடம் பெற்ற சக்ராயுதத்தால் வென்ற தன்மையைக் கூறல்.

எழுந்தநற் றவத்துத் ததீசிமா முனிவ
னரசன்மேன் முனிவுகூர்ந் திடலு
மழுந்துபே ரன்பின் பார்க்கவ னதனைத்
தடுத்தொரு வாசக மறைவான்
செழுந்துழா யலங்கற் புயத்திறைற் பரவி
யவன்பெறுங் தெய்வதப் படையால்
விழுந்துகூ ருகி நின்னுடல் கிடக்க
வீட்டினு னன்னது விலக. (உக)

பார்க்கவர் ததீசிமுனிவரைச் சிவபிரானிடம் வரம்பெறுமாறு கூறுதல்.

நறைமடுத் தருந்தித் தெவிட்டிமூச் செறிந்து
காத்தழும் பெழவிசை வடித்துச்
சிறையளி குடையுங் கடுக்கைவார் சடையோ
னன்றியோர் தெய்வம்வே றுளதோ
முறைமுறை வழுத்தி மிருதசஞ் சீவி
முதலன வுள்ளவை யனைத்துங்
குறைவற வவன்பாற் பெற்றனன் முனிவ
நீயுமன் னவன்கழல் குறுகி. (உஉ)

மருக்கமழ் மலரா லருச்சனை புரிந்து
மழகதிர்த் திகிரியை மாற்றச்
சுருக்கமில் வரங்கள் பெரிதுற வடைந்து
தோன்றலே வெல்கவென் றிசைத்து
முருக்கித்ழ்க் கனிவா யுமையவள் கொழுநன்
மொழிந்தருண் மிருதசஞ் சீவி
திருக்கற வளித்துப் பார்க்கவ னடைந்தான்
றதீசியுஞ் சிந்தையிற் கவித்தான். (உங)

ததீசிமுனிவர்சிவபெருமானைநோக்கித்தவம்புரிதலும், சிவபிரான்காட்சியளித்தலும்.

புதுதுயி ரளிக்கு மிருதசஞ் சீவி
யுரைத்திரும் புனன்மடுத் தருந்தி
விதிமுறை வழியி னிலிங்கமொன் றமைத்து
விமலனை யருச்சனை புரிந்தான்
முதியசொன் மறையாற் றுதிபல வெடுத்து
மொழிந்தனன் முனிவனுக் கிரங்கி
மதிபுனை சடில வேணியெம் பெருமான்
மழவிடை யுகைத்துவந் தனனுல். (உச)

சிவபிரானைத் ததீசிமுனிவர் துதித்தல்.

கன்னலங் குதலை யிமையமீன் றளித்த
கனங்குழை யொருபுறம் பசந்த
பொன்வரி தழிப் பொருப்புறழ் தடந்தோட்
புங்கவன் றனைமுனி குழைந்து
சென்னியிற் கரங்கண் முகிழ்த்துமே வொட்டிச்
சேவடிக் கமலம்வீழ்ந் திறைஞ்சிப்
பின்னலஞ் சடிலங் கொடியினிற் றுவள
வாடினு னின்பிஞ்ஞகன் மகிழ்ந்தான். (உடு)

சிவபிரான் ததீசிமுனிவருக்கு வச்சிரயாக்கை வரங்கொடுத்து மறைதல்.

சேறுதொட் டலரா முளரிபூத் தலர்ந்த
செங்கணுன் முதலியோ செவரு
மாறுதொட் டெழினும் படையினு லிறவா
வச்சிர யாக்கையு மளித்தான்
வீறுதொட் டலரு மன்புமீக் கிளர
விரும்பிய வரமெலா முதவி
யாறுதொட் டுலவு சடைமுடிக் கடவுள்
வெள்ளியங் கயிலைசென் றடைந்தான். (உசு)

வேறு.

வச்சிரயாக்கை யடைந்த ததீசிமுனிவர் குபராசனது சபையை யடைந்து அவ் வரசனது தலையின்மே லுதைத்தல்.

ஓல வெண்டிரைப் பாற்கடல் விடமெடுத் துண்டோன்
சால நல்கிய தனிவரத் துயர்த்தரு ததீசி
ஞால மெங்கணும் புரந்தருள் குபனைவை நணுகிக்
கோல மோலியி லுதைத்தனன் களித்தனன் குனித்தான். (உள)

தன்னையுதைத்த முனிவரைக் கொல்லும்படி அரசன் சக்கரப்படையை விடுதலும் அது அவர் மேனியிற்பட்டுப் பொடியாதலும்.

தெள்ளு ஞானமறை முனிவனைச் சினத்தகந் திருகி
வெள்ளி வெண்குடை மன்னவன் கனற்பொறி விழித்து
வள்ள முங்கதிர்த் திகிரியி னெறிந்தனன் வயிரத்
தொள்ளொ ளித்திரு மேனிபட் டொழிந்ததத் திகிரி. (உஅ)

முனிவர் அரசனிடம் உன்கடவுளாகிய விஷ்ணுவாலும் தன்னை வெல்ல முடியாதென்று கூறுதல்.

அங்கண் மாநிலம் புரந்தரு ளரசநீ யடைந்த
செங்கண் மாயவ னெதிரினு மென்னையென் செய்யும்
வெங்க ணுலெனைப் பார்ப்பதென் னெனநகை விளைத்தான்
றங்க ணன்மத னுடலெரித் தவற்பணி தவத்தோன். (உகூ)

ததீசிமுனிவரால் வெல்லப்பட்ட குபனது நிலைமை.

கரத்தை நோக்குமத் திகிரியை நோக்குமுட் கலங்கிச்
சிரத்தை நோக்குமம் முனிவனே நோக்கும்வெஞ் சினத்தா
லுரத்தை நோக்கும்வெள் விடைக்கொடி வலனெடுத் துபர்த்தீதான்
வரத்தை நோக்குமென் றிதழ்கறித் ததுக்கும்வேன் மன்னன். (நo)

**குபன் ததீசிமுனிவரை வெல்லும்படி விஷ்ணுவினிடம்
வரம்பெற நினைந்து தவம்செய்யச் செல்லுதல்.**

சொல்ல ருந்தவ முனிவனே யாருயிர் துறந்து
வெல்வ தற்கொரு தனிவரம் வேண்டுமென் றுணர்ந்து
குல்லை யந்துழாய் முகுந்தனைக் குரைக்கழல் வழுத்த
வொல்லை யிற்கடி தேகினன் றனிக்குடை யுரவோன். (நக)

குபன் விஷ்ணுவை நோக்கித் தவம்புரிதல்.

புனித மாமொரு தவவனந் தீதடினன் புகுந்தா
னினிய நான்மறைப் பிரமனே யரிதினீன் றெடுத்த
கனியுந் தேனுமிழ் பசுந்துழாய்க் கண்ணியம் பரனே
மனதி னெர்ந்தன னருந்தவம் புரிந்தனன் வணங்கி. (நஉ)

வேறு.

குபன்முன் விஷ்ணுமூர்த்தி பிரசன்னமாதல்.

வணங்கி நற்றவம் புரிந்திடு மரசன்முன் வானவர் பணியாற்ற
விணங்கு மேருவிற் பசுங்கதி ரெழுந்தெனக் கருடன்மாப் பிடரேறிப்
பிணங்கு வெண்டிரைப் பாற்கட லகத்தொளி பிறங்கிய மணிமேனியும்
பணங்கொள் பாம்பணைக் கண்டுயில்சக்கரப் படைநெடு முகில்வந்தான் ()

தன்முன்தோன்றிய விஷ்ணுமூர்த்தியைக் குபன் துதித்தல்.

கண்க ளித்திடு முவகையிற் கண்டனன் கனைகழற் கழல்வீந்தான்
விண்க ளித்திடு பூசனை மகிழ்வொடு விதிமுறை தனியாற்றிப்
பண்க ளித்திடு மறைவடித் தளப்பருந் தோத்திரம் பலசெப்தான்
மண்க ளித்திடு மனுமுறை வழங்கிய மணிமுடி வயவேந்தன். (நச)

ஆதி யாகியு மண்டமு மகண்டமு மசைவறப் பொலிந்தோங்கு
சோதி யாகியுந் தத்துவ மாகியுந் தோன்றிய தூமேவாய்நின்
போத மாகிய சாத்திகத் துதித்தவன் புதுமது மலர்ப்போதன்
நீதி லாதெழு தாமதத் துதித்தவ னடம்புரி சிவனென்போன். (நடு)

ஏழ் பிலத்தலப் பரப்புநின் னிணையடி யெறிதிரை குளித்தாடு
மாழ் தடங்கட லேழுநின் மணிக்கலே யம்பரந் திருநாபி
வாழ் பெருந்திசை யெட்டுநின் மலர்க்கரம் வானெடு முடியேத்துங்
கேழ் கெழுஞ்சுட ரிருவிழி வரதநின் ஞசிகை கிளர்பூங்கால். (நசு)

இத்த கைத்திற மாகிய நின்னையா னிறைஞ்சுதற் கெளிதாமோ
பத்தி யாலுனைப் பரவுத்தற் கேழையேன் றீவினைப் படிறேற்றும்
பித்த னேன்செயும் பூசனை தினைத்துணை யாயினும் பிறழாது
முத்தி மாதவர் பூசையின் முழுநெறி கொள்வதுன் முறையாமால். (நஎ)

குபன் விஷ்ணுவினிடம் தன்குறைகூறி வரங்கேட்டல்.

இனைய கூறிநின் றிரங்கினன் பின்னரு மெடுத்தெதிர் திசைக்கின்ற
நினைவ ருந்தவ மியற்றிய ததீசிமா முனிவனென் பவனீடு
நினைக டக்கையஞ் சடிலிபொற் சேவடி நாண்மலர் தொழுதேத்திப்
புனித வச்சிர யாக்கையும் வரங்களு மடைந்தனன் புகழ்பெற்றான். (நஅ)

மறைவ ழங்கிய சைவமென் றொருசிவ மதத்தருந் துறைபோகிப்
பொறைகொள் பூதலத் தொருவரை மதிக்கில னென்னெடும் புகல்காலைக்
குறைவ றுந்தகைக் கேண்மையி னிருந்தனன் பிரிந்துவெஞ் சலங்கொண்டா
னிறைய ழிந்திட விடப்பதங் கொடுதலை நெடுமுடி யுதைத்திட்டான். ()

பொங்கு நீர்க்கட லுலகொரு கவிகையிற் புரந்துனைப் புகழ்வேனைத்
திங்கள் வேணிபன் வரத்தினு லவையிலென் சிரத்தடார்த் துதைத்திட்ட
தங்கு மாதவத் ததீசியை வெல்வதற் கொருவரந் தரவேண்டு
மெங்க ணுயக வென்றன னென்றலு மீர்ந்துழாய் மணிமார்பன். (சo)

விஷ்ணுமூர்த்தி குபனுக்கு மறையவர்பெருமைகூறல்.

உழுது பாட்டளி முழக்கிய தார்புனை பொருதனிக் குடைவேந்தே
தொழுகு லத்தவ ரெவரையும் மதிக்குன ரலரவர் துணிந்தீட்டும்
பழுத றக்கிளர் தவப்பய னின்றெனிற் பானுவும் வெயில்வீசா
னிழுத கற்றினர் பெருமையை யெங்ஙன மெடுத்துரைப் பதுவாமே. (சக)

**விஷ்ணு சிவனடியார் பெருமையைக்கூறி, ததீசி சிவபக்தரானதால்
அவரைவெல்லுதல் அரிதெனக்கூறுதல்.**

குல னிழந்தவ ராயினுஞ் சிவன்கழல் குறித்துணர்ந் தருணீரார்
வல னுறுந்தனி மழுப்படை யோனலா லொருவனே மதித்தீதாரார்
புல னடக்கிமெய்த் தொழுகுலத் துதித்தரன் பொலன்கழ னினைந்தேத்து
மலகின் மாதலத் ததீசிமா முனிவனை வெல்வதற் கரிதாமால் (சஉ)

மனத்து மாசறு முனிவனை வென்றிட வயங்கொளி மணிப்பூணாய்
நினக்கி யான்வர மளிக்குவ னலனவ னிலைபெறு மிடனெய்தி
யனத்தம் யாவையும் விளக்குவ னன்னதா லருந்தவத் துறைசார்ந்தீதான்
சினத்தி னிலைமைச் சபிப்பனக் கரிய மயர்வறத் தெளிந்தீதறில் (சங)

சிவனே இகழ்ந்து செய்த தக்கன் யாகத்துக்குச் சென்றதில் தாம் துயரடைந்தமை கூறல்.

முக்க ணுன்றனைப் பிழைத்தொரு தாண்மலர் முளரிநான் முகனீன்ற
தக்கன் மாமக மியற்றுவ னுங்கதிற் றேவர்க டம்மோடும்
புக்க போதினி லுளர்ந்திட வென்னையுந் துயர்க்கடற் புகச்செய்வான்
மிக்க சேவெடுத் துயர்த்தவ னளித்தருள் வீரனென் றிருவீரன். ()

ஆயினும் பக்தனை உன் வேண்டுகோளுக்கியைத்தபடி செய்வதாகக் கூறுதல்.

ஆய காலம்வந் தடுத்ததா லிவ்வண்ண மறைந்தனை யெனைநோக்கி
நேயம் வைத்தனை யாருயிர் வருந்திட நினைப்பருந் தவஞ்செய்தாய்
தீய காரிய மாயினு மன்பர்தங் கருத்தினிற் செயல்வேண்டு
மோய்வ றுந்துயர் மறுத்தியென் றுரைத்தன னுவணம்விட் டருமாறி.

விஷ்ணுமூர்த்தி ஓர் கிழப்பிராமண வுருவம் எடுத்துத் ததீசிமுனிவரிடம் போய் வரம் கேட்டல்.

சேட்டி லங்கதிர்க் கவுத்துப மார்பினன் சிலையென வுடல்கூனி
நாட்ட ரும்படர் பஞ்சினில் விளர்ப்புறு நரைக்குடு மியுந்தாழ
மோட்டு வண்புயந் துவளுறு நூலொடு முதியவே தியனுகித்
தாட்டு ணைக்கம லத்தளர் நடைகொடு ததீசிதன் னுழைசார்ந்தான். ()

மின் கிளைத்தெழு விழுதுவிட் டனசடை மெய்த்தவன் றிருமுன்ன
சென் கிளைத்தவ மாகிய முனிவகே ளொருவர மெளியேற்கு [தான்.
முன் கிளைத்தெழுத் தருதியென் றிருகர முகிழ்த்தனன் முறைவீழ்ந்
கொன் கிளைத்தெழு சக்கரந் தாங்கிய கொண்டலிற் பொலிகோமான்.

ததீசிமுனிவர் தம்மிடம் வரங்கேட்ட பிராமணர் விஷ்ணுவென்றறிந்து கூறல்.

வந்து சொல்லிய முகுந்தனை நோக்கினன் மாயனென் றினிதேர்ந்தா
னந்தி வேணிய னருள்கொடு மூவகைக் காலமு மளப்பேன்யான்
சிந்து சோரிவேற் குபன்விட வருசிலைச் செங்கண்மா யவனன்றே
முந்து மன்பர்தம் மனக்குறை தவிர்ப்பதுன் முறைநெறிச் செயலாமால்.

முன்னர் மைம்முகி லுருக்கொடு வந்தவை முனையுளி நெடுவாய்ப்பைம்
பொன்ன மேருவிற் புள்ளுகைத் தேறிய புங்கவ புகலென்னு
மன்னு மாதவ முனிவர னுரைத்தனன் கேட்டனன் மறைநான்குஞ்
சொன்ன நான்முகத் தொருவனைப் பயந்தரு ளெவணி தடமார்பன்.

விஷ்ணு தன் பக்தனை குபனுடன் மறையவர் பிரமத்திலும் அரசர் அறம் பெரிதென்று கூறும்படி வேண்டல்.

திருந்து முன்னுரு வெடுத்தனன் சிவன்கழற் சேவடி நினைந்தேத்து
மருந் தவத்தினர்க் கெவர்களு மெளிபரே யாயினு மெனைநோக்கிப்
பெருந் தவப்புரிந் தனன்குப னன்னவன் கேட்குறப் பிரமத்திற்
பொருந்தும் வேந்தர்க ளிபற்றிடி மறநெறி பெரிதெனப் புகலென்றான்.

ததீசிமுனிவர் அவ்வாறு கூற மறுத்தல்.

உரைசெய் வாசகங் கேட்டலும் வரமுனி யருமறை யொருவிப்போ
ரரச ரந்தணர் தங்களி லதிகமென் றறைகுவ திலையென்றான்
பிரச நாண்மலர்த் துளவணி கருமுகில் பின்னருந் தவத்தோனை
விரைசெய் தாமரைத் திருமுக மலர்தரத் துதிபல வியந்தோதி. (நிக)

விஷ்ணுமூர்த்தி ததீசிமுனிவரிடம், அவ்விதம் கூற முடியாவிடில் "குபனுக்கு நான் அஞ்சுவேன்" எனக் கூறும்படி கேட்க அவர் அதுவும் கூற முடியாதென விஷ்ணு கோபித்தல்.

ஈது கூறுவ தரிதெனின் மன்னவ னிருசெவிப் புலன்கேட்கப்
பேதி யாதுனக் கஞ்சுவ னெனத்தனி பேசுக வெனச்சொன்னன்
பாதி மாமதி வேணிய னடியன்யா னினைப்பயந் திவ்வார்த்தை
யோது கேனல னென்றனன் வரமுனி யுருத்தெழுந் தனன்மாயன். ()

விஷ்ணுமூர்த்தி ததீசிமுனிவர்மீது சக்கரப்படையைச் செலுத்த அது கூர் மழுங்கி விடுதல்.

சொற்ற வாசக மனைத்தையு மறுத்தனை நின்னுயிர் தூறப்போனென்
றுற்ற கோபவெங் கனற்பொறி விழிக்கடை யுதறிடப் பெலத்தோடுங்
கொற்ற மாப்படைத் திகிரிவிட் டோச்சினன் கூர்நுதி மடங்கிப்போ
யிற்று வீழ்ந்தது நோக்கினன் முனிவரன் புன்சிரிப் பெழுகின்றான். ()

ததீசிமுனிவர் விஷ்ணுவை நோக்கி நின் சக்கரமன்று, பிரமபடைக்கலம் முதலாயினவும் சிவபத்தரை வெல்லாவெனல்.

சங்க மேந்திய வரதநின் செங்கரச் சக்கர மொளிகானுந்
திங்கள் வேணிய னடியரை யாருயிர் செகுத்திட லரிதாகுந்
துங்க நான்முகன் படைமுத லனைத்தையு மென்னுற் றுறந்தாவி
நுங்க வேவுதி யவைபடுந் தன்மையு நோக்குதி யெனச்சொன்னான். ()

விஷ்ணுமூர்த்தி பிரமப்படைமுதலான தெய்வதப்படைகளை விட, அவை ததீசிமுனிவரைக் கொல்லாது திரித்து மீளல்.

கறங்கு பாற்கடற் கரியவன் படன்மடற் கமலபீ டிகைவேதன்
பிறங்கு தெய்வதப் படைமுதல் யாவையும் விடுத்தனன் பெயர்ந்தோடி
யறங்கொண் மாதவன் றனைவலஞ் செய்துல கதிசய முறமீண்டே
யுறங்கு தூணியி லடங்கின தேவர்கள் குழுமிவந் தொருங்கிண்டி. (நிநி)

விஷ்ணுமூர்த்திக்காக தேவர்கள் வந்து போர்புரிதலும், ததீசிமுனிவர் ஓர் தர்ப்பையைச் செலுத்தி அவர்களையடக்கல்.

ஆழி மாயனுக் காகின் றருந்தவன் றன்னுழை யமரேற்றூர்
வாழி மாமுனி தருப்பையொன் றெடுத்தனன் வரதனை மனத்தெண்ணிச்
சூழ்ந் வானவர் குழுவினை நுங்கவென் றெறிந்தன னதுசூழ்ந்பாய்ப்
பாழி மூவிலைப் படையெனக் கனன்மடித் துண்டதப் படையெல்லாம். ()

தமக்காகவந்து பொருத தேவர்கள் தோற்றமையைக்கண்ட விஷ்ணு, ஆயிரகோடி கணங்களை யுண்டாக்கல்.

பொருத வானவ ரின்னண மாயினர் பூந்துழாய் நெடுமேகங்
கரிய மேனியி லாயிரங் கோடிவெங் கணங்களைப் பிறப்பித்தா
னெரியும் வெஞ்சினச் சமர்புரி புயவலி தன்னின்மும் மடங்கீய்ந்தா
னரிய மாதவன் வெருக்கொள வமர்மடித் தாற்றுக வெனச்சொன்னான்.

விஷ்ணுமூர்த்தியுண்டாக்கிய கணங்களைத் ததீசிமுனிவர் ஒரு தர்ப்பையைச் செலுத்தி அழித்தல்.

மிக்க வெஞ்சிலை தாங்கிய விண்ணவ னேவலின் மிடைந்தேறு
மக்க ணங்களைத் தருப்பைவெங் காலவெந் தீயினி லழன்றோடித்
தக்க வாருயிர் விழுங்கிமெய் யெரித்துவெண் சாம்பர்செய் ததுபார்த்து
நக்கு நின்றனன் முனிவரன் றிருமக ணுபக னதுகண்டான். (சுஅ)

இவ்விதம் போர்செய்து ததீசிமுனிவரை வெல்ல முடியாதென நினைந்த விஷ்ணுமூர்த்தி மாயையாற் பேருருக்கொள்ளல்.

மூண்டெ ழுஞ்சமர்க் கிளைத்தில னிவனெனக் கருதினன் முடிவோர்ந்தான்
காண்டல் செய்திடிற் றுணுக்கெறிந் துள்ளுயிர் கலங்கிமெய்ந் நிலைசோர
வீண்டு மண்டங்கள் மயிர்தொறுந் தூங்குபு வதிசயம் பலவெய்த
நீண்டு நின்றனன் மணிமுடி வெளிதொட நெடுந்திரைக் கடன்மேனி. ()

விஷ்ணுமூர்த்தியின் மாயைக்கு மேற்படத் ததீசிமுனிவரும் மாயைசெய்து காட்டி, மாயையைவிட்டு நேரே போர்செய்யும்படி கூறல்.

மாய வன்புரி மாயையி லாயிர மிரட்டிமா முனிசெய்தான்
றூய தெய்வதச் சூடர்விழி தருகுவ னெனக்குதி யெனச்சொன்னா
னீயி னைத்திடி மாயைகொண் டென்னது நீங்கிநின் றெறிபாது
காயும் வெஞ்சமர் விளைத்திட வருதியென் றழைத்தனன் கரியானே. (சுஐ)

விஷ்ணுமூர்த்தி கொடும்போர்புரிதலும் அதனுற்றளர்ந்த ததீசிமுனிவர் சிவபிரானைத் துதித்தலும்.

நீல வேணியன் முனிநிலை நோக்கினன் மாயையி னுருநீங்கிச்
சால வெஞ்சமர் விளைத்தனன் வானவ ரோடினர் தளர்வுற்றான்
கால காலனுக் கடியனென் றுணர்ந்தில னிவனெனக் கதங்கொண்டான்
சூல பாணியைத் துதித்தன னநந்தவத் துறைநெறி நிலைநின்றோன். ()

அப்போது பிரமன் வந்து ததீசிமுவர் கோபத்தையாற்றுதல்.

அன்ன காலையிற் பிரமன்வந் தடைந்தனன் றதீசிபை யடிபோற்றிப்
பின்னி வெண்டிரை மடுத்தெறி பாற்கடற் கண்டுயில் பெருமானை
யென்ன காரிய நினைந்தனை யென்றன னிகழ்ந்து தனனின்றான்
கன்னி பாகனுக் கன்பர்தம் பெருமையைக் கணித்திடற் கெளிதாமோ. ()

ததீசிமுனிவர் விஷ்ணுவுக்குச் சாபங்கூறுதல்.

அலங்கு மைம்படைத் திருமறு மார்பனை யருந்தவன் முகநோக்கிச்
சலங்கொள் வெஞ்சினக் கொடியையீ வானவர் தம்மொடு மொருதக்க
னிலங்கு செந்தழல் வேள்வியி னுமைமக னெனுஞ்சுடர்க் கதைபட்டுக்
கலங்கி நெஞ்சயர்ந் தெண்ணரும் பெருந்துயர்க் கடற்படு கெனச்சொன்னான்.

சிவனை வழிபடாது விஷ்ணுவை வழிபடுபவர் நரகத்தையடைவர் என முனிவர் கூறலும், பின்னர் பிரமவிஷ்ணுக்கள் தம நிருக்கை செல்லலும்.

நின்னை யேத்திப வன்பரும் கலிமதி நிலவிப சடாபீசன்
றன்னை யேத்தில ராகிவெந் நரகிடை தாழ்வரென் றுரைசெய்தா
னன்ன மீப்பொலிந் துகைப்பவன் றன்னெடு மலங்கலந் தூளீவானும்
பின்ன லஞ்சடை முனிவனை வணங்கினர் பெயர்ந்தனர் விடைகொண்டார்.

குபராசன் ததீசிமுனிவரை வணங்கித் துதித்துத் தன் பிழைபொறுத்தருளும்படி வேண்டல்.

மருவ லார்தொழுங் குருதியுண் டொளிறுவேற் குபனெனும் வயவேந்தன்
பொருவ ருந்தவ முனிவனை வணங்கினன் பொன்னடித் துணைவீழ்ந்தான்
றிருகு வெஞ்சினப் பாதகப் புலையன்யான் விளைத்திடுந் தீங்கெல்லா
மரிய மெய்த்தவப் புண்ணிய பொறுத்தியென் றிரங்கியன் பொடுநின்றான்.

வேத வேதியர் பெருமையை யிருங்கடல் வெவ்விட மடித்துண்ட
சோதி நாயக னன்றியத் தேவருந் தொகுத்தறி குதறேற்றார்
தீத கற்றிமும் மலர்க்கிழங் ககழ்ந்திடு தெய்வதத் தவச்செல்வ
போத மற்றொரு சிற்றறி வினிற்சுழன் மனிதரோ புகல்வாரே. (சுடு)

புள்ளி வெம்புலான் மழுவலான் மலர்க்கழல் பூசனை புரிந்தேத்தி
வள்ள முந்தவத் தலைமைபெற் றுயர்ந்தவர் நினைபலால் வேறுண்டோ
வள்ளி தழ்க்கம லத்தடங் கண்ணனும் வானக ருறைவோரும்
பள்ள நீர்நிலத் தென்னினிற் கொடியவெம் பதகரும் பிழைத்தென்னும்.

வேறு.

தம்மைச் சரணடைந்த குபனுக்குத் ததீசிமுனிவர் ஆசாவளித்தல்.

சாற்றருங் கொடிய வஞ்சனை னினது
சரண்மலர்க் கபயமென் றறைந்தான்
வேற்றலர் குருதி யூற்றிருந் தொழுகிக்
கழுகொடும் வெஞ்சமங் கறுவிப்
பாற்றினஞ் சுழலுஞ் சுடரிலை நெடுவேற்
பார்த்திப வஞ்சலென் றுரைத்தான்
கூற்றுறழ் திகிரி மரகதப் பொருப்பைக்
கடந்திடுங் கொடிச்சடை முனிவன். (சுஅ)

பனிமதிக் குழவித் திங்கள்வீற் றிருக்கும்
படர்சடைப் பண்ணவன் றிருத்தாள்
கனிமதுத் துளிக்கு மலரெடுத் திறைஞ்சி
முனிவரைக் காத்தியென் றிசைத்தான்

றுனிதவிர்த் தளிகள் பெடையொடுங் களிக்குஞ்
சோலைசூழ் கழனிநா டளிக்குஞ்
குனிசிலைத் தடக்கைக் குபன்பெருந் தவத்தோன்
வாசகந் தெளிந்து[ளங்] குறித்தான். (சுசு)

குபராசன் சதீசிமுனிவரிடம் விடைபெற்றுத் தனது ராச்சியமடைந்து அரசியற்றி ஈற்றில் கயிலையையடைதல்.

ஐந்தவித் துயர்ந்த முனிவனை வணங்கி
யரசர்கோன் றிருநக ரடைந்து
மைந்துறுங் கிரணப் பருதியிற் சுடரு
மழுவலான் மலரடி வழுத்திச்
சிந்தையிற் களித்து மனுநெறி வழங்கித்
தெய்வமா முனிவரப் புரந்து
கந்தனைப் பயந்த கண்ணுதற் பெருமான்
கயிலையங் கிரியில்வீற் றிருந்தான். (எ0)

சதீசிமுனிவர் முனிவர்களுக்குத் தலைவராயினமை.

தண்ணளி கொழித்துப் பெருக்கெடுத் தொழுகுஞ்
சதீசிமா முனிவரன் கயிலை
யண்ணறன் கமலச் சேவடி வழுத்தி
யாழியஞ் சுடர்ப்படை தரித்த
மண்ணளித் தருந்து பவளவாய்ப் பொருப்பை
யமரினிற் கடந்தனன் மறைநூ
லெண்ணருந் தவத்துச் சனகரா திகளி
லிருந்தவத் தலைமைபெற் றுயர்ந்தான். (எக)

இச்சரித்தத்தைப் படிப்போரும் கேட்போரும் அடையும் பயன்.

இத்தகை முனிவ னிருந்தவ மியற்று
மிருக்கைதா னெச்சர மேனும்
பொத்தலம் புகுந்தோர் முத்தியை யடைவ
ரபரினிக் காதையை வடித்துச்
சித்தமன் புருகிப் பகர்ந்தெதிர் நடக்கிற்
செயப்வரு மிருத்துவு மகலும்
பத்தியிற் படித்தோர் கேட்பவர் யாரும்
பரகதி நெறிவழா தடைவார். (எஉ)

வேறு.

சூதமுனிவரிடம் இச்சரித்தத்தைக்கேட்ட மற்றைய முனிவர்கள் மகிழ்தல்.

ஏத நீங்கி யிருந்தகை பெற்றுயர்
சூத னின்ன கதையினைச் சொற்றலும்
வேத நான்கும் விளங்க வுணர்ந்தருண்
மாத வத்தினர் சிந்தை மகிழ்ந்தனர். (எந)

ஐந்தாவது சதீசிப்பிரமரிஷி வச்சிரபாக்கை வரம்பெற்ற அத்தியாயம் முற்றும்.

ஆறுவது
நந்திகேச்சுரர் சரிதை யுரைத்த அத்தியாயம்.

சூதமுனிவர் நந்திகேச்சுரர் கதையினைக் கூறத்தொடங்குதல்.

பந்தமற் றுயர்ந்து வேதம் பகர்சனற் குமர னென்பா
னெந்தைநின் சரித முற்று முரைத்தியென் றிசைப்பத் தெய்வ
நந்திவாய் மலர்ந்து பேசுங் கதையினை நவில்கை னென்னு
முந்துமா தவத்தோர் கேட்பச் சூதமா முனிவன் கூறும். (க)

சிலாதம-முனிவர் தெய்வத்தன்மையுள்ள புத்திரப்பேற்றை விரும்பி இந்திரனைக்குறித்துத் தவம்புரிதல்.

அறுதொழின் முறையி னற்றி யருமறை முழுது மோர்ந்து
தெறுசினந் தணிந்த சிந்தைச் சிலாதமா முனிவன் ஞானப்
பெறுகதி யளிக்குந் தெய்வப் பிள்ளையை விரும்பி மேலா
யுறுதவ நெடுநா ளீட்டி யிருந்தன னுணருங் காலை. (உ)

இந்திரன் சிலாதமாமுனிவரது தவத்திற்கு இரங்கி வெளிப்படுதல்.

அன்னவன் றவத்தை நோக்கி யதிசயித் தமர சேத்சுப்
பொன்னகர் புரக்கும் வென்றிப் புரந்தர னுவகை பொங்கிக்
கன்னம்விட் டொழுகுதாரை கடன்மடை திறந்த தென்னப்
பின்னிமைக் கடம்பாய் வெள்ளிப் பிறங்கன்மாப் பிடர்மேல் கொண்டு.

அரம்பையர் கவரி வீசக் கின்னர ரமுதந் தாங்கிப்
பரம்பிசை மகதி யாழிற் பையவத் தடவிப் பாடக்
கரங்கிள ருடுக்கை பேரி சல்லியங் கறங்கி யார்ப்ப
வரங்கெழு கவிகை மாலை மதியினில் வயங்கிச் சூழ. (ச)

சிலாதமுனிவர் இந்திரனைத் துதித்தல்.

வந்தனன் றவத்தோன் முன்னர் வரமுனி யெதிர்போய்க் கண்டு
சிந்தையின் மகிழ்வு கூர்ந்து செங்கரஞ் சிரமேற் கூப்பிப்
பைந்துணர்ப் போது தூவிப் பதமலர் வழுத்தி யேத்தி
யெந்தைநீ வருதற் கிம்ப ரெத்தவ மிழைத்தே னென்றான். (ஞ)

இந்திரன் யாதுவரம் வேண்டுமென்று கேட்டல்.

மெய்குழைந் திறைஞ்சி நின்ற வித்தக முனியை நோக்கிப்
பொய்யறத் துயர்ந்த சிந்தைப் புனிதநீ பொருந்தி யாற்று
மையறு தவங்கண் டுள்ள மகிழ்ந்தன நினக்கு வேண்டுஞ்
செய்யநல் வரங்க ணல்கத் தெரித்துரை புகல்க வென்றான். (கூ)

சிலாதமுனிவர் தமக்கு யோனியிற்பிறவாததும், அயோநிருத்தின்றியு முள்ள மகவு வேண்டுமெனல்.

வரைக்குறும் பெறிந்த வெள்வாள் வச்சிர னீது கூறக்
கரைத்தபே ரன்பு மிக்க முனிவரன் கழலு மெந்தா
யுரைத்திடு மிருத்து வின்றி யோனியிற் பிறவா னுகித்
திரைக்கட லமுத மன்ன சிறுவனைத் தருதி யென்றான். (எ)

பிரமவிஷ்ணுக்களுக்கும் பிறப்பிறப்பு உண்டே;

ஆதலால், இத்தகைய வரம்

பிரமதேவனாலும் கொடுக்கமுடியாதென இந்திரன்கூறல்.

அன்னவா சகமூட் கொண்டு புரந்தர னறைவ தானு
னென்னைநீ மொழிந்தா யோனி யிடைப்பிற வாது வேதஞ்
சொன்னதோர் மிருத்து வின்றி யிருக்குனர் யாரே சொற்ற
மன்னுமித் தகைய மைந்தன் பிரமனும் வழங்கற் பாற்றோ. (அ)

விண்டலர் கமலக் கோயின் மெல்லியல் வடிக்க னீல
வண்டுழு துழக்கு பைந்தார் மணிநெடும் புயத்து மாயன்
பண்டைநான் மறையின் செல்வ னிவர்களும் பகரும் யோனி
பெண்டரும் பொருவி லண்டந் தாமரை யிடத்து வந்தோர். (கூ)

எண்ணருங் கற்ப மெல்லா மொருபக லிரிய வாழு
மண்ணக முழுதும் வாரி வாய்மடுத் தலையில் ஞாலக்
கண்வளர்ந் தருளுங் கொற்றக் கதிர்ப்படைத் திகிரி யேந்து
மண்ணலு மளக்குங் காலை யுயிர்த்துற்ந் தழிவ னம்மா. (கO)

வடவரை குழைய வாங்கி வரிசிலை குனித்து நாணிற்
படவர வசைத்து நின்ற பரமனு முமையு மீன்ற
தடமலர் முளரி மேய சதுமுகன் றனக்கும் வாழ்நா
ளடைவினில் வகுத்துக் கூறி னளவிரு பாத்த மாகும். (கக)

இத்தகை யிவர்கள் யோனி யிடைப்பிறந் திறப்ப ரென்றான்
முத்தியின் றுறைபோக் தெய்வ முனிவநீ மொழியா நின்ற
வித்தகக் குமரன் றன்னை விரும்புத லறிவோ மற்றை
யுத்தம மகவொன் றின்னே தருவலென் றுரைத்திட் டானே. (கஉ)

உருக்கரும் புயனூர் வோனீ துரைத்தலு முனிவன் கூறு
மருக்கமழ் மலரோன் றன்முன் வரியராப் பிணங்கு வேணி
நெருப்புற மூடலிற் றோன்றி நின்றது நெடுந்தாட் போதிற்
றிருத்தகப் பிறந்த தண்டஞ் சிவனிவ ந்துதித்த தெல்லாம். (கங)

சிலாதமுனிவர், பிரமன் உமையிடம் பிறந்ததன்மையைக் கூறும்படி கேட்டல்.

அன்னவ னுணர்த்தல் செய்தா னவன்மக னளித்த பாடற்
கன்னிவண் டாற்றுங் கூந்தற் கவுரிபா லுதித்த நீர்மை
யென்னகா ரணமீங் கெ[ன்று விளம்புதி யெனப்பொ]ன் மாலைக்
கொன்னவர் குலிச மேந்துங் கோமக னறைவ தானுன். (கச)

இந்திரன், பிரமா உமையம்மையாரிடம் பிறந்த வரலாற்றைக் கூறுதல்.

வேறு.

தண்டமதி மிலைத்தருளுந் துவள்சடையோன் பணித்தருளத் தழைந்து பாடல்
வண்டுழுது வீளையாடுந் தாமரைமென் பொகுட்டுறைபு மறையோன் சோதித்
தண்டரள மணிமுழுவற் றையலொரு பங்கிருந்தான் சரணம் போற்றி
யண்டமெலா முறைபடைத்துச் சராசரமா மனைத்துயிரு மளிக்கு நாளில். (கடி)

கந்தடுவெங் காடமதக் களியானை யுரித்தருளுங் கடவு டன்னை
யிந்திரகற் பத்தின்வரு தேவ்வியவாண் டாயிரநின் றிடைவி டாது
பைந்துளவக் கதிர்நிலவு மணிமவுலிக் கொடுந்திகிரிப் படைக்கை மாயன்
மைந்துறுமும் மழைமுகிலி னுருவெடுத்துத் தாங்கியுடல் வருந்தி னனால். (கசு)

அன்னதுகண் டருள்பெருகு முளமிரங்கி விடையுயர்த்த வமலன் ஞானப்
பன்னகமெல் லணைக்கிடக்கும் பச்சைநெடும் புயலழுகப் பதும நோக்கி
யென்னவரங் கருதினையென் றிசைத்தருள வீர்ந்துளதோ வெண்கணணிற்
பொன்னவிருஞ் சடைமுடியோய் தனிபடைக்க வினிதவரம் புரிக வென்றான். ()

கங்கைமடுத் தலைபுரட்டுஞ் சடைப்பஅளக் கொடிபடருங் கனகக் குன்றம்
பொங்குபெருங் களிப்பொழுக வன்னவர மளித்தனன்பொற் புழற்காற் றெய்வப்
பங்கயனிற் றனிபடைத்துக் கவுத்துவச்செம் மணித்தவிசிற் பரவி னேறி
மங்குன்மலர்க் கருங்கூந்தன் மயிலிருக்கு மறுமார்பன் மகிழ்ந்தா னன்றோ. (கஅ)

உறிதடவி வெண்ணெனைக் கங்காந்த செம்பஅளத் தொருவ னின்ன
நெறிபடரு மூலகனைத்தும் படைப்பதகண் டுளநடுங்கி [நிணங்கொள்] சோரி
யெறிகுடரின் புலவுகமழ் வச்சிரத்தோ னிறந்திடுதா லெல்லை காறு
மறிகடல்வெவ் விடமருந்தும் பெருமானை [நினைந்தரிய தவஞ்செய் தா]னை. (கக)

மையன்மனத் திருள்பருக வடியார்தமக் கமுதகலை வழங்கும் வாணி
தொய்யிலிள மூலைக்குவட்டுச் சுவடுபடத் தடந்தோளான் றுயர நோக்கிப்
பையரவ முடித்தபிரான் வெளிப்படலு மறைக்கிழவன் பரவி நின்ரு
னையனவன் முகநோக்கி நினைந்தபடி சிஷ்த்தியென வறைவ தானுன். (உO)

மூவர்புர மழல்கொளுத்த நகைமுகிழ்க்கு முழுமுதலை மூடி லாதாய்
தாவழன்முத் தலைப்படையோய் நின்னிடப்பால் வந்தவன்பைத் தளவத் தோன்ற

லோவறவே நின்வலப்பால் வந்தவன்யா னென்போல வுலக மெல்லாங்
காவல்புரிந் தினிதளிப்போன் படைப்பதனு லுள்ளுருகிக் கவலுற் றேனுல். (உக)

மழைமுகிலி னுருவெடுத்து மணிவண்ணன் பொறுத்ததற்கு மகிழ்ந்தாய் நின்னைக்
குழையுமனத் தொடுவணங்கும் பத்தியினி லென்னிலவற் குணிக்க லாமே
விழைவினெடுஞ் செகமயனும் வரமளிக்க வேண்டுமென வினிஞ்சன் கூறத்
தழையவிழு மலரிதழித் தாழ்சடையோ னன்னவரந் தையி னீய்ந்தான். (உஉ)

இன்னதகை வாமளித்தே யேறுயர்த்தோன் மறைந்தனனவ் வேல்வை தன்னின்
மன்னுலக மொருமூன்றும் பாழ்படுத்திப் பிரளயநீர் வந்து மூடப்
பன்னுமறைப் பிரமனுக்கோர் பகற்போது கழிந்திரவு படர்த்த லேக்கி
யன்னவனு முவகையெழப் பசுந்துளவக் கரியவன்பா லடைந்த லோர்ந்தான்.(உங)

வெள்ளிவரைத் தனிமுதல்வன் கொடுத்தருளும் வரத்தினெடும் விரைவி னெய்திப்
பள்ளமெடுத் திரைசுருட்டும் பாற்கடலிற் பாப்பணைமேற் பள்ளி கொள்ளு
முள்ளமைய செழுமுளரித் திருநாபிக் கரியமணி முகில கோக்கித்
தெள்ளுமறை வடித்தெடுத்தோன் றுயிலெழுப்ப விழிக்கமலர் திறந்தான் செல்வன்.

நிறநிலவு வலைக்காத்தோ யெனைமுதலு னீவிழுங்கு நீர்மை போல
விறல்செழும நின்னையினி விழுங்குவலென் றருமறையோன் விழுங்க வேரி
நறவுபொழி தளவுதுயன் மணிமார்பன் சிறுமுறுவ னலைத்துக் காட்டிப்
பறவையுரு வெடுத்தெகின முகைத்தபிரான் றிருவுதரம் படிந்தா னன்றே. (உடு)

அங்கமலப் பீடிகையோன் றிருவயிற்றி லமர்ந்தருளு மாழி யானைத்
திங்கணுதற் புருவநடித் திருட்டித்தான் பிறந்தெடுஞ் செங்கண் மாயன்
பங்கயனைச் செழுங்கமல முகநோக்கி விழிசெலுத்திப் பார்த்து நின்றான்
றங்கவரைச் சிலகுழைத்தோ னிவர்களிடை யவ்வேலை சார்ந்தா னன்றே. (உசு)

பாலொளிய திருநீற்றுப் பனிப்படல நிலவெறிக்கும் பவள வெற்பைக்
காலமுடி வினிற் பாக்குங் கனலுருவ மெடுத்தருளுங் கடவுளானை
மாலவனு மலரவனு மடிபணிந்து மருமலர்தூய் வழுத்தல் செய்தார்
சாலவிவ ரிருவருக்குந் கருணைபுரிந் தரன்கயிலைச் சயிலஞ் சார்ந்தான். (உஎ)

மையிலங்கு கறைக்களத்தோன் மறைந்ததற்பின் சதுமுகனை வணங்கி நோக்கி
யெய்யிலங்கு திகிரியினு னுரைத்தருளு மெவ்விடமு நிறைந்து நின்ற
பையிலங்கு பாந்தண்முடிப் பண்ணவனே யாவருக்கும் பரம மூர்த்தி
மெய்யிலங்கு மவனிடப்பால் வந்தவன்யா னீவலப்பால் வியந்து வந்தோன். (உஅ)

என்னமுத மறைமுனிவர் யாருமெடுத் தரைப்பரென விசைத்துக் கொன்றை
மின்னவிரும் பவர்சடிலப் பெருமான்பொன் னடிநினைந்து விரும்பி வாழ்த்தக்
கன்னிமடற் கொழுங்கமலத் திசைமுகனுஞ் சிவன்கழலே கருதிஞானப்
பன்னுமறை தெளித்தெடுத்துப் பாடியருந் துதிகள்பல பலவுஞ் செய்தான். (உக)

இத்தகையி னிவர்கள்புரிந் தினிதுளித் திருந்தருளு மெல்லை யீண்டு
மைத்தகுகா ரிருளகலப் புலரிபடு வதுகண்டு மலரோ னன்பின்
சித்தமிரங் கினன்படைக்க மாயனவன் செயலுணர்ந்து சிவனை யேத்தித்
தத்துதிரைப் பிரளயநீ ரிடையமிழ்ந்துந் தரையெடுத்துச் சமஞ்செய் தானே. ()

பூங்கமலத் திருமடந்தை கொழுனிது புரிந்ததன்பின் பூமேல் வந்தோன்
வீங்குதட வரைநிகர்கள் வெண்டிவலை நுரைசிதறி விரித்து பாய்ந்து
தேங்குதிரைக் கடலனைத்துந் தத்தலில யினினமைத்துத் திருந்து ஞான
மோங்குபெருந் தவத்துயர்ந்து சதுமறைபி னுபனிடத முணரந் தேவர். (நக)

சனகர்முத லினரிருபு மரீசிமுனி பிருகுசிவன் சரணப் போது
புனையுமுடி யங்கிராப் புலத்தியர்சொற் புலகர்புகழ்ந் திருது போத
மனம்விரவு வசிட்டர்கலை தெரிதக்க ரத்திரிமா மறைகள் யாரு
நினைவரிய சங்கற்பந் தருமவிவை முறைமுறையே நெறிநீவ் காது. (நஉ)

டைத்தருளிப் பல்லுயிரு மளித்துகமு முகதருமம் பலவு மீன்று
நடத்தியுல கனைத்தினையும் வளர்த்தனனத் தகைதருவான் முகனுக் கோவா
தடைத்தருளுஞ் சதாயுக மாயிரமோர் பகலாக வளவை யிட்டுத்
தொடுத்திசைக்கு மோரிரண்டு பராத்தமுமுள் ளனமுறையே தொலைந்த பின்னர்.

கருதுகரைக் குறும்பெறிந்து பல்லுயிரு முழுதையுங் கவர்ந்து மோதிப்
பொருதுதிரைத் தடவரையிற் குணித்தவரும் பிரளயநீர் பொங்கி மூடச்
சுருதிபகர் பூதத்தி னேனையவும் புனலுருவாய்த் தோன்றச் செங்கேழ்ப்
பருதியொளி பழுக்குமிருட் படாம்புதைத்து நெடுங்காலம் படர்ந்த தன்றே. ()

இன்னணமூ தலகிடந்து கிடந்ததற்பி னேறுயர்த்தோ னேவ லாலே
யன்னமுகைத் தவன்படைக்க நினைந்தனன்மா தரைப்படைக்க வறியா னுகி
மன்னுமனத் தால்வகுத்தான் வருத்ததெலா மாணுநுவாய் வழங்க லாலே
சொன்னதனி யுலகமெல்லாம் பெருக்காம லிருந்தனவாற் றுயரி னுழ்ந்தான். ()

மானதத்தாற் படைத்தருளு மைந்தரொடு மதிமௌலி வரனை நோக்கி
யானபெருந் தவமிழைத்தா னதுகண்டு மழவிடையோ னருள்கூர்ந் தன்பின்
ஞானவுருப் பெண்ணுருவு மாணுருவு மாகவெதிர் நடந்து தோன்றிக்
கானமலர்ப் பீடிகையோன் மைந்தரொடு மாலெரியக் கனலிற் காய்ந்தான். (நசு)

பாதியுடம் பகலாத பைந்தொடியைப் புணர்ந்து தழாய்ப் படலை பூத்த
வாதிமுகுந் தனையுமல ரமலனையு மவனிடத்தி லளித்தான் ஞானக்
கோதில்குணத் திருவருச்சும் படைத்தருளச் சத்தியையுங் கொடுத்தான் றெய்வச்
சோதிதரு மாயையினைப் பெண்ணெனவு மாணெனவுந் தொகுத்தல் செய்தே. ()

மோகமுறப் புணர்ப்பித்து மூதுலகும் படைத்தனர்போன் முளரி பூத்த
மேகநிறப் பெருமானை வேதியனைப் பயந்துலகம் விளங்க வேண்டி [தேன்
நாகமதி புனைந்தபிரான் பெண்ணெருபாற் பொலிந்தனனுன் முகத்தோன் செந்
பாகமெழுங் குதலைமொழி யுமையிடத்துப் பிறந்ததை பகர்ந்தே னின்னும். ()

பிரமதேவன் பிறவியில் வெறுப்படைந்த வரலாற்றினை
இந்திரன் சிலாதமுனிவருக்குக் கூறுதல்.

ஊற்றிருக்கும் பகந்தேறல் வாய்மடுத்துச் சிறைச்சுரும்ப ருழுது பாடு
நூற்றிதழ்ப்பொற் செழுங்கமலத் தினிதிருக்குந் திசைமுகத்தோ னெண்மை சார்ந்த
சாற்றரிய மறைமுழுது மளர்த்துணர்த்து போறிவு தலைப்பட் டெய்திக்
கூற்றுதைத்தோன் கழல்கருத வெறுப்படைந்த கதையினையான் கூறக் கேண்மோ.

மலர்மடந்தை வீற்றிருக்கு மணிமார்பன் றனதுதிரு வடிவந் தன்னை
யலகிலழ கொளிருமொரு பெண்ணுருவு மாணுருவு மாகக் காட்டி
யுலகனைத்தும் பயந்துமறைப் பிரமனையுஞ் சிருட்டித்தா னுணரும் வேத
னிலவுமதி முடிபுனைந்த வுருத்திரனை யினிதளித்தா னையத் தோடும். (எ0)

பாவுமுருத் திரனரியைப் பிரமனையன் பினிற்படைத்தான் பதும நாதன்
வீரவுபுகழ் மணிநிறத்து விண்ணவனைப் பயந்தனனவ் வேதன் றன்னை
யாவுதடங் கிரிவணக்கிப் புரமூன்று மெரித்தருளு மொருவன் சீறு
மாவுகெடுஞ் சடைக்கணிந்த வண்ணலங் களிசுரக்க வளித்தா னன்றே. (எக)

வேறபடு சிருட்டிதொறு மின்னணமே பிறப்படைத்து மெலித லெண்ணிக்
கூறபடு மறைக்கிழவன் புலனடக்கி யோகநிலை குறித்து ஞான
வீறபடு முளக்கமல மேற்படுத்தி விரியும்வினரைப் பொருட்டு நாப்ப
ணூறபடு சடையானை யினிதிருத்தி மலர்க்கழல்க ளருச்சித் தேத்தி. (எஉ)

பருவநிவப் புறமுதங் களித்திருந்தா னுளக்கமலப் பரமன் வேதன்
புருவநடுப் பிளந்துதித்து மூன்னர்மகிழ் வொடுநின்ரு ன் புனிதன் சோதி
யுருவமுவப் புறக்கண்டு மூதமறையோ னண்புருகி யுலகு மேலு
மருவமென நிறைந்தோனை யட்டவித மாய்க்கருதி யருளா நின்ரு ன். (எங)

அன்னவன்கண் டடிபணிய வட்டமூர்த் தத்திருவ மமர்ந்தான் யார்க்கு
முன்னவனுக் கன்றமுத முமடட்ட மூர்த்தியென மொழியும் வேதங்
கொன்னவிர்முத் தலைப்படைவேற் குழகன்மலர்ச் சதமுகத்துக் குன்றை நோக்கி
யின்னமுல கனைத்தினையும் படைத்தியெனத் தனிபடைத்தா னெண்க ணினை.()

இப்படியோர் கற்பமெலாம் படைத்தமுடிந் ததர்பின்ன ரிரைக்கும் பாந்தட்
பைப்படியு முலகமுறை படைப்பதற்குத் தோன்றுது பரவை யின்ற
ணைப்படியுவ ளத்தமலன் றனைநோக்கித் தவம்புரிந்தான் மறையோன் றெய்வக்
கைப்படியு மழுவயர்த்தோன் வந்திலனன் னதுகுறித்துக் கதங்கொண் டானே ()

கறித்திதழை யதுக்கிவரு சினந்திருகித் தலைக்கொழுந்த கடைக்கா லத்துப்
பொறித்தழல்கட் கடைகதவ விழித்தனனவ் விழியினெடும் புனல்கள் சோர்ந்த
மறித்தொழுகு பெரும்புனலிற் குறுந்தாட்டெண் ணிலவுதெறு வலையும் வெண்பற்
சிறுத்தசுருட் படர்குஞ்சிப் பூதமொடு பேயினிரை திரண்டு தோன்ற. (எசு)

செழுங்கமலப் பொகுட்டுறைவோ னன்னவைதோன் றியசெயலைத் தெரித்தான் சிந்தை
யழுங்கியிவை மூன்பிறந்த வழகிதென வதிசயித்தா னவி மாய்த்தா
னெழுங்கருணைப் பெருக்கெறிய வவ்வேலை யிளக்கதிரா யிரமா மென்னக்
கொழுங்குதலை மொழிபாகன் பாதியுருப் பெண்ணுருவிற் குலவ வந்தான். (சஎ)

தன்னுருவி லழியாத பதினெருவ ருருத்திரரைச் சமைத்தான் பாதி
மின்னுருவி லுமையையருகுத் தினிதளித்தா னளித்தருளும் விமல செல்வப்
பென்னுருவத் திருமகளே முதலய சத்திகளைப் புரிந்தாள் பின்னர்
மன்னுருவத் தயிராளித்துப் பிரமனைநின் றெழுப்பினன்கூர் மழுவ லானே. (சஅ)

எழுந்தமலர்ப் பிரமனிரு கரமுகிழ்த்துச் சிவன்கழற்கா லிறைஞ்சித் திங்கட்
கொழுந்துபடர் சடையாய்நீ யரியபதி னெருவடிவங் கொண்டு நின்ரு ய்
தொழுந்தகைய கன்னியிவ ளளவிறந்த சத்திகளாற் சூழ நின்ரு
ளழுந்துதயர்ப் படுமெளியே னறிகிலனீ பகர்கியென வமலன் சாற்றும். (சக)

இன்னதகை யுலகினையு நின்னுயிரு மளித்திடுதற் கிபைத்தேற் தெய்வக்
கன்னியினை யாதிசத்தி யெனவுமெனைப் பரமெனவுங் கருது தூவி
யன்னமுகைத் திருமுறுவ வென்னவறைக் தலர்முளரி யகங்கை கொண்டு
சென்னிதட வினன்களித்துத் திசைமுகத்தோ னினிபமொழி தெரிப்ப தானன்.

இறந்துபிறந் தினிச்சுழலு மின்னனெடுங் கடற்படியா தெளியேற் கன்பு
சிறந்தருள வேண்டுமென வந்தனைசெய் தருந்தவங்கள் செய்யா நின்ரு ன்
முறந்தவர்கள் கனியுமனத் திருமனையிற் குடியிருக்குஞ் சோதி நாத
னறந்தருவான் முகக்கடவு ளுளக்கமலத் திருக்கோயி லமர்ந்தா னன்றே. (நக)

இவ்வரலாறுகளைக்கூறி, அத்தகையபுத்திரன் வேண்டுமாயின்
சிவபிரானிடம் தவம்புரிந்து கேட்டும்படிகூறி, இந்திரன் மறைதல்.

தத்தியரா வணைத்துயிலுந் துளவோனுஞ் சுருதிதெரி தோன்ற லானு
மித்தகைய யோனிபிறக் திறப்பரெனி லெவர்களிவை யிசையா நிற்போர்
மத்தமதி புனைந்தபிரா னன்றியெவ ரின்னவரம் வழங்க வல்லார்
சித்தமவன் பாலிருத்து கெனவுரைத்துத் தேவர்தொழுந் தேவன் போனான். ()

சிலாதமுனிவர் சிவபிரானைக்குறித்துத் தவம்புரிதல்.

வேறு.

ஏம நன்னக ரிந்திரன் போயபின்
காம நீத்த கருத்தி னருந்தவன்
ரூம நீள்சடைச் சம்புவை யெண்ணியே
தோம றுந்தவஞ் செய்யத் தொடங்கினன். (நங)

மேய தெய்வத வின்னவ ராண்டினி
லாயி ரம்பரு வந்தவ மாற்றினன்
மாயி ரும்புவி தன்னில்வன் மீகஞ்சூழ்
போ யவனைப் பொதிந்து வளர்ந்தமீத. (நிச)

சிவபிரான் சிலாதமுனிவரது தவத்திற்கிரங்கி வெளிப்படுதல்.

அன்ன மண்ணை யரிவைய ருண்டனர்
துன்னு மென்றசை சோரிய மின்றியே
மின்னு மென்பு விளங்க விருந்தபின்
பொன்ன மேனிப் புனித னிரங்கினன். (நிந)

மாய மால்விடை யேறிமுன் வந்தன
னேய மோடு முனியை நிணைந்தன
னைய காலை யருந்தவன் முன்னரிற்
றாய மேனி துலங்க வெழுந்தனன். (நிஊ)

மாத வஞ்செய் வருத்தந் தவிர்ந்தனன்
போத முள்ள முவகையிற் பொங்கினன்
சீத வாண்மதி செஞ்சடை சூடிய
நாதன் சேவடி நாண்மல ரேத்தினன். (நிள)

முத்தி ஞான முனிவரன் செய்தருள்
பத்தி யாய பாவை படிந்தன
னத்த னருயிர்க் காரமு தாகிய
நித்த னேர்திரு வாக்கு நிகழ்த்துவான். (நிஅ)

சிவபிரான் யாதுவரம் வேண்டுமென்று கேட்டல்,

யாது நீவர மெண்ணினை பெண்ணிய
தோதி லாவர நல்குவன் கூறெனு
மாது பாகன் வழங்கலு மாதவ
னேது வான்மனத் துண்மை வெளிப்பட. (நிகூ)

சிலாதமுனிவர் தாம் விரும்பிய புத்திரவரத்தைக் கேட்டல்.

எந்தை நின்பொன் னிணைபடிக் காட்பட
வந்த மெய்து மவமிருத் தின்றியே
யுந்து வெந்துயர் யோனியிற் றங்குறு
மைந்த னின்று வழங்குதி யென்றனன். (கூO)

சிவபிரான் தாமே அத்தகைய புத்திரராய் வருவதாகச் சிலாதமுனிவர் கேட்டபடி வரங்கொடுத்து மறைதல்.

என்ற வாசகங் கேட்டலு மெம்பிரான்
மன்ற லங்கம லாலய வானவன்
வென்றி மாதவர் விண்ணவர் யாவருஞ்
சென்ற காலத்துப் பூசனை செய்தமை. (கூக)

பூத லத்தில் வருகெனப் போற்றினு
நாத லானின் னருமக வாகிநீ
யோதும் வண்ண முறைகுவ னென்றுரைத்
தீதி லாத்தனி யெந்தை மறைந்தனன். (கூஉ)

சிலாதமுனிவர் வேள்விசெய்தல்.

மங்கை பங்கன் மறைந்தபின் மாமுனி
பொங்கு மோகைப் புணரியி ணூழ்ந்தன
னங்கண் மாமகச் சாலை யமைத்தனன்
றங்கு வேள்வி தனிமுறை செய்தனன். (கூட)

அவ்வேள்வியில் சிவபிரானருளால் ஓர் புத்திரர் தோன்றுதல்.

வேத நூல்வழி யாற்றிய வேள்வியிற்
சோதி நாத னுருவினிற் றோன்றியே
காத லன்பிறந் தானது கண்டனர்
போது தூவினர் பொன்னகர் வானவர். (கூச)

அப்புத்திரரின் தன்மை.

விட்டெ றிக்கும் விரிசுட ரிற்பொலி
வட்ட வேணியும் வார்குழை யிற்புனைந்
திட்ட வச்சிரக் குண்டல மும்மிழை
தொட்ட நான்கு புயமுந் துலங்கவே. (கூடு)

கையிற் சூல மிடங்கை கதையொடு
செய்ய வச்சிரந் தாங்கிச் சிறுவனின்
மைய லாவு மழைமுகில் போலவார்த்
தையன் வாய்விட் டரற்றிக் கிடந்தனன். (கூகூ)

மாய னன்முக னிந்திரன் வானவர்
தூய மாதவர் சூழ்ந்து துதித்தனர்
காய மைம்புல னீங்கிக் கருவுறுந்
தீமை தீர்ந்த சிலாதன் மகிழ்ந்தனன். (கூள)

பாய்ந்த நீரிற் பரக்குங் குமிழியில்
வீய்ந்து திக்கும் வினைச்சுழல் வேர்களு
மாய்ந்து கேட்கி லருங்கண மாகவே
வாய்ந்த வேதம் வடித்துத் துதிசெய்தான். (சுஅ)

சிலாதமுனிவர் அப்புத்திரனுக்கு நந்தி என்று நாமகரணஞ்செய்தல்.

முந்து மூவுல குங்களி மூழ்குற
வந்த தெய்வ மகத்துவத் தாலிருள்
சிந்தை யிற்குனித் தேதிரு வாக்கினு
னந்தி யென்றொரு நாமமுஞ் சாற்றினன். (சுக)

சிலாதமுனிவர் புத்திரருடன் யாகசாலையில் நின்று நீங்கித் தமதிருப்பிடமடைதல்.

தரும நன்மகச் சாலையை நீங்கியே
விரியுஞ் செஞ்சடை மெய்த்தவன் வீறினி
லரிய மைந்தனை யன்பொடுங் கொண்டிதன்
பொருவி லாத விருக்கை புகுந்தனன். (எ0)

சிலாதமுனிவர் தமது இருப்பிடமடைந்தபின், அக்குழந்தையின் தெய்வவடிவம் போய் மானுடவடிவம் வருதல்.

போந்தி ருக்கை புகுந்தபின் பொன்னெளி
யேந்து செஞ்சடை மைந்தனுக் கோதரு
காந்தி செய்யுங் கடவுள் வடிவம்போய்
மாந்தர் தங்கள் வடிவ மடைந்ததே. (எக)

சிலாதமுனிவர், மாயையினால் அப்புத்திரர் பிறந்ததன்மையை மறத்தல்.

சிறந்த மைந்த னாருருச் சேர்ந்தபி
னறந்த ருந்தவத் தோனுமெம் மையன்முன்
பிறந்த நீதிப் பெருமையின் செய்கையை
மறந்து போயினன் மாயையின் றன்மையால். (எஉ)

சிலாதமுனிவர் புத்திரருக்குக் கலைகள் பயிற்றுதல்.

மலிவி லாத சிலாதன் வரந்தரு
மலிவி லாத மகனுக் கணிகிளர்
தொலிவி லாவய தேதினுட் சொல்லருங்
கலைகள் யாவுங் கருதிப் பயிற்றினன். (எங)

புத்திரர் ஏழுவயதடைந்தபோது மித்திராவருணரென்னும் இரு முனிவர்கள் வந்து அவரைக்காணுதல்.

பருவ மேழு படர்ந்தருள் காலையி
லருமை மைந்தனைக் காண்குற வாதரத்
துரிமை யோடு முணர்வுறு மித்திரா
வருண ரென்றிரு மாதவர் வந்தனர். (எச)

மித்திரா வருண முனிவர்கள் இப்புதல்வருக்கு அவமிருத்தண்டென்று கூறுதல்.

கண்டு மைந்தனைக் கையுறப் புல்லிவாய்
விண்டு நின்றொரு வார்த்தை விளம்புவார்
மண்டு மின்ன வயதி லவமிருத்
துண்டு காணுமக் கென்ன வுரைத்தனர். (எஞ)

புத்திரருக்கு அவமிருத்துளதென்று முனிவர்கள் கூறக்கேட்ட சிலாதமுனிவர் சோர்வுறல்.

சொற்ற வார்த்தை சிலாதன் செவித்துளை
மூற்றும் வெந்த முளையின் சலாகைபாய்ந்
தூற்ற தென்ன வொழுகக் கொடுந்துய
ரற்ற மின்றி யறிவழிந் தானரோ. (எசு)

வேறு.

வண்டு முரன்றுணர் மலரின் வாடியே
கொண்ட வெந்துயர் கொதிக்குஞ் சிந்தையான்
பண்டு மாதவம் புரிந்து பாலனைக்
கண்ட காட்சியின் கடனிதோ வெனு. (எஎ)

கண்ணி னிற்புனல் கலங்கி யோடவே
மண்ணி னிற்புரண் டழுது மாமறை
பண்ணி னிற்சொலும் பவள வாய்க்குமல்
விண்ணி னிற்செல வழுது விம்மினான். (எஅ)

முன்னை யென்கிளை முழுது முப்நிடப்
பொன்னை யன்னமெய்ப் பொருவின் மைந்தனே
நின்னை யெண்ணிய நினைந்த காரிய
மென்னை போ வெனக் கிதுவி னைந்ததே. (எக)

சுலவு வார்திரைத் தொல்லை மானிலத்
துலவு மாமறை யொழுக்க முள்ளவை
பலவு மாய்ந்தறி பழுதி லாமகன்
குலவு மாருயிர் கூற்று முண்ணுமே. (அ0)

என்ன நைந்துநைந் திரங்கிச் சேர்ந்தனன்
மன்னு மாவினெய் யறுகு மாமதித்
துன்னு மாகுதி யயுதந் தூண்டினை.
னன்ன காலையி னந்தி யண்ணலான். (அக)

நந்திதேவர் பிதாவின் துயரத்தைக் கண்டு, தாம் சிவபிரானைப் பூசித்து இத்துயரை நீக்கிவருவதாகக் கூறிச் செல்லுதல்.

ஈது கண்டன னிடரை மாற்றவே
மாது பாகனை வழுத்தல் செய்திடத்
தாதை பொன்மலர்ச் சரணம் போற்றியே
போது கேனையைப் புகன்று போயினன். (அஉ)

நந்திதேவர் ஓர் ஆற்றமத்தியிலிருந்து சிவபிரானைப் பூசித்தல்.

ஆற்றி னுப்பனை ராச னத்திருந்
தேற்று வாகனத் தெம்பி ரானவர்க்
கூற்று தைத்தபொற் குரைக ழற்பதம்
போற்றி னன்றவப் புனிதன் முன்னமே. (அங)

சிவபிரான் நந்திதேவருக்கு முன்தோன்றிக் காட்சிகொடுத்து இயமனுல் உன்னை ஒன்றுஞ்செய்ய முடியாதென்று கூறுதல்.

வந்து மாதெதிரும் வரதன் றோன்றினை
னந்தி நின்னுயிர் நலித்து நீக்கவே
யந்த கற்குமோ ராற்ற லுள்ளதோ
வந்தை மானிடத் துரைவ மன்றியே. (அச)

நீ என்னிடத்து அவதரித்ததை நின் பிதா மறத்து துயரமுற்றானென்று கூறுதல்.

தெய்வ நின்னுருத் தெரிதல் காண்கிலான்
பொய்கொண் மாயையாற் புலம்பி நின்றன
னைய னென்னிடத் தவத தித்தரு
ளெய்த வந்தநீ யாமன் றோவெனை. (அந)

உறுதி சொல்லியே யுனது நல்லுயிர்க்
கிறுதி யில்லையென் றிருக்கை யாலெடுத்
தறிவின் ஞானமே யளவி லாதுநீ
பெறுதி யென்னவே பேசி வாழ்த்தினன். (அசு)

சிவபிரான் நந்திதேவருக்கு நித்தியத்துவம் கொடுத்தல்.

அருகு வைத்தன னருங்க ணைப்புரந்
தரிமை செய்கென வுதவி னன்வர
மருவு நித்தியத் துவம்வ ழங்கிலன்
முருகி னேர்தொடை முனிவ சூட்டினன். (அள)

நந்திதேவருக்குக் கங்கைநீரால் ஸ்நானஞ்செய்தலும், அந்நீர் சடாதரிக்கியாதலும்.

திங்க ளஞ்சடைச் சிலம்பு கங்கைநீ
ரங்கை யான்படுத் தாட்டி னனது
பொங்கு பேரியா றுகிப் போதவே
தங்கு பேர்சடா தகியென் றோதினன். (அஅ)

சிவபிரான் நந்திதேவரை எடுத்து உமையம்மையாரிடம் கொடுத்தல்.

அடுத்துப் பின்னரு மமலன் மைந்தனை
யெடுத்து நின்னரு மகவென் றேழைபாற்
கொடுத்த னன்றணைக் கோலச் செங்கையான்
மடுத்து வாங்கினன் பலியின் வல்லியே (அக)

உமையம்மையார் நந்திதேவரை வாங்கி முகையறுதல்.

மெய்யி னீரமுந் துடைத்து மென்சடைச்
செய்ய வச்சிமேற் றுவகை சிந்தினு
டொய்யின் வெம்முலைச் சுவடு கண்டிறந்
தய்ய வென்னவே யொழுகு பாலினுல். (கo)

வேறு.

உமையம்மையார் மும்முறை நந்திதேவருக்குச் செய்த பாலபிடேகத்திலிருந்து மூன்று நதிகளாகப் பெருகிச் செல்லுதல்.

மும்மைமுறை யாட்டினண்மு முக்கருணை செய்தாள்
மம்மைமுலை யூறியவ ணுடிய நறும்பால்
செம்மைகொடு மூவகை திரைத்துநதி யென்ன
வெம்மைபட மேதினியின் வேலையி னிழிந்த. (கக)

இதனைக்கண்ட சிவபிரானது இடபம் களிப்பினுல் முழங்குதல்.

தெண்டிரை சுருட்டுநதி செல்வது குறித்துக்
கண்டுதிறல் வெள்ளிடை களிப்பொழுக நின்றே
பெண்டிரை யடங்கவரு மேழ்கடலு முண்ட
கொண்டலின் முழங்கியது கோளகை வெடிப்ப. (கஉ)

அங்கதிகளுக்கு இடபத்தொனியெனப் பெயரிடலும், கந்திதேவருக்கு அணிகள் செய்தலும்.

அய்யனட லாடல்விடை யார்த்தசெய லெண்ணி
யெய்திய நதிக்குமிட பத்தொனி யெனப்பேர்
செய்தனன் மறைக்குழவி சென்னிதுழை தாங்க
வெய்பவ னுதித்தென விளங்குதிர் மோலி. (கூந)

மண்டல மதிக்கிரண வச்சிர மிணைக்கு
குண்டலம் விரும்பியதை யந்தனி குறித்தா
னெண்டலம் விளங்கவவ ளேந்திபதிர் கின்ரு ன்
விண்டலம் வியப்பவரு விண்ணவர்கண் ணா ன். (கூச)

சூரியன் நந்திதேவருக்கு முகில்நீரால் அபிடேஞ்செய்தல்.

சோதிமகு டங்குழை பெறித்தணி தொகுத்தா
னுதன்மக னுக்கர னடத்துசெயல் கண்டீட
கோதறு செழும்புபல் பிழிந்துகுளிர் தெண்ணீ
ராதவன் மறைக்குமர னம்பொன்முடி பெய்தான். (கூஙி)

அந்த அபிடேகநீர் சுலாயுதியாகிச் செல்லுதல்.

அன்னபுனல் பொங்கிதுரை யாறென வழங்கச்
சொன்னவுத கத்திரை சுலாயுதி யென்ன
மின்னவிர் கெடுஞ்சடில விண்ணவ னுரைத்தா
னின்னகதி பைந்தினையு மெண்ணிபொரு நாமம். (கூசு)

இந்த ஐந்து நதிகளுக்குஞ் சேர்த்துப் பஞ்சநதம் என்று பெயரிடல்.

பஞ்சநத மென்றுரை பகர்ந்தனன் மகிழ்ந்து
தஞ்சமென வந்நதி படிந்துதகை யோடு
மெஞ்சலற வாழ்வுறுசெப் பேசுசீன யேத்தில்
விஞ்சிவரு வெந்துயர வெம்பிறவி மாறும். (கூஎ)

நந்திதேவரைக் கணத்தலைவராக முடிசூட்டவேண்டுமென்று சிவபிரான் உமையம்மையாரிடம் மொழிதல்.

என்றுரை யிசைத்துமொழி பின்னரு மெடுத்தீத
குன்றனைய வார்முருவு கொங்கையினை தாங்கி
மின்றிகழு நுண்ணிடை மெலிந்துதளர் பைந்தார்
மன்றல்கமழ் கொந்தளக மங்கையொடு சொல்வான். (கூஅ)

ஆதர மிதுங்கண மனைத்தையு மளிக்க
வேதமக னுக்கொளி விளங்குமுடி யின்று
காதல்கொடு சூட்டுவ மெனக்கடவுள் கூற
மாதுமது நன்றென மகிழ்ந்துரை மொழிந்தாள். (கூகூ)

சிவபிரான் கணங்களை வரும்படி நினைத்தல்.

கன்னிமொழி யக்கனி கனிந்துளம் விருப்பி
மன்னிய கணத்தொகை வரத்தனி நினைந்தா
னன்னபொழு திற்கண மகங்களி திருந்தத்
துன்னிபவண் வந்தன தொகுத்துரை வகுப்பாம். (க00)

கணங்கள் குருசைச் சிறப்பு.

பேரிகை யிடக்கைபட வம்பெருகு பெட்பின்
றூரிய முரட்டுநிரை சொல்லுமிரு தங்கஞ்
சீரிய சூரட்டினொடு திண்டிம முழங்கி
வாரிபொரு பேரொலி வழக்கற மறுக்க. (க0க)

வீணைதிவள் மாடகம் விசித்திடி நரப்பின்
யாணர்திகழ் பொன்மகதி யாழிசை பரம்ப
மாணிழைக் குயிற்றிய மணிக்கதிர்கள் சென்று
சேணுலவு செங்கதிரி னிற்றிசை விளங்க. (க0உ)

விண்ணளவு பொற்கொடி மிடைந்திடு தடந்தேர்
மண்ணளவு சென்கைதொடு மத்தமத யானை
கண்ணளவி னுங்கடிய கால்பொரு துரங்க
மெண்ணளவி லாதகெடு மானமிசை யேறி. (க0ங)

பொங்குகன விற்படர் பொலன்சடையு மண்டு
தொங்கல்வரை யாயிர மெனச்சுடர்செய் தோளுந்
திங்கள்வகி ரன்னவெயி றுந்தனிசி வந்த
மங்குலென வெங்கணு மனந்தகணம் வந்த. (க0ச)

ஆடின தனித்தனி யளந்துமறை வேதம்
பாடின முடித்தலை பராபரன் மலர்த்தாள்
சூடின தொழும்பரை யழைத்தவகை சொல்கென்
றோடின களித்தன வுலாவின திரண்டு. (க0ஞ)

கணங்கள் தங்களை அழைத்ததற்கு என்று கேட்டல்.

மாயனை வெருட்டியவன் வாரிமய மடுக்கீக
வாயுமறை வேதனை யருஞ்சிறையின் வைக்கீக
தீயவசு ரக்கினை செகுத்துயர் குடிக்கீக
நாயக வெனப்புல தனித்தனி நவிற்றி. (க0ஙு)

சிவபிரான் கணங்களுக்கு நந்திதேவரைத் தலைவராக
முடிசூட்டுவதற்காக அழைத்ததன்மையைக் கூறுதல்.

அருகி னின்னணம் வணங்கிய கணங்களை யழைத்தன னமுதூறிப்
பெருகு கண்களி னோக்கினன் முதையிற் பெருந்தய வுறநின்முன்
கருமை மொன்றுள தறைதுவன் யான்பெறு காதலன் கனிதறன்
முருகு லாந்தொடை நந்தியை யுச்சளுக் கரசென முடிசூட்ட. (கoஎ)

சிவபிரான் தேவர்களை அழைத்தல்.

இவ ணைழைத்தன மென்றனன் பிறைமுடி யெம்பிரா னதுகேட்டுத்
தவ லறுங்களி தூணங்கின கணங்கள்பின் சக்கரன் முதல்வானோ
ரெவர்க ளுள்ளவர் தேவர்க ளவர்களை நினைந்தன னெதிர்நின்முர்
சிவ கணவகளு மமரரு நிறைந்தனர் திசையனைத் தினுதீடி. (கoஅ)

சிவபிரான் பிரமனிடம் நந்திதேவருக்கு முடிசூட்டுமாறு பணித்தல்.

சிகர மாமுடி வெள்ளிவங் கிரியுறை சிற்பரன் மறையாவும்
பகரும் வேதனைப் பார்த்தருங் கணங்களைப் பரிப்பதற் கரசாகப்
புக ரறுந்தவ நந்தியா மளித்தருள் புதல்வனன் னவற்கின்று
நிகரின் மாமுடி சூட்டுக வென்றலு நெடியமா யவனின்முன். (கoகூ)

பிரமர் நந்திதேவருக்கு முடிசூட்டுதல்.

விலகி வீல்லுமி ழொளிமணி குயிற்றிய விறலரி யணைவைத்து
நிலவு செம்மணி யிணக்கிய சலாகையிற் சதநிறைத் திடவட்ட
விலகு வெண்குடை கவித்திடச் சாமரை யிரட்டிறக் கரிபெட்டுங்
குலவு பொற்குடத் தேந்திய புண்ணிய தீர்த்தங்கள் கொணர்ந்தாட்டி. (ககo)

பொன்னி னுற்செய்த விருகலை யெடுத்தரை புனைந்துசெம் மணிசூட்டு
மின்னு பொன்னரை ஞாணணி யணிந்தொளி விளக்கிய கேயூர
மன்னு தோள்வலை கிலைத்திரு ளிரிந்திட வயங்கிய தாளத்தாற்
பின்னு மாலிகை முழுமதி பிதிர்த்தெனப் பிறக்குமார் பிடைசாற்றி. (ககச)

ஆதி யாகிய ஞானமா மயமென யாவரு மறைகின்ற
வேத மோதிய விதிமுறை யனைத்தையும் விருப்புறத் தனிபாற்றிக்
கோதி லாவயி ரப்படை கொடுத்தனன் குண்டலம் புனைந்திட்டான்
சோதி மாமுடி நந்திதன் சிரமிசை சூட்டினன் களிகூர்ந்தான். (ககஉ)

பொன்னந் தாமரை பூத்தலர் கரும்புயன் முதலிய புத்தேளிர்
முன்னும் பின்னுமெம் மருங்கினு மடைந்தனர் மொழிந்தனர் மறையாதி
தென்னங் குன்றினிற் பிறந்திடை திரிதரு தென்றல்வந் திளைப்பாற்றச்
சொன்ன மாமலை கடையுகப் பொழுதெனச் சொரிந்தன முகிலீட்டி. (ககக)

நந்திதேவருக்கு மருத்துக்கள்புதல்வியை மணஞ்செய்தல்.

இத்த கைபுரிந் தருளினன் பின்னரு மெம்பிரான் புகல்வற்குச்
சத்த மாமருத் துதவிய சுயசையைத் தனிமணம் புணர்வித்தான்
மைத்த டங்கணு ளுமைபொரு நித்தில மாலிகை மகிழ்ந்தீய்ந்தாள்
வித்த கத்திறத் திந்திரன் களித்தொரு வெள்ளிய மளித்திட்டான். (ககச)

சிங்க னென்பவன் சிக்கங்கள் பிணைத்திடு தேரினைக் கொடுத்தானு
லெங்க ணுயக னுமையொடும் வதுவையி னின்னமு தெடுத்துண்டான்
பொங்கு மெய்த்தவ மியற்றிய நந்தியம் புங்வ னிலைபெற்முன்
கங்கை சூடிதன் னன்பருக் கரியதோர் காரிய மினியுண்டோ. (ககடு)

நந்திதேவர் சிவபிரானைப் பூசித்ததால் கிடைத்த பெரும்பேறு.

நந்தி நாயகன் மழவிடைப் பரமனை நாண்மலர்ப் பதம்போற்றி
முந்து வெஞ்சின மிருத்துவுங் கடந்தருங் கணங்களை முழுதாண்டிட
யெந்தை யாகம மருமறை யாகர்க்கு மியம்பிய குருவானு
னிந்தை நீங்கிய பூசனை தனக்கினை நிகழ்த்தசிவார் தவமுண்டோ. (ககசு)

இச்சரிதத்தைக் கேட்போர் எய்தும் பயன்.

திரைத் தடங்கட ஞரணன் முதலிய தேவர்கள் முடிசாய
விரைச் செழுங்கம லக்கர மசைத்தொரு வேத்திர மெடுத்தோச்சு
முரைக்கு நான்மறை நந்திதன் சரிதையி னெழுத் தெனுவகேட்போர்
தரைத் தலந்தனி லெடுத்திடு மாக்கையின் முத்திதன் னெறிசார்வார். (ககஎ)

வேறு.

இக்கதை சூத னெடுத்துரை செய்யத்
தக்க தபத்துறை தாபத ரெல்லாந்
தொக்க பெருப்பிற் வித்துயர் சூழா
மிக்க மருந்திது வென்று வியந்தார். (ககஅ)

ஆறாவது நந்திகேசுவர் சரிதையுரைத்த அத்தியாயம் முற்றும்.

ஏழாவது
விட்டுணுவுக்குப் பிருகுசாபம் வந்த கதையுரைத்த அத்தியாயம்.

சூதமுனிவர், விஷ்ணுவுக்குப் பிருகுசாபம் வந்த கதையினைக் கூறத்தொடங்கல்.

அரும றைப்பொரு ளுணர்முனி வாற்கணி லாதன்
விரிதி ரைக்கடற் கண்டுயில் விண்ணவன் றனக்குப்
பிருகு சாபம்வந் தடைந்தவை பேசிய வண்ண
முருகு காதலிற் சூதமா முனிவர னுரைக்கும். (க)

வஞ்ச நீங்கிய தவத்தணி லரதனே வணங்கி
விஞ்சு மாதவர் விளப்புவ ரிளம்பிறை மிலைந்த
செஞ்ச டாடவிப் பண்ணவன் பெருமையுந் திருந்தத்
தஞ்ச மென்றவன் சரணிணை பணிந்தவர் தகையும். (உ)

முன்னும் வேண்டிய வுரைத்தனே யுரைத்திடு முறையே
யன்ன வாசகங் கேட்டுமெம் விருப்படங் கிலவா
லின்னுங் கேட்குற விருப்பின மடியருக் கெந்தாய்
பன்னி யாங்கவை களிப்பொடும் பகரெனப் பகர்ந்தார் (ஙு)

மொழிந்த வாசகங் கேட்டனு முனிவான் முழுது
மழுந்து மன்பொடு விழிபுன லருப்பிட வறையுஞ்
சுழிந்த தெண்டிரைப் பாற்கடன் மணிதாகை யிடினும்
விழைந்து நீர்பகர் தன்மையை விளம்புத லரிதால். (ச)

எல்லை யின்றிய காலங்க ளிறந்திடா திருந்து
சொல்லு நாவொடு கோடிகொண் டுறையினுந் தொலையா
வல்லை நிந்தொளிர் களத்தினன் பெருமையு மவன்றன்
மல்ல லன்பர்கள் பெருமையு மளந்துரை வகுக்கில். (ஙி)

அரிய நான்மறைத் துறையுளீ ரறிந்தவை யின்னுங்
தெரிய வோதுவன் கேட்குதி யெனவுரை தெரித்தே
புரியுஞ் செஞ்சடைப் புனிதனைப் புகழ்ந்தக மிருத்தி
விரியு மன்பொடு முனிவர னினிதுற விளம்பும். (ஙூ)

மூன்று மாயையுங் கடந்தொரு முழுமுத லாகி
யான்ற வைந்தொழில் களும்புரிந் தசலமாய் நிறைந்தே
யேன்ற வாருயிர்க் காருயி ராகியெவ் விடனுந்
தோன்ற நீறணி கடவுளே பரமெனுஞ் சுருதி. (எ)

பங்க யத்தடம் பொகுட்டுறை பண்ணவன் படைப்பும்
பொங்கு வெண்டிரைப் பாற்கடற் கருமுகில் புரப்பு
மங்க வெண்டலை சூடிதன் னழிப்பினி லடங்குங்
கங்கை நாயகற் கிணையெவர் தேவரிற் கணிக்கில். (அ)

வேறு.

உளங்கனிந் துருகி வியாதமா முனிவ
னுவப்பொடு மன்புமீக் கொழுந்தக்
களங்கனி யனைய கறைமிடற் றமலன்
கமலநாண் மலர்ப்பதம் வழுத்தத்
துளங்கிடைக் கொழுந னன்னவற் கிரங்கி
யருளினன் றுரிசற வதனுல்
விளங்கிய மறையு மாகம புராணப்
பாவையுங் கடந்தனன் விருப்பி. (கூ)

பைத்தலை விடவாய்ப் பாந்தளா பரணப்
பண்ணவன் பழம்புலால் கமழு
முத்தலை நெடுவேற் பரமனே யெவர்க்கு
முதன்மையென் பதைமனத் துணர்ந்தா
னத்தலை நெறிநின் றருட்சிவா னந்தத்
தகங்களித் தழுந்தின னொருநான்
மைத்தலர் கொடிய வாணவச் செருக்கால்
வாணியங் கரைமருங் கடைந்தான். (கo

வியாதமுனிவர் முனிவர்கூட்டத்தை யடைதல்.

தனிவரை குழைத்துப் புரந்தழற் படித்தந்
தமனியப் பொருப்பினைப் பரசு
மினியதேன் பிழியு மகதியாழ் முனிவன்
முதலியோ ரிருடிக ளுளத்திற்
கனியுமன் புருகித் தினைத்தபே ரறிவின்
யோகிகள் கணத்திடை வந்தா
னனிதரு களிப்பி னுரதன் முதலோ
ரன்னவன் றனக்கெதிர் நடந்தார். (கக)

முனிவர்கள் வியாதமுனிவரை உபசரித்தல்.

ஆங்கவற் பரவி யழைத்தனர் கொணர்ந்தா
ராசனத் திருத்தினர் வியப்புற்
றீருங்கிய வுளத்தாற் செய்வன யாவு
முதவினர் வழியினைப் பொழித்தார்
பாங்கிரு புறமும் வதிந்தன ரவரோ
டளவளாய்த் தனித்தனி பழகி
நீங்சல னுகி யிருந்தன னிருக்கு
மேல்வையி னிவப்புறுங் தவத்தோர். (கஉ)

தெண்ணிலாச் சடையோன் றிருவரு ளடைந்தாய்
வேதங்க ணன்கெனத் தெரித்தா
யண்ணன்மா தவத்தின் றலைநெறி நின்று
யளப்பருங் கலியெலா மளந்தா
யெண்ணிலாக் கருணை முழுவதுந் திரட்டி
யெடுத்தன வொருவடி வெடுத்தாய்
கண்ணிலா வுயிர்கட் கறிவினைத் தெரியக்
கண்ணெனத் தனியவ தரித்தாய். (கங)

முனிவர்கள் சிவபரத்துவத் தன்மையை விளக்கும்படி வியாதரைக் கேட்டல்.

மூரிதிரைக் கடல்வாய்ப் படுவிட மருந்து
முக்கணுன் பெருமையை முற்றுங்
தெரிதர முன்னு முரைத்தனை யவன்றன்
சிற்பர மயத்தினைத் தெரிதற்
குரியவா றன்றித் தெருமருங் கொடிய
வுளத்தினை மெமக்கிவ ணுறுதி
யரிதினிற் பகர்தி யாதியங் கடவுட்
டன்மையை யெனவெடுத் தறைந்தார். (கச)

வியாதமுனிவர் ஆணவத்தினுல் சிவனுக்குப் பரத்துவ முதன்மையின்று,

விட்டுணுவுக்கே யுளது எனக் கூறல்.

கேட்டன னிதனை யாணவச் செருக்கால்
வியாதமா முனிவரன் கிளக்கு
மூட்டரக் கெறியுஞ் சிலம்படி யிடத்தோற்
கித்தகை முதன்மையொன் றுளதோ
வீட்டுபே ருலகத் துயிர்க்குயி ராகி
யின்னருள் புரிந்து காத்தளிக்கும்
பாட்டளி முரலும் பசுந்துழா யவற்கே
பரத்துவ முதன்மையென் றிசைத்தான். (கரு)

அதனைக் கேட்ட முனிவர்கள் வருந்துதல்.

வரமுனி யுரைத்த தீமொழி கேட்டு
மாதவத் துறையுளோ ரெவரு
மரகர வெனவே செவித்துளை புதைத்தா
ரழலென விழிக்கடை சிவந்தார்
பரமய முதன்மை சிவனென வெமக்குப்
பகர்ந்தனை முன்னது கிடப்பத்
திரமுறுங் கடவுள் வேறெடுத் துரைத்தாய்
யாத்தனை பழமறைத் தெளிவு. (கஉ)

முனிவர்தலைவர், விஷ்ணுவுக்கே பரத்துவமென்பதைக்
காசிக்ஷேத்திரத்தில் வந்து கூறும்படி வியாதரைக் கேட்டல்.

எனமுனித் தலைவர் வலிப்பவன் னவன்றன்
சீடரு மனங்கொளா திகழ்ந்தா
ரனைவருந் திரண்டு விபாதனை[நெ]ருங்கி
முனிவ]கே ணீபறை மாற்ற

நினைவருங் காசி யெம்பிரான் றிருமுன்
நெடுந்திரைக் கங்கைநீர் நின்று
மனமொருப் படவே யுரைத்தியை யுரைத்த
வழிமுறை வணங்குவோ மென்றார். (கள)

வியாதமுனிவர் அதற்கிசைய, யாவரும் காசியை யடைதல்.

ஈதெடுத் தியம்பக் கேட்டருள் வியாத
னியானிதற் கிசைவலென் றெழுந்து
மாதவத் தலைவர் தம்மொடு நடந்தான்
வளந்தரு காசிசென் றடைந்தான்
சீதவெண் டிவலைப் பகீரதி படிந்து
திங்களுஞ் சடைமுடிப் பெருமான்
பாதபங் கயத்தைப் பரவினன் கருதி
முனிவரும் வரன்முறை பணிந்தார். (கஅ)

வியாதமுனிவர் கங்கையில் நின்று ஒருகாமுயர்த்தி, விஷ்ணுவுக்கே
பரத்துவமுதன்மையுளதென்று கூறல்.

தடந்திரை சுருட்டும் பகீரதி யிறங்கித்
தனிவலக் காமெடுத் துயர்த்தே
மடந்தருங் கொடிய வாணவத் தழலும்
வியாதன் மாமுனிவரீர் கேண்மின்
படந்தரு மரவப் பாயன்மேற் றுயிலும்
பைந்துழாய்ப் படலலூத் தலர்ந்த
விடந்தரு திணிதோட் கரியகா ரணற்கே
பரத்துவ முதன்மையென் றிசைத்தான். (கக)

இவ்வாறு கூறிய வியாதமுனிவரது காமும் நாவும் தம்பித்தல்

சொற்றநா வயர வுயர்த்திய தடக்கை
முடக்கிடா தடுகொலைச் சூலக்
கொற்றமார் கால வயிரவக் கடவுள்
புரிந்தன னன்னது குறித்தே
கற்றமா தவருஞ் சீடருங் கயிலைக்
கடவுளைத் தொழுதகங் கனித்தார்
மற்றைவா னவருங் கற்பக மலர்தூய்
மழவிடைப் பாகனைப் பணிந்தார். (உ0)

அவ்விடத்தில் விஷ்ணுமூர்த்தி வருதல்.

உயர்வுறுந் தடக்கை யசைக்கல னுகி
நாவுமான் றுரைக்கல னுகி
மயர்வுறுங் கவலை மனத்தையு நின்றான்
வரமுனி வனைநிலா வொருபாற்

செயமுறுந் திகிரிக் கொழுங்கதி மொருபாற்
றினைப்புறச் செம்பொன்மின் னுடங்கும்
புயலெனப் பொலிந்து பசுந்துழாய்ப் பொருப்புப்
புள்ளர சுகைத்தவ ணடைந்தான். (உக)

விஷ்ணுமூர்த்தி சிவபரத்துவ முதன்மையை மறந்து தவறுரைத்த வியாதமுனிவரைக் கண்டித்துக் கூறுதல்.

ஆண மறைக்கு மாகமந் தனக்கு
மளப்பரும் புராணவா ரிதிக்கு
மோரணுத் திரட்கு மெம்ம[னோர் தமக்கு
மு]வப்புறு கடவுள ரெவர்க்குங்
காரண மாகிப் பரத்துவ முதன்மைக்
கடவுளா யிருப்பவன் கடப்பீபார்
வா[ரண முரித்த]பரமனே யன்றி
மற்றெவ ரறிந்தது மறந்தாய். (உஉ)

ஒருபொரு ளாகி யைந்தொழி னடத்த
வொப்பிலாக் கடவுளைக் தாகிப்
பொருவரு முலகப் பரப்பெலாம் படைத்தீத
யுயிர்தொறு முயிர்தொறும் புகுந்து
பிரிவல னுகிப் பரம்பியும் பிரிந்த
பெற்றியோ டிருப்பவன் பெரிய
வருமறைக் கரிய னடியருக் கெளிய
னரனென வுணர்ந்திலை போலு ர். (உங)

குருத்தினந் திங்கட் சடிலிதன் பெருமை
யாவரா ற் குணித்திடக் கூடுந்
தெரிப்பது தெரிக்கி லாதிரா பகன்றன்
நிருந்திய திருவரு ளளித்து
விரிக்குமேல் விளக்கு மீதறிந் திலைநின்
மெய்யறி வனைத்துமீ மருண்டா
பொருப்படை வெடக்கும் பெரும்பிழை விழைத்தா
யெனமுனி வனமறுத் துரைத்தீத. (உச)

விஷ்ணுமூர்த்தி, சிவபிரானே பரத்துவமுதல்வரென முனிவர்களுக்கு உரைத்தல்.

அருந்தவத் துறைமீபா மாதவர்க் குரைக்கு
மலங்கிலை மழுவல னுயர்த்த
பெருந்தகைப் பரனே யாவரு முணராப்
பராபரன் யாமுமப் பெரியோன்

திருந்தரு ளதனு லுயிர்புரந் தருளச்
செய்குது மீதுசத் தியமென்
றிருங்கதிர்த் திகிரிக் கரமெடுத் துரைத்தான்
முனிவரர் யாவரும் வியந்தார். (உரு)

கீற்றிளந் திங்கட் டிருநுதன் மடந்தை
பச்சென வொருபுறங் கிளைத்த
நீற்றொளி பழுத்த பவளமா வரையை
நெஞ்சகத் துள்ளுற விருத்தி
யூற்றினன் றடங்கட் குளிர்புனல் வழுத்தி
யுவகையங் கடலிடை யாழ்ந்தான்
கூற்றுள மருள வடையலர்ச் செகுப்பக்
குனிசிலை வணக்குமோர் கொண்டல். (உசு)

விஷ்ணு, சிவபிரானைத் துதிக்கும்படி வியாதமுனிவருக்குக் கூற அவர் துதித்துப் பஞ்சாக்ஷரம் ஓதிக் கையும் நாவும் இயங்கப்பெறுதல்.

இன்னணம் பரவி வியாதனை நோக்கி
யெறிநரற் றிவலையூற் றெழுகும்
பொன்னெவிர் கடுக்கைச் சடிலியைத் தொழுது
புகழ்கென மாயவன் விளம்ப
வங்கிலை வணங்கிப் பழிச்சிடக் கரமு
நாவுமங் கசைந்தில வதனை
மன்னவி னயத்தாற் காட்டினன் கரி[யோ
னத்த]னஞ் செழுத்தையு மூணர்த்த. (உள)

செம்மலர்க் கரமு மயர்ந்திடு நாவுந்
திருந்திடு முனிவனன் றிகைத்து
வெம்மைகான் கவலை யுளந்திறை பிடிக்க
மெய்யெலாம் விதிர்விதிர்ப் பெறிய
மைம்முகி லனைய திகிரிமா யவனீர்
மருங்குகின் றிமயமீன் றெடுத்த
கொம்மைவெண் டரளக் குவிமுலைக் கொழுநன்
குரைகழல் வணங்கியே புகழ்வான். (உஅ)

வியாதமுனிவர் சிவபிரானைப் பூசித்தல்.

வேறு.

மூந்தாண வத்தி னிருண்மூடு சிக்தை
யெளியேன் மொழிந்த பிழையைப்
பைந்தா துழக்கு வரிவண்டு கோடி
படிகின்ற பைம்பொ னறவக்

கொந்தார் கடுக்கை திரையாறு திங்கண்
முடிமீ தணிந்த குழகா
வெந்தா யெவர்க்கு முதலாகி நின்ற
விறைவா பொறுத்தி யிகரியே. (உசு)

பொன்னிற் பொலிந்த திருமேனி கொண்ட
புனிதா வணுக்கன் முறையீய
பன்னித் துதித்த புகழும் பழித்த
பழியும் பகுத்து வரைதன்
முன்னித் திருந்த வளவற்ற தோடி
யுயிர்முற்று மீனு மொருதாய்
தன்னிற் புரக்கு மொருநாத னென்ற
தலைமைக் கடுத்த தலமீவ. (ஈ0)

ஒன்றுகி யைந்து விதமாகி யெண்ணி
லுயிரிற் பொருந்து முயிரா
யன்றுகி நெஞ்சி னினைதற்கு மெட்ட
லரிதாகி நின்ற வமலா
கன்றுன தற்கு மனநெக் குடைந்து
கனிகின்ற வாவி னடியார்
துன்றுண வத்தி னிருளைக் கலக்கு
சுடரே யிரங்கி யருளே. (ஈக)

இவ்வண்ண மென்ப தறிகின்றி லாத
வருவாகி யெய்து முருவாய்
மைவ்வண்ண மாயன் முதலோ செவர்க்கு
முதலாகி நின்ற வரத
னவ்வண்ண மாய முகமைந்து கொண்ட.
வரனென் றுரைக்கு மறையின்
செவ்வண்ண நின்று மருளுற் றுரைத்த
சிறியேற் கிரங்கி யருளே. (ஈஉ)

வியாதமுனிவாத தடுக்கிரங்கிச் சிவபிரான் தோன்றியருளுதல்.

எனநின்று வேத முரைதந்த வண்மை
தவரு திசைத்து முனிவன்
மனநைந் திரங்கு செயல்கண்டு சிந்தை
மகிழ்வந்து காதல் பெருக
நனைவிண்ட கொன்றை திரைபொங்கு கங்கை
நதிதும்பை நஞ்ச முமிழும்
பனகம் படிந்த சடிலம் பூணந்த
[பரமே]ம சன்வந்த ருளினன். (ஈஈ)

வியாதமுனிவர் சிவபிரானை நமஸ்கரித்தல்.

கள்ளங் கரந்த மொழிசொற் றிடைந்த
முனிவன் கனற்கொண் மெழுகி
னுள்ளங் கரைந்து வெருவுற் றுணங்கி
யிருசெங்கை யுச்சி குவிய
வெள்ளம் பழித்து விழிசிந்த நின்று
விமலன் பதப்ப ரவினன்
தெள்ளந் திறத்து மறைநூ லுணர்ந்த
திருநந்தி தேவ னறைவான். (ஈச)

வியாதமுனிவருக்கு நந்தியெம்பெருமான் அறிவுறுத்தல்.

பண்ணுற்ற வேதம் முழுதுந் திருந்து
பதினெண் புராண முழுது
மெண்ணுற் றுணர்ந்து மவையோது முண்மை
யெதுவென் றுணர்ந்தி லையிருட்
கண்ணுற்ற சிந்தை புனல்பட் டிழிந்த
கமலத்தின் வட்ட வடைவாய்
நண்ணுற்ற தீமை யலையிற் படிந்து
நலிவெய்தி நைந்த னெகொலாம். (ஈஞ)

சங்கந் தரித்த பலகோடி மாயர்
தலைமாலை நீடு தவள
வங்கந் தலைக்கொள் பெருமானை யாதி
நடுவந்த மின்றி யருவா
பெங்கும் புரக்கு முதலாய் நிறைந்த
விறையோனை ஞான வொளியைப்
பங்கம் படுத்தி யெதுநீ நினைந்து
பகருற்ற தேதை முனியே. (ஈஎ)

இதுசொற்ற நாவு முயர்வுற்ற கையு
மிரிதக்க வின்று வெருவி
மதுமொய்த்த கொன்றை வரனைப் பணிந்த
வலிகண்டு செய்தி லனைனு
முதுமெய்த் தவத்தி னருணந்தி கூற
முனியஞ்சி நின்று தொழுதான்
புதுநித் திலத்தி னிலவொத்த மூரல்
புனிதன் புரிந்த னனரோ. (ஈஏ)

சிவபிரான் வியாதமுனிவரது வழிபாடுகண்டு அவர் செய்த பிழையைப் பொறுத்தருளுதல்.

மாயைப் படத்தின் மறைபட்டு நைந்து
மருள்கூர் வியாத முனிவ
னேயத் திறைஞ்சு வழிபாடு கண்டு
நெறிகொன் றுரைத்த பிழையைத்
தாயிற் சிறந்து புவனம் புரந்து
தனிநின்ற நாதன் வளரும்
வேயொத்த தோளி யுமைநங்கை பங்கன்
விமலன் பொறுத்தே கினனன். (நஅ)

முனிவர்களும், வியாதமுனிவரும் சிவபூசைசெய்தல்.

ஆலத்தை யுண்ட பெருமானை நின்று
பாவுற்ற வாதி முனிவோர்
சீலத்தி னோடு தம்மெல்லை சென்று
சிவபூசை செய்த ருளினர்
நீலப் பொருப்பு நிகர்பச்சை மேனி
நெடுமால் பணிந்து பரவப்
பாலத் தழற்கண் ணிறைபண் டளித்த
படாழி யெய்தி னனரோ. (நக)

கறைகொண்ட கண்ட னுயர்வுற்ற தன்மை
கணியா வியாத முனிவன்
முறைகொண்டு தெய்வ மணிகங்கை மூழ்கி
முதனூல வாரி படியும்
பிறைகொண்ட வேணி யரனைப் பணிந்து
பிழைசொற்ற தீமை யகல
நிறைகொண்ட வன்பின் மிகுபூசை செய்து
நெறியால் விளங்கி னனரோ. (ச0)

வேறு.

இன்னண முரைத்த தன்றியே யின்னு
மிசைப்பல்யான் கேட்குதி யெறிக்கும்
பொன்னவிர் திதலைப் புணர்முலைத் துவர்வாய்ப்
பூங்கொடி யுமையவண் மனத்திற்
றுன்னிருஞ் சடிலப் பிஞ்ஞக னருளாற்
றுழாய்த்துய றணித்தருந் தடந்தோட்
பன்னக வணையான் முதலிய தேவ
ரனைவரும் பதைப்பொழிந் திருந்தார். (சக)

இக்கதையினைக் கூறி, சிவாபராதம் செய்தவர்கள் தண்டிக்கப்பட்ட கதை பலவுள வெனக் கூறுதல்.

வட்டமென் கமலத் தவிசுவீற் றிருக்கு
மறையவன் மைந்தன்மா மகுத்தி
லிட்டபொற் றவிசுங் கலன்களுஞ் சிதறக்
கரியமா விமையவ செவருங்
கட்டழற் கதுவு வீரபத் திரன்கைக்
கதையினுற் சிதைந்துயிர் துறந்து
பட்டபா டுணர்த்தும் வேறுவே றெடுத்து
நாவினுற் பகர்வதற் கெளிதோ. (சஉ)

விண்முக டளவக் கிளர்ந்துகால் பெயர்த்து
வெள்ளிவெற் பெனநடை பயின்று
மண்ணிடை முழுது மொருபிறை மருப்பு
வயங்கெழு துதிகொடுத் தெடுத்த
வண்ணல்வெள் ளேனத் திருவுரு வெடுத்த
வமலனைக் கீளையொடுந் தொலைத்தான்
பண்ணலங் கனிந்த தமிழ்தொகுத் தூரைத்த
பன்னிரு தடம்புயப் பரமன். (சங)

மாவலிப் பெயரி னசுரனைப் பெலத்திட்
டரியவா மனனுல கடையக்
காவல்செய் தளித்துத் தனிக்குரு தலத்துக்
கண்ணுதற் பண்ணவன் கமலப்
பூவலர் கழற்கால் விதிமுறை வழுத்திப்
புந்திநெக் குடைந்துடைந் துருகி
யாவலிற் பணிந்து மலக்கிழங் ககழ்ந்தா
னன்பரின் முதன்மைகொண் டுயர்ந்தான். (சச)

சிவனடியாரது பெருமை கூறுதல்.

ஈங்கிவை பகர்ந்தே னடல்விடை யுகைக்கு
மெம்பிரான் பெருமையன் னவன்றன்
பூங்கழல் வழுத்து மன்பர்தம் பெருமை
புகலுமீகன் புடைத்திறு மாந்த
கோங்கிளங் குருப்பைக் குவிமுலை வாணி
கொழுநனி லுலகெலாம் படைப்பர்
வாங்குறு திரைவெண் பாற்கடற் றுயிலு
வதனனி னிதுகாத் தளிப்பர். (சடு)

வரிச்சிறைச் சுரும்ப ருழுதுதேன் மடுக்கும்
வண்டுழாய்ப் படலைபூத் தலர்ந்த
பொருப்புறழ் தடந்தோட் கரியமெம் முகிலும்
போதனு மிறப்பர்சென் றடைந்தோர்

கருக்கட லுடைக்குங் கங்கைசூழ் கிடந்த
காசியுங் கதிர்மழுப் படையோன்
றிருக்கிளர் சரணம் வணங்குமன் பினருஞ்
சிதைந்திடா செனமறை தெரிக்கும். (சசு)

சிவனடியார் மனங் கோபித்தால் எத்தகையோரும்
துன்பமுறுவரென்பதைக் கூறுதல்.

பத்தியிற் பரமன் பதம்பணிந் திறைஞ்சும்
பான்மையோர் திருவுளங் கறுக்கி
லெத்தகைத் திறத்துக் கடவுள தேனு
மிடையுறுத் துயருழந் திறப்பர்
முத்திநன் னெறியின் மனமொருப் படுத்து
முழுமறை தெரிதரு வாசர்
சித்தநொந் துரைத்த சாபவெந் தழலிற்
கண்ணனு முயிர்திறம் பினரால். (சள)

சிவபத்திமானான பிருகுவின் சாபத்தால் விஷ்ணுமூர்த்திக்குப்
பத்துப் பிறவி வந்தமை கூறுதல்.

புண்ணிய மனைத்துங் திரண்டொரு வடிவம்
பொருந்திய கருணைமா தவத்தோ
னெண்ணரு மறையின் னுறைகெறி போய
பிருகுவன் றிசைத்தசா பத்தாற்
கண்ணகன் ஞால முண்டுமிழ்ந் தளித்த
கரியவ னொருபது பிறப்பு
நண்ணின னினிமற் றெவர்க்கே பரம
னடியரை நலிந்துயிர் பிழைத்தோர். (சஅ)

பிருகுமுனிவர் விஷ்ணுமூர்த்தியினைச் சபித்த கதையினை
விரிவாகக் கூறுதல்.

இன்னவாற் றரிய தவத்தனி லரத
னியப்பலு முனிவர ரிறைஞ்சிச்
சொன்னமாக் கதைகள் கேட்டுளங் களித்துத்
துரிசறுத் துயர்ந்தனஞ் சுருதி
மன்னுதா பதன்மெய்ப் பிருகுளங் கனன்று
மாயனைச் சபித்திடுங் காதை
பன்னியீண் டெமக்குத் தெரிதரப் பகர்தி
யென்னலு முனிவரன் பகரும். (சகூ)

முன்பு ஓர் தேவாசுர யுத்தத்தில் அசுரர் தோல்வியுறுதல்.

கற்பக முயிர்க்குங் கடிமணங் கமழுங்
கதிருலாம் பொன்னகர் புரக்கும்
பொற்புறு குலிசப் புரந்தரன் முதல
தேவரும் புன்றொழிற் கொடிய
மற்றினி சடந்தோட் கரியதா னவரு
மாறின்வெஞ் சமமுடற் றினரால்
வெற்றிவா னவர்கட் காற்றல ராகி
வென்கொடுத் தசுரர்க ளிரிந்தார். (சூ0)

தோல்வியடைந்த அசுரர் சுக்கிரனையடைந்து முறையிடல்.

அருந்தவ மியற்றுஞ் சுக்கிர னிருக்கை
யடைந்தனர் குரவனைப் பணிந்தார்
பெருந்தகை யிழந்து விண்ணவர்க் கிடைந்த
தன்மையைப் பெரிதெடுத் துரைத்தார்
வருந்தினின் றுணங்கு மசுரரை நோக்கி
யன்னவன் மனங்கரைந் திரங்கிப்
பொருந்துபே ரமரிற் றேவரைச் செகுப்பப்
புந்தியிற் சூட்சிமே னினைந்தான். (சுக)

சுக்கிரன் அசுரர்க்காகச் சிவபிரானிடம் வரம்பெறத் தவம்புரிதல்.

மண்டுவெஞ் சமர்க்கு நீவிர்போ யெதிர்க்கில்
வானவர்க் குடைந்துயிர் துறப்பீர்
பண்டுபோ லுமக்கு வலியில பொறையி
னிருக்குதி ரெனவுரை பகர்ந்து
தண்டவெண் பிறைச்செஞ் சடிலியை வணங்கி
வரம்பெறச் சுக்கிரன் விரைந்து
கொண்டல்கன் படுக்குங் கொழுங்கதி ருரிஞ்சுங்
குடுமிநீ ளிமையவெற் படைந்தான். (சூஉ)

சுக்கிரன் சிவபிரானிடம் தேவரை வெல்லும்
வித்தை தரும்படி வேண்டல்.

நறவுகொப் பிளிக்கு மிதழியுஞ் சடில
நாதனைக் கண்டுவீழ்ந் திறைஞ்சி
யறநிலை வழுவா விமைபவர்க் காற்று
வசுரர்க ளிழைத்தன வெல்லாம்
றிறனுற வுரைத்துத் தேவரை வெல்வான்
வித்தையொன் றருள்கெனச் செப்ப
விறல்கெழு சூலத் தனிப்படை யுயர்த்த
விண்ணவ னினிதுற விளம்பும். (சூக)

சிவபிரான் ஆயிரம் வருடம் அரிய தவம் புரிந்தால்
அவ் வித்தை வரும் என்று கூறுதல்.

மாயவன் முதலோ ரெவர்களு மடையா
விஞ்சையை விரும்பினை வருந்தி
யாயிரம் பருவக் தலைநிலத் தறமே
யழற்புகை யுண்டொருப் படமே
தூயநற் றவமீ புரிந்திடி லரிய
தூகளறு வித்தைவந் தடையு
நேயமோ டிதனைப் புரிகென நிமல
னிகழ்த்தலுஞ் சுக்கிரன் மகிழ்ந்தான். (நுச)

சுக்கிரன் அவ்வாறு தவம்புரிதலும், இதனையறிந்த இந்திரன்
விஷ்ணுமூர்த்தியிடம் சென்று அசுரரைத் தொலைக்கவேண்டுமெனல்.

அவ்வரை யிடத்தி னன்னதன் மையவா
மருந்தவஞ் சுக்கிரன் புரிய
விவ்வகை யனைத்தும் புரந்தர னுணர்ந்தா
னிவையெலா மெறிதிரை சுருட்டும்
பவ்வமேற் றுயிலுங் கரியவற் குரைத்துப்
பாற்கவன் படருமுன் னெய்திக்
கவ்வைகொண் டழுங்கு மசுரர்தங் கிளையைத்
தொலைப்பதே கருமமென் றெழுந்தான். (நுந)

வெள்ளிப முகைத்துப் பாற்கட லடைந்து
நாரணன் விரைமலர்க் கழற்கா
லுள்ளகெக் குருகிப் பணிந்துபாற் கவனுண்
டிழைத்திடுஞ் செயன்முறை யுரைத்தான்
கொள்[ளி]வண் டிமிருந் துளவினை யசுரர்
குலம்பொடி படத்தொலைத் திலையேற்
றெள்ளுநான் மறையின் றுறைநெறி கடவாத்
தேவரு முய்வரோ வென்றான். (நுசு)

விஷ்ணுவும், தேவர்களும் அசுரருடன் போருக் கெழுதலும்
அசுரர்கள் பயந்து பிருகுமுனிவரது ஆச்சிரமத்தை யடைதல்.

புரந்தர னுரைக்கக் கேசவ னிரங்கிப்
புள்ளர சுகைத்தவ னெழுந்தான்
பரந்திடு மசுரக் கருங்கடல் கலக்கிப்
பதைபதைத் திடச்சமம் விளைத்தான்
கரந்தன ரசுரர் பிருகுவாச் சிரம
மன்னவர் கலங்கிடத் தொடர்ந்து
வரந்திகழ் திகிரிப் படைக்கைமா யவனுங்
தேவரு மிருக்கைபோய் வளைந்தார். (நுள)

பிருகுமுனிவர் தேவி திவ்வியை, அடைக்கலம் புகுந்தவரைக்
கொல்லவேண்டாமென விஷ்ணுவினிடம் கூறுதல்.

தீதுறுங் கொடிய வசுரரைத் தொலைக்கச்
சக்கர முயர்த்தனன் றிருமான்
மாதவப் பிருகு பன்னிதிவ் வியைகண்
டடைக்கல மாகவந் தடைந்த
பேதையோ ரிவரைக் கோறலு முகுந்த
வென்னலும் பிறங்குவச் சிரத்தோன்
காதிவெஞ் சமருக் கெழுந்தன னவனைக்
கையெலா துளர்ந்திடத் தடித்தாள். (நுஅ)

வச்சிரக் கரத்தைத் திவ்வியை தடுத்தாள்
மாயவ கொடியதா னவரை
யச்சமுற் றழுங்கப் பொருவதற் கெளியேற்
கருள்புரி யென்னலும் பகுவாய்
நச்சர வணையோன் முனிவர னில்லா
விருக்கைபோய் நணுகுதல் கடனே
கைச்சினப் பொருப்பை விலக்குதி யெனவே
யிந்திரன் கவலைகொண் டுரைக்கும். (நுகூ)

இந்திரன் தீய வசுரரைக் கொல்லுவதில் அறநெறி
பார்க்கவேண்டியதில்லையென, திவ்வியை அவ்வாறு பொருதிறல்
உங்களைக் கொல்லுவேன் என்று கூறுதல்.

புன்றொழிற் கொடிய தீயரை முருக்கா
தறநெறி தெரிப்பதென் பொருதி
மன்றலந் துளவப் படலையோ யென்றன்
திவ்வியை மனங்கொதித் தழன்று
துன்றுபோர் புரிய வருதியே னினையுந்
தொடுகடற் றுயின்றகோன் றனையு
மின்னுயிர் துறப்பே னென்றன வெடியோ
னெரியெழ விழிக்கடை சிவந்தான். (கூ0)

அதைக்கேட்ட விஷ்ணுமூர்த்தி கோபித்து, சக்கரப்படையால்
திவ்வியையின் சிரத்தைத் துணித்தல்.

வேறு.

அலங்கு சக்கரப் படையெறிந் தவள்சிர மறுத்தான்
கலங்கு செம்புனற் குருதிமேன் செற்றிடை கழுமி
யிலங்கு வஞ்சி[யென் ப]சுங்கொடி யுணங்கிய தென்னத்
துலங்கு செங்கதிர் மணித்தொடி யுறங்கினள் சோர்ந்து. (கூக)

அச்சமயம் பிருகுமுனிவர் தமது ஆச்சிரமத்துக்கு வந்து தம் மனைவி கொல்லப்பட்டிருப்பதைக் காணுதல்.

அன்ன காலையிற் கதுமென வருந்தவப் பிருகு
கன்னி மென்றளிர்[ர் த]ருப்பையுஞ் சமிதையுங் கைக்கொண்
டுன்னி வந்தன னிருக்கையுட் புகுந்தன னுயிர்போய்ப்
பன்னி மாமயில் கிடந்தது பார்த்தனன் பதைத்தான். (கூஉ)

அவளைக் கொன்ற விஷ்ணுமூர்த்தியைக் கண்டு கோபித்துச் சபித்தல்.

வளைத்த வள்ளுகிர்க் கருடன்மேல் வாதனைக் கண்டான்
முளைத்த பன்னெரித் தடுசினந் தலைக்கொடு மூளத்
திளைத்த செந்தழல் விழிக்கடை யுகவெதிர் சென்று
தளைத்த குல்லியம் படலையோய் கேளெனச் சபிக்கும். (கூஎ)

விஷ்ணுபக்தர்கள் நரகடைவரெனச் சபித்தல்.

ஓது நான்மறை நெறிதரு முறையெலா மொருவி
மாதி ருருயிர் வதைத்தணை நின்மலர்ப் பதத்திற்
காதல் வைத்தவர் வெந்துயர்க் கடலிடை கவிழ்ந்து
தீது றுந்தழ னரகிடைச் செல்வரீ தன்றி. (கூச)

அனையர் தம்மொடு படுத்தொரு வாசக மறைந்தோர்
புனைய மாடையு நிதியமும் பூமியு மவர்க்கே
மனம கிழ்ந்தினி தளித்தவர் யாவரு மருண்டு
நினைவ ருந்தழ னரகிடை நீங்குவர் நீயும். (கூடு)

விஷ்ணுவுக்கு இழிந்த பத்துப் பிறவி யடையுமாறு சபித்தல்.

விரியும் வெண்டிரைப் பரவையின் மீனமும் விரிந்து
சுரியும் வண்கமுகத் தாமையு மெனவுருத் தோன்றிக்
குருதி யுங்கெழுந் தசைகளுங் கொடும்பசி தணிபப்
பருகி மம்மருற் றயருதி பன்னெடுங் காலம். (கூகூ)

தீண்டு தற்கரி தென்றிக தோனமாய்ச் செனித்தோத
யூண்டு றக்குமுண் ணுதன வனைத்தையு முண்டு
நீண்ட வாய்ப்பிறை மருப்பினு னெடுநிலப் பரப்பைக்
கீண்டி ளைப்புற வருந்துதி கிளர்நெடுங் காலம். (கூஏ)

பிடர்மு டங்குளை மானுட மடங்கலாய்ப் பிறந்தோத
யிட ருழந்துசெஞ் சோரியு மீருளு மிளையுங்
குடரும் வாய்மடுத் தங்கமுங் குறுமயிர் சிலிர்ப்ப
வடர்வெ றிக்குணத் தழுந்துதி யளப்பரும் பருவம். (கூஅ)

பகருந் தீவினை நரருரு வைந்தெனப் பழைய
வகனி லத்தினிற் பிறந்துவெம் பவத்திடை யமிழ்ந்திச்
சுகமெ னப்புகல் பனிமொழி மனைவியைத் துறந்து
மிகவ ருந்துதி யாவரு மிகழ்ந்துரை விளம்ப. (கூக)

மற்ப டுங்கதி முதலன வைந்தையும் வழங்கி
யெற்ப கற்பொழு தரைநொடி யிடைவிடா தீரப்
புற்க றித்துவெம் பசிதணி யாதுவாய் புலருங்
கற்கி யாகவும் பிறந்துளங் கவல்கெனக் கரைந்தான். (எ0)

பிருகுமுனிவர், இவ்வாறு விஷ்ணுவைச் சபித்து, இறந்த மனைவியை எழுப்புதல்.

இறந்த பன்னிதன் சிரத்தினை யுடலொடு மிசைத்து
மறந்துஞ் சத்திய மல்லது நாவினில் வழங்கே
னறந்த ருஞ்சிவன் கழலலான் மற்றொன்று மறியேன்
சிறந்த வன்பருஞ் சிவனெனத் திண்ணமுற் றிருப்பேன். (எக)

இவைகண் மெய்யெனி லெழுகவென் றிசைத்தன னிலகு
கவைம தித்தனித் திருநுத லெழுந்தனள் கண்டா
னுவகை பூத்தனன் முகுந்தனை நோக்கின னுருத்தா
னவம தித்புறப் பலபல வாசக மறைந்தான். (எஉ)

இவ்வாறு சாபமடைந்த விஷ்ணுமூர்த்தி அதனை யகற்றச் சிவபிரானை நோக்கித் தவம்புரிதல்.

தீய சாபமெய்ப் பிருகுகின் றிசைத்தபின் றிகைத்து
மாய னஞ்சின னெட்டியிர்ப் பெறிந்தனன் வளைத்துக்
காயும் வெம்பவ மகன்றிடக் கணிச்சியோற் பரவி
யாயு நற்றவம் புரிந்திட மந்தர மடைந்தான். (எங)

திருந்து வார்சிகைக் கொடியினிற் செஞ்சடை திரித்துப்
பரிந்து தீவினை கிளைத்தெழும் வேரறப் பறிக்கும்
விரிந்த தெண்ணில வரும்பிய வெண்பொடி மிலைந்து
பொருந்த மேனியி னுருத்திர வக்கமும் புனைந்தான். (எச)

அரிய சாந்திரா யணமுதல் விரதங்க ளனைத்துஞ்
தெரிய நான்மறை விதிவழி யியற்றினன் றெய்வப்
பருவ மாயிரங் கான்மடித் தருந்தினன் பரமர்க்
குரிய வஞ்செழுத் தோதின னிருந்தன னுருகி. (எடு)

விஷ்ணுமூர்த்தி தவம்புரிதலை நந்திதேவர் சிவபிரானிடம் தெரிவித்தல்.

பைந்து ழாய்முகி லின்னண மிருப்பது பார்த்தோத
நந்தி நாயகன் றிருவுள மிரங்கின னறுந்தேன்

சிந்து கொன்றையஞ் சடைமுடிக் கடவுள்பாற் சென்றே
யெந்தை கேளெனத் தொழுதொரு வாசக மிசைக்கும். (எசு)

மணங்கொ டாமரை மலர்மக ளுறைமணி மார்ப
ணணங்கு சக்கர முதலவைம் படைகளுந் துறந்து
பிணங்கு நீள்சடை முடித்தொளி பிறங்கிய மேனி
யுணங்கி யாவரு மளப்பரும் பெருந்தவத் துழன்றான். (எஎ)

சிவபிரான் விஷ்ணுமூர்த்திக்குத் தோன்றியருளி, யாது வரம் வேண்டுமெனக் கேட்டல்.

ஐய நின்றிரு வுளங்கனிந் தருள்புரி கெனலு
மைய ளாகிய வடிக்கணே குழைத்தடர் மழைக்கட்
டையல் பங்கினன் சிந்தையிற் றண்ணளி சுரந்தே
வெய்ப வெள்விடை யுகைத்தன னிருமுனம் விரைந்து. (எஅ)

கொண்டல் மேனியன் றசையறத் தவப்புரி கோலங்
கண்டு புண்ணியத் திருவுளம் பெரிதுறக் களித்தா
னண்ட முண்டவ வெவ்வவங் கருதினே யறிய
விண்டு சொல்லுதி பென்றன னென்னைபாள் விமலன். (எகூ)

விஷ்ணுமூர்த்தி சிவபிரானைத் தொழுதிறைஞ்சுதல்.

இன்ன வாசக மமுதினிற் செவித்துளே பெய்தக்
கன்னி யந்துழாய்க் கருமுகில் கண்கணீர் மல்க
மின்னு நீள்சடை விமலனே வலஞ்செய்து வீழ்ந்து
பொன்ன நாண்மலர்ப் பதந்தொழு தினிதுரை புகலும். (அ0)

வேறு.

சீதப் பனிநிலவுத் திங்கண் முடிபொறுத்த
நாதத் தனிச்சுடரே நான்மறையி னுட்பொருளே
காதற் றொழும்படியார் தீவினைகள் கட்டறுத்துப்
பாதத் துணைக்கமல வீடளிக்கும் பண்ணவனே. (அக)

சிந்தா குலமடையத் தீமை சிறியேன்பால்
வந்தா லுனையன்றி யார்தணிக்க வல்லாரே
நந்தா மணிவிளக்கே நாமக் கொலைமழுவா
யெந்தா யுலகம் புரந்தருளு மெம்மானே. (அஉ)

விஷ்ணு, பிருகுமுனிவரால் தனக்கடைந்த சாபவரலாற்றைக் கூறுதல்.

தண்ணர் கருணைத் தவப்பிருகு மாமுனிவன்
விண்ணு ளமரருயிர் வீட்டச் சமருட்டு

மெண்ணு ரசுரர்தமைக் காத்தருள்வா னெண்ணியேனைக்
கண்ணுர் தழற்கதுவக் காய்ந்தான் கொடுஞ்சாபம். (அங)

தீய துயர்ப்பிறப்பி லீரைந்து தீண்டவுஞ்சீர்
மேய மனையாளை நீங்கி மெலிவுறவு
நேய மெனதிடத்தி னீங்காத நெஞ்சினரைப்
பாய நிரயம் புகவும் பகர்ந்தனனுல்.

இக் கொடியசாபத்தை மாற்றியருளும்படி வேண்டுதல்.

அன்ன தழற்சாப மாற்றநீ யாதரித்தே
யின்ன தவம்யா னிழைத்தே னெனப்புகன்றான்
கன்னி யொருபாற் கலந்தோ னதுகேட்டு
மன்னுஞ் சிறுமுறுவல் கொட்டி வலித்தருளும். (அடு)

சிவபிரான், தம்மடியாரிட்ட சாபம் தவிர்க்கவரிதென்று கூறுதல்.

காமருபூங் கூந்தற் கமலை பிரியாத
தேமருபைந் தாமச் செழும்புயலே கேட்குதியால்
யாமுரைக்குஞ் சாப மகன்றுலு மெம்மடியார்
தாமுரைத்த சாபந் தவிர்வ தரிதரிதே. (அசு)

சிவபிரான், விஷ்ணுவுக்குப் பிருகுவின் சாபத்தால் வரும் பிறவிகடோறும் மாயையில் மயங்காதவண்ணம் தாம் வந்து துணைபுரிவதாகக் கூறுதல்.

பொன்னஞ் சடைப்பிருகு புந்தி புகைந்தழன்று
முன்னம் பகர்கொடிய சாப முறைபிறந்தா
லன்ன பிறப்புத் தொறுமடங்கா மாயையினு
லின்ன லுறுங்காலம் யாம்வந் துணைக்காப்பேம். (அஎ)

மனைவியைப் பிரியுமாறு கூறிய சாபத்தையும், மனிதப் பிறவி ஒன்றில் மட்டும் வருமாறு மாற்றியருளுதல்.

சொற்ற நரர்வடிவந் தோன்று மொருபிறப்பிற்
கற்றைக் கரியகுழற் காதலியை விட்டகன்றே
யுற்ற துயருழந்து கூடுகநீ யென்றுரைத்து
மற்றைப் பிறப்பிலறு வாரா வகையளித்தான். (அஅ)

சிவபக்தர்களைப் பூசிக்கும் விஷ்ணுபக்தர்கள் நரகடையார் என்று கூறுதல்.

புந்திக் துரிசறுத்துப் புண்ணியரா பெம்மடிகள்
சிந்திக்கு மன்பர்தமைச் செந்தேன் மலரெடுத்து
வந்திக்கு நின்னடியார் தங்களிடம் வாராது
நிந்திக் தருமறையோன் கூறு நெடுஞ்சாபம். (அக)

ஓதரிய பத்துப் பிறப்பு மொருவியபி
ஞதி நினதுருவந் தாங்குதியென் றுதரத்தாற்
சோதி யமுதத் துவர்வாய் மலர்ந்துரைக்க
நீதி நெடுமான் மனங்களித்து நின்றிரைப்பான். (கூ0)

இவைகளைக் கேட்டு விஷ்ணுமூர்த்தி மகிழ்ந்து, சிவனடியார்முறை கூறுமாறு வேண்டுதல்.

செய்ய வறிவரிக்குந் தேசிகனு நீபன்றே
வைய நினது சமயத் தகப்புகுந்த்
மெய்யி னடியார் நெறிவிளம்ப வேண்டுமென
நெய்யிலங்கு சூல நிமல னிகழ்த்துவனல். (கூக)

வேறு.

சிவபெருமான் தமது அடியார் முறையினை விஷ்ணுவுக் கறிவுறுத்தல்.

மிக்க தவத்தின் றதீசிமுனி பிரம சரியம் விதியினைய
தக்க குணத்தின் கவுதமனே சாற்று மொருகா ருகவத்த
மைக்கொண் மலத்தை யறுத்தகுறு முனிவன் வானப் பிரத்தம்வரு
துக்க மறுத்த துருவாசர்ச் சொல்ல வரிய சன்ஞசம். (கூஉ)

இன்ன தகையி னிவர்நால்வர் முறையோ சென்னே யிறைஞ்சுனர்கண்
மன்னு தவத்தி னிவர்களைப்போல் வதிவா ரவரே யெம்மடியா
ரன்ன தகையோ ரன்றியன்பா லறிந்து மறியா திறைஞ்சுனருந்
துன்னும் பிறவிக் கடலமிழ்ந்தா ரவருந் தொழும்ப ரெமக்கென்றுன். ()

இவ்வாறு கூறிச் சிவபிரான் மறைதலும், விஷ்ணு தமதிருக்கை எய்துதலும்.

செங்கை கொடுமா யனைத்தழுவி யுச்சி மோந்து சிவன்மறைந்தான்
மங்கு லனைய நெடியோனு மகிழ்ந்து பொலன்புள் ளரசுகைத்து
பொங்கு திரைப்பாற் கடற்குவட கவேதத் தீவிற் புகுந்திருக்கை
யங்கை குவித்துத் தொழும்பர்தொழ வரியா சனத்து வீற்றிருந்தான்.

விஷ்ணுமூர்த்தி தமது அடியார்களிடம் சிவபக்தர்களைப் பூசிக்கும்படி கூறுதல்.

திருந்து மடியர் தமைநோக்கி நடந்த காதை செப்பினன்வெண்
முருந்த முறுவ லுமைகேள்வ னடியர் முளரித் துணைச்சரணம்
பொருந்து முறைபூ சனைபுரிதிர் பூசை புரியா திகழ்ந்தீசே
லெரிந்த தழல்வாய் நிரையத்தே யெய்திச் சுழலுற் றிடருழப்பீர். (கூடு)

மறைகள் பரவு முருத்திரர்கண் மகிழு மேகா தசிவிரதங்
குறைக ளறவே நோற்றிடுக வதனு லெமக்குங் கொழுங்களிப்பென்
றறையத் தொழும்ப ரகங்களித்தே யன்ன தகைகன் னெறியடைந்தார்
பிறைகொண் மவுலி யானடியார் பெருமை கடந்த தெதுபேசில். (கூசு)

எந்தை பெருமை யவனடியார் பெருமை யறிந்த தெடுத்திசைத்தே தன்
சிந்தை கனிந்து நீவிருமத் திறத்தாச் சிரமச் செய்கையினின்
முந்து பெரும்பூ சனைபுரிதி சென்ன முனிவோர் தமக்கரிய
சந்த மறைதே ரணிலரதன் சாற்ற வவரத் தகைகின்றூர். (கூஎ)

இக் கதையினைக் கேட்போர் எய்தும் பயன்.

வீசு திவலைப் பாற்கடலில் விடாத கணையில் விழிதுயிலும்
பூசல் விளைக்குங் கதிர்த்திகிரிப் பொருப்பைப் பிருகு சபித்தகதை
பேசுங் கருணைப் பெரியோருங் கேட்போர் தாமும் பிறைமவுலி
யீச னுலக மினிதடைந்தே யழியா வின்ப மெய்துவரால். (கூஅ)

சூதமுனிவரிடம் இக் கதையினைக் கேட்ட முனிவர்கள் மகிழ்தல்.

வேறு.

துவள்கொ டிச்சடைச் சூதன்ம கிழ்வொடும்
பவம கற்றுமிக் காதைய கர்ந்திட
வுவமை யின்றிய நான்மறை யோதிடுந்
தவள றுந்தவ ரார்வந் தழைந்தனர். (கூகூ)

விட்டுணுவுக்குப் பிருகுசாபம் வந்த கதையுரைத்த அத்தியாயம் முற்றம்.

எட்டாவது
விட்டுணு மன்மதனைப் பெறச் சிவார்ச்சனைபண்ணின அத்தியாயம்.

விஷ்ணு மன்மதனைப் பெறச் சிவார்ச்சனை செய்த கதையைச் சூதமுனிவர் கூறத் தொடங்குதல்.

ஐங்கணைக் கிழவன் றன்னைப் பெறுவதற் காழி யண்ணல்
சங்கரன் கமலப் பொற்றுள் வழுத்திய சரித முற்று
மிக்குமக் குரைப்பே னென்னு முனிவர ரிசைந்து கேட்கத்
துங்கநற் றவத்து ஞானச் சூதமா முனிவன் சொல்லும். (க)

விஷ்ணுமூர்த்தி மகப்பேற்றை விரும்பித் தவஞ்செய்யச் செல்லுதல்.

தொல்லுல களிக்குஞ் செங்கோற் சுவாயம்பு மனுவினீற்றி
னெல்லற விமைக்கும் திங்க ளெறிசதிர்த் தவளமேனி
மல்லலந் திணிதோட் கொற்ற மாயவன் மகவை வேண்டிச்
சில்லரி நெடுங்கட் செவ்வாய்த் திருவொடுஞ் சிறப்பிற் போந்தே. (உ)

விஷ்ணு தாருகாவனத்திடை சிவார்ச்சனை செய்தல்.

இணர்முகை யுடைந்து செந்தே னெறிகுறுந் திவலை தூற்று
மணமலி தெய்வத் தாரு வனத்திடை வதிந்து ஞானக்
குணமிகு மிலிங்க மொன்று குறித்தமைத் தினிய வன்பின்
பணவர வசைத்த சென்னிப் பரமனைப் பூசை செய்தான். (ஊ)

விஷ்ணுமுன் சிவபிரான் தோன்றியருளி யாது வரம் வேண்டுமெனல்.

எண்ணுறு பருவ மோரா யிரந்தனி யிறைஞ்சல் கண்டு
கண்ணுத லமுத மூறுங் கவிரிதழ் மடந்தை யோடும்
வண்ணவெண் ணிலவு பூத்த மழவிடை யுகைத்து வந்தான்
றண்ணற விதழித் தண்டார்ச் சடைமுடி துளக்கிச் சாற்றும். (எ)

கொழுங்கதிர் மருட்டுந் தெய்வக் குருமணி கிடக்கு மார்ப
வொழுங்குற நீசெய் பூசைக் குளம்பெரி துவந்தே மின்னே
யழுங்குற வகிர்க்க வேண்டும் வரமெலா மளிப்பே மென்ன
வெழுங்களி துளங்க நேமி யெப்பிரான் பணிந்து சொல்வான். (ஏ)

விஷ்ணு சிவபிரானிடம் மகப்பேறு வேண்டுமெனல்.

ஆருயிர் முழுதுங் காக்க வருளினை யனவி லாத
சீர்கெழு கமல மேய திருவினை யளித்தாய் செய்ய
பார்மட மகளை யிய்ந்தாய் பாக்கிய மினிமற் றுண்டோ
வேர்தரு மக்வொன் றில்லாக் குறையுள தெளிதேற் கெந்தாய். (ஐ)

சிவபிரான் விஷ்ணு வேண்டியபடி வரமளித்து மறைதல்.

உலகினி லுவமை யில்லா வொருமக னுதவ வேண்டு
நிலவுகொப் பிளிக்குந் திங்க ணெடுஞ்சடைப் பரமா வென்னப்
புலவுவாய் கமழுஞ் சூலப் புங்கவன் மகிழ்வு கூர்ந்தே
யலகிலா வழகின் மைந்தற் பெறுவர மளித்தா னன்றே. (ஒ)

மருவரு துளவ மாலை மாயனை மகிழ்வி னீங்கிப்
பொருதிரை யிரட்டும் வெண்பாற் புணரியிற் போதி யென்று
கருமணி நிகர்க்குங் கண்டன் கழறிபே மறையுங் காலைத்
திருகிய மனத்த ளாகிச் செம்பொன்மா விமையச் செல்வி. (ஓ)

சிவார்ச்சனை செய்யும்போது பூசிக்கவேண்டியவரைப் பூசிக்காது விட்டால் பலம் பெருரென்று உமாதேவியார் விஷ்ணுவுக் குரைத்தல்.

உந்துவெண் டிரையி ணுப்ப ணுறங்குவெண் புயலை நோக்கி
யெந்தையார் பூசை யாற்றி லருச்சனைக் கியைந்து ளோரைப்
புந்தியி னினிமை கூர வந்தனை புரிக லாதார்
சந்திர மவுலி பூசைப் பலத்தினைச் சாரா ரன்றே. (ஊ)

நீயும் அவ்வாறு பூசிக்காததால் உனக்குக் கிடைக்கும் மகவுமிறந்து, நீயுந் துன்புறுவாயெனல்.

ஆதலா லுனக்கு நாத னருளிய வரத்தி னெய்துங்
காதலன் பிறந்த காலைக் கடிதுயிர் துறக்க வென்றே
யீதலா னுரிமை மைந்த னிறந்திடுஞ் சோகத் தாலே
கோதிலா நின்று சிந்தை கொதிகொதித் திடுக வென்றாள். (கo)

இவ்வுரை வழங்கி யம்மை யிறைபொடு மறைந்து போனாள்
கவ்வையங் கடலி னுழ்ந்து கனிநறுத் துளவ மாயன்
கொவ்வையங் கனிவாய்த் தீஞ்சொற் குளிர்வரை பயந்தாள் கூறு
மவ்வுரை நினையுந் தோறு மழுதழு திரங்கிச் சோர்ந்தான். (கக)

அவ் வார்த்தையைக் கேட்டுத் துன்புற்ற விஷ்ணு, உமையம்மையாரையும் சிவனையும் ஒருசேர வைத்துப் பூசித்தல்.

அலங்கிழை யுமையை ஞான வமலனை யுருவிற் பண்ணி
யிலங்கொளி மணியிற் செய்த வேகவா சனத்தின் வைத்துப்
புலன்களைந் தடக்கி யன்னோர் பொன்னடிக் கமலம் போற்றி
நலங்கிளர் பூசை செய்தா னன்மறை துதித்துப் பாடி. (கஉ)

அப் பூசைக்கிரங்கி உமையம்மையுடன், சிவபிரான் தோன்றியருளுதல்.

இத்தகைப் பூசை மாயன் பருவமொன் றியற்றக் கண்டு
முத்தநற் முறுவற் செவ்வாய் முகிழ்முலை மடந்தை யோடுங்
கொத்தல ரிதழி சாய்க்குங் குழவிவெண் டிங்கள் வேணி
வித்தகன் கருணை பொங்க வெள்விடை யுகைத்து வந்தான். (கஙு)

விஷ்ணு, அவ்விருவருக்கும் பூசனைபுரிந்து உமையம்மையாரைத் துதிசெய்தல்.

நரைவிடை யுகைத்து வந்த நாதனை யுமையைப் போற்றி
விரைமலர்க் கமலத் தாளில் வியப்புறு பூசை செய்தான்
கரைபடு மனத்த னாகிக் கண்கணீர் கலுழ்ந்து நின்றான்
வரைதரு மயிலை நோக்கித் துதிபல வகுப்ப தானான். (கச)

வேறு.

காமே யளகக் கனியே கருதுங்
தேமே யமுதே யமுதின் றெளிவே
மாமே யயிலே மடவோ திமமே
பாமேர் மொழிபே சுபசுங் கிளியே. (கடு)

தண்ணே றுசுடர்த் தரளத் தனநற்
பண்ணே றளிபா டளகப் படலம்
விண்ணே றுமிளம் பிறைவே ணிபரன்
கண்ணே றவளர்ந் தருள்கா சொளியே. (கக)

ஒன்ரு யுணர்வுக் குணர்வா மொழியா
யன்ரு யுருவைந் தெனவைம் முகனுய்
நின்ரு னருளா கியநே ரிழையே
குன்ரு தகிறங் கிளர்கோ மளமே. (கள)

என்னே நினையன் பினிறைஞ் சிலனுய்
முன்னே சிறியேன் செய்முழுப் பிழையை
மின்னே ரிடைமெல் லியலே யிமையப்
பொன்னே நினையா துபொறுத் தருளே. (கஅ)

என்னத் துதிடா யனியம் புதலுங்
துன்னிச் சிறைவண் டுழுதேதாங் கெடுடம்
பின்னற் சடையெங் தையிடம் பிரியாக்
கன்னிக் குயிலன் புகனிந் துசொல்வாள். (ககூ)

விஷ்ணுவின் துதியினுல் மகிழ்ந்த உமையம்மையார் உனக்குக்
கிடைக்கும் மைந்தன் ஒருகால் இறந்தாலும், பின்னர்
அனங்கனுப் இருப்பானென்று முன் சாபத்தை மாற்றியருளி மறைதல்.

வேறு.

வளரொளித் தவள மேனி மாயவ கேட்க யான்முன்
னுளமழன் றுரைத்த சாப மொழியுமோ வனக்கு மைந்த
னளவறு பருவ மெல்லா மிறந்திடா தழகின் மிக்க
யிளவலா யிருந்து பின்ன ரிறந்துயிர் திரும்ப வெய்தி. (உ0)

அனங்கனு யுலகி லுள்ள வலகிலா வுயிர்க டோறு
மனங்களில் வியாபி யாகி வாழ்வுறக் கடவ னென்று
தனங்கிளர் பொலன்கொம் பென்னுந் தற்பரை யுரைத்த பின்னர்
கனங்குழை யோடு மீசன் கயிலையங் குவட்டிற் போனுன். (உக)

விஷ்ணுமூர்த்தி தனதிருக்கை யெய்துதல்.

தொண்டைவாய்த் திருவி னெடுந் துதைந்துசால் வளைத்துக் கிண்டி
வண்டுவாய் மடுக்குந் தோறும் வழிநருத் திவலை தூற்றுந்
தண்டுழா யலங்கல் பூத்த தடம்புயன் மகிழ்வு பொங்கப்
பண்டைநான் மறைகள் வாழ்த்தப் பாற்கடற் பள்ளி சேர்ந்தான். (உஉ)

சிவார்ச்சனையிற் பூசிக்கத்தக்கவரை அவசியம் பூசிக்கவேண்டுமெனல்.

மூவரின் முதல்வ னென முக்கணன் பூசை தன்னில்
யாவர்கள் பூசை பண்ணத் தக்கவ னெனவே யெண்ணி
யோவறு பூசை பண்ணு துறுதுய ரடைந்தான் றெய்வக்
காவல்செய் கடவு ளென்ரும் யாவரே கணித்தி டாதார். (உங)

முனிவர்கள் இக் கதையினைக் கேட்டு மகிழ்தல்.

துகளறு மனத்த னுப சூதனிக் காதை யோர்ந்து
பகர்தலு மறைதேர்ந் தூள்ளப் பற்றறுத் துயர்ந்த தெய்வ
மகநனி முறையி னுற்று மலர்ப்பொழி லிருக்கை மேய
நிகரருந் தவத்தோர் யாரு நெஞ்சகங் களித்தா ரன்றே. (உச)

விட்டுணு மன்மதனைப் பெறச் சிவார்ச்சனைபண்ணின
அத்தியாயம் முற்றும்.

ஒன்பதாவது
விட்டுணு சக்கரம் பெறச் சிவார்ச்சனைபண்ணின அத்தியாயம்.

சூதமுனிவர் கதையினைக் கூறத் தொடங்கல்.

பொருதிரை கலக்கித் தெய்வப் புத்தமு திமையோர்க் கீய்ந்த
கரியவ னெயில்கண் மூன்றும் காய்ந்தவன் கழற்கால் போற்றி
விரிகதிர்த் திகிரி பெற்ற காதையை விரிப்ப னென்னத்
துரிசறு முனிவர் கேட்பச் சூதமா முனிவன் சொல்லும். (க)

தேவாசுர யுத்தத்தில் தேவர்கள் தோற்றோடி,
விஷ்ணுவினிட மடைக்கலம் புகுதல்.

இந்திரன் முதலா யுள்ள விமையவ செவருந் நிய
வெந்திறற் கொடிய தானே யசுரரு மிடைந்த போரின்
மைந்துறு நிருதர்க் காற்ரு திடைந்தனர் வானே ரோடிப்
பைந்துழாய் முகிலே நாடிப் பாற்கட லடைந்தா ரன்றே. (உ)

விஷ்ணுமூர்த்தி, தேவர்கள் பயந்து ஓடிவருவதற்கான காரணத்தைக் கேட்டல்.

விண்ணவர் வரவை நோக்கி மாயவன் விளம்பு மோடித்
துண்ணென வெருண்டு வந்தி சென்கொலோ சொல்க வென்ன
மண்ணக முழுது முள்ள வரையெறி வயிரச் செங்கை
அண்ணல்செம் பவள வாய்விண் டினைய வறைவ தானன். (ஈ)

அசுரர்களின் போருக்காற்றாது வந்தமையையும், அசுரர்களது பலத்தினையும் இந்திரன் விஷ்ணுமூர்த்தியிடம் கூறுதல்.

கொன்றுயிர் குடிக்குங் கூற்றிற் கொலைபுரிந் துலகம் வீட்டும்
புன்றொழி னிருத சாற்றும் போரினுக் கஞ்சிப் போந்தே
மன்றலம் பூவை மேனி மாயவ தின்னை யன்றி
யின்றெமைக் காக்க லுக யாவரே காக்க வல்லார். (உ)

தானவ ரளவி லாத தனிவர மடைந்த வாற்றல்
யானடல் கெழுமும் வாறு செவர்களு மெதிர்க்கி லாற்றேந்
தேனகு பசும்பொற் போது சிந்துபைந் தருங்க ளார்ந்த
வானகர் முழுதும் பாழ்போய்க் கிடந்தது வளங்க ளின்றி. (ஊ)

தோமரஞ் சூலங் குந்தஞ் சுடரிலை நெடுவேல் வாசத்
தாமவெண் ணிலவு காலும் வச்சிரந் தழலோன் வாளி
பூமகன் படைகு பேரன் பொருகணை பொருவி லாத
நாமவா ருணமற் றுள்ள படைகளு நலிந்த வன்றே. (ஊ)

அசுரரை வெல்லுதற்குச் சக்கரப்படை வேண்டுமெனல்.

கருதரும் படைகள் யாவுங் கலந்திடுஞ் சமரில் வஞ்ச
நிருதர் மேற் செல்வி னீறு மன்னவா நெடிய வாக்கைக்
குருதியுங் குடரு முண்ணக் கொழுங்கதிர் விரிக்கும் வாலப்
பருதியை யணைய செங்கேழ்ப் படைக்கொடுந் திகிரி வேண்டும். (எ)

விஷ்ணுமூர்த்தியின் கையிலிருக்கும் சக்கரம் முன்னர்த் ததீசிமுனிவரால் பொடிபட்டதினால், சிவபிரானிடம் சலந்தராசுரனைக் கொன்ற சக்கரப்படையை வாங்கி, அசுரரைக் கொல்லுமாறு கூறுதல்.

சிரிய நினது செம்பொற் றிருக்கரத் திருந்த தெய்வச்
சூரியன் மண்ட லத்திற் றோன்றிய திகிரி முன்னம்
போரினிற் றதீசி தன்னுற் பொடிந்ததே புலவுச் சூல
வேரியங் கடுக்கை மாலை வேணிவிண் ணவனோர் காலம். (அ)

சலந்தர னுயிரை வீட்டச் சமைத்தசக் கரத்தை வாங்கிக்
கலங்குற வசுரர் தங்க ளுயிரினைக் கவர வேண்டு
மலங்கலந் துளவோ யென்ன வறைந்தன னறைத லோடு
நலங்கிள ரிமையோர்க் கெல்லா நன்றென வபய நல்கி. (கூ)

வேறு.

விஷ்ணு சக்கரப்படை பெறுவதற்குச் சிவபிரானை யருச்சித்தல்.

பெருகு செங்கதிர்ச் சக்கரம் பெற்றிட
வருள் பழுத்த வலங்கிழை பங்கனை
யுருகு காத வுளத்தொடு மாயவன்
பொருவி லாத்தனிப் பூசை புரிந்தனன். (கo)

விஷ்ணு ஆயிரந் தாமரைமலரால் தினந்தோறு மருச்சித்தல்.

எண்ணி லாயிர மோம மியற்றினு
னண்ண லாயிர நாம மறைந்துபொற்
றண்ணு லாந்துணர்த் தாமரைப் போதினு
னண்ணு மர்ச்சனை நாடொறுஞ் செய்தனன். (கக)

சிவபிரான் விஷ்ணுவின் அன்பினை யுணருமாறு ஒருநாள் ஓர் தாமரைமலர் குறையும்படி செய்தல்.

வழுவி லர்ச்சனை யாற்றிய மாயவன்
குழையு மன்புண ரக்குறித் தோர்தினம்
புழை நெடுங்கைப் பொருப்புயத் தோனறை
யொழுகு தாம்பரை யொன்றை யொழித்தனன். (கஉ)

ஒரு தாமரைமலர் குறைந்ததைக் கண்டு கலங்கியுற்ற விஷ்ணுமூர்த்தி தமது கண்ணைத் தோண்டியெடுத்து மலராக அருச்சித்தல்.

அன்றை யர்ச்சனை செய்வதற் கம்மல
ரொன்று கண்டில னுள்ள முடைந்தனன்
கொன்றை சூடும் குழக னருச்சனைக்
கின்றி டர்வரு மோவென வெண்ணினன். (கங)

சித பங்கயச் செம்மலர் போலவே
யாது மில்லை யிணைவிழி யாமெனக்
காத லோடு பிடந்தொரு கண்ணையும்
போது புங்கவன் பொன்னடி சாத்தினன். (கச)

சிவபிரான் விஷ்ணுமூர்த்திக்குக் கோர ரூபத்துடன் தோன்றியருளுதல்.

இன்ன தன்மையைக் கண்டன னெம்பிரான்
மன்னு சூல மடங்க லிவிர்கதை
துன்னு பாசஞ் சுடர்மழு வங்குச
மன்ன பையம் வரதம் விளங்கவே. (கரு)

அடரும் வெப்புலி யாடை மருங்குறச்
சுடரும் வெண்பொடி மேனி துலங்கவே
படரருஞ் செஞ்சடை மோலியிற் பற்றுளே
விட மொழுகிய நாகமும் வீக்கியே. (கசு)

பாங்கர் யோசனை நூறு படரெரி
யோங்க வண்ட மசைய வுருத்துளந்
தேங்கு வெஞ்சினச் செந்தழல் கட்கடை
தூங்க வார்த்துக் கதுமெனத் தோன்றினன். (கள)

விஷ்ணுமூர்த்தி சிவபிரானைத் துதித்தலும்,
சிவபிரான் உனது பக்திக்கு மெச்சினேம்; நீ விரும்பியபடி
சக்கரப்படையைத் தருவோம் எனக் கூறுதலும்.

மங்கை பங்கனைக் கண்டனன் மாதவன்
செங்கை கூப்பித் திருமுடி வைத்தன
னங்கண் மேய வமரர்கள் யாவருந்
தங்கு மச்சந் தலைப்பட வோடினர். (கஅ)

விதுவ ணிந்த விரிசடை விண்ணவ
னதிர்க டற்றுயி லெயனை நோக்கியே
புதுநி லாக்குறு மூரல் புரிந்தனன்
மதுர மென்கனி வாய்திறக் தோழுவான். (ககூ)

வேறு.

மென்மல ரொன்று போக விழிமல ரிடந்து சாத்தி
யென்மனங் களிக்கப் பூசை யியற்றினை யினிமற் றுண்டோ
நின்மனங் கருது கின்ற தறிந்தன னினக்குத் தெய்வத்
தன்மைய தாகுஞ் சோதிச் சக்கரம் தருவ லென்றான். (உ0)

சாந்த வடிவுடன் அளிக்கும் ஆயுதம் சாந்தமாயிருக்கும்; ஆதலினுல்
அங்ஙனம் வாது கோர ரூபத்துடன் வந்ததாகக் கூறிச்
சக்கரப்படையைக் கொடுத்தல்.

பொறைவடி வெடுத்துக் கொல்லும் பொருபடை யளிக்கி லன்ன
முறைவழி சாந்த மாகு முழுவதும் வேகம் பொங்கி
நிறைவடி வெடுத்து நல்கிற் படையுமந் நெறியி னிற்குங்
குறைவற வதனுல் யாமுங் கோரமெய் வடிவங் கொண்டேம். (உக)

நீயுமிவ் வடிவி னென்னை நிஜைந்துவெஞ் சினத்தி னேனு
மேயபோர் புரியி லாழி விடுகெவென் றமலன் சாற்றிக்
காய்கதி ரயுதம் போலக் காந்திசெய் திகிரி யீந்தான்
மாயவ னவனை யேத்தித் திகிரியை வாங்கி னேனே. (உஉ)

சிவபிரான் விஷ்ணுவுக்குக் கண்ணையும் கொடுத்து, இன்னும் வேண்டிய
வரங்களைக் கேட்கும்படி கூறுதல்.

பின்னரு மகிழ்ந்து ஞானப் பிஞ்ஞகன் கமலம் போலுஞ்
சின்மய வடிவ மாய செங்கணுங் கொடுத்தான் வேரிப்
பொன்னவிர் கமலம் பூத்த பொருப்பினைத் தழுவிக் கொண்டா
னின்னுநல் வரங்கள் யாவுந் தருகுவ லிசைத்தி யென்றான். (உங)

விஷ்ணுமூர்த்தி உம்முடைய சரணங்களைக் கருதும் வரமே வேண்டுமெனக்
கேட்கச் சிவபிரான் அவ்வாறருளுதல்.

மூருகல ரிதழித் திண்டோண் முக்கணு னீது கூறத்
திருமகள் கொழுநன் செங்கை சென்னிமேன் முகிழ்த்துச் செப்பு
முருகிய மனத்த னாகி யுனதுபொற் சரணப் போது
கருதுநல் வரமே வேண்டு மென்னலுங் களிப்பி னீய்ந்தான். (உச)

சிவபிரான், உமையம்மையாரை வதுவைசெய்யும்போது உனக்கு
முடிதரிப்போம் என்றும், விஷ்ணுமூர்த்தி செய்த சகத்திரநாமத்தைச்
சொல்லிப் பூசனைபுரிவோர் பலனடைவ ரெனவும் கூறி மறைதல்.

தத்தையங் குதலைத் தீஞ்சொ லுமைதிருத் தாதை யாய
வித்தக மறைக ளோதுந் தக்கணை வெறுத்து விண்ணின்
மைத்தகு முகில ளக்கர் மணிமுடி யிமயம் பெற்ற
புத்திரி யாகத் தோன்றும் புனைதுழாய் புரளும் தோளாய். (உடு)

சதுமறை துதிக்கு நின்பொற் சகோதரி யுமையைப் போதின்
விதிசடங் கியற்ற நீநல் விருப்பொடு மெனக்கு நீதி
வதுவைசெய் விக்கு மந்நா ளுனக்கியா மகிழ்ந்து செம்பொற்
கதிரொளி கவற்றுங் தெய்வ மணிமுடி கவிப்போ மென்றான். (உசு)

எரிமணி மார்ப நீயின் றிசைத்தவா யிரநா மத்தைக்
கருதிநெக் குடைந்தே யுள்ளங் கனிதரக் கழறி னோர்கள்
பரிமள மாயி ரஞ்செய் பலத்தினை யடைவ ரென்று
விரிசடைக் கடவுள் சொல்லி மறைந்தனன் விண்ணை ணார்த்தார். ()

சூதமுனிவரிடம் இச் சரித்திரத்தைக் கேட்ட முனிவர்கள் மகிழ்தல்.

சூதனிக் காதை யெல்லாஞ் சொல்லிநற் கதியை வேண்டி
லாதர மெழுந்து பொங்க வாயிர நாமங் கூறி
நாதனுக் குரிய பூசை நாடொறும் புரிதி யென்ன
மாதவர் குழுவை நோக்கி வழங்கலு மகிழ்ந்தா ரன்றே. (உஅ)

விட்டுணு சக்கரம் பெறச் சிவார்ச்சனைபண்ணின
அத்தியாயம் முற்றும்.

பத்தாவது
வசுசுருதன் பத்தியோகமகிமையுரைத்த அத்தியாயம்.

வசுசுருதன் கதையினைச் சூதமுனிவர் கூறத் தொடங்கல்.

வண்டுமுர னறுந்தெரியல் வசுசுருதன் வரைகுழைத்து வரிவி லேந்தும்
புண்டரிகக் காதலத்துப் பெருமானைப் பத்திநனி புரிந்த காதை
விண்டநறை மடற்கமலச் சதுவேதன் வீணைமுனிக் கிசைத்த வண்ணம்
பண்டமறை வரமுனிவர் கேட்கவருட் சூதமுனி பகர்வ தானான். (க)

பிரமனது அரசிருக்கை.

தண்ணகுங் தருவலிக்கும் பசுங்கனக நிழலுமிழ்ச தியலோ சத்தில்
பண்ணெழுகு மிசைவடித்துப் பேரியாழ் கின்னரர்கள் பயின்று பாட
வெண்ணரிய முனிவரருந் தேவர்களுஞ் சது'மறையி னிறைஞ்சி யேத்த
வண்ணமடற் செழுங்கமலப் பீடிகைமே லரசிருந்தான் வாணி கேள்வன்.

பிரமனவைக்கண் நாரதமுனிவர் சென்று தொழுதல்.

அவிரழலிற் சிவந்த நெடுஞ் சடைமுடிநா ரதன்பிரம னவையின் வந்து
துவலைசொரு மலர்தூவி யன்னவன்சே வடிக்கமலம் தொழுது வீழ்ந்து
திவவுமணி யாழ்நரம்பு கசந்தடவி யிசைபாடிச் சேவை செய்தா
னுவகைகெடுங் கடலமிழ்ந்தி முகநோக்கி யொருமாற்ற முரைப்ப தானான்.

நாரதர் சிவபிரானது பக்தியோகத்தைக் கூறும்படி பிரமனிடம் வேண்டுதல்.

அளக்கரிய மறைக்கடலின் கரைகண்டே யுயிர்முழுது மளிக்கு மெந்தாய்
திளக்கும்வர நதிமுடித்தோன் பத்தியோ கப்பெருமை செப்பு கென்னத்
துளக்கிமுடிக்கமுகிழ்த்துக்கயிலைவரைப்பெருமானைத் துதித்துப்போற்றி
விளக்கமுறச்சதுமுகத்தோ னதன்பெருமை கேட்டியென விளம்புவானால்.

வேறு.

பிரமதேவர் சிவபிரானது பக்தியோகமுறைமையினைக் கூறுதல்.

எந்தை நாயகன் பத்திவந் தெய்துவ தெளிதோ
வந்த மாதவங் கைவரி னழலிடுந் தருமம்பின்
வெந்து நீறெழு மிருவினைப் பகுதியும் விரைந்து
முந்து மாகம மொழிதரு முத்தியு மடைவார். (நி)

சித்த மன்புற வருமறை யனைத்தையுந் தெரிதல்
கொத்து வேள்விகள் யோகங்கள் குறைவறப் புரிதன்
மத்த மாடர வசைத்திடும் வானவ னிடத்திற்
பத்தி செய்வதற் கிணையல வுணர்ந்துரை பகரில். (நு)

நீண்ட செஞ்சடை நிருமலன் சேவடிக் கமலத்
தீண்டு பத்திசெய் திடுபவ செப்பவஞ் செயினுந்
தீண்டு தற்கரி தாகியே புறமிடுந் தீயோர்
மூண்டு சேரினு மவர்வினை முழுவது முடிப்பார். (எ)

அந்த மண்ணளித் தருளர சைந்தரு நகர
மிந்த நன்னகர் மாயவன் வளநக ரிவைகள்
பந்த மற்றுய ரெம்பிரான் பத்தியோர் பதத்தைச்
சிந்தை செய்பவர் தெரிசனங் கிடைத்தவர் சார்வார். (அ)

பாவ மேற்படப் பயில்கொடும் புலையரா யிடினு
மாவ லோடும்வெண் பொடித்திரி புண்டர மணிக்தோர்
பூவெ டுத்தடி பிணைகளிற் றாவியே புகழ்ந்து
தேவர் யாவரும் பூசனை புரிதரு தேவர். (கூ)

துளவ மாயவன் பரவருஞ் சோதியை நோக்கி
யுளம கிழ்ந்திடு தானமற் றுறுசெப மூணர்ந்து
புளக மெய்திய தியானநூல் வழிமுறை புரியி
லளவ றுந்தனிப் பலத்தினை யானுவந் தளிக்கும். (கo)

கருது மட்டமி பூரணை சதுர்த்தசி கருநாள்
வருதி னத்தினி லீசனை வந்தனை புரிவோர்
சுருதி சொற்றிடு மகமனைத் தையுந்துக ளறவே
யரிதி னுற்றிய பலமெலா மொருப்பட வடைவார். (கக)

மண்ட லேசுரம் புட்கர மதிமுடி யணவங்
கெண்ட கைகுருக் கேத்திரங் கெயைதிரி பதகை
தெண்டி ரைக்கடல் கெழுமிடஞ் செந்தளிர்ச் சினைபோய்க்
கொண்டன் மேற்படா தண்டலை யுருத்திர கோடி. (கஉ)

சாத்தி ரங்கருங் குயில்பயி னயிமிசா ரணிய
நேத்தி ரம்புவிக் கெனுந்தவ நிறைபிற பாசக்
கேத்தி ரம்பிர யாகையில் வசிப்பவர் கிளக்குஞ்
சூத்தி ரத்தனி மறைப்படி பரிமகந் தொடங்கி. (கங)

ஆற்று வோர்தமக் கெய்திடும் பலனெலா மரனை
யூற்று தண்ணரு மலரெடுத் தொருபகன் மகிழ்ந்து
போற்று வோர்தமக் கடைந்திடு நாடொறும் பூசை
சாற்று மாகமம் படிசெய்வோர் தகைமையா ரறிவார். (கச)

நீடு செஞ்சடை நிமலனைப் பூசனை புரிவோர்
தேடி வேறொரு தேவர்கள் பூசனை செய்யி
லேடு லாமலர்க் கரத்தொளிர் மணியினை யெறிந்தே
யோடு தேடிய பித்தரி லொருவரென் றுரைப்பார். (கஞ)

வேறு.

விரிசடைப் பரனே யிலிங்கமா முகத்தில்
வியப்புறு பூசனை புரித
லரியமா தவர்க்கே கிடைத்திடும் பிறர்செய்
யருச்சனை வேளையி லதனைத்
தெரிசனம் புரிந்து தெண்டனிட் டவருஞ்
சிந்தையி லிருங்களி திளைக்க
வருமறை நெறியிற் பவுண்டரீ கஞ்செய்
பலத்தினை யடைவது சாதம். (கசு)

ஈசனன் பினைசைக் காண்குறி லவசோ
டின்புற வொருமொழி பகரி
லாசறு மதிராத் திரமக மியற்றும்
பலத்தினை யடைவரன் னவரை
நேசமே யின்றி யிகழ்ந்தவ ரழலு
நிரையமே காணிகொண் டிருப்பார்
பூசனை யகர்பாற் புரிந்தவர் சிவனைப்
பூசைசெய் திடுபல மடைவார். (கள)

கருவிட மொடுக்குங் களத்தினு னடியர்
கருதியோர் பிழைபுரிந் திடினு
மடியவர் பிழையென் றமலனே யதனுக்
கமைத்திடுந் தொழில்வினைத் தறுப்பான்
மடலவிழ் மலர்த்தா ராசசாற் கொடிய
மறலியால் வருத்தமுற் றிளையார்
தொடருமிந் திரிய மவித்தர னடிக்குத்
தொண்டுசெய் பவர்களே கணங்கள். (கஅ)

வருணமோர் நான்கும் வகுக்குமாச் சிரம
மகிமையும் வழங்குநற் குணத்தின்
பெருமையு மிழந்த நீசரே யெனும்
பிஞ்ஞகன் பத்தியுள் ளவர்க
ளருவினைப் பிறவிக் கடல்கடந் திடுவ
ரளவிலாச் சமயம்வீழ்ந் திடினும்
விரிசடைப் பரமர்க் கடிமைபூண் டல்லால்
வீடுபெற் றிடுவதென் றிலைபால். (கக)

துள்ளுதெண் டிரைக்கண் டுயில்வளர் முகிலும்
யரனும்வண் டுடிக்கரத் தவன்பா
லெள்ளரும் பத்தி புரிந்திடு பதமு
மடைந்தன நீயுமே சறவே
யுள்ளகெக் குருகி யியற்றிடுங் கருமம்
யாவையு மொழித்தவ னடியில்
விள்ளுதற் கரிய பத்தியே விளைக்கில்
விரைவினின் முத்திவந் தடையும். (உ0)

பிரமன், பத்தியோகத்தின் கதையொன்றினைக் கூறுதல்.

வேறு.

ஆடும் பாந்த ளயர்ந்து துயில்கொளச்
சூடுங் கொன்றைத் தொடையின் சுரும்பினம்
பாடுஞ் செஞ்சடை யோன்பத்தி யோகத்தின்
கேடில் காதையொன் றோதுவன் கேட்டியால். (உக)

சத்தியத்துவசனது நகரச் சிறப்பு.

பள்ள நீர்வய லெங்கும் பரந்துபோய்த்
துள்ளு மீனைத் தொடர்ந்து பசலைவாய்ப்
பிள்ளை தாவப் பெருஞ்சிறை நீக்கியே
யள்ளல் வீழ வணைக்குங் குருகுகள். (உஉ)

சரு நெடுங்கட் கடைசியர் கொய்திடு
முருகு னெய்தன் முளரி முடிக்களை
பெருகு நீள்வயற் பிள்ளை நெடுவரம்
பருகு வீழ்தலு மன்னஞ் சிலம்புமால். (உங)

ஆடல் வண்டின மந்தியுங் காலையுங்
காட லர்ந்த கருங்குவ ளைக்கணு
மேட லர்ந்த விருங்கம லத்தினும்
பாடல் செய்யும் பழனங்கள் பாங்கெலாம். (உச)

ஆடு தெண்டிரை யார்கலி யேழுமோர்
நீடு தெண்டிரை நீரக ழாகவே
மாடு சூழ வளர்மதி மண்டலத்
தூடு போய்நிமிர்ந் தோங்கிடு மூதெயில். (உஞ)

செஞ்சி லக்கைத் திறன்மத னுகம
மஞ்சி லோதியர் சொல்ல வருகிளம்
பஞ்சி றைக்கிளி பேசும் படர்நெடு
மஞ்சு தோயு மணிநெடு மாடமே. (உசு)

தூத னுப்பிற் சுரும்பினஞ் சோலைவாய்ப்
போதி ருந்து புதுமது வுண்ணுமென்
ரோது காத லுரைக்க மடந்தைய
ராத ரத்தொடு மன்னங் கணிப்பரால். (உள)

மற்ற டப்புயம் வாய்ந்த மதுணர்கள்
கற்றை மென்குழற் கன்னியர் நூபுரச்
சிற்ற டித்துணை சென்னி புனைந்தவ
ருற்ற கோபத்தி னூடலை மாற்றுவார். (உஅ)

கறைய டிப்பெருங் காற்றலை நீக்கிநீர்த்
துறைவி டுந்தொறுங் தோகையர் பாலர்மெய்ம்
மறைதெ ரிந்தவர் வாரலென் றெங்கணும்
பறைய டித்திடு மோதைப ரம்புமால். (உசு)

அந்த மங்கையர் மேடையி லங்கணை
சிந்து மன்மதன் றென்றலந் தேர்நெடுஞ்
சந்தி தோறுந் தனிவிளை யாட்டயர்
மைந்த ருரு மணிநெடுந் தேர்களே. (ஈ0)

எல்லை யின்றி யினையன வாகிய
செல்வ மோங்குமுச் சீனித் திருநகர்
மல்ல னன்னகர் மாமறை நூன்மனுச்
சொல்லு நீதியிற் காத்திடுந் தோன்றலான். (ஈக)

வேறு.

அத்திரத் தடங்க னல்லார்க் காடலஞ் சிலைவே ளன்ன
வித்தகக் குரிசின் மோட்டு விறல்கெழும் வலையத் தேளான்
சித்தம்வைத் தடல்வேன் மன்னர் செருவினில் வளங்குந் தாளான்
சத்தியத் துவச னென்னுந் தார்மணி மவுலி வேந்தன். (ஈஉ)

சத்தியத்துவசனிறந்தபின், அவன் மகன் வசுசருதன் அரசாட்சிசெய்தல்.

அன்னவ னுலகுக் கெல்லா மாவியும் விழியும் போல
மன்னிய காவல் பூண்டு வரன்முறை வழாம லாண்டு
பொன்னக ரடைந்தான் பின்ன ரவனருள் புதல்வன் பூத்த
மின்னவிர் வயவாள் வேந்தன் விறல்வசு சுருத னென்பான். (ஈஈ)

வசுசுருதன் சிவபத்தி மாத்திரமுடையவனுய், அதர்மங்கள்
பல செய்தல்.

அத்திரு நகரிற் றிங்கள் மணிமுடி மாகா ளேசன்
முத்தியை யளிக்கு ஞான முருகுலாங் கமலத் தாளிற்
பத்தியை யிடைய ரு துபண் ணுவன் பரிந்து பூசை
சித்தியம் புரிவன் வேரூர் தருமமு நினைத்தல் செய்பான். (ஈச)

தட்டரை யருளிற் காப்பன் றுகளறு மனத்த ராய
சிட்டருக் கிடுக்கண் செய்வன் றீவினை யிட்டி யிட்டி
வெட்டிவெண் டிரைநீர் சிந்தும் வேலைசூ ழுலகி லுள்ள
மட்டிலா வுயிர்க ளெல்லாம் வருந்தவே வருத்தஞ் செய்வான். (ஈடு)

முந்திய மறைக ளோது முறைநெறி வழுவி லாதே
யந்தணர் புரியும் வேள்வி யவனரா லழிப்ப னந்தச்
செந்தழன் மறையோர் தம்மைக் காண்கினுஞ் சிவந்த தீய
வெந்தழல் விழிகள் சிந்த வெடிபட முழங்கிச் சீறும். (ஈசு)

மணிமுடி வேந்த ராற்று மனுமுறை யனைத்து நீங்கிப்
பணிமுடிக் கிடந்த தெண்ணீர்ப் பரவைசூழ் ஞால மெல்லா
மணிமுடி கவிழ்த்தி யாண்டா னுயிரம் பருவம் பின்னர்
தணிமுடி யுடைய னுகித் தளந்துயிர் விடுக்குங் காலை. (ஈள)

வசுசருதன் இறத்தலும், சிவகணங்கள் வந்து அவனை மானத்தேற்றுதலும்.

கவரிசேர் சூல மேந்துங் கடுங்கொலை மறலி தூத
ரவனிடத் தணைத லுணர்ந்து யமிர்மதி சடையிற் சூடுஞ்
சிவகணத் தவர்கள் வந்து தெய்வத வுடல நல்கிப்
பவமறுத் தவனீ யென்னப் பற்றியே மானம் வைத்தார். (ஈஅ)

இதனைக் கண்ட யமதூதர் கோபித்து, அரசனைத் தாம் பற்றுதல்.

ஆங்கவர் செய்கை கண்டா ரந்தகன் கொடிய தூதர்
தீங்குறும் பதகன் றன்னை யித்தகை செய்தற் பாற்றே
நீங்குவிர் நீவி ரென்ன நெருங்கின ராசன் றன்பாற்
பாங்குறு கணங்க ளன்ன பரிசினைப் பார்த்து நக்கார். (ஈக)

சிவகணங்கள் யமதூதரைத் தண்டித்து, வசுசருத னுயிரைச்
சிவலோகம் சேர்ப்பித்தல்.

அந்தகன் கொடிய தூதீ ரகலுமி னீங்க ளென்னச்
செந்தழ னிறத்த குஞ்சிச் சிறுசடை திரளச் சென்னீ
ருந்துபே ரருவி பாய வுச்சியிற் கதையா லோச்சி
மைந்துறு தடந்தோள் வேந்தை மழுவலா னகரஞ் சேர்த்தார். (சO)

சிவகணங்களின் செய்கையை யமதூதர் சென்று யமனுக்குரைத்தல்.

வெள்ளியங் கயிலை நாதன் கணத்தவர் விளைத்த வெல்லாம்
வள்ளிலை யலங்கற் சூல மறலிதன் னவையி னெய்தி
யுள்ளவா றுரைத்துத் தூத ருலகுயி ருணங்கக் காய்ந்தா
னெள்ளருந் தரும மீட்டா திழிபவத் தலைமை பூண்டான். (சக)

மனுமுறை நடத்திக் தெய்வ மகம்புரிந் தவமீரு வல்லன்
புனிதரான் மறையோர் தம்மைப் பூசனை புரிந்தே னல்ல
னினியெடுத் தூரைப்ப தென்னை யெத்தவம் புரிந்தான் வேந்தன்
பனிமதிக் கண்ணி யெம்மான் பதிபுகுந் திருக்கப் பெற்றான். (சஉ)

இன்னணம் பதக ரெல்லா மிருங்கதி யெளிதிற் பெற்ரு
னின்னதி காரஞ் சற்று நடக்குமோ வென்ன நீண்ட
மின்னவிர் தண்ட மேந்தி மிளிர்மணி குயிற்றுஞ் சீயப்
பொன்னணை யிருந்த கூற்றுப் புகரறப் புகல்வ தானான். (சங)

யமன் சிவனடியாரிடத்தன்றி, மற்றவர்களிடத்திற்ரான்
தன்னதிகாரம் செலுத்தலாமென்று தூதருக்குரைத்தல்.

வேறு.

வஞ்சி யிடத்தான் மலர்த்தாள் குடியிருத்து
நெஞ்சினரை யன்றி யெனக்கு நெடுநிலத்தோர்
விஞ்சு மிமையவர்செய் வெவ்வினைகண் டன்னவர்கட்
கஞ்சு துயரூட்டு மதற்கே யதிகாரம். (சச)

வசுசுருதன் அதர்மவானுயினும் சிவபத்தியுடையனெனல்.

ஏம வரைத்தடந்தோ ளேந்தல் வசுசுருதன்
மாமறைக ளேத்தெடுக்கு மாகாள நாயகனைக்
காமுறவே முக்கரணத் தோடுங் கனிந்துருகித்
தோமறவே பத்தி தொலையாது செய்தனனால். (சடு)

வேந்தன் புரிந்தருளும் வெவ்வினைக ளன்னதனற்
காந்துங் கதிரிற் கலக்தபனிப் போலொழிந்தான்
பாந்த ளுயிர்ப்பெறியப் பான்மதியங் கொன்றைபுகுஞ்
சேந்த நெடுஞ்சடையான் றெய்வ நகரடைந்தான். (சசு)

"சிவகணங்கள் உம்மைத் தண்டித்தமை நீதியே" யென்று கூறுதல்.

இன்றதனை நீங்க ளறிந்தீ ரிலைப்போலுங்
கொன்றும் முயிர்குடித்துக் கொள்ளாமை யிவ்வளவு
நன்றி புரிந்தார் நரையே றுயர்த்தபிரான்
வென்றி நெடுந்தடந்தோள் வீரப் பொருகணங்கள். (சஎ)

துங்க மறையோன் சுவேதன் றனக்காக
வங்கை மழுவோ னெனைபடர்த்தா னன்றுமுதற்
கங்கை தரித்தோ னடியர் தமைக்காண்கிற்
சிங்க மெதிர்த்த செருவிலங்கி லஞ்சுவனால். (சஅ)

இனிமேல் சிவனடியார்களைக் கண்டால் வணங்கிச் செல்லும்படி
தூதருக்கு யமன் கூறுதல்.

ஆதிப் பரனடியா ரென்னபவ மாற்றிடினுங்
காதற் கருத்திலுடி நீவிரவர்க் காண்டோறுஞ்
சீதத் தடமலர்க்கை சென்னி மிசைமுகிழ்த்துப்
போதப் படுவதுவே புத்தியுமக் கென்றுரைத்தான். (சகூ)

மையொழுகு மேனி மறலி யிவையுரைக்க
வெய்ய கொடுந்தூதர் வெவ்வாய் விடங்கொழிக்கும்
பையரவஞ் சூடும் பரமன் கணத்தவர்கள்
செய்த வருத்தமெலாந் தீர்ந்து மனங்களித்தார். (சுo)

பிரமனிடம் இக் கதையினைக் கேட்ட நாரதர் மனமகிழ்ந்து செல்லுதல்.

என்ன மடற்கமலத் தெந்தை யினிதிசைக்க
மன்னு மணியாழ் வரமுனிவ னன்புருகிச்
சென்னி வணங்கித் திசைமுகனைக் கைதொழுது
பொன்ன கரிற் றனதிருக்கை போயினனால். (சுக)

சூதமுனிவரிடம் இச் சரிதத்தைக் கேட்ட முனிவர்கள் மகிழ்தல்.

முற்றும் விடைய முனிந்த முனிசூதன்
சொற்றருளு மிக்காதை காதேற்றுச் சூழ்கிரண
மெற்றி யழல்விழியோ னெண்மை நினைவரிதென்
றுற்ற தவத்தோ ருளத்துவகை பொங்கினரால். (சுஉ)

வசுசுருதன் பத்தியோகமகிமையுரைத்த அத்தியாயம் முற்றும்.

பதினொராவது
பிருங்கி பிரதக்கிணமகிமையுரைத்த
அத்தியாயம்.

சூதமுனிவர் கதையினைக் கூறத் தொடங்கல்.

சுருதிகற் றுணர்ந்த பிருங்கிமால் விடையூர்
சோதியை வலஞ்செய்த காதை
பொருதிரை யிரட்டும் பொருநையா றுடுத்த
பொதியவெற் புறைதமிழ் முனிக்குப்
பருதியொத் திலகு மார்பினன் வடிவேற்
பண்ணவன் பகர்ந்தருள் வண்ணந்
தெருளுற வுரைப்ப லென்றுமா தவத்தோர்
செவிகொளச் சூதனுண் டுரைக்கும். (க)

அகத்தியமுனிவர் சுப்பிரமணியப்பெருமானிடம் உயர்கதியளிக்கவல்ல தருமம் யாதென வினவுதல்.

துப்புறழ் குடுமி வாரண முயர்த்த
தோன்றல்பொற் றுணையடி பரவி
யிப்பிவிண் டுமிழ்ந்த சுடர்மணித் தாள
மெறிதிரைக் கருங்கடல் குடித்தோன்
செப்புநற் றரும மனைத்தினு முயர்ந்து
சனனமு மரணமு மொழித்தே
யொப்பருங் கதியை யளிக்குமோர் தருமம்
புகலென வன்னவ னுரைக்கும். (உ)

சுப்பிரமணியப்பெருமான் சிவப்பிரதக்ஷிணமே மேலான தருமமென்று கூறி, பிருங்கிமுனிவர் கதையினைக் கூறுதல்.

மறுவறு பிரம சரியமே முதல
வகுத்தவாச் சிரமமோர் நான்கு
முறைதர வியற்ற லரிதரி தாகு
மொழிதரு முடிவிலாச் சுருதி
துறைபடு சோதிட் டோமமே முதல
வேள்விக ளனைத்தையுந் தூடங்[கிக்
கு]றைபடா தவற்றின் விதிவழி திருந்தப்
புரிகுதல் யாவரா றூடும். (ங)

ளிதினி லிழைத்து முத்தியை யடையு
மிருந்தவ மிளநிலாக் கொழிக்கு
நவிமதிக் குழவி புரிசடைக் கணிந்த
நாதனை வலனுற வருத
றெளிதர வதன்சொற் காதையொன் றறைவல்
செந்தமிழ்ப் பெருக்கொடுந் தேங்கி
யளிபழுத் தொழுகுஞ் சிந்தைமா முனிவ
கேட்டியென் றறுமுக னறைவான். (ச)

பிருங்கிமுனிவர் சிவபிரானைத் தரிசிக்குமாறு கடுந்தவ மியற்றல்.

மின்னின்வீ ழணைய விரிசடை முனிவன்
பிருங்கியென் றருமறை விருப்போன்
பன்னக மணிந்த பரன்கழல் கருதும்
பத்திமிக் குயர்ந்தவற் காண்பான்
பொன்னவிர் குடுமிச் சிகரமந் தரம்போய்ப்
புகுந்தனன் புலன்களைந் தடக்கி
மன்னிருஞ் சிறுகால் வாய்மடித் தமரர்
வளருமாண் டயுதமாங் கிருந்தான். (ஞ)

செந்தழ லுன்கு திசையினுங் கனலச்
செழுங்கதிர் மேல்வெயில் விரிக்க
வெந்துடல் வருந்தக் கோடைநா ளிருக்கும்
விண்மழை பிலிற்றிடுங் கால
முந்தைநன் னிலத்தின் கொழுந்தென வதியு
முழுவதும் பெரும்பனி யிருதி
யுந்துவெண் டிரைய குளிர்புன லுறையு
மின்னணந் தவமுயன் றுடைந்தான். (ஈ)

எத்தகைய தவம் புரிந்தாலும் சிவபிரான் வெளிப்படாமை கண்டு வருந்திய பிருங்கிமுனிவர் அதனை யறியுமாறு பெரியோரைத் தேடுதல்.

நெஞ்சழல் கொதிக்க வருந்தினன் சிவனைக்
கண்டில னொருவழி நினைந்தான்
வஞ்சகந் தணைந்த பெரியரை நேடி
வரதனைக் காண்டல்செய் வண்ண
மெஞ்சலி வியற்று மருந்தவந் தெரிப்பான்
வேண்டுமென் றெழுந்திரு வரையி
லஞ்சிறைச் சுரும்ப ருழக்கிய பொழிலு
மருவியங் கரைகளுந் திரிந்தான். (ஏ)

பிருங்கிமுனிவர் சனற்குமாரமுனிவரைக் காணுதல்.

அவ்வரை யிடத்தி னொருகுகை குறுக
வீரவா சனத்தொடு மிலங்கு
செவ்வியஞ் சடையுந் திருந்துகண் டிகையும்
புண்டர நெற்றியுந் திவள
வெவ்வனற் கதிரோ ராயிர மெறிக்கும்
வெய்யவ னெனத்தனி விளங்கும்
பவ்வமுற் றெழுந்த வமுதினி[ன் மறை]கள்
பகர்சனற் குமரனைக் கண்டான். (அ)

சனற்குமாரர் தம்மை வணங்கிய பிருங்கிமுனிவரை உபசரித்தல்.

உள்ளநெக் குருகி யுவகையங் கடலி
லாழ்ந்தன னொருப்படக் குழைந்து
தெள்ளுநான் மறையின் முனிவனை வணங்கித்
தெண்டனிட் டுயிர்ப்பறக் கிடந்தா
னெள்ளருந் தவத்தின் பிருங்கியை நோக்கி
வியப்புற விஞ்சையா லெடுத்துக்
கள்ளவிழ் மலரிற் கருகிய மேனி
தழுவின னுசனங் கணித்தான். (கூ)

சனற்குமாரர் பிருங்கிமுனிவரது தளர்வுக்குக் காரணம் யாதென வினவுதல்.

பாங்கரி னிருத்தி யவன்முக நோக்கிப்
பதுமவா னவன்மகன் பகரு
மோங்கிய வுடலந் தசையற வுணங்கி
யுறுப்பெலாந் தெரிதர விருந்தீர்
நீங்கருந் தவத்தின் வருந்தினீர் போலு
மென்கொலோ நிகழ்த்துக வெனலு
மேங்கிய துயரக் கடல்கடந் தனனென்
றருந்தவப் பிருங்கியாங் கிசைக்கும். (க0)

பிருங்கிமுனிவர் சிவபிரானைத் தரிசிக்கக் கடுந்தவ மியற்றியதையும், சிவபிரான் வெளிப்படாமையையும் கூறுதல்.

இழைப்புறு தவத்தோய் நின்மலர்க் கமல
மிணையடி பணிந்தபி னெளியேன்
மழைப்புயன் முகங்கண் டகங்களி துளங்கும்
வரிச்சிறைக் குருகென மகிழ்ந்தேன்
றழைப்பட ரிதழிச் சடிலியைக் காண்பான்
றவம்பல புரிந்திட ருழந்தேன்
கழைச்சிலை மதனைக் கட்டழற் கதுவக்
காய்ந்தருள் கடவுளைக் காணேன். (கக)

சிவபிரானைத் தரிசிக்க யாது தவம் புரியவேண்டுமெனப் பிருங்கிமுனிவர் வினவுதல்.

ரண்டியான் வருந்தி பெத்தவ மிழைக்கி
லெந்தைவந் தெனக்கருள் புரியு
நீண்டமூள் ளரைத்தா ணெடுமடற் கமல
நிருமலன் புதல்வவென் றிசைக்கத்
தீண்டருங் கனலிற் சிவந்தசெஞ் சடிலச்
செம்மலைச் சிந்தைசெய் திருந்து
மூண்டபே ரன்பு முழுப்பெருக் கெறிய
முனிசனற் குமரனுங் கியம்பும். (கஉ)

சிவபிரானைக் காணுதற்கு, சிவப்பிரதக்ஷிணமே மேலான தருமமென்று சனற்குமாரர் கூறுதல்.

வேறு.

புலன்க ளைந்தையு மடக்கிய புனிதமா தவத்தோ
யலங்கு கூர்மழு வண்ணலைக் காண்பதற் கவணே
வலஞ்செ யுந்தவ மல்லது மற்றிலை வகுக்கி
னலங்கொ ளத்தவப் பெருமையை நவிற்றுதற் கெளிதோ.

மூரித் தைக்கடு முழுவது மடங்கிய மூரிக்
கரிய கண்டனைக் காதலி னெடுவலம் புரியும்
பெரிய நற்றவம் போற்பெறுங் கதியளித் தருள
வரிய மாதவ மில்லென மறைபெடுத் தறையும். (கச)

பற்றை வானவர் யாவரு மகிழ்தரும் பூசை
யுற்ற வெண்ணிரு வகையுப சாரமென் றுரைக்குங்
கற்றை வார்சடைக் கண்ணுதல் களிப்புறு பூசை
பொற்பி னீடவன் சினகரம் வலஞ்செய்து போதல். (கரு)

மூவர் மூதெயின் முருங்கழ லாட்டிய முறுவற்
றேவ தேவனை வலஞ்செய்ச் சிந்தையி னினைப்போர்
யாவ ராயினு மன்னவ ரியற்றிய கொடிய
பாவ முள்ளவை மருத்துறு விளக்கினிற் பதறும். (கசு)

பனக கங்கணப் பண்ணவன் பனிமதி தடவுஞ்
சினக ரந்தனை வலஞ்செயிற் சிற்பரன் மகிழ்விற்
கனக வொண்மதி ளகத்துறுங் கடவுள ரெவரு
மனம ருங்களிப் பினிதுற வழிவசம் வருவார். (களி)

கடமு டைத்திழி கலுழிபாய் கரிபத ருந்தித்த
தொடிம லர்க்கரத் தீசனைதன் பங்குறை கூடை
யடைவி லன்பொடும் வலஞ்செயி லருளணு மாதி
படரும் பின்னரும் முத்தியுங் கைவரும் பகரில். (கஅ)

இத்த வத்தினை யீசனுக் கன்பராய் நின்போன்
முத்தி தேடிய மூதறி வினர்களுங் கன்றிச்
சித்தம் வஞ்சகங் கிளைத்திடத் தீநெறி விலக்கும்
பத்தி யின்றியப் பதகருக் குரைத்திடற் பாற்றோ. (ககூ)

மறிந்த வெண்டிரை வாருதி வார்சடை போனைச்
சிறந்த தோர்பிர தெக்கிணம் வந்திடு செய்கை
யறிந்து செய்யினு மதையறி யாதுசெய் திடினும்
பிறந்த யாக்கையி லிருங்கதி யடைகுவர் பேசில். (உ0)

சிவபிரதக்ஷிண மகத்துவத்தை விளக்கும் காலவ னென்பான து சரித்திரத்தைக் கூறுதல்.

என்று ரைத்ததற் காதையொன் றிசைக்குமவ் விடனு
மொன்று நான்மறை புகலருந் தொழுகுலத் துதித்தோன்
றுன்று வெஞ்சினம் பாதக மனைத்தினுந் துருவிச்
சென்ற சிந்தையன் காலவ னெனுமொரு தீயோன். (உக)

காலவனது பாதகச் செய்கைகளைக் கூறுதல்.

ஆக மம்பயி லருமறை நெறிமுழு தகன்றோன்
போக மங்கையர் பூத்திடுங் காலமும் புணர்ந்தோன்
மோக மிக்குறப் பிறர்பொரு ளழிவிய மூடன்
சேக முங்குரு பத்தினி யிருநலந் தீளைத்தோன். (உஉ)

ஈன்ற தாயையுந் தந்தையு மீர்த்துயிர் துறந்தோன்
றோன்றும் வெவ்விடங் கொடுத்திய லவருயிர் தொலைத்தோ
னூன்ற பால்பொழி யாவின மடுத்தொழி லமைத்தோன்
கான்ற வெவ்வழல் கட்டிய மனைதொறுங் கலந்தோன். (உங)

இன்ன தன்மையன் றீவினை வழிநிதி யிட்டிக்
கன்னல் வேலிபர் கழனிசூழ் கலிங்கநா டணுகி
மின்னி னுண்ணிடைப் பரத்தையர் வீதிசென் றடைந்தோர்
பொன்ன மேகலைப் புணர்முலைப் போகமுண் டிருந்தான். (உச)

காலவ னுயிர்தீத்தல்.

காத லோடுமக் கணிகையைக் கைகலந் துறைந்தே
யோது நாள்பல கழித்தனன் றிகைப்புற வொருநாட்
பாத கனவண் மனையிடத் தந்தகன் பணித்த
தூதர் கைக்கொளத் துணுக்கெறிந் தாருயிர் துறந்தான். (உஞ)

காலவனுடலை அயலினர் காட்டிலெறிதல்.

மாண்ட யாக்கையை மந்திர வழற்படுத் தாது
நீண்ட பாசம்வன் கழலினை பிணித்திய னின்றோர்
தீண்டி வாங்கின ரப்புறத் தெருத்தலை கடந்து
மூண்டு முள்ளடர் முதுவனத் தெறிந்தனர் முடுகி. (உசு)

காலவன் நரகிடைக் கிடந்து வருந்தல்.

தீய காலவற் பற்றிய தென்றிசைக் கொடியோ
ராய தூதர்கள் ரவுரவ மாதிய நிரைபந்
தோய வீழ்த்தன ரன்னவ னவையிடை சுழன்று
பாயுந் தெண்டிரைத் துரும்பெனக் கிடந்தனன் பதைத்தான். ()

வேறு.

காலவன் இழிந்த கழுதையாகவும் நரியாகவும் பிறத்தல்.

அன்ன தகை நரகினிடை யளப்பருநாள் கழித்தெழுந்து
கன்னப்வெடிப் படுங்குரல்வாப்க் கழுதைவடி வெடுத்துளர்ந்து
பின்னரத னுடனீங்கிப் பிறங்குகழற் சுழல்தலுகட்
டின்னுருவு பயிரிகல னுருவெடுத்துத் துயருற்றான். (உஅ)

காலவன் பின்னும் பல விலங்குகளின் சன்ம மெடுத்து
சுற்றில் கழுகாகப் பிறத்தல்.

ஓதுமதன் பிறப்பொருவி யொருகோடி விலங்கினத்தின்
றீதுறுபா தகச்செனனம் வெவ்வேவு சென்மித்து
மாதுயரக் கடற்படிந்து மெலிந்ததற்பின் வனக்கடொறுங்
கோதுறுவெங் கழுகாகி நெடுங்காலங் குலவினான். (உக)

சங்குகன்னர் என்பவர் சிவாலயத்தில் பெருமானை யருச்சித்தல்.

இன்னமா மெருவைசூழன் றிடருறுகா லத்தொருநாட்
பன்னுமறை முறைதெரிந்து பரமனடி யரைப் பணிந்து
பொன்னின்மலர்ப் பதம்வழுத்திப் போனகங்கண் மகிழ்ந்தளித்துத்
தன்னிலைபம் புலனடக்குஞ் சங்குகன்ன னெனுமுனிவன். (கo)

தெண்ணிலவு முடிப்பரனை வந்திப்பான் சிந்தைகளித்
தெண்ணியவ னுலையஞ்சென் றுவின்பா லினநீர்நெய்
கண்ணுறுதீங் கழைச்சாறு பசுந்தேன்முக் கனிகலவை
நண்ணியசந் தனக்குழம்பு நதிப்பெருக்கி னினிதாட்டி. (கக)

வாசநறு மஞ்சனநீர் மாமறைமந் திரத்தாட்டிப்
பூசுசெழுஞ் சாந்தணிந்து பொன்னுடை மருங்கசைத்து
வீசுமரு மலர்க்கமலம் வில்லமுத னனசாத்திக்
காசகலுஞ் சாம்புனதக் கனகமா லிகைவணங்கு. (கஉ)

நெய்கலந்த போனகங்கள் பணியார நிவேதித்துச்
செய்யகரும் புகைதீபம் பணிமாறிப் பலிதிருத்தி
கையுமிடை மடந்தையர்க் ணிடிக்கவியம் பலமுழங்க
வையபெனையம் பெருமானை யிலிங்கத்தி லருச்சித்தான். (கங)

காலவனுய் கழுது இரை கிடையாது திரியும்போது சிவாலயத்தின்
பலிபீடத்திலுள்ள பலியுணவைக் காணுதல்.

விதிமுறைமா தவமுனிவன் வந்தனைசெய் வேலையினின்
முதுகழுகு வெப்பகியா லிரைதேடி முகங்கருகி
மதியணவு சினகரத்தின் மணிமுன்றின் மரத்தடையக்
கதிர்நிலவு பொற்பீடப் பலிபடிசில் கண்ணுற்றே. (கச)

அக்கழுகு பலியுணவை வவ்விச் செல்லுதலும்,
அதனை யொருவன் கண்டு கோபித்தல்.

உள்ளமிகுங் களிதுளங்க வொருகொடியிற் பறந்தோடி
வெள்ளமணி சடையார்தம் பலிபீட மிசையிருந்து
வள்ளமடுத் திடுமுதை வாய்மடுப்ப வயனின்ற
வள்ளிலைய வேற்காளை யொருவனது குறித்தழன்றான். (கடு)

கழுகுமீது கணைசெலுத்தப்படுதல்.

எந்தைபெரு மான்றிருமுன் பலிப்பீடத் திழிகழுகு
வந்தறைதல் கடனன்றே பென்னவரி சிலைதுறைத்துச்
சிந்துகடுங் கணைபாய்ந்து செங்குருதித் தாரைபெழ
முந்துபெருஞ் சிறையடித்து முதுபாரில் வீழ்ந்ததுமே. (கூ)

அம்பினலடிபட்டு வீழ்ந்த கழுகை ஓர் நாய் கவ்வி யீர்க்க அந்த நாயை
மற்றொரு நாய் பிடிக்கத் தூரத்துதல்.

குறையுயிர்மென் களந்துடிப்பக் கொழுஞ்சோரிச் செழுஞ்சேற்றி
னிறகொதுக்கி யிருகாலு மெடுத்துதையு மேல்வைக்கண்
டெறுழினவெங் குரல்ஞாளி சிறைவவ்வி யிழுத்திடலும்
பிறிதொருநா யதுகவரப் பின்றொடர்ந்து பெயர்ந்தோட. (கூஎ)

கழுகைக் கவ்விய நாயும், அதனைத் தொடர்ந்த நாயுஞ்
சிவாலயத்தை வலஞ்செச் சுற்றியோடுதல்.

வாயுறையுங் கழுகினொடும் வானிமிர்த்துப் பின்னெடுக்கித்
தீயசுவா விருப்பயத்தாற் சினகரத்தை வலனுக
மேயவினைப் புறப்பலகால் விளைந்தோடும் வேலையினி
லாயுமறை முனிவனுக்குக் கணைத்தலைமை யளித்தருள. (கூஅ)

சிவபிரான் ஏவுதலால் திருநந்திதேவர்
கணங்களுடன் வருதல்.

மேருவரைச் சிலைகுனிக்கும் விண்ணவனை வுதலோடுங்
காரணைய கறைமிடற்றுத் திருநந்தி கணஞ்சூழ
வூருநெடுங் கொடிமான முகைத்தவண்வந் திறங்குதலு
மார்வமொடு சங்குகன்ன னவன்கமல வடிவீழ்ந்தான். (கூக)

திருநந்திதேவர் சங்குகன்னருடன் கழுகினையும், நாய்களையும்
தெய்வவுருவுகொடுத்து மானத்தேற்றிச் சிவபிரானிடம் கொண்டுசெல்லுதல்.

வணங்கியநற் றவத்தோனை நந்திமலர்க் கரங்கொடுத்துக்
கணங்கொண்மணி மானத்தின் மிசையேற்றிக் கண்ணுதலோ
னிணங்குதிருச் சினகரத்தை வலஞ்செய்தே யினைத்துளகா
வணங்குமிரு நாய்களொடுங் கழுகினையு முருமாற்றி. (ச0)

தெய்வவுரு வினிதளித்துச் செந்துவர்வாய்க் கருங்கடுங்கட்
டொய்யின்முலை யணங்கினர்சேர் சுடர்மானத் திடைவைத்து
வெய்யதழல் விழிபரமன் முன்கொடுபோய் விடுத்திறைஞ்சக்
கையின்மழுப் படையுபர்த்தோன் றிருக்கடைக்கண் கனித்தருள.

சிவபிரான் சங்குகன்னருக்கும், கழுகுக்கும் நாய்களுக்கும்
கணத்தலைமை யளித்தருளுதல்.

தண்ணளிநற் றவத்துறைபோஞ் சங்குகன்ன முனிவனுக்கு
மெண்ணரிய கொடும்பாவ மீட்டியதோர் கழுகினுக்கு
நண்ணியடு கொலைபுரியு நான்றநா நாய்களுக்குங்
கண்ணயம்வந் தறவரிய கணத்தலைமை யளித்தனனால். (சஉ)

அதனைக் கண்ட நந்திதேவர், சிவபூசையாதிய புரிந்த சங்குகன்னருக்குக்
கணத்தலைமை யளித்தமை சாலும்; கொடிய தீவினைகளைப் புரிந்த
காலவனுகிய கழுகுக்கும், வேடுவராகிய நாய்களுக்கும் அப்பதவி
எவ்வாறு கிடைத்தது என்று வினவுதல்.

இனையனபார்த் தருணந்தி பெந்தைமல ரடிபரவி
வினவுமளி பழுத்தோழுஞ் சங்குகன்னன் விபப்பினொடு
நினைவழுத்து மிருந்தகைய பூசனைதன் னெறிசார்ந்தோன்
மனமுருகி முற்பிறப்பு நின்சரியை வழிநின்றோன். (சந)

காலுறையுங் கழுகுமுதற் காலவனு கியகொடியோ
னீனமுறு மிருநாபு முன்னரூனை யிகழ்ந்துகொடுங்
கூனுப்வரிச் சிலைத்தொழிலா லுயிர்துறக்குங் கொலைவேட
ரானவர்க ளிவைகளுக்குங் கணம்புரக்கு மாசாட்சி. (சச)

அன்னவனை டொருகாலத் தருள்புரிந்த வதிசயமீ
தென்னையிது வெளியெனுக் கினியிபம்ப வேண்டுமெனச்
சென்னிநதி திவலிபடக் கம்பித்துச் சிற்பரமன்
புன்னகைகொண் டிதழ்க்கமலப் போதுதிறந் தூரைபுகல்வான். (சடு)

சிவபிரான் அவைகளுக்குக் கணத்தலைமை யளித்தற்கு
அவைகள் சிவாலயப் பிரதக்கிணம் செய்தமையே காரணமென்று,
அதனை விளக்கிக் கூறுதல்.

எனக்குமனங் களிப்புவர வியற்றுபெருந் தருமங்க
ளனத்துவச முயர்த்தவனு மாழிகடுத் துயில்வோனுந்
தினைத்துணையா யினுங்தெரிக்கத் தெரியாத செய்கையவா
நினக்கவைக ளுணர்த்துவல்யான் கேட்டியென நிகழ்த்துவனால். ()

சொல்லரிய தருமங்க டொகுத்துரைக்கிற் பலவுளவா
னல்லடெருந் தருமங்கள் யாவையினு மிதுவாடிற்
பல்வகைய பவநீக்கிப் பரமுத்தி வழிகாட்டு
மெல்லொளியா லயம்புகுந்தோ பெம்மைவல னுறவருதல். (சள)

உரைத்தவிதி வழியெய்மை பொருமுறைபா யினும்வலமே
திருத்தமுற வருவோர்க டுயபெரும் பவமொழிப்பர்
கருக்கடலைக் கடத்துமொரு கருதரிப மெய்ஞ்ஞானம்
வருத்தமற வடைந்தெமது மலர்ப்பாத மணைவாழ்வார். (சஅ)

ஈதன்றி விளைபாட்டாற் பிறர்க்கஞ்சி யேகுங்காற்
றீதொன்று நிந்தனைபான் மற்றொருவர் சேக்கையினுற்
போதொன்று முணராமே யெய்மைவல னுறப்பேதித்
கோதொன்றும் பவநீங்கி முத்திநெறி கூடுவரால். (சக)

தொன்மைதரும் பவமிழைத்த விலங்கேனுந் துகடீர்ந்த
சின்மயமாய் விளங்குபிர தெக்கினைமென் றறியாது
புன்மையினுற் புரிந்திடினு மெவையாலும் போகாத
கன்மமெலாங் கரிந்தரிய கதியடைதல் கடனன்றே. (சஎ)

இக்கதையை நந்திதேவர் கூறியபடி உனக்குரைத்தோமென்று
சனற்குமாரர் பிருங்கிமுனிவருக்குரைத்து, சிவபிரதக்ஷிணமே
மேலான தவமென்று கூறுதல்.

என்னவிவை யெந்தைபிரா னந்திதனக் கினிதுரைத்தா
னன்னவனிக் காதையினை யெனக்குரைத்தா னதலினுன்
மன்னுபுல னைந்தடக்கும் பிருங்கிவர மாதவத்தோய்
நின்னிதயச் செயல்கண்டு நினக்கிதனை நிகழ்த்தினனால். (நக)

வன்கழுது பிருகாயு மறியாது மதிமதுடப்
பொன்புரையு நிறத்தினை வலம்வந்து பொருவரிய
வின்பமுறுங் கனைத்தலைமை யெய்தியவென் றுலிளகி
யன்பினொடு மதுபுரிவார் பெறுங்கதியா றறிவரால். (நஉ)

சங்கரனை மனங்கனிந்து வலம்புரியுந் தகையன்றித்
துங்கமுறு தவம்வேறொன் றுளதெனச்செய் திடத்துணிவோர்
கங்கைநதி புடைகிடந்த காசிவள நகர்நீங்கிப்
பங்கமுறு கிடந்தேத சத்தனைய படர்பவரால். (நங)

வேறு.

பிருங்கிமுனிவர், உம்மால் சிவபிரானைக் காண்பதற்கு வழிகண்டேனென்று கூறி
அத்தகைய தவம் புரியுமாறு செல்லுதல்.

இருந்தகைச் சனற்கு மாரனின்னனைத் தெரித்துக் கூறப்
பெருந்தவ மறைக ளோதுஞ் பிருங்கிபன் னவனை யேத்தி
வருந்துவெம் பிறவி மாற்ற வரதனைக் காண நின்னுற்
பொருந்திப வழிகண் டேனென் றத்தவம் புரிவான் போனுன். (நச)

பிருங்கிமுனிவர் சிவபிரானை வலம் வருதலாகிய தவத்தைச் செய்தல்.

துப்பிபாட் டயருங் கொன்றைத் தொடைபுனை சோதி நண்ணுஞ்
செம்பொனு லயமொன் றெய்திப் பருவமீ ரைந்து செய்ய
பைம்பொன்மால் வரைபை நாளும் பகல்வலம் வருதல்போல
வம்பர்கா யகனைச் சிந்தை பொருப்பட வலஞ்செப் தானை. (நடு)

பிருங்கிமுனிவரது செயல்கண்டு, சிவபிரான் கணங்களுடன்
தோன்றியருளுதல்.

மாதவன் செயலை நோக்கி மதர்மதர்த் தொழுகும் வேற்கட்
காதலி னிமய மீன்ற கனங்குழை யருகு போதப்
பாதிவெண் மதியஞ் சூடும் படர்சடைப் பரமன் றன்னைச்
சேதகக் கமலச் செங்கீழ்ச் சீறடிக் குறத்தி கேள்வன். (நந)

விதிமகன் மகத்தைச் சீறி வெங்கனற் படுத்தும் வீரன்
முதுதவம் புரிந்த ஞான முறைமுழு துணர்ந்த நந்தி
கதிபெறத் தாதை செப்பொற் கழலினை கடிந்த தண்டி-
சதுமறை துதித்துச் சூழக் கணங்களின் றலைவ ரான. (நன)

முத்தவெண் குடையின் காளா முகரருட் சங்கு கன்னர்
வித்தகத் திறத்தின் மிக்க பயூரகர் மேக ராசி
யொத்தவெங் கரியின் கன்ன சொழுகொளி திவளுஞ் செம்பு
வத்திரர் பிரகற்சேனர் விடேதர் வாமர் சேனர். (நஅ)

அனையவ ராதி யாய வருளினு டலின் மிக்கோர்
கனைகதிர் மடித்து வீசுஞ் சதக்கினி சத்தி கட்க
முனைகெழு பிண்டி பாலந் தோமர முசலங் குந்தம்
வினைபடர் சூல மேமி பட்டசம் வில்லு டங்கம். (நக)

கரங்களிற் றுலங்கத் தாங்கி கதிர்மணிப் பணிகள் வேய்ந்து
பரப்பியெம் மருங்குந் தெய்வப் பல்லியந் துவைத்தூச் சூழச்
சுருப்பிமிர் பூவை மேனித் தோன்றலுங் கமலத் தோனும்
புரந்தான் முதலா யுள்ள புலவரும் பணிந்து போற்ற. (கo)

பிருங்கிமுனிவர் சிவபிரான் திருமுன் வீழ்ந்து வணங்குதல்.

என்னையா னுடைய மூர்த்தி யேறுகைத் தெழுந்து தோன்ற
வுன்னருந் தவத்தின் மிக்க பிருங்கிபே ருவகை பொங்கக்
கொன்னவிர் சூல மேந்துங் குழகனை வலஞ்செப் தேத்தி
யன்னவன் திருமுன் பாரி னடியறு பரம்போல் வீழ்ந்தான். (கக)

தம்மை வலஞ்செய்யாது சிவபிரானேமட்டும் வலஞ்செய்து வணங்கிய
பிருங்கிமுனிவருக்கு அருள்செய்யவேண்டாமென்று
உமையம்மையார் சிவபிரானுக்குரைத்தல்.

அத்தகை புரிதல் கண்டா ளரவுகட் செவிகொண் டேற்கக்
கொத்துவம் டுழக்கிப் பாடக் கொன்றைதன் சொரியும் வேணி
மத்தனைப் பரம வாழ்வை மதிபுரை வதன நோக்கி
முத்துறழ் முறுவற் செவ்வா யுமையிவை மொழிவ தானாள். (கூஉ)

தண்ணளிப் பரவை நீக்கி யுயிர்ப்பயிர் தழைக்க நல்கு
மண்ணிலை பெளிதே ஞவிக் காருயி ரான வையு
வெண்ணரு மறைக ளாய்ந்த முனிவரை னென்னை நீக்கிப்
பண்ணினன் வலஞ்செய் தேத்தும் பான்மையிப் பதகற் கின்று. (கூங)

சிவபிரான், சனற்குமாரமுனிவன் கூறியபடி பிருங்கி செய்தார்
ஆதலினுல் நீ சினங்கொள்ளவேண்டாமென உமையம்மையாருக்குரைத்தல்.

நின்னருங் கடைக்கண் சாத்தி நிறையரு ளளித்தல் வேண்டா
வென்னலு மிறைவன் கூறு மிருந்தவக் குமர னன்று
சொன்னகல் லுபதே சத்தா னெமைவலஞ் சூழ்தல் செய்தான்
பொன்னவிர் திதலைக் கொங்கை கடுஞ்சினம் பொறுத்தி யென்றான். (கூச)

உமையம்மையார் அதனை மறுத்துக் கூறி, தமக்குப் பாதியுருவந் தந்து
அர்த்தநாரீசுவர வடிவமாகும்படி சிவபிரானை வேண்டுதல்.

என்றலுங் கரிய கூந்த லுமையவ ளிசைக்கு மெந்தாய்
நன்றுநன் றுசானின்னை வலஞ்செய நவிற்றி னீனல்
வென்றிவாள் விதிர்த்துத் தாதை விசைமலர்ச் சரணம் வீட்டி
யன்றுணைப் பணிந்த தண்டி யாதிவா னவர்க ளன்றி. (கூரு)

தனிவல னிபற்றி னுலு மபேதமாந் தன்மை போலா
தெனையிகழ்ந் தீது செய்த லென்னைபென் றிசைத்துச் செய்ப
கனியிதழ்ப் பவளம் விண்டு குறுநகை கனிகாட்டிக்
குனிசிலைப் புருவங் கோட்டி விழிக்கடை குறித்து நோக்கி. (கூகூ)

மருந்தினு மினியாய் நின்னைத் தனிவலம் வரைந்து போன
வருந்தவ முனிவன் காண வெனதுரு வாக மோர்பாற்
றிருந்தவே பொலிந்து தோன்றல் செய்குதி பேத மின்றிப்
பொருந்துற வழிபட் டாரேனற் கருணைபாற் புரக்க வென்றாள். (கூள)

சிவபிரான் அதற்கிசைந்து அர்த்தநாரீசுவர வடிவங்கொள்ளல்

பலர்தலை யுலக மெல்லாம் வயிற்றிடை சுமந்தே யின்ற
கலகமே னெடுங்கட் செவ்வாய்க் கவுரியாங் கினிது கூற
நிலவுவெண் டாளக் கொங்கை நேரிழைக் கொருபா னல்கிப்
புலவுமுத் தலைவே லேந்தும் புங்கவன் மகிழ்வு பூத்தான். (கூஅ)

விரிசடை யோர்பான் மாலை மென்கருங் கூந்த லோர்பா
லெரிசுடர்த் தடங்க ணேர்பா லெழுதுமை விழிவே லோர்பாற்
பெருமுழுக் காமோர் பார்பொற் பொலன்முடிக் கமல மோர்பால்
வரிவயப் புலித்தோ லோர்பால் மணிக்கலை யோர்பா லாக. (கூக)

சிவபிரான் மாதொருபாதியளுத் தோன்றிய தன்மையைக் கண்ட
பிருகுமுனிவர் ஆச்சரியங் கொள்ளல்.

வடவரை பொருபாற் பச்சை மணிவரை கிழைத்த தென்னக்
கடலிடை யரவப் பாயற் கண்வளர்ந் தருளுந் தெய்வ
வடல்விடைப் புறத்திற் றோன்று மமலனை முனிவன் கண்டான்
படர்தரு மிறும்பூ தெய்திப் பரவச மாக நின்றான். (எ0)

சிவபிரானே அவ்வாறு எதிர்தோன்றி நிற்பினும்
குருவார்த்தை பிழைத்தல் கூடாதென பிருகுமுனிவர் நினைத்தல்.

அருமறை யனைத்துஞ் சொல்லு மாகம புராண முற்று
மொருவழி யுணர்ந்து ஞானத் துவரிபுக் கழந்தி னுலும்
பரிவோடும் வீடு நல்கப் பரமன்வந் தெதிர்நின் றாலுங்
குருமொழி பிழைத்தோர்க் குண்டோ பரகதி கூடுந் தன்மை. (எக)

பிருகுமுனிவர் பின்னரும் சிவபிரான்பாகத்தைமட்டும் வலஞ்செய்தல்.

மும்மலக் குடம்பை நீக்க முனிசனற் குமரன் சொன்ன
செம்மொழி சிதையே னென்னைச் சிந்தையிற் றுணிவு கொண்டு
கைம்மலர் சிரத்திற் கூப்பி மறைத்துதி கனிந்து பாடி
மைம்மணி மிடற்றோன் பாக மீளவும் வலஞ்செய் தானே. (எஉ)

தமதுபாகத்தையும் சேர்த்து வலம்வாது சிவபிரானது பாகத்தைமட்டும்
வலம்வந்த பிருகுமுனிவரை உமையம்மையார் கோபித்தல்.

தன்னொரு பாதி யன்றிச் சங்கரன் றனது பாதி
மன்னுமா தவத்தோன் பின்னும் வலம்வருஞ் செய்கை கண்டாண்
முன்னர்நான் மறைக ளேத்து முதல்வனை னீடக மாய
வென்னையிங் கிகழ்ந்தா னென்ன வெம்பெரு மாட்டி சீறி. (எங)

உமையம்மையார், பிருகுமுனிவரைச் சபித்திட நினைத்தலும்,
சிவபிரான், "பிருகு குருமொழிப்படி வலஞ்செய்தான்;
ஆதலின் சபிக்கவேண்டா"மென்று தடுத்தல்.

முனிவனை யிழுதையாகச் சபித்திட முனிவ தானுன்
பனிமதி நிலவு வேணிப் பண்ணவ னுமையைப் பார்த்துக்
கனிமொழி குருவின் வார்த்தை கடந்திடா தியற்று கின்ற
புனிதமா தவனை யுஞ்சச் சபிப்பதோ பொறுத்தி யென்னு. (எச)

இதனைக்கேட்ட உமையம்மையார் "இன்றுமுதல் யாராவது
என்னை நீக்கி வலஞ்செய்தாராயின் அவர்கதியடையாவாறு வரந்தருக"
என்று சிவபிரானை வேண்டுதல்.

மலர்க்கரம் வனைத்துப் புல்கி வழங்கலு மலையின் வல்லி
யிலைக்கவர்ச் சூலத் தையன் றின்றுதொட் டென்னை யாரும்
விலக்கிய வலஞ்செய் வீரார்கள் தன்கதி மேவா வண்ணை
நலத்தரு வரமீ யின்று தருகென நகைத்து நாதன். (எநி)

சிவபிரான் உமையம்மையாருக்கு அவ்வரங்கொடுத்து,
பிருகுமுனிவரை நோக்கி "உமையம்மையாருடன் எம்மை வலஞ்செய்வாய்"
எனக்கூற, பிருகுமுனிவர் அவ்வாறு வலஞ்செய்தல்.

அவ்வா பளித்தே மென்ன வலங்கிழை மகிழச் சாற்றித்
திவ்விய மனத்த னைய முனிவனைத் திருந்த நோக்கி
மவ்வல்வா னைகையை நீக்கா தென்னைநீ வலஞ்செய் கென்ன
நவ்வியங் கண்ணி யோடு நாதனை வலஞ்செய் தானை. (எசு)

அதனைக்கண்ட உமையம்மையார் மகிழ்தலும், சிவபிரான்
பிருகுமுனிவரை நோக்கி "நீ வேண்டும் வரத்தைக் கூறுதி" எனவுரைத்தல்.

முறைபட வலஞ்செய் கின்ற முனிவனைக் கண்டு முத்தப்
பிறைவடங் கிடந்த கொங்கை யுமைபெரி துவகை கூர்ந்தாள்
கறைபடு கதிர்கொள் சூலக் கண்ணுத லவனைக் கூவிக்
குறைபடா தளிப்பல் வேண்டும் வரமினிக் கூறு கென்றாள். (எஎ)

அதனைக்கேட்ட பிருகுமுனிவர் பலவாறு துதித்து
"உமது பாதத்தை மறவாத அன்பு எனக்கருளவேண்டு" மெனக்கேட்டல்.

சந்தநான் பறைக ளோதுஞ் சதுமுகன் முதுந்தன் காணை
வெந்தையா ருரைத்த மாற்ற முனியிரு செவியி னேற்றுக்
கொந்துலாங் கமலச் செங்கை யுச்சிமேற் குவித்து வீழ்ந்து
புந்தியன் புருக நின்று துதிமுறை புகல்வ தானான். (அஎ)

போனக முதல வுண்டி போதவுண் டாசைக் காளாய்
மானமில் லாது செய்த நன்றியை மறக்கும் வஞ்சத்
தீனனைச் சுசியொன் றில்லாச் சேடனை நிட்டு ரஞ்செ
யீனனை யென்னை யாள விரங்குதி யெந்தாய் போற்றி. (எசு)

எனத்துதி பலவும் பாடி யென்றுநின் னிணைப்பொற் பாத
நினைப்புற மன்பெ னுள்ள நிறைதர வருள வேண்டு
மூனைத்தலை மூன்று கொண்ட மூரிவே லுயர்த்த நாதா
கனக்கருங் கூந்தல் பங்கா வென்னலுங் கருணை மூர்த்தி. (அ0)

சிவபிரான் பிருகுமுனிவருக்குக் கணந்தலைமையளித்து,
கயிலைமலைக் கேகுதல்.

வணங்குநற் றவனுக் குள்ள மகிழ்வர நூறு கோடி
கணங்களுக் கரசு நல்கிக் கயிலையுங் காணி யீய்ந்தான்
றுணங்கையிட் டலகை யாடச் சுடுமுது காட்டி லாடும்
பிணங்குசெஞ் சடையோன் வெள்ளிப் பிறங்கன்மேற் சார்ந்தா னன்றே.

பிருகுமுனிவர் திருக்கயிலையில் சிவபிரானைப்
பிரியா துறைதல்.

பிறங்கிய வெள்ளி வெற்பிற் சிவனெடும் பிரியா வண்ணை
மறங்கிளர் முனிவன் செம்மாந் துறைந்தன னவனன் றேறுந்
திறங்கிள ரமுதத் தீஞ்சொற் றுதியினைச் செப்பி னேர்கண்
மறங்கிளர் மழுவ லான்றன் மலர்ப்பத மெனிதிற் காண்பார். (அஉ)

முருகப்பெருமான் இச்சரிதத்தை அகத்தியருக்குரைத்து,
சிவபிரானை வலம்வரும் தவத்தின்றன்மை மூழுவதுங் கூறுவதற் கரிதென்றல்.

மாயிருங் கருணை பொங்க வரதனை வலஞ்செய் தேத்து
மேயநற் றவத்தின் றன்மை யனைத்தையும் விளம்ப வேண்டி
லாயிர முகங்கொண் டாலு மறைவதற் கரிதே யென்றுற்
றாயவன் முகமோ ராறுங் கொண்டது சொல்லற் பாற்றே. (அக)

வேறு.

இதனைக்கேட்ட அகத்தியமுனிவர், சிவபிரானை
வலம்வரும் முறைமையினையும் கூறும்படி கேட்டல்.

பெருவரை நெடுமுகம் பிளக்க நெட்டயில்
செருவிய சேவக னீது செப்பலுங்
கருதியன் னவன்மலர்க் கழல்க ளேத்திய
முரிதிரை யருந்துமா முனிவன் கூறுவான். (அச)

நிருத்தனை வலம்வருந் தவத்தி னீர்மையை
யுரைத்தனை யதன்விதி யுரைத்தி யென்னலுஞ்
சிரித்தடை யலர்புர மூன்றுந் தீயெழ
வெரித்தவன் றிருமக னிசைக்கின் றனனோ. (அடு)

முருகப்பெருமான் சிவபிரதக்ஷிண முறைமையினைக் கூறுதல்.

ஈசனை வலம்வருந் தவத்தி னிவ்விதி
பேசினர் யாவருங் கேட்ட பேர்களு
மாசறு குளிர்புன லடைய மூடிய
பாசியி னுயிர்பொதி பாச நீங்குவார். (அசு)

இனையன விதியினை யிறைவ னேதிய
கனிகரு மிசைமறை கழறும் வண்ணமே
நனிதர வறைகுவன் நவிலு நற்றமிழ்
முனிவர மகிழ்வொடு முறையிற் கேட்டியால். (அள)

சென்னியி லெண்ணெய்நெய் தடவல் சேகறு
பொன்னவிர் கலையதிற் புனித லன்றியு
முன்னருங் கும்மல்கொட் டாவி பொண்டொடிக்
கன்னியர் தங்களைக் கருத்தி னுடுதல். (அஅ)

கழுத்தினை யொருபுற முடக்கிக் கைத்தினை
யிழுத்திழுத் திருபுற மெடுத்து வீசியே
பொழுக்கமற் றடியினை யுதறி வைத்திடன்
முழுத்திடு தீதிவை முற்று நீக்கியே. (அக)

ஓதிய வருணமோர் நான்கி னுற்பவித்
தேதமி லீரிரண் டென்னு மெண்ணிலா
வேதநூல் விளம்புமாச் சிரம மேவியே
யாதிநா யகன்றனைக் கன்ப ராகியே (கஂ)

ஆலமமித் தெறிபுன லாடி யாடைசூழ்ந்
திலகிய மேனியி லிடைவி டாதுவெண்
ணிலவுமிழ் வெண்பொடி நிறையப் பூசிவார்
மலைதரு கண்டிகை மாலை சாத்தியே. (கஃ)

எண்ணெய்பெய் குடந்தலை யிருத்திக் கைகளைப்
புண்ணுறப் பின்னரிற் பொருந்த வீக்குபு
கண்ணுறு குறுந்தனை காலிற் பூட்டியே
நண்ணுசூன் முதிர்ந்தவர் நடத்தல் போலவே. (கஉ)

மெல்லெனு நடையினுள் விமலன் செம்மலர்
நல்லபொற் கழன்மன நடுவி ருத்தியே
மல்லலஞ் செழுத்தையும் வழங்கி நாவினுற்
சொல்லருந் தோத்திரந் துதித்துப் பாடியே. (கங)

மஞ்சிவர் பனிவரை யுதவும் வல்லியைக்
செஞ்சடைப் புகர்முகச் செங்கை யானையை
யஞ்சிறை மயிலூர் நம்மை யாள்நமக்
கஞ்சுகான் முகன்றலைக் கபால மேந்தியை. (கச)

நிந்தையிற் செருக்கினு னீக்கி டாதுசெவ்
வந்திவா னிறத்தினை யருள்பெ ருக்கெடுத்
துந்துமே ரலையெறிந் தொழுகு மூர்த்தியை
யெந்தையைத் தனிவல மியற்ற னன்றரோ. (கஞ)

முத்தினை வலம்வருந் தொகை மொழிந்திடி
னுத்தம நூற்றிரு பத்தெட் டோதுங்கான்
மத்திம மறுபத்தி னைங்கு மற்றதி
னத்தமா மூப்பத் திரண்ட தன்மமே. (கக)

தகைபெறு மிவைபுரி யாத தன்மையோர்
வகைபடு தொகைகளிற் பாதி மற்றவை
பகவரு பாதியே பெனினும் பத்திபா
லகமகிழ் வொடுந்தின மாற்றல் வேண்டுமால். (கஎ)

சிவபிரதக்ஷிணத்தால் எய்தும் பயன்.

ஆருயிர் துறந்திடு மளவு மையனைச்
சீர்பெற வலம்வரு சேவார்செய் தீவினை
வேரறு ஞானமும் விளைந்து வெந்துயர்ப்
பேர்பட வருமெழு பிறப்பு மாறுமால். (கஅ)

குலனுறு பிதிர்கள்வெங் கொடிய குப்பிவீழ்ந்
தலம்வரு கொடுந்துயர் தவிர்த்தன் னேசொடு
மிலகொளி சிவர்சிவ லோக மெய்துவார்
மலைமகள் கொழுநனை வலஞ்செய் வோர்களே. (கஙக)

அள்ளலை மழுப்படை யானை யைம்முக
வள்ளலை வலஞ்செய வளரு மன்பினர்
குள்ளகெக் கோரடி பெயர்க்கி லாங்கிய
வெள்ளிவெற் போரடி விரைந்து முன்வரும். (கஂஂ)

சூரியன் வடவரை சூழ வந்ததன்
சீரிய வொளியடைந் திலகு செய்கைபோ
னரிபங் கனைவல நடந்து சூழ்வரி
லீர்வினை தொலைந்தவ னியல்பி னெய்துவார். (கஂக)

கண்ணுதற் கடவுளைக் கயிலை யாளியைப்
புண்ணிய மூர்த்தியைப் புனித நாதனை
வண்ணவெள் விடையனை வலஞ்செய் தேத்துவோ
ரெண்ணருங் கிளையொடு முத்தி யெய்துவார். (கஂஉ)

ஓங்கிய யாக்கையண் ணுழுது ருண்டுமெய்ப்
பாங்குறப் பரமனை வலஞ்செய் பான்மையோர்
நீங்குரு மலமைவ மூன்று நீக்கிய
தேங்குநீ ருலகினிற் சிவன் முத்தரே. (கஂங)

முருகப்பிரானுரைத்த சிவபிரதக்ஷிண முறைமையினைக் கேட்டு அகத்தியர் மனமகிழ்தல்.

கன்னியங் கடம்பலர் கமழுந் தாரிணை
னின்ன ணமர்வற வெடுத்தி சைத்தரு
ளன்னவா சகஞ்செவி மடுத்த கத்திய
னன்னலங் கனிந்துள நயந்து விம்மினன். (கoச)

இக்கதை கேட்போர் அடையும் பயன்.

இக்கதை யுரைப்பவ ரினிது கேட்பவர்
மைக்கருங் குழலுமை மடந்தை பங்குறை
முக்கணன் கயிலைமா முடியின் வீற்றிருந்
தக்கணங் களுக்கர சாகி வாழ்வரே. (கoரு)

சூதமுனிவரிடம் இக்கதையைக் கேட்ட முனிவர்கள் களிப்புறுதல்.

இருவினை கடந்தருள் சூத னிக்கதை
தெருளுற வுரைத்திடத் தெளிந்து மாதவ
ருருவினைப் பிணிக்கிழங் ககழ வீதொரு
கருவியென் றடிக்கடி களி துளங்கினர். (கoசு)

பதினொராவது
பிருங்கி பிரதக்ஷிணமகிமை யுரைத்த
அத்தியாயம் முற்றும்.

பன்னிரண்டாவது
இராசா பிரதக்ஷிணம் பண்ணின கதையுரைத்த அத்தியாயம்.

சூதமுனிவர் கதைகூறத் தொடங்கல்.

செந்தழலி னிறங்கவரு மிளந்தளிர்வாய் முறைகோதித்
தேமாங் கொம்பின்
வந்துகருங் குயின்மிழற்று நயிமிசா ரணிபவர
முனிவர் கேட்ப
விந்துநெடுஞ் சடைப்பரமன் பொருவேந்தன் வலஞ்சூழ்வந்
திறைஞ்சு காதை
புந்திமகிழ்ந் துரைப்பலெனக் கருணைபொழி சூதமுனி
புகலு மாதோ. (க)

காவிரிநதிச் சிறப்பு.

பெரியவரை யடைந்தோர்க ளவர்கள்வளம் பெறுவனெனப்
பேசு மாற்றூற்
றிருவுறையு மங்கர வளனதுபோ மான்மதமுஞ்
செழுந்தண் சாந்தும்
விரிகதிர்வெண் ணித்திலமு மணிக்குவையு மாடகமும்
விரைந்து வீசிப்
பொருதுதிரை புரட்டிநெடுங் கரைமடித்துப் புடையொழுகும்
பொன்னி யாறு. (உ)

வயற் சிறப்பு.

செழுப்பவளக் கொடியிடறிக் குடவோகள் சிவபிதிர்ந்து
சிதறு முத்த
முழும்பகடு கால்வழுக்கி மறுதுமென மள்ளெடுத்
தொருங்கு கூட்டக்
கொழுங்குதலைக் கடைசியர்கள் கூடைமடித் தயலிடையிற்
கொண்டு பெய்யு
மொழுங்குபடி திடரேறி யிளங்குருகு குறுங்கயன்மென்
றுலவும் பண்ணை. (ஊ)

சோலைச் சிறப்பு.

மங்குலுறு நெடுந்தாழைக் கவிழ்குலைப் புடைக்காயின்
மந்தி தாவத்
தங்கியநெட் டறவுடைபட் டருவிபொழி தீம்புனலும்
வருக்கை சாய்க்குஞ்
செங்கனக நிகர்த்தகுறுஞ் சுளையழிமுட் புறக்கனிகள்
சிந்து தேனும்
பொங்குநுரை யாறலைத்து வாழைநெடும் படைப்பைபுதும்
பொழில்க ளெல்லாம். (எ)

மாடச் சிறப்பு.

தொட்டகட லிப்பியுமிழ் வெண்டளங் கீழருகு
துடக்கித் தூங்கும்
விட்டுமழக் கதிரெறிக்கு மனவமிடை யிடைகுயிற்றி
மிளிரும் பைம்பொற்
பட்டமணி நுதன்மடவார் மவுணரொடும் யாழிசைகள்
பயிலு மொற்றை
வட்டமதி வடிம்பிடறி யமுதொழுக்கு மணிமாட
மமுகு தோறும். (ஏ)

திருவாரூர் நகரச்சிறப்பு.

தேங்குமதுத் துளிபிலிற்றும் பசுந்துளவப் பட்லிபுனை
செங்கண் மாய
னீங்கரிய வகந்தைகெடச் சிதல்வடிவ மெடுத்தமரர்
நிறைந்து கூடி
வாங்குசிலை நாணறுத்துத் தமித்தசிரம் பொருந்தியுயிர்
வரமீவ தெய்வப்
பூங்கமலத் தவிசுறையும் பொற்கொடிநற் றவம்வருந்திப்
புரிந்த பூதூர். (சு)

எத்தலத்து மல்லாத விறுப்பூதொன் றதிற்பிறந்த
யுயிர்கட் கெல்லாங்
கைத்தலத்தின் மான்மழுவா தியவுறுப்பு மறைந்திகத்திற்
கலந்த வாற்றான்
முத்தலத்து முதன்மையதாற் சுந்தரார்ச்சந் தமிழ்ப்பதிக
முடிவி லாத
வத்தலத்திற் பிறந்தவர்க ளெல்லார்க்கு மடியனென
வறையு பூதூர். (எ)

திருவாரூராசன் சிவபிரானை வழிபடல்.

இனையனவா கியகமலத் திருநகரி லெரிமணிவிட்
டிமைக்குஞ் செம்பொற்
கனைகழற்கால் வயமீவந்த னெருவன்மதி பமைச்சனெடுங்
கருது மன்பிற்
சினைமுதிரு முகிறடவு கொடியாடு சினகரத்திற்
சென்று திங்கள்
புனையுநெடுஞ் சடிலமுடிப் புற்றிடங்கொண் டினிதிருக்கும்
புனிதத் தீனை. (அ)

திருவாரூராலயத்தில் முனிவர்கள் வருதலும்,
அரசனவரை யுபசரித்தலும்.

செங்கமலப் பதங்களினு லங்கத்தால் வலமகிழ்ந்து
செய்யுங் காலைத்
தங்குவிடை யங்கெடுத்துத் தம்முணர்வின் மனதிறுத்து
தவத்தின் மிக்க
நுங்கமுறும் வரமுனிவர் திருக்கோயி லகத்தடையத்
தொழுது வேந்த
னங்கவரைக் கொணர்ந்தொரூஉ வாச்சிரிய மண்டபத்தா
சனத்தி னேற்றி. (கூ)

முனிவர்கள் அரசனை யொருங்கிருத்திக் கதைகள் கூறுதல்.

அருங்கியல்கண் முதலாய வுபகரணம் பலவமைத்தீத
யருச்சித் தீதத்தி
மருக்கமலத் துணைப்பதங்கள் சென்னிதாடத் தெண்டனிட்டு
வணங்கி நின்ரு
னுருக்குமனக் கருணைபொடு மாதவத்தீதார் வபீவந்தை
யொருக்கு வைத்துத்
திருக்கிளரு முகமோக்கி யரிதாய கதைகள்பல
செப்பி ஞரால். (கஎ)

முனிவர்கள் அரசனை நோக்கி, நீ இத்திருவாரூரில் அமர்ந்திருக்கும் சிவபிரானை மிகுந்த பக்தியோடு வழிபட்டு, பிரதக்ஷிணம் செய்வதற்குக் காரணம் யாது? என்றுவினவுதல்.

பலகதையும் பகர்ந்ததற்பின் பாந்தணெடி முடிக்கிடந்த
பாரி னீட்ட
மிலதுமணி வலைபநெடும் புபப்பரிக்கு மிகலமீச
யிதய மீமார்ந்து
நிலவுவனை சடைப்பரனுக் கிபற்று முப காரமெல்லா
நிற்க நாளு
மலகின்முறை பத்தியினில் வலப்புரிந்து வருமாறு
மதுவு மன்றி. (கக)

வாய்ந்தசெழுங் கற்பகப்பொன் வளநகரங் குடிபேறி
மப்பர் நீங்கக்
காய்ந்தவழன் கைமுகிழ்த்து மூவர்புர மெரித்தருளுங்
கடவு ளாண
யாய்ந்ததமிழ்க் கோரடிக்கீ ராயிரம்பொன் னளித்தவனை
யாரூர் மேவிப்
பாய்ந்தபெருங் கருணையொடும் வலன்மிகவும் புரிதலையும்
பகர்தி யென்றூர். (கஉ)

அதற்கு அரசன், நான் முற்பிறப்பில் பசுக்களை மேய்ப்பவனாயிருந்தபோது ஓர்கால் ஓர் பசு இக்கமலாலயத்தைச் சுற்றியோட நானும் அதைத் துரத்திச் சென்றேன். அச்செயல் பிரதக்ஷிணமாய் நேர்ந்து, அதன் பயனால் நான் அரசனாகவும், டசு மந்திரியாகவும் பிறந்தோம் எனக் கூறி, அத்தனை வீசேடமுடையதால் இக்கமலாலயத்தைப் பிரதக்ஷிணம் செய்துவருகின்றோம் என்று கூறுதல்.

மையலறு மாதவத்தீ ரிவையுரைக்கப் பருதிபுரை
மாலை மார்பன்
செய்யகனி வாய்திறந்து செப்புவன்பான் முன்னெடித்த
சென்னந் தன்னி

லெய்துமிரு நிதியீட்டும் வணிகர்குலத் துதித்தறிவி
லிழுதை யாகி
வெய்யகொடு வறுமையிலை வளநகரப் பசுவினத்து
மேய்த்துக் காப்பேன். (கஙு)

வேறு.

ஆப காலியி லோர்பகற் கூடிய வாவினின்மே
றூய பால்பொழி வான்பசு வொன்று துணுக்கிணடி
மேய வின்னகரிற்புற மேவலன் சூழ்ந்துமெல்லப்
போய தெண்ணரும் பல்முறை புல்லருந் தும்பொருட்டால். (கச)

பிரிந்து போனது பசுவென வெண்ணினன் பீதியுற்றே
னெரிந்த சிந்தையி னேடொரு தண்டெடுத் தேங்கியேங்கிக்
கரிந்த புன்னெடுங் கானமு மருதமுங் கால்கணிணவத்
திரிந்து தேடினன் கண்டிலன் பின்னடிச் செல்வுநோக்கி. (கஞ)

மருத வேலியி னின்னக ரின்புறம் வந்துதீம்பால்
பெருகு மென்படி யாவினன் னடிச்சுவட் டிற்பெயர்ந்து
பருதி மேற்றிசை யிற்படர் மாலைமட் டும்பரந்து
கருதி யேவலஞ் சூழ்ந்தது தேடினன் காண்டல்செய்தான். (கட)

வேறு.

நெஞ்சங் குளிரப் புடைசென்று நெருங்கிமீட்டு
விஞ்சும் பசுவைப் பரிப்போனிட மேவிடத்தே
னஞ்சுந் தகைதீர்ந் தனனுள் பலவாயபின்னர்
துஞ்சுந் தினம்வந் தெனதாவி துறந்துவீப்நீதன். (கஎ)

வேறு.

குடம்புரை செருத்தற் பால்பிதி மொழுகுங்
குறுங்கணீண் முலைக்கவை யடிபி
னெடுங்கயப் பகுவாய்ச் சுரபியொன் றிரிய
நேடியே கமலிமா நகரை
மடந்தரு மனத்தால் வலனுற நடந்த
மாதவப் பெருமையின் வழக்காற்
றடந்திரை யுலகம் புரக்கமுன் னறிவு
தழைதர வேந்தனு யினனுல். (கஅ)

புன்மடித் தருந்த வலனுறப் போந்த
சுரபியிப் புவியெலாம் புரந்து
மன்முறை செலுத்த வெனக்கருங் துணைபா
மந்திரி யாயின னடைவே
யின்னதென் றறியா தியற்றிய தரும
மித்தகை புரிந்தது வென்றுற்
சின்மயப் பொருளைக் கமலியில் வலஞ்செய்
பெருமையா னளவுறத் தெரிப்பார். (கசு)

அதனைக் கேட்ட முனிவர்களும் அவ்வாலயத்தை
வலம் வந்து பெரும் பயனடைதல்.

ஆதலா லினைக் கமலிமா நகரில்
வலஞ்செய்தே னென்ன லு பரிய
கோதிலாத் தவத்தோ ரங்ஙகர் வதிந்து
குழகனை யசைந்தசைந் தாடும்
பூதநா யகனைப் புற்றிடத் துறையும்
பொருவிலாப் புண்ணியப் பொருளைக்
காதலால் வலஞ்செய் தெண்ணிலா வேள்விப்
பலத்தினைக் கவிப்புற வடைந்தார். (உ0)

வேந்தனு மமைச்சனும் ஈற்றில் நகரத்திரங்களாய் விளங்குகின்றமையைக்
கூறுதல்.

வையக முழுது மொருகுடை நிழற்றப்
பொதுவறப் புரந்தமான் மழுச்செங்
கையக மிருத்தும் பரனையெத் தலத்துங்
கமலிமா நகரினும் பணிந்து
மெய்யுற விரும்பி வலநடந் திகல்வேல்
வேந்தனு மமைச்சனும் விளங்கு
செய்பதே மொளிபி னுடுக்களா யின்னு
மிருக்குண ருளங்களி தினைத்தே. (உக)

பிரதக்ஷிணத்தால் எய்தும் பயனைக் கூறுதல்.

விரிதிரை சுருட்டுங் கங்கைநீர் புனைந்த
வேணிவிண் ணவனையன் புருகித்
தெருளொடும் வணங்கி வலஞ்செய்வோ ரழியாச்
சிற்பர மகத்துவ மடைவா
ரருமறை வழிபோ யைந்தையு மடக்கி
யறத்துறை படிந்தமா தவத்தீர்
பெருகிய வுயிரின் பிறவிநோய் தும்மிக்க
வீதலாற் பின்னதொன் றிலைபால். (உஉ)

எண்ணரும் தகைய வலன்வரல் விழைவி
னியற்றிடற் றன்னினு முபர்வு
நண்ணிய வருணத் தவரையுட் படுத்தி
நடந்தவ தொருபது பிறப்பிற்
பண்ணிய பவம்போய் நற்குலத் துதித்துப்
பண்ணவன் சேவடிக் கமல
முண்ணிறைந் தூலவ நிகரிலாத் திருவி
னும்பர்கோ னென்னவீற் றிருப்பார். (உங)

அந்தண ரவரின் மகஞ்செய்வோர் துறந்தோ
ரரசுவிண் டொடுகிறீ சயில
மிந்துவக் தணவு பொலனெடுங் குடுமி
யேமகூ டப்பொருப் பெவர்க்கு
முந்துதென் புலத்தீதார் குரவனீன் றவர்க
ளிவர்களை முறைவலண் புரியி
லுந்துநற் பலமே லொன்றினுக் கொன்று
பதின்மடங் கதிகமென் றுரைப்பார். (உச)

இனையன பலத்திற் பதின்மடங் கதிக
மினியதே னருவியூற் றெழுக
நனைமுறுக் குடைத்து வண்டுபாட் டயரு
நளினமா ளிகையில்வீற் றிருக்கும்
புனையிழை யலங்கற் றிதலைபங் குருப்பைப்
பொற்கொடி பொருந்துமார் பினனை
முனைவனைத் தடக்கைப் பகந்தழாய்ப் படலை
முகுந்தனைத் தனிவல னியற்றல். (உடு)

சில்லரித் தடங்கட் கவுரியைக் கயிலைச்
சிற்பரன் றனைவல னியற்ற
மெல்லவோர் சரணம் பெயர்த்திட நினையில்
வினைபெலா நீறுபட் டொழியு
மல்லல்வெங் கதிர்தோய் சினகரம் புகுந்து
வரிலதன் பலத்தினை வகுத்தே
யெல்லையிட் டுரைக்கப் படுவதோ வழிபா
வின்பமா முத்தியெய் துவரே. (உசு)

சிவபிரதக்ஷிண முறைமையினைக் கூறுதல்.

வலம்புரிந் திடுங்கற் சோமசூத் திரத்தைத்
தொடங்கிமற் றதன்வரை வருதல்
பலந்தரு மதனைக் கடத்தறீ தாகும்
பலிபிடப் பண்ணவ னெழுங்கா
லிலங்குசெம் மணியின் வாசலை முதற்பி
னெழுந்தது கடக்கினு மிபல்பா
நலந்தர வதனுக் கொருமுழ நீங்கி
நடப்பது நன்றென வறைவார். (உள)

பிரதக்ஷிணவகைகளைக் கூறுதல்.

வேறு.

அக்க ணிந்த சடைமுடி யண்ணலை
மிக்க நல்வல மாக விழைவுடன்
பக்க மெல்ல நடக்கிற் பதப்பிர
தக்க ணம்மென் றுரைப்பர் தெளிந்தோர். (உஅ)

தொண்டர்க் கேயன் பிலங்கித் துலங்கிய
பண்டைச் சோதியைப் பத்தியி னுல்வல
முண்டிக் கீழ்நமக் காரமிட் டேவரிற்
றெண்டப் பேர்ப்பிர தெக்கண மாகுமால். (உக)

ஈசனே யென தாவிக் கிறைவனே
நேச மோடு நெடுநிலத் தில்வல
மாசி லாதமெய் தோய வருவது
பேசி லங்கப் பிரதெக்க ணமென்பார். (ஙo)

தாழ்ந்த செஞ்சடைச் சப்புவை யென்னுளம்
வாழ்ந்தி ருக்கு பணிவிளக் கைவலஞ்
சூழ்ந்து சற்றிடைக் கால்வைத்துத் தொன்னிலம்
வீழ்ந்து போதுதன் மிச்சிர மாகுமே (ஙக)

மேற்றி சைமுக மாய விடலனைப்
போற்றி நல்வல மோர்முறை போதுகிற்
சாற்று மேழ்கடல் சூழுந் தலத்தினை
யேற்று கோடி புரிபல மெய்துமால். (ஙஉ)

தேடி லாதுயர் கெற்ப கிரகத்தி
னீடு செஞ்சடை நித்தனுக் கல்லது
மாடு தங்கும் வரதருக் கேவல
நாடி வேறு நவின்றில நான்மறை. (ஙங)

சூதமுனிவரிடம் இக்கதையினைக் கேட்ட முனிவர்கள் களிப்புறுதல்.

என்று சூத னியம்பலு மாதவர்
துன்று மாணவத் தொல்வினை நீங்கிட
நன்று நாதனைச் சூழ்வரு நற்கதை
யின்று கேட்ட தெனக்கனி வெய்தினர். (ஙச)

பன்னிரண்டாவது
இராசா பிரதக்ஷிணம் பண்ணின கதையுரைத்த
அத்தியாயம் முற்றும்.

பதின்மூன்றாவது
பஞ்சாக்கர மகிமையுரைத்த
அத்தியாயம்.

நந்திதேவர் சனற்குமாராதியருக்குரைத்த பஞ்சாக்கர மகிமையைச் சூதமுனிவர் மற்றமுனிவர்களுக்குக் கூறத் தொடங்குதல்.

வெற்றி மால்விடை விண்ணவ னஞ்செழுத் தியற்கை
நற்ற வப்புரி நந்திமெய்ச் சனற்குமர னுக்கு
முற்று மோதிய முறைவழி முனிவர்கே ளிட்ப
வற்ற காதலிற் சூதமா முனிவர னுரைக்கும். (க)

பஞ்சாக்ஷரத்தின் மகிமையைக் கூறுதல்.

சிற்ப ரத்தனி முதற்கிணை தெய்வமொன் றில்லைப்
பொற்பு றுங்குழ லுமைக்கிணை பூவைய ரில்லை
யெற்று தெண்டிரைப் பகிரதிக் கிணைநதி யில்லை
மற்பொ ருந்திய வடவரைக் கிணைவரை யிலைபால். (உ)

இரங்கு வெண்டிரைக் கடற்கிணை யெறிபுன லில்லைப்
புரங்கண் மூன்றையு மெரித்தவன் பத்தியிற் பொருந்த
விருப்பு நற்கதி தருதவம் விளம்பவே றில்லை
வரங்கொ ளஞ்செழுத் துக்கிணை மந்திர மிலைபால். (ஙு)

சிவ முதலவை வகைப்படுந் திருவெழுத் தஞ்சு
முவமை யற்றதோர் மந்திர மதனையுச் சரிக்கிற்
பவம கற்றிநற் பரகதி தருமெனப் பழைய
தவல றுஞ்சது மறையுமா கமங்களுஞ் சாற்றும். (சு)

ஒருமுறை பஞ்சாக்கரத்தை ஓதுவதாலெய்தும் பயன்.

அன்ன மந்திர மொருமுறை மறந்தறைந் திடினு
மென்ன பாதக ராயினு முத்திபெய் துவராற்
சொன்ன வேதமும் புணர்ந்துளீ ரிதன்கதைத் தொகையின்
மன்னு மோர்கதை வழங்குவன் கேட்குதிர் மகிழ்ந்தே. (ரு)

இதன் மகிமையை விளக்கும் சதானந்தர் என்பவரது
சரித்திரத்தைக் கூறுதல்.

மறைக் குலந்தனி விளக்கிட வந்தவ தரித்தோர்
பொறைக்கொ ராலய மெனவரு பூசை சித்தர்
நிறைக்கு மாதவத் துதித்தவ னித்தணை யகலா
துரைக்கு மன்பினன் சதானந்த னெனுமொரு யோகி. (சூ)

சதானந்தர் சிவபிரானைச் சிந்தித்து நிட்டையிலிருத்தல்.

மூவி தப்படுங் காரணங்கள் முழுவது மடக்கிப்
பாவ னைப்படும் யோகமம் முறைவழிப் பயின்றே
னேவ றத்தனி யுலகங்கள் பார்த்தெலா மொழிந்தோன்
சேவ யர்த்தவன் பதங்களிற் சிந்தையைத் திருப்பி. (எ)

யானெ னுஞ்செருக் கறுத்தெவை செய்யினு மழியா
வானி ளம்பிறை முடித்தவன் செயலென மதித்தே
யூனி டுமுடம் பொருசுமை யெனமனத் தொறுத்து
ஞான வற்புதக் கடலிடை நலம்பெறத் திளைத்தான். (அ)

பின்னு மப்படிக் கயிலையங் கிரியுறை பெருமான்
பன்னு நான்மறை யாகம முரைத்திடும் படியே
மன்னு பல்வகைக் கருவியு மதீதமு மறுத்தே
யுன்ன ருந்தனி நிட்டையி னுள்பல வுறைந்தான். (கூ)

சிவபிரான் சதானந்தர் முன் தோன்றுதலும், அவர் சிவபிரானைப் பணிதலும்.

ஈது கண்டன னெழுந்தனன் மழவிடை யிறைவன்
சோதி தோன்றலு நிட்டைபை நீங்கினன் சுருதி
மாத வத்தினன் சிற்பரன் பலமடி வழுத்தி
யாத ரத்தொடுந் தெண்டனிட் டருந்துதி பகர்ந்தான். (கo)

சிவபிரான் வேண்டிய வரத்தைக் சேட்குதியெனச்
சதானந்தருக் குரைத்தல்.

பரவ மந்தணன் மதிமுக நோக்கினன் பரம
னிரு மாதவம் புரிந்தணை யாதலா னின்னைப்
பெரிது வந்தனம் வேண்டிய வரமினிப் பேசிற்
றருவ மென்னலு மாதவ னினிதுரை சாற்றும். (கக)

சதானந்தர், சிவபிரான் பாததாமரைகளே என்றும் சிந்தித்திருப்பதே
போதுமெனல்.

பாறு சுற்றிய மூவிலை வேற்படைப் பரம
வேறு நற்றவம் வேண்டுமோ நினைவிரும் பினர்போன்
மேறு டித்துணைக் கமலமென் னிதயமீ திருத்தி
யூறு மன்பொடும் பரவுதல் வேண்டுமென் றுரைத்தான். (கஉ)

சிவபிரான் களிப்புற்று, அவருக்குக் கணத்தலைமை யளித்து மறைதல்.

யோகி யின்னண முரைத்தலுந் திருவள முவந்தே
யேக நாயக னவனெமெய் யிருகையாற் றழுவித்
தோகை வாகனன் றனக்கிணை நீயெனச் சொல்லிச்
சேக றுங்கனி வாய்திறந் தினையன செப்பும். (கங)

நீடு நங்கணத் தலைமையு நித்தியத் துவமு
நாடு வெள்ளியங் கிரிமுத னமதிடந் தோறும்
வீடுந் தந்தன முனக்கென வன்புற விளம்பி
மாட கத்தனி யாழ்மொழி பங்கினன் மறைந்தான். (கச)

பின் சதானந்தர் சிவலிங்கபூசனையும், சிவனடியார் வழிபாடும் செய்துவருதல்.

அரன் மறைந்தபி னன்னவன் றனையிலிங் கத்திற்
கரும மூற்றுற யோகிமெய்ச் சிந்தணை கனிந்து
பரவி யேத்துவ னடியரைப் பழிச்சுவன் பகரும்
வர மறைப்படி நற்றொழில் யாவையும் வகுப்பன். (சஞ)

சதானந்தர் சிவபுராணம் கேட்டல்.

இத்தி றப்புரி காலியி லோர்தினை மிசைக்கு
முத்தி யாகமம் விதித்திடு முறைதொழின் முயன்று
மத்தி யானகல் லடியருக் கன்னமும் வழங்கிச்
சித்த மன்புறச் சிவகதை கேட்டனன் றெளிந்து. (கக)

சிவபுராணத்திற் கூறப்படும் நரகத்தின் தன்மையைக் கேட்டு வருந்தி, நரகிடைப் படுவோர் தயரை நீக்கக் கருதி யமனது நகரஞ் செல்லுதல்.

மொழிந்த மாக்கதை தன்னில்வெங் நரகிடை மூழ்கி
யழுந்து வோர்துய ரனைத்தையுங் கேட்டுள பயர்ந்தான்
விழைந்தன் னோர்துயர் தவிர்த்திருங் கதியினை விளைப்பா
னினைந்து தென்றிசைத் தருமனன் னகரினி தடைந்தான். (கள)

வேறு

யமலோகத்தில் பாவஞ் செய்தோர் அடையும் நரகவேதனைகளைக் கூறுதல்.

செந்த ழற்சிகை திரண்டுகிறு குஞ்சி யெரிய
வெந்த செம்பென விழித்துணை சிவந்து கனல
முந்து வெண்பிறை முறுக்செயி றிலங்க முசல
முந்து தோள்வரையின் வெய்யதழல் சிந்தி யொளிர. (கஅ)

இட்ட பொற்றவி சிருந்துபிணி பென்ற பலவுங்
கிட்டி நின்றணி கிளைத்திரு மருங்கு பணிய
விட்டு வெங்குர லிடித்தொனி வெடிக்க வலறிப்
பட்ட செங்குருதி யோடுதடி சுற்று படையை. (கக)

கூவி லேவெறுவ ரில்லிழைவு கொண்டு குறுகும்
பாவி யோர்சரணம் வெட்டுக பணைத்த முலையின்
பேவு கைகளை யரிந்திடுக வீசி யவர்மே
லோவி லாது முனை யூசிகள் புதைத்திடு திரால். (உ0)

வேக முற்றயலி னோர்பழிகள் விண்டு புகலு
மூகர் தங்கள்கனன் முட்டிபெரி வாயி லிறுகத்
தேக முட்கியறி வின்செயல் சிதைந்து பதறிச்
சோக மிக்குற விருப்புழலை துற்றிடு திரால். (உக)

வத மற்றவரை யிழில்பழி சொல்லு மிவர்வாய்
மீது வேல்விகட பத்திர நிறுத்தி வெருவப்
போத மூளதசை சோரிபட்ர் புன்னரகின் வாய்
மோதி மிக்கதலை கீழுற முனிந்திடு திரால். (உஉ)

ஈட்டி செம்பொனை நிலத்தினிடை யிட்டு மிகவும்
வாட்ட முற்றுவறி யோரிலெவர் பாலு மணுகிக்
கேட்டி ரப்பவர்கள் கையிணையி லெண்ணெய் கெழும
வூட்டி வெந்தழ லெரிந்திட வருத்திடு திரால். (உங)

நீய நீவினை கடந்தகுரு வைச்சி வன்முதற்
றூய வானவர்க ளோப்பழிகள் சொல்லு மிவர்தம்
வாயில் வெந்துருகு செம்பினை மடித்திடை யறப்
பாய நாவிலுடு பற்கரிய விட்டிடுதி ராள். (உச)

அன்பு வந்தாருவ ரீவது தடுக்கு மவரை
யென்பு பற்றிநெடு நாவரிக வேதின் மறையோர்
பொன்ப றித்துநுகர் வோர்வயி னகழ்ந்து பொதுள
முன்பி ருப்புமுண் மலப்புழு முகந்திடு திரால். (உஞ)

செய்ய மாதவர்கள் வேதியர் விருந்தினர் சிறந்
தெய்தி நல்லடிசி லுண்ணவளி யாதினி தூதா
முய்ய வெம்பசி விரைந்திரிய வுண்ணு மிவரை
வெய்ய குப்பிரை யஞ்சுட விடித்திடு திரால். (உசு)

சென்ற டைந்தவர் தமக்கீவு செய்யு மவரைக்
கொன்றி ளப்புதல்வ ராருயிர் குடித்த விவரை
வென்றி வெங்கதைகொ டெற்றிடுக மிக்க வுடலங்
கன்ற வேரவர வத்திடை கடிந்தெறி திரால். (உள)

புன்ம யக்கநற வுண்ணுமிவ ரைப்புலவு நீர்
மன்னு வாய்நரகி லுப்பத்திடுதிர் வாழுமுறை நூல்
பன்னும் வேதியரை வெங்கொலைசெய் பாதகர் தமை
யின்னல் கொண்டுழ நிருட்டிநர கத்திடு திரால். (உஅ)

சில முற்றகுரு பன்னிமுலை சேரு மிவரை
யேல நற்பொருள் கவர்ந்திடு மிருங்கொடி யரைக்
கால சூத்திர மெனுங்கனல் கதழ்ந்த நரகின்
பாலு டற்பிளவு பட்டெரிய விட்டெறி திரால். (உக)

எண்ணும் வேதமுணர் நற்றவர்க ளாவி பிரியப்
பண்ணு பாவமுத லுன்குநனி பண்ணின ரொடு
நண்ணி னோரையசி பத்திரமெனு நவில்வ தோர்
கண்ண கன்றநர கத்திடை கணன்றெறி திரால். (ஙo)

முற்று பாதகரை வெய்யகன லெண்ணெய் முழுக
வெற்றி யன்னவர் முடைத்தசை யிசித்துவளை வாய்
பற்றி மென்சிறை யடித்திடை யெறிந்து பறவை
குற்ற டிக்கொடுழு கோரநர கத்திடு திரால். (ஙச)

நாடு நற்றுணைவர் கோவினெடி நன்னுத லினு
ரீட ழிந்துமன னேவவுயி ரீருமி வரைக்
கூட சன்மலி யெனுங்கொடிய தீநரக முற்
ரோடு மூளசித றத்தலை யுடைத்திடு திரால். (கூ)

தாம ணைந்சவ ரிருப்பவயன் மாதர்த மைமீய
காமு றத்தழுவு கையினை நறுக்கி யெறிக
யாம நன்மனையி லங்கொரி கொளுத்துமிவ ரைத்
தூம வெங்கனல் சுழன்றநிரை யத்தெறி திரால். (கூ)

வெருவு கோண்மிக விளம்பிநிதி கொள்ளு மிவரைத்
திருகி யேநடு வரைப்பது திறப்பு மிவரைக்
கருதி யாருயிர் செகுப்பவிட மூட்டி கலரைப்
பெருகு காளநிரை யத்திடை பெயர்த்திடு திரால். (கூ)

நெடிய வெண்டிரைய வாவிநதி நீரின்முடை வா
யடையு நீர்மலம் விடுக்குமறி வற்றவர் களைத்
துடிது டித்துயிர் சுழன்றரிய சோக முறமீ
கொடிய மிச்சினர கத்திடை குறித்தெறி திரால். (கூ)

கருவ ழித்தவர்கண் மெய்கருவி கொண்டு கடிதி
ருருவ முன்னுறுதி யுள்ளபடி பண்ணி யுடையத்
திருகை வைத்திடிதிர் சுற்றிடிதிர் செய்ய வடல
மருவ நல்கிடுக பாழ்நரகின் வாபெறி திரால். (கூ)

ஆறு நற்சுவை தரும்பொருள் பகர்ந்தயர் வறும்
வீறி லந்தணரை யாலியின் மெலித்திடுக நூல்
கூறு தப்முறை திறம்புகுல மன்னவர் தமைச்
சீறி நீர்வறிய கூவலிடை சேர்த்திடு திரால். (கூ)

வெறிகொ டுக்குமது லிற்குமிவ ருள்ளம் வெருவ
வுறுபு லாலினெடி மென்புபொடி யாகவுரல் வாய்க்
குறுக வைத்துய ருலக்கைகொடு குத்தி யுதறி
யிறுதி யற்றநர கத்திடை யெடித்தெறி திரால். (கூ)

சொற்ற வேதியர்க ளாதியுபர் தொன்மரபில் வந்
துற்ற பேர்கண்முன் னுளத்தறிவு கொனறு சரணம்
பற்ற நீட்டிய சதுர்த்தர்கள் பதைக்க வுடல
மற்று வீழ்வுற வதோமுக மமிழ்த்திடு திரால். (கூ)

பற்றி மற்றிருவர் பாரிபை மணந்த விவரைப்
பொற்பு நடப்பிறர் புபந்தழுவு பூவைபர் தமைக்
கற்றை வெங்கனல் கணிந்தொழுகு செப்பு ருவதீ
ரற்பி னெடனுகு வீரென வெடித்தறை திரால். (கூ)

எண்ணெய் பஞ்சிவிட மேமநரை யால்வியல பகர்
பண்ணி றைந்தமறை யந்தண ரெனும் பதகரை
விண்ணி னுசலென நாற்றி மெலிவுற் றுழலவே
கண்ண கன்கரிய சேற்றிடை கலத்திடு திரால். (கூ)

நல்ல தோர்விரத மாற்றி யிடைவிட்டு நலியும்
புல்லொ ழுக்கினரை யீயினெடு வண்டு பொலியுந்
தொல்லை மாநிரைய மீதுடல் சுருண்டு வெருவி
யல்ல லுற்றழு திரங்கிட. வமிழ்த்திடு திரால். (கூ)

வேறு.

யமன் சதானந்தமுனிவரின் வரவினைக் கண்டு அவரை யிருத்தி உபசரித்தல்.

இன்னணம் பகரு மவையினை நீங்கி
யந்தகன் பொறைவடி வெடுத்துப்
பன்னரு மறைதியான் வரவினை நோக்கி
யெதிர்கடந் தடியினை பணிந்தே
யன்னவன் றனையோர் மண்டப நாப்ப
ணைவிர்மணிப் பீடிகை யிருத்தி
மன்னுமன் புருக நறைமல ரெடுத்து
வரன்முறை பூசனை புரிந்தான். (கூ)

ஐந்தையு மடக்கி மனத்திரு ளொழிய
வடியனை யரன்கழற் கமலஞ்
சிந்தைபுட் படுத்து மரியமா தவரி
லொருவனுத் திருவுளத் தடைத்தே
யிந்து மட்டணவு மானம தகைத்துக்
கணங்கணம் பருங்கினு நெருங்க
வந்திவ ணடைதற் கெத்தவம் புரிந்தே
னெனமகிழ் வொடுமினி திசைத்தான். (கூ)

சதானந்தர் யமனைப் புகழ்தல்.

மறலிசொற் றிடுதல் செவித்துளை மடுத்து
மாதவ னினையன வழங்கு
மறநெறி தணைந்த வுயிர்த்தொகை யிட்டும்
பவமெலா மொருவழி யகற்ற
முறைபுரி யரசு முழுவதும் புரக்க
முக்கணன் குரைகழற் கமல
மிறைவ நெக்குருகிப் பணிந்தவ ருலகி
லெவர்களை நினையலா லிசைக்கில். (கூ)

யமன், எக்காரியத்தின்பொருட்டு இவ்விடம் எழுந்தருளிவந்தீரென்று சதானந்தரைக் கேட்டல்.

ஆதலால் வந்துன் னுழைபடை வதுமோ
வருச்சனை முறைபுரிந் திடவ
நீதியா மெனவே நிகழ்த்தினன் மறவி
கெஞ்சகெக் குள்ளுடைந் துருகி
யோதுகான் மறையின் முடிவினை யுணர்ந்தே
யனைத்தையு மொழிந்த மாதவனீ
யாதுகா ரியத்தை நீணகதெழுந் தருளி
யித்தலம் புகுந்ததென் றறைந்தான். (சக)

சதானந்தர், நரகத்தியல்பு காணுவதற்கு வந்ததாகக் கூறுதல்.

முச்கனி கனிந்த மதுரமென் குதலை
முல்லைவா ணைகச்செழுந் துவர்வாப்
பைக்கருங் கூந்தல் பங்கினன் புராண
வாருதி படிந்துளந் தினைத்தே
னக்கதை யுணர்த்த நரகுறு மிபற்கை
கேட்டன னன்னவை காண்பான்
புச்கடைந் தனனின் னுழையெனப் பகர்ந்தான்
புழுங்கியந் தகனிவை புகலும். (சஎ)

அதைக் கேட்ட யமன், பாதகரன்றி மற்றவர்கள் நரகத்தைக் காண்பதும் கூடாதெனக் கூறுதலும், முனிவர் பின்னரும் வற்புறுத்துதல்.

ஈசனை வழுத்தி யஞ்செழுத் துணராப்
பாதக ரன்றியிக் கொடிய
மாசுறு நிரையங் காண்பரோ வடித்து
மறைமுடி வுணர்ந்து நின்போலத்
தேசுறு பரம நிட்டையிற் பயின்றோ
ரென்றனன் றிருந்துமா தவத்தோன்
பேசின னரகங் காண்பதற் கிசைந்தாய்
பின்னரு மொழிப்பெப ரமுதம். (சஅ)

எவ்விதமாயினும் சிவனடியார் விருப்பத்திற் கிணங்குவதே எனக்குக் கடமை என்று யமன் கூறி, சதானந்தருக்கு நரகங்களைக் காண்பித்து அவற்றின் தன்மைகளைக் கூறுதல்.

மூன்றும் மலமுங் கிழங்கற வகழ்ந்த
முனிமிரு கண்டினி தளித்த
காளையம் பருவத் தரசினங் குபரன்
கருணைமாற் கண்டனை யடுக்கால்
வாளர வசைத்த சதுப்புப னிடத்து
மலர்ப்பத பெடுத்தெனை யுதைத்தான்
மீளவு மிரங்கி யிறந்தவா ருயிரு
மேதகு மரசுமீண்டு களித்தான். (சக)

அன்றுதொட் டெளியே னானடி யவருக்
கஞ்சுவ லருந்தவர்க் கரசே
யின்றுநீ மொழிதல் கடக்கல னிசையங்
காண்பதற் கெழுகவென் றெழுந்து
சென்றனன் மறையோன் றன்னெடுந் தருமம்
னிரைநிரை நரகங்க டெரிய
மன்றலங் கமலத் தாரிணன் காணக்
காட்டினன் வகைவகை பெடுத்தே. (ரo)

ஆங்கவை யளவும் பெயர்களும் படிந்தோர்
துயரமு மன்னவர் பவமு
நீக்கல ராகி யுறையுநா ளளவு
நிகழ்த்தின னிகழ்த்துதற் கரிய
தீங்குறுங் கொடிய ரவுரவா திகளும்
காட்டினன் சென்றவர் திரும்பா
வோங்கெரி படுத்துக் கிளரதி கோரத்
தருகுபோய் நின்றன னுரைக்கும். (ரக)

அந்நரகமாகிய நரகங்களை யடைந்ததும், அவை மிகக் கொடியனவாதலால், அவற்றின் தன்மைகளைச் சொல்லுதல் கூடாது என யமன் கூறுதல்.

செரிபடு நிரைபத் தளவையு மிவையிற்
சூழல்பவ ரிழைத்திடு தீங்கு
பெரிபடு துயருங் கிடக்குநா ளளவு
முரைத்திடிற் கேட்டவ ரிறப்பர்
விரிபடு நரகத் திமட்கெலா மரசாய்
வெந்துயர் மிகவினைத் தொறுக்கு
மரில்படு மவைகள் ரவுரவா திகளீ
தம்மவெங் கனலதி கோரம். (ருo)

சதானந்தர் மற்ற நரகங்களின் தன்மையைக் கூறியதுபோல இவற்றின் தன்மைகளையும் கூறவேண்டுமெனல்.

என்றலுஞ் சுருதி மாதவ னிசைக்கு
மன்னுறு நரகினுக் கெல்லா
மொன்றிய வளவு மடைந்தவர் துயரும்
பவங்களு முழல்வுறு நாளு
மின்றுரைத் தனீ யிவைகளுக் கவைக
ளியப்பிடா தென்கொலோ வென்றான்
குன்றடு தடந்தோ ளந்தக னிதயங்
கொதித்திட விணையன பகரும். (ருக)

அதைக் கேட்ட யமன் கோபித்து, இந்நரகத்துள்ளவர்கள் அனுபவத்தை நீர் கேட்டால் அவர்கள் முத்தியை யடைவர்; ஆதலால், அதனைக் கூறத் தகாதென, முனிவர் என்னிடத்தில் உனக்கு அன்புண்டானால் கூறுவாயாக என்றுரைத்தல்.

பாதக ரிவர்கள் பவத்தினைப் பகரப்
படுவதே தகர்ந்துநீ கேட்கிற்
றீதறு தகைமை முத்தியை யடைவர்
செப்புகே னலனெனத் தெளிந்த
மாதவ னுனக்கென் னிடத்தினி லுவகை
யுண்டெனின் மறலியன் னவைக
ளோதுநீ யெனலு மன்னவன் மறுத்து
முரைப்பதற் கொழுகிடா தறையும். (நுச)

யமன் திரும்பவும் மறுத்துக் கூற, முனிவர் எது விளையினும் கூறவேண்டுமெனல்.

வெஞ்சினப் பதகர்க் கின்றுநின் பொருட்டால்
விழைவுறுங் கதிபெற விதிதோ
வெஞ்சவின் மறையோ யெழையே னறியே
னென்றனன் பின்னருந் தவத்தோன்
விஞ்சிய முத்தி யவரடை கினுமாம்
வெந்துயர் நனிவிளை கினுமா
மஞ்சொளி புரையு மேனியா யவைகள்
வகுத்துரை வழங்கென வலித்தான். (நுடு)

யமன் அக்கோர நரகங்களிலுள்ளோர் தன்மைகளைக் கூறுதல்.

கணங்களுங் கரச னுரைத்திடத் தருமன்
கழலுவ னளவையுங் கலந்தோர்க்
கிணங்குறு துயரு நீக்குநா ளளவு
மியாவரு மளவிடற் கரிதா
லணங்குவெம் பதக ரிவர்களுஞ் செழுத்தை
யங்குரித் திடும்பிறப் பினைத்தும்
வணங்கியுண் ணினையார் மாபெரும் பாவம்
வழிமுறை பயின்றவ ரென்றான். (நுகூ)

சதானந்தர் அக்கொடிய நரகத்தியற்கையையும், அதிலுழல்வோர் துயரத்தையும் கண்டிரங்கி, இவர்களை மீட்டேற்றவேண்டுமென்று யோசித்து, சிவபிரானது பஞ்சாக்ஷரத்தை உரத்துக் கூறுதல்.

கண்டன னரகத் திற்சையு மவையிற்
கலந்திடுங் கொடியர்வெந் துயரும்
விண்டுளம் பதைக்க வுயிர்த்திவர் பிழைக்க
வேண்டுமென் றொருவழி நினைந்தான்

றெண்டிரைக் கடிவண் டமுதினைக் களிக்குஞ்
சிற்பரன் றெய்வ வஞ்செழுத்தைக்
கொண்டவின் முழக்கி லதிர்ந்திட முழக்கிக்
கூறினன் குமைறைக் குரிசில். (நுஎ)

சதானந்தமுனிவர் கூறிய பஞ்சாக்ஷரத்தின் ஒலி கேட்டு, நரகிலுள்ளோரனைவரும் பாவம் நீங்கியவராய் மேலுலகமடைதல்.

திருந்து மஞ்செழுத்தின் முழக்கொலி நடந்து
திசைதொறும் திசைதொறும் பரப்பி
வருந்திவெந் நிரைபத் திடைசுடல் கொடியர்
வன்செவிக் குறுத்தலு புதுத
விருந்துயர்ப் படுத்து நரகம்விட் டெழுந்தே
யிலக்கொளி மானமின் னுகைத்துப்
பிரிந்துவா னவர்கண் மலர்மழை பொழியப்
போயினர் பார்த்தனன் முருமன். (நுஅ)

அதனைக் கண்ட யமன் கோபித்து, இருபத்தெட்டுக்கோடி நரகமும் பாழ்பட இப்பாதகர்களை மீட்டு, சிவபிரான் எனக்கிட்ட ஆஞ்ஞையைக் கடந்தனை என்று கூறுதல்.

நண்ணிய விருபத் தெட்டெனுங் கோடி
நரகமும் பாழ்கிடந் தெரிய
வெண் ணுறுங் கொடியர் மானமீ தெழுவே
யென்னையு மிகந்தெரி நுதற்கட்
புண்ணியப் புனிதன் மடவளஞ் செழுத்தைப்
பகர்ந்தனை பொருந்துமா நுயிர்கள்
பண்ணிய பவங்கண் முறைமுறை கழிக்கப்
பரமனைப் பணித்ததுவ கடந்தாய். (நுகூ)

அதனைக் கேட்டு முனிவர் புன்சிரிப்புக்கொண்டு, இவையெல்லாம் சிவன் செயலேயன்றி எஞ் செயலன்று; அதனால் எம்மீது குற்றம் வாதெனல்.

எல்லற விமைக்குப் பெருகொளி தழைக்கு
மேமமெற் பினையொரு தடக்கை
வில்லெனக் குனிக்கும் விண்ணவ னிதலு
லெண்ணையெத் தகைவெகுண் டிடுமோ
நல்லது வினைத்தா யருந்தவ வெனலுங
குறுநகை முகிழ்த்துநான் மறையோன்
சொல்லருங் கருணைத் தருமனீ மயங்கிச்
சொல்வதே னினையன தொகுத்தே. (கூ0)

போக்கொடு வரவு மின்றியே யகண்ட
பூரண மாகியெவ் வயிர்க்கு
நோககரு முயிராய்ச் சகலமு நடிக்கு
நோன்றனைப் பரமநா யகன்றன்
மீக்கிள ரருளே யிவையெலாந் திருந்த
விளைத்தது விருந்தவா ணவத்தி
னீக்கமற் றிருக்கு மணுக்களா நமக்கு
நிற்செய லன்றிமற் றுளதோ. (கூக)

முனிவர் இவ்வாறு கூறியும், யமன் இசையாது இவையெல்லாம் சிவபிரானிடம் முறையிடுவேனென்று மேருமலையை யடைதல்.

இருவர்க ளிடத்தும் பிழைவரக் கடனை
யில்லையென் றிசைதன னிதயம்
வெருவரத் தருமன் பின்னரும் விளம்பு
மிவையெலாம் விண்மதி மிலைத்த
புரிசடைப் பரமற் கிசைத்திட வேண்டு
மென்றனன் பொருக்கென வெழுந்து
மருமலர்த் தருக்கள் கதிரக டுரிஞ்சு
மந்தர கிரியினை யடைந்தான். (கூஉ)

சதானந்தமுனிவரும் யமனுடன் கூடச் சென்று இருவரும் சிவபிரானைப் பணிதல்.

யோகமா தவனு மவ்வரை யடைந்தா
னிருவரு மென்னைபா ருடைய
மேகநா யகன்றன் சன்னதி புகுந்தா
நிருகரஞ் சென்னிமேன் முகிழ்த்தே
யாகமீ தொழுகக் கண்கணீ ரரும்ப
வீழ்ந்தன செழுந்தய னின்று
சோகைமீக் கினைய வெப்பிரா னிவர்பா
லுள்ளம்வைத் தருட்கணீ ணைக் களித்தான். (கூந)

யமன் சிவபிரானைத் துதித்தல்.

வேறு.

முக்கட் கனியே முடிவிலா மூதுணர்வே
செக்கர்ச் சடைப்பவளச் செம்மலையே சேலனைய
மக்கட் கனிவாயே மலைமடந்தை பங்காளா
திக்கெட்டு மம்பரமாய்க் கொண்ட செழுந்தேனே. (கூச)

மாலாவி யுண்டவன்றன் மாயா வடமலைந்துஞ்
சூலாயு தந்தடக்கை கொண்ட சுடரொளியே
வேலா வலய முகட்டெழுந்து விண்பரக்கு
மாலால முண்டிமையோர்க் காத்தளிக்கு மாமுதே. (கூடு)

உந்திக் கமலத் துதித்தோனு நாரணனு
முன்தைப் பழபறையுங் காணு முழுமுதலே
நிந்தித் திருப்போர்க ணெஞ்சசத்தி னில்லாதாய்
சிந்தித் திறைஞ்சு மடியவர்பாற் செல்வமே. (கூசு)

சதானந்தர் நரகத்திலுள்ளவர்களை அஞ்செழுத்தை யோதிக் கரையேற்றியமையைக் கூறுதல்.

அய்யா வனது கணநாத ருகியவர்
மெய்யார் மறைதேர் சதானந்த மெய்த்தவத்தோன்
மையார் கொடுநரகம் வாழ்வோ ரனைவரையும்
பொய்யாத வஞ்செழுத்துக் கொண்டுபுறம் போகவிட்டான். ()

நின்பா லதுபுகல வந்தே தனைநிகழ்த்தி
யென்பான் மிகையுறினு மெந்தாய் பொறுத்தருள்கென்
றன்பான் மறலி யிரக்க வடலர்பிரான்
முன்பான் மறையோனை நோக்கி முறுவலித்தான். (கூஅ)

சிவபிரான் சதானந்தர் செய்ததெல்லாம் தஞ்செயலாகுமெனக் கூறுதல்.

செய்ய மறைதேர் சதானந்தன் செய்ததெல்லா
மைய மிலைப்பகரில் யானே யதுபுரிந்தேன்
மையகலு மஞ்செழுத்து மாயக் கொடுநரகி
னையு முயிர்பிழைக்க நாம்வகுத்த மந்திரமே. (கூகூ)

ஏக்குற்றஞ் செய்தவராஞலும் கண்டிகையும், விபூதியும், அஞ்செழுத்தும் உள்ளவராஞல் புண்ணியரெனல்.

ஈது விளைந்ததனு னுங்க ளிருவருக்கும்
தீது வராதுபவ மெவ்வண்ணஞ் செய்தாலு
நீதிதரு மாசார நீங்கிடினுங் கண்டிகையும்
பூதியொடு மஞ்செழுத்து முள்ளவரேற் புண்ணியராம். (எ0)

அஞ்செழுத்தின் மகிமையைக் கூறுதல்.

அந்தமுடி வில்லாத வஞ்செழுத்தைப் பேசுங்காற்
சிந்தை யறியாது கேட்ட திறத்தோரு
முன்தை வருந்தேவ ரெல்லாரு முன்பணிந்து
வந்தனைக ளாற்ற மகிழ்வுற்று வாழ்வாரே. (எக)

அடியவர் பெருமையைக் கூறுதல்.

தொல்லுலகில் வாழு முயிர்த்தொகையிற் சொல்லரிய
கல்வி யுடையோரே மேலோ ரவர்களினும்
பல்வகையா லென்னைப் பரவு மடியவரே
மல்ல லுறுந்தகைமை வந்த வழக்குடையோர். (எஉ)

அடியார் பாவஞ் செய்தாலும் நாமே அதற்குத் தண்டனைபுரிவோம்; மற்றவர்களை நீ முன்போலத் தண்டித்துவரலாம் எனக் கூறுதல்.

என்னை வணங்கு படியா ரிருந்தகைமை
முன்ன ருரைத்தலெல்லா முற்று மறந்தனையோ
மன்னு மெனக்கன்பர் மயங்குபவ மீட்டிடினு
மன்னவரை நாமே யவைசா தனைபுரிவோம். (எஊ)

மற்றைபர்க ளீட்டு பவத்தின் வழக்கறிந்தே
யிற்றை முதலாக வெரிநிரையத் தாழ்த்திடுநீ
குற்ற முளதாயிற் காப்பாபெனக் குழைந்து
சொற்ற துதிக்குள்ளந் தொலைபாக் களிதொலைத்தோம். (எசு)

இவ்வாறு கூறி, இன்னும் வேண்டிய வரமுளதேற் கேட்குதி என்று சிவபிரான் கூறுதல்.

வென்றி வரமின்னுந் தருவோம் விளம்புகநீ
யென்று மறலிமுக நோக்கி யினிதிசைத்தான்
றென்றிசையிற் காவலவன் சிந்தை நனிகளித்துக்
கொன்றைநறுந் தாரோனைக் கும்பிட் டடிபணிந்தான். (எடு)

யமன் தான் எப்பிழை செய்தாலும் அதனைப் பொறுத்து, சிவனடியிணையைச் சிந்தையிலிருக்கும்வண்ணம் வரம்புரியுமாறு கேட்டல்.

எந்தா யெனக்கோ ரினியவர மென்னபிழை
வந்தாலு மப்பிழையை மாற்றி யுனதுமலர்ச்
செந்தா மரைப்பதமென் சிந்தை குடியிருக்கத்
தந்தாள வேண்டுந் தமியேனுக் கென்றுரைத்தான். (எகூ)

சிவபிரான் அவ்வாறே வரமளித்து யமனுக்கு விடைகொடுத்தல்.

அண்டர் பெருமா னெனக்கிவ் வரமளித்தே
மண்டுபெருங் காதல் பெருகு மறைமுறையே
பண்டை யதிகாரம் பாலிப்பா பென்னவரன்
புண்டரிகத் தாள்போற்றிக் கூற்றுப் பதிபுகுந்தான். (எஎ)

சிவபிரான் சதானந்தரை நோக்கி, நீர் செய்தது தகுந்ததேயெனக் கூறுதல்.

செங்குருதி மூவிலைவேற் றென்றிசையோன் போனதற்பின்
றங்கும் பெருமைச் சதானந்த னீப்பார்த்துப்
பொங்கு கருணை பொழிந்தோர் தபக்கொழியப்
பங்கமிலாப் பத்தி விளங்கப் படாதாமால். (எஅ)

தேடுந் திருவெழுத்தே ரஞ்செழுத்துன் சிந்தையினி
னீடு மிரக்க நிறைந்தன்றே நீணிரையங்
கூடு மவரைக் கரையேற்றிக் கொண்டதுவே
நாடும் பழமறையோ யன்னதனு ணுமகிழ்ந்தோம். (எகூ)

இன்னும் வேண்டிய வரத்தைக் கேட்குதியெனச் சிவபிரான் பகரச் சதானந்தர் சிவனடியாரது பாதகமலங்கள் என்னிதயத்தில் எப்போதும் இருக்கவேண்டுமெனல்.

வேண்டும் வரமுனக்கின் றீவோம் விளம்புகென
வாண்ட பெருமா னருளச் சிவனோகி
யீண்டி நினதடியார் தாட்கமலத் தென்னிதயங்
கூண்டு கிடக்கும்வர மீகெனவே கூறினனே. (அ0)

சிவபிரான் அவ்வாறு வரமளித்து, உன்னிதயத்தில் நாமும் உமையம்மையாரும் எக்காலும் இருப்போம் என்று கூறி, விடைகொடுத்தல்.

அன்ன வரமளித்தோம் யாமு முமையவளு
முன்னிதயத் துள்ளே யொழிபாது வீற்றிருப்போ
மென்ன வமல னிசைத்தனுப்ப வீழ்ந்திறைஞ்சி
மன்னுஞ் சிவனோகி தன்னிருக்கை போய்வதிந்தான். (அக)

இக்கதைகேட்போர் எய்தும் பயன்.

இக்காதை கேட்போர் சதானந்த னுக்கினையாய்
மிக்காங் கணப்புரக்கும் வேந்தரென வீற்றிருப்பார்
புக்கார் பதகரிடஞ் செல்லார் பொருவரிய
தக்கார் சபையினொடு புத்திரர்க்குஞ் சாற்றுவரால். (அஉ)

சூதமுனிவரிடம் இக் கதையினைக் கேட்ட முனிவர்கள் மகிழ்தல்.

இப்பரிசு காதை யெடுத்துத் தயவினொடு
மொப்பரிய சூத னுரைத்தருள வுண்மகிழ்ந்தே
மைப்பரப்பும் பாவ மல்லவிருட்கோர் தீபமெனச்
செப்டரிய மாதவத்தோர் சிந்தை மகிழ்கூர்ந்தார். (அங)

பதின்மூன்றுவது பஞ்சாக்கரமகிமையுரைத்த அத்தியாயம் முற்றும்.

பதினாலாவது

சுத்தியம்மினன் சிவநாமம்பகர்ந்த மகிமையுரைத்த அத்தியாயம்.

சூதமுனிவர் கதைகூறத் தொடங்கல்.

தள்ளுந் தரங்கக் கடலவனி தொழுஞ்சுத் தியமினன் புகழ்ச்சரிதந்
தெள்ளும் பனுவன் மறைக்கிழவன் றிருந்து மிசையாழ் முனிவனுளங்
கொள்ளுந் திறத்திற் பகர்ந்திதனக் குலவுங் கதிரோன் மனுவினுக்கு
வள்ளுங் கதைபைப் புகல்வனெனச் சூத முனிவன் விளம்புவனால். (க)

மருதநிலச் சிறப்பு.

கொழுத்தமட னுட்பொதிந்துதிர்வ் குடத்தைப்பொருவித்தளதளத்துக்
கழுத்த விடத்த நிறைசூற்பைங் கமுகி னெருத்திற் கடைசியர்கள்
பழுத்த மதுரக் குரவையினும் பதறி வாளை வெடிதாவி
யழுத்தி யுழக்க விரிக்குமது வாறு பெருகக் கயல்குதட்டும். (உ)

பின்னித் திரைக ளுவட்டெடுத்துப் பெருகு மடுவிற் கருமேதி
யன்னக் குலத்தி னிரையிரிய வளறு படுத்தி விளையாடிச்
செந்நெற் பசிய குலைகறித்துச் செந்தேன் குவளை முகைகுதட்டிக்
கன்னிக் கமுகின் முதுகுரிஞ்சிக் கதலிப் படப்பை புகுந்துறங்கும். (ங)

சூலிற் பணிலம் வயிறுளைந்து சொரியுந் தாள மொடுமுழுகர்
கூலிக் களவி பெடுத்தளக்கக் குளிர்நித் திலத்தின் குவையொழியும்
வேலிக் கருப்புக் கப்புறம்போய் வெண்பா லடைந்து சிவப்பீறறிச்
சாலிக் குலைக டலைவணங்குந் தண்ணங் கழனி மருங்கெல்லாம். (ச)

ஆற்றுச் சிறப்பு.

வாங்குந் திரைக்குங் டசழியினை மறியுந் தரங்கக் கடலெனவே
பாங்கார்ப் படர்ந்தே தயிசயித்துப் பையத் திருப்பிப் போவதெனத்
தேங்கி விரியு மலர்க்கரத்தாற் றெண்ணித் திலமு பணிக்குவையு
மோங்கி யெறிந்தே யடித்தொழுகு மொருவன் கொணர்ந்த புனற்கங்கை.

மதிற் சிறப்பு.

தண்டு மிடைய வடல்கெழுமிச் சமரம் புரிய வெதிர்மழுங்கு
கண்ட நிருபர் மனங்கவற்றிக் கணைகள் பொழியும் பொறிதாங்கி
யண்ட முகட்டி னளவளந்தே யழலுங் கதிரோன் பரிதடிக்குங்
கொண்டல் கிடந்து விளையாடுங் குடுமி கிளருங் கனகவெயில். (ஞ)

பிருதிட்டானநகரச் சிறப்பு.

அப்பைப் பழித்துக் கொடுவிடத்தை யல்லற் படுத்துங் கருநெடுங்கட்
குப்பக் களபக் குவிமுலைபார் கொழுநர் சோடும் விளையாடச்
செப்பொற் றகடு படுத்திழைத்த செய்குன் றிறங்கித் தேவரொடும்
பைப்பொற் றருவின் மடந்தையர்கள் டயிலுங் கலவி நலனுகர்வார். (எ)

மன்னு மினைய வளம்பொருந்து மறியுந் திரைப்பாற் றடங்கடல்சேம்
பொன்னங் துணர்த்தா தகநிறைந்த பூந்தா மரையின் பொலன்றவிசு
கன்னி நறும்பைந் துளவணியுங் கரிய முகுந்தன் மார்பெனப்
பின்னை பிறந்து குடியிருக்கும் பிருதிட் டான வளநகரம். (அ)

இக்ஷ்வாகுத்துய்மினனது அரசாட்சியும், அவனுக்குச்
சுத்தியம்மினன் பிறத்தலும்.

இனைய நகர மளித்தருளிக் திரத்துய்ம் மினனென் றெழுதீவும்
புனையுங் கழற்கால் பணிந்திறைஞ்சப் பொதுவி லாது தனிபுரந்தோன்
றனைய னறமு மனுநெறியுந் தங்கித் தழைத்த பெரும்புகழான்
றுனையுங் கதிர்வாள் வயமீளி சுத்தியம் மினனென் றொருவேந்தன். (கூ)

சுத்தியம்மினன் அரசியல்.

மூந்தார் கலிநீர் புடையுடுத்த முதுபா ரினைத்து முதலுகத்திற்
சிந்தா மணியு மிருநிதியுந் திவலை துளிக்குஞ் செழுந்தேறற்
பைந்தா தலர்த்துங் கற்பகமும் பரிக்கு மரச மெனப்பொலிந்தே
யந்தா ரலங்கற் குடைவேந்த னளிக்கு நாளி லாங்கொருநாள். (கo)

சுத்தியம்மினன் சிவபிரானைப் பூசித்துவரதல்.

கொங்கை சுபக்க லாற்றாது குடிபோ மிடையென் றடிச்சிலப்பு
சங்கை பிடித்துக் கிடந்தரற்றுந் தண்ணந் தளிர்ச்சீ றடியிமைய
மங்கை யிடத்துப் பிரியாத மணியைச் சிவந்த வளர்சடைமேற்
கங்கை முடித்த பெருமானைக் கழற்கால் வழுத்தி யினிதிருந்தான். (கக)

சுத்தியம்மினனிடம் திரணவிந்துமுனிவர் வருதலும்,
அரசன் அவரைப் பூசித்தலும்.

அக்கா லையினிற் றுரிசறுத்தே யைந்து புலனு மகத்தடக்கு
மிக்காங் கருணை பொழிதிரண விந்து முனிவ னவணடைந்தான்
கைக்கா ருரிவை புனைந்தபிரான் கழற்கால் வழுத்தன் முடித்தாசன்
முக்கால் வணங்கி நிலம்வீழ்ந்து முனிவன் மலர்த்தா ளருச்சித்தான். ()

சுத்தியம்மினன் திரணவிந்துமுனிவருக்குப் பல உபசாரவார்த்தைகளைக் கூறுதல்.

சோரி குடித்துச் தசைகுதட்டுஞ் சுடர்முத் தலைப சூலத்தோன்
வேரி மலர்த்தாள் விருப்பகலா வேத முனியே பெரியீயனின்
சீருருந் தனியா கமமுரைக்கு மொழியா முத்தி யடைவதற்கோ
வாருங் கருணை பெருக்கெடுப்ப விவண்வந் தடைத லெனவறைந்தான். ()

உள்ள நெகிழ்ந்து வழிந்துவழிந் துவகை பெருகி யுவட்டெடுப்பத்
தெள்ளு மறைதேர் முனிவரனைச் செஞ்சொற் றுதிகள் பலசெய்தான்
பிள்ளை மதியஞ் சடைக்கணித்த பெருமா னடியார் மனங்கருதிக்
கொள்ளும் படிக்கு முடியாத பொருளொன் றுளதோ கூறுங்கால். (கச)

இவ்விடம் வந்த காரணம் யாதெனக் கேட்டல்.

இவன்வந் தடைந்த காரிபரி யிசைத்தி யெனலும் வாமுனிவ
னுவகை பெருகி யினிதுரைக்கு முலகம் புரக்கும் வயவேந்தே
சிவனை வணங்கும் பத்தியினி லுன்போ லொருவர் செகத்துளதோ
தவமுந் தவமுன் னுடையவர்க்கே தனிய சாரத் தகுமன்றே. (கடு)

திரணவிந்துமுனிவர், உனது சரித்திரம் கேட்டு மகிழ்ந்தேன்;
அதனை விரிவாக உன்னிடம் கேட்பதற்காக வந்தேனெனல்.

உனது சரித மதுகேட்டே னுள்ளம் பெருகக் களிதிளைத்தேன்
கனைவண் டிமிர்ந்து குடைந்தாடுங் கண்ணி புனையுங் கதிர்வேலோய்
யனைய சரித மனைத்தினையு மடைவே கேட்பான் புகுந்தனன்யா
னெனலும் வணங்கார் மனங்கவற்று மிகல்வேந் திதைப்ப தாயினுன். ()

அரசன் தனது சரிதங் கூறத் தொடங்கி, மூற்பிறப்பில் தான் சுவுவியாதன்
என்னும் கொடிய வேடனுயிருந்தமை கூறல்.

வேறு.

மூந்திய பிறப்பில் வேடர் முழுக்குலத் துதித்தே னன்னோர்
சிந்தையின் மகிழ்ந்து போற்றத் தீத்தொழி லாச னுகி
வெந்திறற் புலைபன் கோதா விரிக்கரை வைகி வாழ்ந்தே
னெந்தைதே லெனது நாம மிசைத்திடிற் சுவ வியாதன். (உஎ)

வேடனுயிருந்தபோது செய்த பாதகங்களைக் கூறுதல்.

புண்ணிய மறியே னந்த வழியிடைப் பொருந்து ஞான
நண்ணிய முனிவர் கற்பி னுரிய நாதி நாயேன்
கண்ணுறு மவரை யெல்லாங் கடிந்துயிர் துறந்தேன் பின்னும்
பண்ணிய பவத்தைக் கேட்கிற் பகரநாட் கோடி வேண்டும். (கஅ)

வேட்டுவப் பிறப்பில் இறந்து யமனுலகடைந்ததைக் கூறுதல்.

இத்தகை புரிந்து வாழ்நா ளொருபக லிறந்தேன் றூதர்
மைத்தகு கரிய மேனி மறலிமுன் விடுத்தா னன்னோன்
கைத்தலைத் தண்டு சுற்றிக் கனியித ழுதுக்கித் தின்று
பைத்தனன் சிவந்த கண்ணும் பார்த்தனன் பயந்து நின்றேன். (கக)

யமன் சித்திரகுப்தரைப் பார்த்து இப் பாதசன் செய்த தருமம்
சிறிதாயினு முண்டோவென வினவல்.

கொத்தலர் மாலை சூடுஞ் சூலவெங் கடக்கைக் கூற்றுச்
சித்திர குத்தன் றெய்வச் செழுமலர் வதன நோக்கி
வித்தகத் திறத்தீ தாயிந்த வெவ்வினைப் பதகன் செய்த
வுத்தம தரும முண்டோ வுழுந்தள வேனு மென்றான். (உ0)

சித்திரகுப்தர் இவன் சற்செயலாக அறியாது செய்த
தரும மொன்றுண்டென்று அதனைக் கூறுதல்.

எனுமுறை கேட்டா னன்னோ னினவனறி யாது செய்த
நினைவருந் தரும மொன்றுண் டையனே நிகழ்த்தக் கேட்டி
தினமன மிடைவி டாது தெறுசினங் கனல நின்று
வனநடு வழியிற் போவோ செவரையு மறித்துக் கொண்டே. (உக)

இவன் காட்டுவழியில் போவோரது பொருளைக் கொள்ளையிடுமிடத்து
ஆகா என்றும் பிறகா என்றும் கூறுவதை மொழிதல்.

அன்பறப் பொருளை நாடி யாகா வென்பன் மீண்டு
பின்பிடித் தோடி யோடிப் பிறகா வென்பன் றீய
வன்புற வுரைக்குஞ் சொல்லி லாவென வருதல் செய்யப்
பொன்படர் சடில நாத னுமமாய்ப் பொலிந்த தன்றே. (உஉ)

இவன் சொல்லும் சொற்களில் சிவநாமம் அடங்கியிருந்ததால்
அதனால் அவனுக்குப் பாவநீங்கிய தன்மையைக் கூறுதல்.

இந்தனக் குவையிற் சற்றே யெரிப்பொறி கலந்தா லோடி
வெந்தற நீறி நீறி வெண்பொடி யாகு மாபோற்
சந்திர பவுலி நாம நாவினுற் சாற்ற லாலே
வந்துறு பாவ மெல்லாம் வழக்கறக் கரிந்த வன்றே. (உங)

அதைக் கேட்ட யமன் மகிழ்ந்து தன்னை உபசரித்தமையைக் கூறுதல்.

என்றவன் மொழிந்தான் பின்ன ரந்தக னென்னைச் செய்ய
குன்றியிற் சிவந்த கண்க ளருண்மழை கொழிக்க நோக்கி
நன்றுவெள் விடைபோ னும நவிற்றினை நலிந்து நிற்ற
லன்றுனக் கமைத்த தென்ன வாசனத் திருத்திக் கொண்டான். ()

சிவநாமத்தை நினையாது கூறிய புண்ணியத்தினுலே தேவலோக
மடைந்தமையைக் கூறுதல்.

பரிந்துசற் கார நாடிப் பன்முறை முகமன் சொல்லிப்
புரிந்தன னைய காலே விண்ணவர் பொன் விமானந்
திருந்தவே கொணர்ந்தா ரேறிச் செம்பொன்மா நகரஞ் சென்றே
யிருந்தன னவர்க ளாண்டி லயுதமாங் கின்பந் துய்த்தேன். (உரு)

தேவலோகத்தில் கற்ப காலம் போகந்துய்த்தமை கூறி,
அப் புண்ணிய சேடத்தினால் இப்போது அரசனாகப் பிறந்தமையும் கூறுதல்.

கந்தநாண் மலரோ னுட்டி லன்னவன் கற்ப முற்றும்
புந்தியின் மகிழ்வு கூர வுறைந்துநற் போகந் துய்த்தேன்
முந்துபுண் ணியத்தின் சேடத் தாலிவை முழுதுந் தோன்ற
விந்திரத் துய்ப்பி னன்பே ரின்புறும் புதல்வ னானேன். (உக)

வேடனொருவன் அறியாது கூறிய சிவநாமத்தால் இப்பேறு கிடைத்ததனால்
சிவநாமத்தின் பெருமை அளவிடற் கரிதெனல்.

அடுக்கோதாழி லதற்குங் கையா லடித்திடும் விலைக்கு முன்னை
ரிடுப்பெய ரிணையி லீச னுமமு மிருந்த வாற்றூற்
கொடுங்கொதாழி லதற்குக் கூறக் கொலைகள வாதி யாய
தொடுப்பவந் தொலைந்த வென்றுற் சிவன்செயல் சொல்லற் பாற்றோ.

சிவநாமத்தை முறைப்படி பகர்வோர் தப்பாது முத்தியடைவரெனல்.

இன்னண மன்றி பென்னே யிருவினை துடைத்தே தாருந்
கன்னிவண் டுழக்குங் கொன்றை கமழ்சடைப் பரம னும
மன்னுமன் பொழுகிப் பொங்க மனத்தறி வோடுஞ் சொற்றோர்
பன்னுதற் கரிய முத்தி பரிப்பதற் கைய முண்டோ. (உஅ)

இச்சரிதத்தைக் கேட்ட திரணவிந்துமுனிவர் அரசனைத் தழுவி
மகிழ்ந்து தமதிருக்கை யேகுதல்.

மணித்தட முருவு தோறு மாற்றலர் மருளும் வாளா
னிணைத்திவை யுரைத்தான் ஞான மாதவ னிருகை யாலே
யணைத்தட லரசன் மேனி யடிக்கடி தழுவிக் கொண்டான்
பணைத்தருப் பொழுளி நீண்டு படருமாச் சிரமம் போனான். (உக)

இச்சரிதம் கேட்போர் எய்தும் பயன்.

தொங்கலந் தடந்தோ ளான்சுத் தியம்மினன் சரிதங் கேட்போர்
பொங்குதே ஜெழுகும் பச்சைப் பொதுநறுந் துளப மாலைச்
செங்கணு னுந்தி வந்த திசைமுக னுலகம் வைகி
யங்கண்மா தவர்கள் போற்ற வளவிலா வின்பந் துய்ப்பார். (ஊ0)

சூதமுனிவரிடம் இக் கதையினைக் கேட்ட முனிவர்கள் களிப்புறுதல்.

பொன்னுறழ் கொடியிற் முழும் புரிசடைச் சூத னீனர்ந்தே
பின்னநற் காதை கூற விமயவெற் பளித்த தெய்வக்
கன்னிபங் கமர்ந்தோன் றன்மை கணிப்பதற் கரிதென் றெண்ணி
மன்னுமெய்த் தவத்தோர் சிந்தை மகிழ்ந்ததி சயித்தார் மாதோ.()

பதினாலாவது சுத்தியம்மினன் சிவநாமம்பகர்ந்த மகிமையுரைத்த
அத்தியாயம் முற்றும்.

பதினைந்தாவது
விபூதி மகிமையுரைத்த அத்தியாயம்.

சூதமுனிவர், சிவபிரானால் ஸ்ரீராமருக்குரைக்கப்பட்ட
விபூதி மான்மியத்தைக் கூறத் தொடங்கல்.

பவந்தொ லைத்திடும் பூதியின் மான்மியம் படருஞ்
சிவந்த செஞ்சடை பெம்பிரான் சிலையிரா கவனுக்
குவந்தி சைத்திடும் படிபுகல் வேனென வுவாத்
தவந்த ருப்புசழ்ச் சூதமா முனிவரன் சாற்றும். (ச)

ஸ்ரீராமர் சிவபிரானிடம் உயிர்கள் சிவபூசையினால் தீவினைப்பயனிலிருந்து
நீங்குதலை விளக்கிக் கூறும்படி வேண்டுதல்.

ஆதி நாயக னடிதொழு தாழிசூ லிலங்கை
காதி மூதெயி லடர்த்தவ னினையன கழறுந்
தீது றும்பவம் பரப்பிய வுயிர்க்கெலாஞ் சிரத்திற்
கோதில் சித்திர குத்தனுய்ந் தெழுதிய குறிகள். (உ)

உனது பூசையாற் றவறுபட் டொழிந்திடு முண்மை
யெனது சிந்தையிற் புலப்பட விசைத்திபென் றிரப்பத்
தனது தாள்பணி தசரதன் றனயனை நோக்கி
யனது பேசவ னென்னையாண் டருளிய வமலன். (ஊ)

சிவபிரான், விபூதி தரிப்பதனால் தீவினைப்பயன்
நீங்கிவிடுமென்று கூறுதல்.

நரக யாதனை தவிர்த்திடு நல்லிழை வகுத்த
விரியும் வெண்படத் தெழுத்தினை வெந்தழல் கதுவத்
திரியுந் தன்மையிற் றிரிந்திடுந் தீவினை பெழுத்துப்
பரவும் வெண்டிரு நீற்றினைப் பரிவொடுந் தரிக்கில். (ச)

விபூதியை ஒவ்வொரு தானங்களிலும் தரிப்பதால் உண்டாகும்
பயனைக் கூறுதல்.

திருந்து வெண்டுகி லாற்றிரி புண்டரஞ் சிரத்திற்
பரிந்து நெற்றியிற் புனைந்திடிற் படருமென் களமேற்
பொருந்து றுப்பினி லீட்டிய பவமெலாம் போக்கு
மிருந் தடக்கையிற் படிலவை புரிபவ மிரியும். (ரு)

உரத்திற் பூசிடின் மனத்தினி லுறுபவ மொழியுந்
தரிக்கி லுந்தியி லிலிங்கத்தின் வருபவந் தவிரும்
விரித்து வெந்திடிற் சகனத்தின் மிகுபவம் விலங்கு
மருத்தி யாலிரு பக்கமு மன்னதை யணிபில். (கூ)

திரிபுண்டரத்தின் வடிவம்.

பர மடந்தையர்த் தழுவிய பாவங்கள் பாறு
மரிய புண்டர மூன்றையும் வேறுவே றறையிற்
பொருவி லக்கினி மாலபன் வடிவெனப் புகல்வார்
விரியு முக்குண வடிவமு மெனவிளம் புவரால். (எ)

திரிபுண்டரந் தரிப்போர் முத்தியெய்துவரெனல்.

ஆய தோர்திரி புண்டர மகிமையா றறிவர்
தூய வெண்டிரு நீற்றினைச் சொற்றிடு முறுப்பி
னேய மோடுமெப் புண்டர மாகவே நிலவி
மேய வேதரித் திடுபவர் வீடுமே வுவரால். (அ)

விபூதியைத் தானம், சயனம், உத்தூளனமென மூவிதமாக அணிதலையும், அவற்றில் தானம் என்பதின் பயனையும் கூறுதல்.

நிலவு பூதியின் முனகற் சயனமெய்ந் நிறைந்தே
யிலகுத் தூளன மென்றிவை யிசைக்கின்முக் கியமஞ்
சொல விளங்கிய மூன்றினுந் தானத்திற் றொடரும்
பல பவங்களும் கதிருறு பணியெனப் பாறும். (கூ)

விபூதியினுல் விடம், பூதம், பேய் முதலியன நீங்குமெனல்.

படம் பரப்பிய பாந்தள்வாய் முதலவங் குரிக்கும்
விடங்கள் யாவையுங் கரிந்திடும் வெந்துயர் விளைக்கத்
தொடங்கு பூதமு மலகையும் பதைத்துயிர் சோர்ந்தே
யடங்கும் வெண்டிரு நீறெனுந் தனியரு மருந்தால். (கo)

விபூதியைத் தானமாகத் தரிப்போர் எக்கருமமும் புரிவதற்கு அதிகாரமுள்ளவராவரெனல்.

பூவை பேனியன் பூசனை புரிபவ ரேனும்
யாவ ராயினும் வெண்டிரு நீற்றிருந் தான
மேவ வேபுரிந் தப்பொடி மெய்யுற மிலங்தே
சோவி லாதவெக் கருமமும் புரிவதற் குரியார். (கக)

விபூதி மெய்யில் விளங்குவதனுல் போகமோக்ஷம் கிடைக்குமெனல்.

கெட்ட சிவனும் பொருந்திப மெய்யுறக் கிளக்கும்
பட்ட பாவமுங் கரிந்திடும் பரிவொடு மகிழ்ந்தே
யட்ட போகமு மருந்துவ ரருட்கதி யடைவர்
தொட்டு வெண்டிரு நீற்றொளி மெய்யுறத் துலங்கில். (கஉ)

சிவபிரான் இவ்வாறு விபூதியின் மகிமையைக் கூறி, இதனை விளக்க ஓர் கதையையும் கூறுவேனெனல்.

என்று கூறினன் பின்னரு மெப்பிரா னிசைக்கு
மன்று போர்புரி யசுரனை யணிமுடி தொலைத்த
வென்றி வெஞ்சிலை யிராகவ னிதன்கதை விளங்க
வொன்று பேசுவன் கேளென வுளமகிழ்ந் துரைக்கும். (கங)

கருணன் என்பவனது கதையைக் கூறத்தொடங்கி, அவனது பிறப்பைக் கூறுதல்.

பெருமை மாதவன் வசிட்டன்மா மரபினிற் பிறந்தோன்
றருமை நீதிபன் றனஞ்செய னெனப்பெயர் தரித்தோ
னுரிமை மாதர்க ளுறுபேர் தமையுள மகிழ்ந்தே
கருமை முற்றுற வன்முறை கடிமணம் புரிந்தான். (கச)

கருணனும், அவனது தம்பிமார் நூற்றுவரும் பிறத்தல்.

முற்று காதலி னன்னவர் முழுநலங் கிளைத்தா
னுற்ற மாதரின் முன்னவள் சலாதையென் றொருத்தி
பற்று மன்பினன் கருணனென் றொருவனைப் பயந்தாள்
மற்றை மாதரும் தனித்தனி மைந்தரை வகுத்தார். (கஙி)

கருணனும், சகோதரரும் கல்விகற்றலும், அவர்கள் பிதா அவர்களுக்குப் பொருளைப் பகிர்ந்து கொடுத்தலும்.

மைந்தர் யாவரு மறைகளுங் கலைகளும் வடித்துச்
சிந்தை செய்தன ரன்னவர் திறனெலாந் தெரிந்தே
தந்தை தன்னுடைப் பொருளெலாந் தரதரம் பகுத்து
மூந்து மைந்தனு கிபர்க்கெலா முறைமுறை யளித்தான். (கசு)

கருணனுக்குக் கொடுத்த பொருள் அதிகமென்று அவன்மேல் மற்றையோர் பகைகொள்ளல்.

வள முறும்பொருள் வழங்கிய வகையினை நோக்கி
யுள நிரந்திலர் கருணனுக் கதிகமென் றுணர்ந்தே
யிளைய மைந்தர்க ளவனெடு மாறுகொண் டிருந்தா
ரளவு நாள்பல கழிந்தபி னந்நகர் மறைபோர். (கள)

ஒருகாள் அவ்வூர் வேதியர்களுடன் கருணனும் பவநாசினிக்கரையிலிருக்கும் நாசிங்கமூர்த்தியை வணங்கச் செல்லுதல்.

பப்பு தெண்டிரை பொருபவ நாசனிக் கரையி
னப்பு மாதவர் பணிநர சிங்கரைப் பணிவா
னிம்பர் வான்வ நிவமென யாவரு மிறைஞ்சச்
செம்பொ னெுத்தொளிர் முருகினு னனிகொடு சென்றார். ()

நரசிங்கமூர்த்தியின் நிவேதனத்துக்காக வாங்கிய கனியைக் கருணன் முகத்தலும், அதனல் வேதியர் கோபமடைதலும்.

பொருவி லன்னவர் தம்மொடுங் கருணனும் போனன்
முருகி னக்கனி வாங்கின ஞெரியின் முகந்தா
னருகு நின்றிடி மறையவ னினவரு நோக்கித்
திருகு சிந்தைய ராயினர் கருணனைச் சினந்தார். (ககூ)

வேதியர் நூறு பருவம் வரை நீ ஈ ஆகுதியெனச் சபித்து, இச்சாபம் ஈற்றில் சதசிபுனிவரால் நீங்குமெனக் கூறுதலும், கருணன் ஈ வடிவாகித் தன் மனையடைதலும்.

பருவ மோர்சத மீயுரு வாகெனப் பகர்ந்தார்
மருவு சாபமெய்த் சதசியாற் றவிர்ந்திட வலித்தார்
வெருவு சாபம்வந் தடைந்திடக் கருணனும் வெரூஉக்கொண்
டுருவ மீவடி வாகிய தன்மனை யுற்றான். (உ0)

கருணன் தனக்குச் சாபம் ஏற்பட்ட வரலாற்றைத் தன் மனைவிக்குக் கூறி, தன்னைப் பாதுகாக்கும்படி கூறுதல்.

மனைவி தன்முகம் பார்த்தனன் கண்கணீர் மல்கச்
சினவி வேதியர் பருவமோர் சதமெலாந் திரிய
வெனை முனிந்திக ழீவடி வாகெனச் சபித்தார்
நினைவி னோடருங் காவனீ புரிகென நிகழ்த்தி. (உக)

கருணன் ஈ வடிவமாகி ஈக்கூட்டத்தில் திரிதலை அறிந்த அவன் சகோதரர் அவ் வீயை எண்ணெயில் அமிழ்த்திக் கொல்லுதல்.

ஈயி னத்தொடுந் திரிந்தனன் திரிந்திடு மேல்வைத்
தீய பின்னவ ரிச்செய லறிந்தனர் செகுப்பா
னுப வஞ்சனை நினைந்தன ரெண்ணெயி லமிழ்த்தித்
தூய சிந்தையின் கருணனை வதைத்துயிர் துறந்தார். (உஉ)

அதனைக் கண்ட கருணன் மனைவி சோகமுறுதல்.

ஈது கண்டவன் பனைபவ ளிருகர நெரித்தாண்
மோதி வீழ்ந்தன னிலத்திடை முகத்தினி லறைந்தா
டீது செய்தனர் பாதக ரினியுயிர் திறப்பிப்
போது வெனின தழைபெனத் தனிபுலம் புவளால். (உங)

வேறு.

கருணன் மனைவி புலம்பல்.

மாதவத்தின் வசிட்டமுனி மாபுதித்த தனஞ்செயற்குக்
காதலனு கப்பிறந்து கலியனைத்துங் கரைகண்டாய்
நீதிதரு நெறிநின்றாய் நிலையாகி யழிபாத
வேதமுதற் பொருளுணர்ந்தா யுனக்கிதுவோ விளைந்ததுவே. (உச

பின்னுதித்த கொடியர்பனைப் பெண்கள்பெரி துவகையுறப்
பொன்னிழைத்த மணியொளிர்நாண் மஞ்சளொடும் பூணந்திருக்க
வென்னிழைத்தீதன் மலர்ப்பிரம னென்கழுத்துக் கின்றுமுதன்
மின்னெறிக்கு மணியொளிர்நாண் வெண்கலியோ வீதித்தனனே (

எண்ணையினி னுயிரிறக்க விழைத்தகொடும் பாதகவன்
கண்ணெனு மூப்பியர்கள் கருதியது முடித்தாரோ
தண்ணளிதா தாட்டயருந் தடங்காவுங் கடிமனையும்
பண்ணெடுங் கழனிகளும் பெருவாழ்வும் பரித்தாரோ. (உசு)

நிறத்தழகு நறுந்தெரிய னினைந்தாலு மொருவர்மனைப்
புறத்தொழுகாத் தவமுனக்குக் கைப்பீது பொருந்தியதோ
வறத்தொழுகா தவர்மேல வீவடிவா யாவிகெட
மறத்தொழிலாற் கொடுஞ்சாபம் வகுத்தார்கண் மறையோரே. (உஎ)

மூப்புரிதான் முறைகெடக்கு முழுவுறளுந் தடந்தோளா
யொப்பரிய வடிவழகி னுநவமிறந் தொழிந்தனையே
யிப்பரிசென் விளையிருந்தா லென்செய்வே னெளிபனைத
துப்புறழுங் கனிவாயா ளுயிர்துறக்கத் துணிவுற்றாள். (உஅ)

வேறு.

கருணன் மனைவி புலம்புதலை அறிந்து, அருந்ததி வந்து தேற்றுதல்.

வஞ்சி யிருந்து வருந்துதல் கண்டே
யஞ்சொ லருந்ததி யாயிழை வந்தா
ளெஞ்ச லிலாதித னருயி ரீவென்
றுஞ்சலை நீயென நன்மொழி சொன்னாள். (உகூ)

அருந்ததி சிறிது விபூதி கேட்டு வாங்கி, அதனை அவ்விறந்த ஈயின்மேற் றூவ அது உயிர்பெற் றெழுதல்.

வேமழ காகிய வெண்டுகள் கேட்டாள்
காமுற வேகரு ணன்மனை யாட்டி
யோம முறுப்பொடி யோடி யளித்தா
டாமரை யொத்த தடங்கையில் வாங்கி. (ஈ0)

மிருத்துவை வென்றிடு மோனம் விளப்பி
யருத்தியி னவி யழிந்திடு மீயின்
விரித்திடு மென்சிறை பெய்யினில் வீச
வொருப்பட வோடி யுயிர்த்தது சீவன். (ஈக)

அதனைக் கண்ட கருணன் மனைவி மிகுந்த களிப்படைந்து,
அருந்ததியைத் தொழுதல்.

வெண்டுகள் பட்டுயிர் மீண்டெழு தன்மை
கண்டன ளக்கரு ணன்புணர் காந்தை
தெண்ட னருந்ததி தேவிமுன் வீழ்ந்தாண்
மண்டுவ கைப்பெரு வாரி திளைத்தாள். (நஉ)

அருந்ததி தனதாச்சிரம மடைதல்.

ஆச்சிர மத்தி லருந்ததி போனு
ளீச்சில கால மிருந்த ததற்பின்
மாச்சரி யத்தொடு பின்னவர் மாயாத்
தீச்சுடர் நெஞ்சு செறிக்க விருந்தார். (நஙு)

ஈயினுக்கு நூறு பருவ காலமும் முடியு மெல்லையைக் கண்டு,
அவன் சகோதரர் மறுபடியு மதனைக் கொல்லுதல்.

ஓதிய தோர்பரு வத்தொரு நூறுந்
தீதற வேமுடி யுஞ்செயல் கண்டார்
காதின ரீயின தாவி கவர்ந்தா
ரீது விளைந்ததை யேதற வெண்ணி. (நச)

கருணன் மனைவி அதனை யறிந்து துயரெய்தி, இதனை நீக்கத் தகுந்தவர்
சதீசிமுனிவரே யென்று துணிந்து, அவரைச் சரணடைதல்.

அக்கரு ணன்பனை யாருயிர் கண்டாண்
மிக்க கொடுந்துய ராலுயிர் வெந்தா
ளிக்கவ லைக்கட லின்று கடக்கத்
தக்க புணைத்ததி சிப்பெய ரென்னு. (நடு)

புந்தியி னேர்ந்துயிர் போகிய வீரைச்
செந்தளி ரங்கை திருந்திட வேந்திச்
சந்த மறைத்ததி சிப்பெயர் பக்கல்
வந்தன ரீயைமுன் வைத்தனள் வீழ்ந்தாள். (நஎ)

வேறு.

சதீசிமுனிவரைத் தொழுது, தனது நாயகனுக்குச் சாபம் வந்த
வரலாறும், அவனைச் சகோதரர் கொன்றதையும் கூறுதல்.

தண்ணளி வடிவ மான சதீசிமா முனிவன் பாதம்
பண்ணளி குடையும் போது தூவிய பாவி நின்ரு
ளெண்ணரு மறைச்சார் முன்னங் கருணனை யீயாய்ப் போக
நண்ணிய சாபங் கூறும் வரலையு நவிற்றிப் பின்னர். (நஅ)

தனது நாயகனை உயிர்ப்பித்து, அவனது ஈ வடிவத்தையும்
மாற்றியருளும்படி பிரார்த்தித்தல்.

தனஞ்செய னிளைய மைந்தர் விளைத்துஞ் சாற்றி நின்பொ
னினந்தருங் கமல பாதஞ் சரணென வடைந்தே னெந்தாய்
மனங்கொடுங் துயரந் தீர வீயது வடிவ மாற்றி
யனங்கனிற் கருணை யுக்கி யாவியு மளித்தி யென்றுள். (நஅ)

சதீசிமுனிவர் விபூதியினுலேதான் பிழைக்கலாமெனல்.

முகிழ்முலை நகில ஞான முனிவரன் மொழியும் வேகம்
பகர்சம தக்கி னிப்பேர் காசிபர் படரும் விண்ணோர்
புகலரும் பூதி யாலே பிழைத்துயிர் புனித ராவீரென்
நிகரில்வெண் டுகளால் யானு மித்தகை நிறைந்தே தனென்றன். ()

இவ்வாறு கூறி, விபூதியினுல் அவனின்மேல் தூவுதல்.

பூதியா லன்றி யிந்தத் தீவினை போகா தென்ன
வோதியே சிவத்தி யான மொருப்பட நினைந்து கொண்டு
கோதிலா முனிவ னுள்ளங் குளிரவஞ் செழுத்தை பெண்ணித்
தீதுறு மீயின் மெய்யிற் றடவினன் நிருவெண் ணீறு. (சஂ)

அத் திருநீற்றினுல் கருணன் உயிர்பெற்று ஈ வடிவம் நீங்கிச்சுயவுருவடைதல்.

அருந்தவ முனிவன் கைக்கொண் டணிந்திடு திருவெண் ணீற்றுற்
பொருந்திய சாப நீங்கி முன்னுருப் பொலிந்து தோன்றிப்
பிரிந்திடு மாவி பெற்றுன் கருணனைப் பெரிதோன் வேட்ட
கருந்தடங் கண்ணி னுளுங் கருத்துறக் களித்தா னன்றே. (சக)

கருணனும் மனைவியும் சதீசிமுனிவரை வணங்கி,
அவரைத் தங்கள் மனைக்கு அழைத்துப் பூசித்துப் போசனமளித்தல்.

இருவருந் தீசி செம்பொ னினைபடிக் கமலப் போற்றி
வருகவென் றழைத்துத் தங்கள் மனையினு சனத்தின் வைத்தே
யருமறை பகர்ந்த வண்ண மருச்சனை மகிழ்வி னுற்றிப்
பொருவறு சுவைக ளாறுற் போனக மருத்தி னீரே. (சஉ)

இவ்வாறு அவர்களது பூசனைக்கு மகிழ்வெய்தி யிருக்கும்போது,
கோடி தேவர்கள் விபூதியணிந்த மேனியராய்த் சதீசிமுனிவரை வந்து
வணங்கி அவருக்குச் சீடராதல்.

குறைவற விவர்கள் செய்யும் பூசைகொண் டருளி ஞான
மறைமுனி யிருக்குங் காலை வானவர் கோடி மேனி
நிறையவெண் டுகளிற் பூசிச் சீடராய் நிலையி னின்று
முறைமுறை தவத்தி னோனை வழுத்தியே மொழிவ தானுர். (சஙு)

தேவர்கள் கவுதமமுனிவர் சாபத்துக்குப் பயந்து, திருவாசமுனிவரைத் தாங்கள் சரணடைந்தமையைக் கூறுதல்.

மகமள விலவா யாற்றுங் கவுதமன் மனைவி யாய
வகலிகை தனக்கு மாலா யவளையு மடைந்தி டாதே
பகருவன் முனிவன் சாப மென்னசெ வபயத்தா லோடிக்
துகளறு திருவா சர்த மிருக்கையைத் தருஷிச் சார்ந்தேம். (சச)

கொடிச்சடை முனிவன் முன்னங் குறுகினே மவன்பொற் ருளி
லடிக்கடி வணங்கி வீழ்ந்தே மெங்களுக் கபய நல்கிப்
பிடித்திடு மாசை யாய பெரும்பவந் தீர்ந்து ஞானந்
துடித்திட வருள்செ வென்னு வமிழ்தினிற் செல்வி னுனே. (சஞ)

திருவாசமுனிவர் விபூதியை எங்கள் மேனியிலணிசலும், நாங்கள் ஞானமடைந்தேம். ஆதலால், விபூதி இத்துணை மகிமை யுடையதின் தன்மையை நீவிர் விளக்கியருளவேண்டுமெனல்.

தெய்வவெண் டிகளை யள்ளிச் செழுமலர்க் கரத்தா லெடுத்கண்
பெய்யினி லணிந்த லோடும் வெந்துப ராசை யாய
மையுறு மாயை நீங்கி வரந்திகழ் ஞானம் பெற்றேற
மையவிவ் விறும்பூ தாய்ந்தே யளிபருக் கறைதி யென்றார். (சசு)

அதனைக் கேட்ட தகிசிமுனிவர், விபூதியின் தன்மையை விளக்கக் கோடிநாள் வேண்டும். ஆயினும், இப்போது ஓர் கதைமூலம் அதன் பெருமையைக் கூறுவேனெனல்.

என்றலுங் கதிசி வெள்ளைற் றெய்வீரான் றிருவெண் ணீற்றி
னென்றிய பெருமை முற்று முரைக்கநாட் கோடி வேண்டு
மின்றதன் காதை யாலுன் றியம்புவன் கேட்க வென்னு
வென்றிவா னவரை நோக்கி யினைபன விளம்ப லுற்றான். (சள)

வேறு.

ஓர் பிரளய காலத்தில் விஷ்ணுமூர்த்தி துயிலிலாழ்ந்திருந்ததைக் கூறுதல்.

ஆதி நான்முக னெடுங்கிய பிரளய மதனின்
மோது தெண்டிரைப் புனலிடை மணிதிற முதுந்த
னேது மண்டங்கள் பலபல வுறுப்பினி லுறைபச்
சீத நாண்மல ருந்திபுஞ் செவ்விமண் டலத்தில். (சஅ)

பிரளய காலம் முடிந்ததும் அவர் விழித்தெழுந்து உலகத்தைப் படைக்க நினைத்தலும், படைக்குந் திறமறியாது திகைத்தலும்.

இருந்து ரோமச ராதிய ருருந்தவ மிபற்றப்
பொருந்து கூர்விழி துயின்றனன் முடிவுநாள் போகப்
பரிந்தி யாவையும் படைத்திட நினைந்தனன் படைக்கத்
திருந்து தன்மையொன் றறிந்திலு னுளந்தனிற் றிகைத்தான். (சக)

அதனுல் விஷ்ணுமூர்த்தி மிக்க துயரடைந்தழுதலும், சிவபிரான் அவருக்கு அருள்செய்ய நினைத்தல்.

இடி முழக்கென வழுதன னழுதிடு மெல்லை
முடிவி லாத்தனி முழுமுதன் முக்கணெம் பெருமான்
கடிகொள் பைந்துழாய்க் கண்ணிபன் கருத்துறு காத
லடைய வோர்ந்தன னிரங்கின னத்தகை யளிப்பான். (நிஎ)

சிவபிரான் ஒப்பற்ற ஓர் வடிவங்கொண்டு விஷ்ணுமூர்த்திமுன் செல்லுதல்.

உரத்தி னண்டங்கள் பலபல மாலையி னுலவக்
கரத்தி னண்டங்கள் சிலவிடத் தம்மினே கடுப்ப
நிரத்தி மேலெடுத் தெறிந்தெறிந் தழகுறு நெடுமெய்
பரத்து வெண்ணிலா வெங்கணும் பரம்பிருள் பருக. (நிக)

மணி குயிற்றிய கலன்களும் மவுலியும் வயங்கப்
பணி நடம்புரி பண்ணவன் முன்னர்வந் தறலு
மனி பசுந்துழா யண்ணலாங் கையினை நோக்கித்
தணி விலாவடி வினனிவ னெவனெனத் தளர்ந்தே. (நிஉ)

விஷ்ணுமூர்த்தி சிவபிரானை யறிந்துகொள்ளாது, நீவிர் யாரென அறிந்திலேன்; தெரியுமாறுணர்த்தவேண்டுமெனலும், சிவபிரான், இவன் மாயையின் மூழ்கியுள்ளானென மதித்துரைத்தல்.

ஐய நின்னையா னுசென வறிகில னறிய
மெய்பு னர்த்துதி யென்னலு முணர்வினை விழுங்கு
மையன் மாயையின் மறைந்தன னிவனென மதித்துப்
பைய வேநகை முகிழ்த்தொரு வாசகம் பகர்வான். (நிஙு)

நீ இப்பெருங்கடலில் மூழ்கி யெழுந்து விபூதியைத் தானமாகத் தரித்தால் உன் மாயை யழிந்து ஞானம் வருமென்று சிவபிரான் கூறுதல்.

பெருகு மிப்புனன் மூழ்கிநீ பிறங்கொளி நிலைக்குந்
திருவெண் ணீற்றினிற் முனமுஞ் செய்தனை யாயின்
மருளு மூர்ந்திடச் சிந்தையின் மூடிய மாயை
பொருவி ஞானம்வந் துறையுமின் றுனக்கென வுரைத்தான். (நிச)

அதைக் கேட்ட விஷ்ணு, இந்நீரில் நான் மூழுதவதற்கு இது என் தொடையளவுக்குமேலில்லை; நான் மூழ்கும்படி அதிக நீருள்ளதாக அருளவேண்டுமென உரைத்தல்.

திங்கள் வேணியன் வாசகஞ் செவிப்படத் திருமால்
பொங்கு மித்தடந் திரைப்புனல் தடை யயான் புகுதிற்
றங்கு மென்னிரு குறுகளை வாயினுஞ் சாரா
திங்கு மூழ்குவான் பெரும்புன லருள்கென விசைத்தான். (நிஞ)

அதைக் கேட்ட சிவபிரான் புன்சிரிப்புச்செய்து, அந்நீரை
நெற்றிக்கண்ணினூற் பார்த்து, இப்போது இப்பெருங்கடலுள் மூழ்குதியெனல்.

ஈது கேட்டன னெம்பிரான் புன்சிரிப் பெழவே
போதி னுந்தியம் பொருப்புடல் குறுகிடப் பொருந்து
சோதி நெற்றியங் கண்ணினூற் பார்த்தலர் தூளவோய்
மோது மிப்பெருந் திரைப்புனன் மூழ்கென மொழிந்தான். (நிக)

அப்பெருங்கடலைக் கண்ட விஷ்ணு, இதில் இறங்குதற்கே
முடியாதெனக் கூறுதல்.

அப் பெருப்புனல் பார்த்தன ஞழியங் காத்தீதா
னிப் பெருப்புன லிறங்குதற் கரிதென வேங்கி
முப் புரந்தழல் கொளுத்திய முதல்வனை நோக்கிச்
செப் பரும்புன லிறங்குதற் கொருவழி திருத்தி. (நிஎ)

சிவபிரான், முன்னர் இரு தொடைமட்டுமாவது இக்கடலில்
நீரில்லையென்ற நீ இப்போது இதில் இறங்கி யாடுதற்குப்
பயங்கொள்ளல் என்னையெனல்.

அருள்க வென்னலு மவிர்மதிச் சடையினு னறையு
மருவு மோசனை கோடிமேன் மறிந்தெழு புனலை
யிரு குறங்கள வாயினு மில்லெனப் பகர்நீ
வெருவு கின்றதெ னிப்புன லிடைவிழுந் தாட. (நிஅ)

இக்கடல் இப்போது எட்டுவிரலளவுக்குமேலில்லை, என் கால்களை
நீட்டுவேன் பார் என்று கூறிக் காண்பித்து, என் வார்த்தையைப் படியாய்
நம்பி இறங்குதியென்று கூறுதல்.

என விசைதது வெண்விர லளவைமற் றில்லைக்
கனை கழற்கழ னீட்டுவல் காணெனக் காட்டி
மனம் வெருக்கொள னீக்கியென் வார்த்தையைப் படியா
நனை நறுந்துழாய் நம்பிநீ யிறங்கென நவின்றான். (நிகூ)

அதைக் கேட்ட விஷ்ணு, யார்தான் வார்த்தையைப் படியாக நம்பி
யிறங்குவரெனலும், சிவபிரான், நீ என் வார்த்தையைப்
படியாகப் பாவனைபண்ணி இறங்குதியெனக் கூறல்.

தேவ தேவனீ தூரைத்தலுந் திருமறு மார்பன்
யாவர் வார்த்தையைப் படியென விறங்குவ ரெனலும்
பாவ னைப்படி வார்த்தையைப் படிப்படி யாக
நீ வகுத்ததி னிறமெனை நிகழ்த்தின னிமலன். (கO)

விஷ்ணுமூர்த்தி அவ்வாறு அப்பெருங்கடலில் மூழ்கியபின்
ஐந்தெழுத்தோதி விபூதியணிதல்.

மைத் தகுப்புயன் மேனியன் வான்மொழி மேற்கொண்
டத் திறம்பெரும் புனல்படிந் தாடிய பின்னர்
கைத் தலங்கொடு பூதியைக் கடவுளஞ் செழுத்தா
லுத்த மாங்கமெய்ம் முழுவது மொளிபெறத் தடவி. (கூக)

சிவபிரான் நீ நின்மலனுய் என்னைத் தியானிக்குதி எனலும்,
விஷ்ணுமூர்த்தி அவ்வாறு தியானிக்க, அவர் மனத்தில் ஒரு சோதி தோன்றுதல்.

கருணை நோக்களித் தீசனு டரவணைக் கரியோய்
நிரு மலத்தொடு மென்னைநீ நெஞ்சினிற் றியானம்
புரிதி யென்னலும் புரிந்தனன் றுளவணி புனித
னொரு தனிச்சுடர் விளக்கினி லுதித்ததவ் வளத்தில். (கூஉ)

விஷ்ணு, அவ்வாறு மனதிற் சோதி தோன்றியமையைச்
சிவபிரானிடமுரைத்தல்.

அத் தனிச்சுடர் கண்டபி னலங்குவெள் வளைக்கை
வித்த கப்புயல் விமலனை நோக்கியே விளம்பு
மொத் தருப்பிய விளக்கினி லொருசுட ருலவிச்
சித்த மூள்ளுற வெழுந்தது வெனத்தெரிந் துரைத்தான். (கூங)

அதனைக் கேட்ட சிவபிரான், நீ புரிந்த தியானம் இன்னும் சரியான
பக்குவநிலையிலில்லை; ஆதலின், இவ்விபூதியை அருந்துதி என்று கொடுத்தல்.

சூல பாணிய னிவ்வுரை செவிப்படச் சொல்லு
நீல மேனியி னெடியவ நீபுரி தியானஞ்
சால முற்றிய பக்குவஞ் சார்ந்ததில் லெனவே
கோல வெண்டிரு நீற்றினை யருந்தெனக் கொடுத்தான். (கூச)

அவ்விபூதியை யருந்தவே, விஷ்ணுமூர்த்திக்கு ஞானம் வந்தடைதலும்,
அதன்பின் தியானஞ்செய்தலும்.

ஈய்ந்த வெண்டுக ளருந்தின னீர்த்துழா யவன்மெய்
பாய்ந்த காரொளி விளர்த்தனன் பக்குவம் பழுத்து
வாய்ந்த ஞானமவ் வடைந்திடத் தியானமன் முறையே
யாய்ந்து சிந்தையிற் புரிந்தனன் புரிந்திடு மளவில். (கூடு)

அத்தியானத்தில் சிவபிரான் ஓர் ஐந்துவயதுச் சிறுவனுகத் தோன்றுதல்.

இரு கரங்களு மூக்கணு மிலகுவெண் ணிலவு
பொருவு மேனியுங் கலன்களும் புன்னகைப் போதுந்
திரு வுயிர்த்திடப் பருவமைந் தடைச்சிறு வனிலோர்
பரம மூர்த்தியைக் கண்டன னுளங்களி பரம்ப. (கூசு)

அதன்பின் சிவபிரான், இப்போது செய்த தியானத்தில் யாது கண்டாய்? எனலும், விஷ்ணுமூர்த்தி அதில் தோன்றிய வடிவத்தைக் கூறுதல்.

ஆகி மாயவ னிவ்வுருக் கண்டபின் னமலன்
பாது கண்டனை யென்னலு மீர்ந்துழா யிறைவன்
சோதி நல்லுருத் தோன்றிய வடிவினைச் சொற்றான்
பாத தாமரை பணிந்தனன் பரமனைப் பரவி. (கூஎ)

விஷ்ணுமூர்த்தி, விபூதியின் மகிமையே அளவிடற்கரியது; தேவரீரது மகிமையைச் சிறியேன் எவ்வாறறிகுவேனென்று துதிசெய்தல்.

பிறை நெடுஞ்சடைப் பிஞ்ஞக னினதுவெண் டிகளி
னறை பெருந்தகை யளவிடற் கரிபதி யென்றான்
மறைகள் யாவுமோர்ந் துணர்வதற் கரியதின் மகிமை
சிறிய னெத்திற மறிகுவ னெனத்துதி செய்தான். (கூஅ)

சிவபிரான் அதனைக் கேட்டு மனங்களித்து, நீ அரிய சிருட்டியைச் செய்து உலகத்தைக் காப்பாய் என்று கூறி, இன்னும் வேண்டிய வரத்தைக் கேட்குதியெனல்.

கரிய நாரணன் றுதியினிற் சிவனுளங் களித்தா
னரிய தாகிய சிருட்டிசெய் துலகெலா மளித்தி
மரு வருந்துழாய் மாயவ னெனவரங் கொடுத்தா
னுரிமை நல்வர மின்னமுங் கேளென வுரைத்தான். (கூகூ)

விஷ்ணுமூர்த்தி, உமது பாததாமரைகளிலன்பே அடியேற்கு வேண்டுமென, சிவபிரான் அவ்வாறருளுதல்.

மங்கை பக்கொரு வானவ னிவ்வுரை வழங்கச்
சங்க மேந்திய தடங்கிரி னினதுபொற் சரணிற்
பொங்கு மார்வமே தழைதர வருள்கெனப் புகல
வங்க ணுபக னவ்வர மினிதுற வளித்தான். (எ0)

சிவபிரான், விபூதியை இடைவிடா தணிவந்துவருகுதி எனக் கூறி மறைதலும், விஷ்ணுமூர்த்தி அவ்வாறே விபூதியை யணிந்து உலகத்தைப் படைத்துக் காத்துவருதல்.

தூய வெண்டிக ளிடைவிடா தணிகெனச் சொன்னான்
மாய னவ்வுரை மேற்கொடு வரதனை வணங்கி
நேய மோடுவெண் டிகள்விடா தெற்றிய ஞகி
யாய வண்டங்கண் முறைமுறை படைத்தயி ரளித்தான். (எக)

இக்கதையினைத் ததீசிமுனிவர் கூறக்கேட்ட தேவர்கள் மகிழ்ந்து, விபூதியே கதியென அதனை யணிந்து, அத்ததீசிமுனிவரைத் தொழுதுசெல்லல்.

என்று மாதவத் ததீசியாங் கிவையெடுத் தோதப்ப
நன்று நன்றென வானவர் தனிமன நயந்தே
யன்று தொட்டுவண் பூதியே கதியென வணிந்தார்
துன்று செஞ்சடை முனிவனைத் தொழுதுவின் னடைந்தார். (எஉ)

சிவபிரான் இக்கதையை ஸ்ரீராமருக்குரைக்க, அவர் விபூதியின் மகிமையைக் கேட்டதிசயித்து, சிவபிரானை வணங்கிச் செல்லுதல்.

விடை யுகைத்தவ னித்தகை விளம்பலுந் திகிரிப்
படை யுயர்த்தவன் பானிலா வெண்பொடி மகிமை
யடைவு கேட்டன னதிசயித் தார்வமுற் றமலன்
புடை வலஞ்செய்து பொன்னடி வணங்கினன் போனான். (எங)

இக் கதையினைக் கேட்போர் எய்தும் பயன்.

இன்ன மாக்கதை படிப்பவர் கேட்பவ ரெவரு
மன்ன மூர்த்தியுந் திருமகள் கொழுநனு மறியாச்
சென்னி வெண்பிறை மிலைச்சிய சிற்பர னருளால்
மன்னு முத்தியை யடைவரென் றருமறை வழங்கும். (எச)

சூதமுனிவரிடம் இக் கதையினைக் கேட்ட முனிவர்கள் களிப்புறுதல்.

ஞான மாதவன் சூதனிக் காதையை நவில
வீன வெப்பிற விக்கடற் கொருபுணை யெனவே
கான நான்மறை முனிவரர் களிப்பொடுங் காதற்
பான மண்ணின ளளப்பரும் பரவச மடைந்தார். (எடு)

பதினெந்தாவது

விபூதி மான்மிய முரைத்த அத்திபாயம் முற்றும்.

பதினேழாவது

உருத்திராக்க மகிமையுரைத்த அத்தியாயம்.

சூதமுனிவர் உருத்திராக்கத்தின் பெருமையை முனிவர்களுக்குரைத்தல்.

அந்தி வேணிபன் கண்ணெனு முருத்திர வக்கங்
தந்த மேதகு பெருமைபைச் சாற்றுவ னெனமே
முந்து மாதவ [நெறி]யுளோர் கேட்கநன் முறையிற்
சிந்தை யன்பொடு சூதமா முனிவரன் செப்பும். (க)

உருத்திராக்கத்தின் தோற்றமும், அதன் பெருமையும்.

ஆதி நாயகன் கண்ணினிற் றோன்றலா லதனுக்
கோது நற்பெய ருருத்திர வக்கமென் றுரைப்பர்
பாத கங்களாம் படர்கிழங் ககழ்ந்திடும் [பண்பா]
மேதின் மாமணிப் பெருமைபை யிபம்புதற் கெளிதோ. (உ)

மற்று ரைப்பதென் னுருத்திர வக்கத்தி[ன் மகிமை]
சொற்ற மேலவர் சொற்றிடுங் காதையைத் தொடர்ந்து
முற்றுங் கேட்பவர் கேட்டது பிறர்[க்குரைத் திடு]வோர்
கற்றை யஞ்சடைக் கண்ணுதற் கயிலைசென் றடைவார். (ங)

அரிய நன்மணி மகிமைபை யறிந்தவ ரேனு
[மூரி]ப தன்மையி னிலைபுண ராதவ ரேனுங்
கருதி யோர்மணி யாயினுங் தரித்திடிற் கடவுள்
பரிவி னற்பத [மீகுவ ன]வர்க்கெனப் பணிக்கும். (ச)

உருத்திராக்கந் தரிக்குமிடங்கள்.

சிரத்திற் காதினிற் றிருந்திய களத்தினிற் றிரண்ட
கரத்தின் மார்பினில் விதிமுறை [தவறறக் க]ணித்தே
வரத்தி னன்மனி யணிபவர் வள்ளிலை யலங்க
லரத்த மூறிய சூற்படை யமலனென் றறைவார். (ஞ)

உருத்திராக்கமணிந்து ஜபஞ் செய்தால் ஒருகோடி பங்கு பலனும்,
ஸ்நானஞ் செய்தால் கங்கையாடிய பலனு முண்டாமெனல்.

ஒற்றை [மாமணி களந்]தரித் தோருருச் செபிக்கிற்
கற்ற மந்திர மொன்றொரு கோடியிற் கவைக்கும்
பொற்பி னன்மணி சிரத்தினிற் [றரித்துநீர்] புகுதிற்
சுற்று தெண்டிரைக் கங்கையா டியபலந் தொகுவார். (ட)

உருத்திராக்கமணிந்து பூசைபுரிவதால் அடையும் பயன்.

தூய மாமணி மஞ்சன மன்றி [பே துறவோ]
ராயு மாகம விதிமுறை யருச்சனை யாற்றிற்
பாயுங் கங்கைநீர்ப் படர்சடைப் பரமனைப் பரவி
மேய பூசைசெய் புண்ணிய மிக்குபர்க் தடைவார். (எ)

உருத்திராக்கத்தின் பெருமையை விளக்க ஓர் கதை கூறத் தொடங்கல்.

நீதி லாமணிப் பெருமையைத் தெரிகரத் தெரிந்தே
யோதி னளொரு [கோடி]மேற் கடப்பினு மொழியா
தாதி நான்மறை யந்தணீ ரதன்கதை யொன்று
பேதி யாவகை கேண்மின்க ளெனத்திறம் பேசும். (அ)

நருமதையாற்றுச் சிறப்பு.

இடிக்கு மைம்முகில் படர்வரை பெறுழ்வலிச் சீயம்
பிடிக் குலங்களின் பின்செலுங் கடங்கரி பிளிற
வொடிக்கும் வெண்மருப் புதறிவெண் கவரியீர்த் தொழுகி
நடிக்கும் வெண்டிரை நிரைதரு நருமதை யாறு. (கூ)

மோட்டு வெற்பொளிர் வயிரங்க ளிடையற முகந்து
நீட்டு வெண்டிரை நிமிர்தலி டுனைங்கடற் சிறுவன்
கோட்டு மால்வரை தீதெனக் குலவுமாட் டயரப்
பூட்டு வச்சிர வடமெனப் பொலிந்ததப் புனலே. (கo)

வரைத் தலைப்படர் வானவர் மடந்தையர் கொணர்ந்த
விரைக்கொள் கற்பக நறுமலர் வெளியுற வரலிற்
றிரைக் கடற்புவி மகள்புனை தெரியலிற் குலவி
நிரைத் தடந்திரை சுருட்டிவாய்ந் தொழுகுமந் நெடுநீர். (கக)

நருமதைக் கரையிலுள்ள ஆயிட மென்னும் நகரில்
விச்சுவசித்தன் என்னும வணிகன் வசித்துவருதல்.

அப் பெருந்திரு நதிக்கரை யாயிட மென்னு
மொப் பருங்கனி வளநக ரதனிலோர் வணிகன்
செப் பருந்திறல் விச்சுவ சித்தனென் றுரைப்பீபா
னிப் பெரும்புவிக் கறமெனத் தனியுரு வெடுத்தேதான். (கஉ)

விச்சுவசித்தனது அடியார்பக்தியும், தருமமும் கூறுதல்.

நேச னன்புரைக் காண்டொறு மிணைபடி பரவி
யாசி லாவமு தனுசுவை பொடுநனி யருத்தித்
தூசு தோவண மன்னவ ருளங்களி துளங்க
நேச மோடுமீப்ந் தீட்டிய நிதிபல வளிப்பீபான். (கங)

கருகும் வெஞ்சுரத் திரும்புனற் காவணங் கலங்காப்
பொரு வருந்தனிக் கூவனீள் புனன்மடுப் புரிவோ
னிரு மருப்புவெள் ளேறுடை யெப்பிரான் கமல
வரு மறைக்கழ லல்லது கருத்துற வமையான். (கச)

விச்சுவசித்தன் கங்கா தீர்த்தமாட விருப்புற்றுப் புறப்படுதலும்;
பல பொருட்களோ வாகனங்களிலேற்றி, உருத்திராக்கப் பொதிபொன்றினையும்
ஓர் கழுதையின்மீதேற்றிச் செல்லுதலும்.

இனைய தன்மைய னெறிதிரைக் கங்கைநீ ராட
நினைவு பற்றின னெட்டக நிரைக்கர மிலையின்
மனவ மாதிதி யேற்றுவோன் வகுத்தொரு கரத்திற்
புனையு ருத்திர வக்கவண் பொதியுமேற் றினனால். (கரு)

விச்சுவசித்தனும் அவனது பரிவாரங்களும் விந்தமலைச்சாரலை யடைந்து
ஏறும்போது, கழுதை ஏற முடியா திறத்தல்

நடக்குங் காவத மொன்றரை நடந்தபி னனிவான்
கிடக்குந் தண்டலை விந்தையெம் பொருப்பினைக் கிட்டி
முடக்குங் கான்மடுத் தேறலின் முற்றிய தகையாற்
கடக்க லாமையி னப்பொருப் பிறந்ததக் கழுதை. (கசு)

இறந்த கழுதையின் உயிரை எமடர் கொண்டுசெல்லப் பற்றுதலும்,
அவர்களைச் சிவகணத்தவர் தடுத்துக் கோபித்தல்.

துறந்த கர்த்தபத் தாருயிர் காலன்வெந் தூதர்
நிறைந்து பற்றினர் தென்புலத் தெய்திட நினைந்தார்
சிறந்த வெள்ளியக் கிரியுறை கணத்தவர்திரண்டு
பறந்து வந்தனர் வெகுண்டனர் காலன்வெம் படரை. (கள)

இக்கழுதை உருத்திராக்கத்தைச் சுமந்து இவ்விந்தமலையில் இறந்ததினால்
இது உங்கள் கைப்படும் தகைத்தன்று என்று கூறி, சிவகணத்தவர்
கழுதையினுயிரை மானமீதேற்றிக் கயிலைக்குக் கொண்டுசெல்லுதல்.

வெங்க ரத்துரு வெடுத்ததிவ் விந்தையி லிறந்த
தங்க ணுபக ணுருத்திர வக்கமே சுமந்த
துங்கள் கைப்படுந் தரத்ததோ வெனநுவன் றிமைக்குந்
தங்க வொண்மணி மானமேற் றட்டினி லிருத்தி. (கஅ)

சிவகணங்கள் அதன் உயிரைச் சிவபிரான் திருமுன் கொண்டுசெல்லுதலும்,
சிவபிரான் புன்சிரிப்புச்செய்து, அதற்குக் கணத்தலைமை யளித்தல்.

கொண்டு சென்றனர் கயிலையங் குலகிரி படைந்தா
ரண்டர் நாயகன் சன்னதிப் படுத்தின ரமலன்
விண்ட செந்துவர்ப் பவளவாய் மெல்லென நகைத்துக்
கண்ட வானவர் கைதொழக் கணத்தலை யளித்தான். (ககூ)

இவ்வாறு அது நூறு கற்பகாலம் கயிலையிலிருந்ததெனக் கூறி,
உயிர்துறக்கும் வரையும் உருத்திராக்க மணிபவர்
பரகதியடைவரென்று கூறுதல்.

கற்ப நூறுநூற் கயிலையி லிருந்தது கருதிச்
சுற்றி நூலதிற் கோத்துயிர் துறந்திடு மனவும்
பற்றி யன்புற வணிந்தவர் பரகதி யடைவர்
மற்றி தற்குமுண் டோதவ தெனவுரை வழங்கல். (உ0)

எத்தீமைப் பாவமுடையவராயினும் உருத்திராக்கந் தரிப்போர்
சிவதரிசன மடைவரெனல்.

வெங் கொலைத்தொழிற் பாதக ராயினும் வெய்ய
பொங்கு மன்பிலா வஃறிணை யாயினும் பொருந்த
வங்க மேற்பட வுருத்திர வக்கமே யணியிற்
செங்கண் மால்விடை யெப்பிரான் றெரிசனத் தவரே. (உக)

இதன் பெருமையைச் சிவபிரானன்றி மற்றவர்கள்
முழுவதும் அறியார் என்று சூதமுனிவர் கூறி முடிக்க, அதனைக் கேட்ட
முனிவர்கள் களிப்புறுதல்.

பின்ன லஞ்சடைப் பிஞ்ஞக னன்றிமற் றெருவ
ரன்ன மாமணிப் பெருமையை முழுவது மறியா
ரென்ன வோதினன் சூதனிக் காதைகேட் டிறைஞ்சிப்
பன்னு நான்மறை முனிவரர் பரிந்துளங் களித்தார். (உஉ)

பதினைஞ்சாவது
உருத்திராக்க மகிமையுரைத்த அத்தியாயம் முற்றும்.

பதினேழாவது
சோமவாரவிரத மான்மியமுரைத்த
அத்தியாயம்.

சூதமுனிவர் சோமவாரவிரதத்தின் பெருமையைக் கூறத் தொடங்கல்.

அரிய வணுவுக் கணுவாகி யகண்ட பரிபூ ரணமாகித்
துரிசற் றுயர்ந்த மதிச்சடையோன் சோம வார விரதத்தின்
பெருமைத் திறநா னுரைப்பனெனப் பேசு மறைதேர் வாமுனிவர்
கருதிப் பரவ வுவகையொடுஞ் சூத முனிவன் கழறுவனால். (க)

தானியபட்டர் என்பவரது உயரொழுக்கமும், பக்தியும் கூறுதல்.

முன்னம் பகரு மறையனைத்து முற்று முணர்ந்தே யவைவடித்துச்
சொன்ன நெறியி னுபசொழுக்க முழுதும் புரிவான் சுடர்த்திங்கட்
சென்னி முடித்த பெருமானைச் சிந்தித் திறைஞ்சி யவனடியார்க்
கன்னங் கருணை பொடுமுதவி யாடை நிதிய மளித்திடுவான். (உ)

தானியபட்டாது புகழைக் கூறுதல்.

துத்திப் படத்துக் கதிர்மனவச் சுடிகை யுரகர் பாதலமுந்
தத்திப் புரட்டித் திரைகொழிக்குந் தரங்கக் கடல்சூழ் தாரணியுங்
கொத்துச் சொரிதேன் மலர்த்தருக்கள் குலவு மிமையோர் வளநாடும்
பொத்திப் படர்ந்த நிலவெனவே புள்வாய் மடுக்கப் புகழ்விளைத்தான்.

வேறு.

வாணெளி வாய்மடித் தருந்த வார்நறுந்
தேனிழி தாமரைத் தெரியன் மார்பினு
ணினைப் பரப்பெலா நடக்கு மோர்பெயர்
தானிய பட்டனென் றுரைக்குந் தன்மையான். (ச)

தானியபட்டர் செல்வநீங்கி வறுமையடைதல்.

முதுமறை நெறியற முழுது முற்றுற
வதிர்திரை யுலகினி லளித்து வாழுநாள்
விதிவழி நீதியின் வியந்து நேடிய
நிதியமும் வளங்களு நீங்கி வாடினான். (ரு)

வறுமையாற் றளராது, கருமங்களாற்றிவருதல்.

முந்துமுழ் விளைத்திடு முறையின் வண்ணமே
வந்திடும் வறுமையை மறுப்பர் யாரெனச்
சிந்தையிற் றளர்ந்திலன் றினமு நூல்வழி
யந்தணர் கருமங்க ளனைத்து மாற்றியே. (சு)

வீடுதோறும் ஐயமேற்றுச் சீவித்துவருதல்.

அந்தகர் பனிதொறு மையம் வாங்குவன்
மன்னிய நெல்லிரு நாழி வந்தபின்
றன்னெடு பனியிடைச் சார்ந்து தாழ்குழற்
பன்னிசெங் கரத்தினிற் பரிந்து நல்குவான். (எ)

மறையவ னளிக்குநென் மகிழ்ந்து வாங்கியே
பொறையெலா மொருவடி வெடுத்த பூங்கொடி
நிறைதர வ்ழங்குமங் நெல்லி னுற்றினங்
குறைவறத் தன்னுறு குடிப்பந் தாங்குவாள். (அ)

அச்சமயத்தில் சார்த்தர் என்பவர் சோமநாதரை வணங்க
யாத்திரை செல்லுதல்.

இன்னணஞ் சிலபக லிரியல் போக்கினன்
பின்னொரு தினத்தினிற் பெருகு நான்மறை
பன்னிய சார்த்தனென் றொருவர் பத்தியான்
மன்னிய சோமநா தரைவ ணங்கவே (கூ)

சார்த்தர் யாத்திரை செல்வதைக் கண்ட தானியபட்டர்,
தாமும் சோமநாதரைத் தரிசிக்க நினைத்தல்.

எண்ணின னன்னவ னெகுங் காலையிற்
கண்ணுற மறையவ னதனைக் கண்டனன்
பண்ணவன் புதுமலர்ப் பதமத் தாடொழ
நண்ணிய கருத்துற நாடி னனரோ. (கo)

தானியபட்டர் தமதெண்ணத்தை மனைவியிடத்துரைத்தல்.

போந்துதன் மனையிடைப் புகுந்து பொற்புறு
காந்தையை மதிமுகங் களிப்பி னெனக்கின
னேந்திழை சோமநா யகரை யேத்துவான்
சார்ந்தநற் குணத்தினர் சார்த்த ரென்பவர். (கக)

போவதும் புரிந்தன மவரொ டும்புகுந்
தேவற வேகியே யுமையி டத்தவன்
சேவடி யிறைஞ்சியே திருப்பு வேனென
மாவடு வகிர்ந்தன வரிகொள் கண்ணினாள். (கஉ)

தானியபட்டர் மனைவி அவர் கருத்து மிக நல்லதென்று கூறுதல்.

நன்றிது நினைந்தது தரும நாடுத
லென்றுநங் கருத்தினுக் கிசைந்த தாகுமே
துன்றுசெஞ் சடைமுடிச் சோம நாதரைச்
சென்றுநீ நிறைஞ்சியே திரும்பு வீரெனு. (கஙு)

அவருக்கு வழியுணவுக்காக ஐந்து கோதுமைப் பணியாரஞ்
செய்து கொடுத்து, அவரை யனுப்பிவைத்தல்.

கோதுமை மாவினிற் குழைத்துப் பண்ணிய
வேதறு சுவைப்பணி யார மைந்திவை
பாதைய மெனப்பரிந் தளித்துப் பற்றிய
வாதர வொடுநடந் தனுப்பி னளரோ (கச)

தானியபட்டர் செல்லும்போது, செல்வனுன உருத்திரபட்டனென்னுந்
தனது தம்பியின் மனையைக் கண்டு அங்கு செல்லுதல்.

மாதவ ளனுப்பிய பின்னர் மாதவ
வேதியன் மனையிடை விட்டு நீங்கியே
போதலு மொருவழி புத்தி யெண்ணினன்
காதலின் பின்வரு கனிட்டன் செல்வத்தான். (கஞ)

அங்கு தனது தம்பியைக் காணுமையால்
அவன் மனைவியிடத்துத் தனது தரித்திரத்தை
எடுத்துக் கூறி, யாத்திரையின் வழிச்செலவின்பொருட்டுப்
பொருளுதவி கேட்டல்.

உருத்திர பட்டனென் றிருவ நன்மனைக்
கருத்தியி னடைந்தன னவனைக் கண்டிலன்
சுரிக்குழ லவன்பனைத் துன்ம தியொடுந்
தெரித்திர மனைத்தையுந் தெரித்துக் கூறினன். (கசு)

சுடர்மழு வுயர்த்தருள் சோம நாதர்பொன்
னடியிணை தொழச்செல்வா னரிய தேர்வழிக்
கிடருறு வறுமைதீர்த் தினிய வாம்பொருள்
கொடியிடை தருகெனக் கூறி னனரோ. (கள)

அதனைக் கேட்ட உருத்திரபட்டன் மனைவி கோபித்து, இல்லையெனலும்,
தானியபட்டர் மனங்கலங்கிச் செல்லுதல்.

அவ்வுரை கேட்டன ளழன்று பாதகி
வெவ்வுரை வழங்கினள் விரைவி னில்லெனக்
கவ்வையின் றொழுந் தழற் கதுவச் சிந்தைநொந்
தெவ்வகை போவலென் றிரங்கி யேகினன். (கஅ)

தானியபட்டர் சார்த்தரோடும், தனது மைத்துனனோடும்
யாத்திரை செய்யும்போது வழியில் ஓர் அழகிய ஓடையைக் கண்ணுறுதல்.

தண்ணளிப் பெருங்கடற் சார்த்தர் தம்மொடும்
வண்ணநான் மறையவன் மைத்து னன்னொடு
நண்ணினன் வழிவன நாப்ப ணீணர்நெடுங்
கண்ணக லிடையங் கரையிற் சென்றனன். (ககூ)

வேறு.

ஓடையின் இயற்கைச் சிறப்புகளைக் கூறுதல்.

அன்ன வான்புனத் தூளவள முறையினி லடங்காப்
பன்னி வெண்டிரை யோடையின் வளஞ்சில பகர்வேன்
கன்னி வண்டினங் கருஞ்சிறை விரித்தூழு தழக்கும்
பொன்ன நாண்மலர்ப் பொதும்பரெம் மருங்கினும் பொலிந்த. (

சிறிய கூருகிர்த் தாளுடைச் செவ்வியஞ் சிலை
யுறுதி யோடிருஞ் சிறையடித் துபர்ந்துயர்ந் தாடிக்
குறுகி நீரிடை மூழ்குறக் கொழுங்கயல் குதித்து
மறுகி வீழ்தலுந் தாமரை வண்டின மருளும். (உக)

படர்ந்த வெண்சிறை விரிதரப் பைபயப் பறந்து
தடந்தி ரைப்புனல் குலவிய வாரலைத் தாவித்
தொடர்ந்து சேறலு மன்னது தொள்ளியி லொளிக்க
நடந்த யற்பெடை நோக்கியே வெள்குறு நாரை. (உஉ)

பத்தி பத்தியின் சிறையொடு சிறைதொடப் பாத்தி
முத்து யிர்த்திடுஞ் சுரிமுகப் பணிலங்கள் முழங்கத்
தத்தி யோடிய நெடுங்கய னிரைநிரை சாய்த்துக்
கொத்தி மெள்ளெனக் குறுநடை பயில்வன குருகு. (உங)

நெட்டு டல்விதிர்த் தொதுக்கியே யிடங்கர்வா னிமிர்த்து
வெட்ட வெங்கணும் வெருண்டிள வாளைகள் வெடிபோய்
முட்ட நீண்டுயர் தாழையின் மூப்புடைப் பசுங்காய்
விட்டு வான்மழைத் தாரையி னறுப்புனல் விடுக்கும். (உச)

கரண்டம் வாய்லிடக் கதுமெனக் கருந்தலை மலங்கு
வெருண்டு தாவுற விரைவொடும் பாய்ந்தது நீர்நாய்
திரண்ட மேனியிற் பற்றலு மதன்மெயிற் றிருக்கிச்
சுருண்டு வீழ்வன மற்றெழின் முறைதொகுப் பனவாம். (உடு)

இவ்விதமான அழகிய ஓடையைக் கண்டதிசயித்த தானிபபட்டர்
அங்கு சிவபிரானை அருச்சிக்க நினைவுகொள்ளல்.

இனைய வோடையைக் கண்டதி சயித்திடுங் கரைமேற்
சினையின் மஞ்சிவர் கூவிளஞ் செறிந்தவோ ரிடையின்
வனையும் வெண்பிறை வேணியன் வந்தனை புரிய
நினைவு னர்ந்தன னெடுந்திரை போடையின் மூழ்கி. (உசு)

தானியபட்டர் அங்கு சிவபூஜை செய்து, தான் கொண்டுவந்த
பணியாரங்களைந்தினில் சிவபிரானுக் கொன்றும், சார்த்தருக் கிரண்டும்
தமக் கிரண்டுமென நினைத்துக் குடலைபிலிருந்து எடுத்தல்.

விரிந்த மூவிலை வில்லமிட் டையனைப் பூசை
புரிந்து போனக மருத்துவான் குடலைபிற் பொதிந்தே
யிருந்த நற்பணி யாரங்க ளைந்தினி லெரியின்
முரிந்த செஞ்சடை முன்னவன் றனக்கென வொன்றும். (உஎ)

தானியபட்டர், பலகாரப் பொதியினை அவிழ்த்துப் பார்க்க
அந்த ஐந்து பணியாரங்களும் பசும்பொன்னுப் மாறியிருக்கக் காணுதல்.

தழைந்த மாதவச் சார்த்தருக் கென்னவோ ரிரண்டுங்
குழைந்த சிந்தையன் றனக்கென விரண்டையுங் குறித்து
விழைந்த விற்றன னன்னவை மிளிருமொன் னிறத்தி
னிழைந்த பத்தரை மாற்றினிற் செம்பொனு யிருந்த. (உஅ)

அதனைக் கண்டதிசயித்து இது சோமநாதபிரான் செயலென்று எண்ணி,
இச்சம்பவத்தைச் சார்த்தருக்குக் கூறுதல்.

ஈது கண்டன னதிசயித் தீர்மதி புனைந்த
சோதி வானவன் சோமநா யகன்செய லென்னுத்
தீதில் சிந்தையி னினைந்தன னித்தகை திருந்த
வாத ரத்தொடுஞ் சார்த்தருக் கறைந்தன னன்பால். (உகூ)

சார்த்தரிடம் நெய்ப்பணியார மொன்றை வாங்கிச் சிவபிரானுக்கு
நிவேதனை செய்து, பூஜையை முடித்தல்.

பேன மொத்திடு நெய்நிறை பெருகியூற் றிருப்பத்
தான நற்பணி யாரமொன் றவர்கையில் வாங்கி
யேன வெண்பிறைக் கோடணி யெம்பிரான் றனக்கு
வானி லேக்கலத் தருத்தினன் வந்தனை முடித்தான். (உ0)

பசும்பொன்னுய் மாறிப பணியார மைந்தினில் சிவபிரானுக்கென
ஒன்ற வைத்து, இரண்டைச் சார்த்தருக்கு
அன்பினோடுங் கொடுத்தல்.

பொங்கு நற்பணி யாரங்க டிரிந்திடும் பொன்னிற்
றிங்கள் வேணியன் றனக்கென வொன்றையுந் தெரித்தான்
றங்கு மாதவச் சார்த்தருக் கெண்ணிப விரண்டு
மங்க வன்கரத் தளித்தன னினைந்திடு மடைவே. (உக)

மீதியான இரண்டையும் வறுமையால் வருந்தும் தமது
மனைவியிடமளிக்கும்படி மைத்துனனிடம் கொடுத்தனுப்புதல்.

மற்றி ரண்டையுந் தனக்கென வெடுத்துமைத் துனன்றன்
பொற்பு றுங்கரங் கொடுத்துநல் குரவினிற் பொருந்திக்
கற்பு றுந்தனி மனைவியு மக்களுங் கருகா
திற்பு குந்தவள் கரத்தினி லளித்திபென் றிசைத்தே. (உஉ)

இவ்விடத்துச் செயலிவ்வாறிருக்க, அங்கு தானியபட்டர் மனைவி,
பிள்ளைகள் உணவின்றி வாடுவதைக் கண்டு வருந்துதல்.

ஆங்க வன்றனை யனுப்பின னன்னவன் புகுமு
னேங்கு வெம்பசி வெந்தழ லுருத்துருத் தழல
வேங்கி யேங்கினின் றழுதிடு மக்களுக் கிரக்கி
வீங்கு பூண்முலை யூட்டுதற் குணவின்றி மெலிந்தே. (உந)

அவள் கொல்லையிற் சென்று கீரைகளையும், கிழங்குகளையும்
தோண்டி எடுக்கும்போது, சிவபிரான் கருணைபால்
அவளுக்குப் புதையல் கிடைத்தல்.

கொல்லை சென்றுமென் குறுந்தளிர்க் கீரைமென் கிழங்கு
கல்லு மேல்வையிற் கண்ணுதல் கருணைவைத் திரங்க
வல்லி யங்கம லக்கொடி யவளிடத் தடையச்
செல்வ மாநிதி கண்டன ளெடுத்தன டிரும்பி. (உச)

அவள் அப் புதையற் பொருளை எடுத்து மனையிற் சென்றிருக்கையில்,
அவள்கணவனால் அனுப்பப்பட்ட சகோதரன் வந்து
பசும்பொன் நிதியைக் கொடுத்து,
அங்கு நிகழ்ந்த அதிசயத்தையும் கூறுதல்.

போய கம்புகுந் திருந்தனள் புந்தியிற் களித்தா
ளாய காலையி லன்னவள் கொழுநனுங் கனுப்பு
மேய மாநிதி சகோதரன் விருப்புற வளித்தா
னேய்வி லாதவ னதிசய மனைத்தையு முரைத்தான். (உரு)

அதைக் கேட்ட தானிபபட்டர் மனைவி இவையெல்லாம்
சிவபிரான் செயலென்று மனமகிழ்தல்.

ஆங்கெ னைந்தணர்க் கருநிதி யடைந்திடு மடைவு
மீங்கெ னக்குவந் திரும்பொரு ளெய்திய வியல்பும்
வாங்கும் வெண்டிரை மறிவிட முழுவதுங் களத்திற்
றூங்கு சங்கரன் செயலெனக் களிபுளந் தழைத்தாள். (நசு)

கிடைத்த பெருநிதியைக் கொண்டு மக்களும் சுற்றமும் அருந்தும்படி
உணவூட்டி, இரவலர்க்கு மீந்துவருதல்.

சென்ற தன்கொழு நனுக்குமங் கலம்புணர் திறத்து
நன்றி யாவையும் புரிந்துபா னலுஞ்சுவை யடிசி
லொன்று மக்களுஞ் சுற்றமு மருந்திட வூட்டி
யின்றெ னிதிர வலர்க்கமு தளித்திருந் தனளால். (நஎ)

தானியபட்டர் சார்த்தருடன் சௌராட்டதேயத்தை யடைதல்.

இனைய ளின்னண மிருந்தனள் வனங்கடந் தேகித்
தனிநி கர்த்திடு மந்தணன் சார்த்தர்தம் மோடும்
புனைபு கழ்ச்சவு ராட்டதே யத்தினிற் புகுந்து
கனைகு டந்திரை மேல்சமுத் திரக்கரை கண்டான். (நஅ)

வேறு.

அத்தேயத்தில் மேல்சமுத்திரக் கரையோரமுள்ள பிரபாசகேத்திரத்தை
யடைந்து, ஆலயத்தினுட் புகுந்து சோமநாதப்பிரானை
ஆகம முறைப்படி வணங்குதல்.

அந்தநெடுந் தடங்கரையிற் பிரபாசக் கேத்திரத்தை
யடைந்து தேவர்
கந்திருவர் திரள்விலகிச் சினகரத்தி னுட்புகுந்து
கரைந்த வன்பிற்
சந்திரன்வந் தடிபரவத் தண்ணளிசெய் சோமேசர்
சரணம் போற்றி
வந்தனைமுன் னகமத்தின் முறைபாற்றி யுளமுருகி
வணங்கி னானே. (நகூ)

தானியபட்டர் சோமநாதரை வணங்கி, ஆகமமுறைப்படி பூஜை செய்து,
ஆலயத்தின் வெளியில் வரும்போது, ஒரு முனிவரைக் கண்டு
அவரை வணங்குதல்.

அத்திறத்திற் பூசைமுடித் தவிர்பணிவா யிற்புறத்தி
னடையுங் காலை
வித்தகமா தவமுனிவ னொருவனவ னெதிர்வாவும்
விருப்பி னோடுங்
கைத்தலமுச் சியிற்கூப்பித் தெண்டனிட்டான் வரமுனிவன்
கருணை கூர்ந்து
பத்தியினற் பரவுதல்செய் தானியபட் டனைநோக்கிப்
பகர்வ தானான். (சஎ)

அம்முனிவர், தானிபபட்டரை நோக்கி நீ இவ்விடத்துக்கு வந்த காரணம்
யாதெனக் கேட்டலும், தானியபட்டர் தான் வறுமையுற்ற வரலாறும்,
பின் சிவபிரான் கருணையால் நிதி கிடைத்த வரலாறும் கூறிச்
சோமநாதரைத் தரிசிப்பதற்காக இவ்விடம்
வந்தேனென்று கூறுதல்.

வேதியநீ யிவணடைந்த காரியமென் னின்மனத்தின்
விருப்ப மென்னை
யோதுகெனக் களிப்பினோடுந் தானியபட் டன்முதலை
நுள்ள வண்ண
மேதகைய பெருஞ்செல்வங் கிளைத்ததுவும் பின்வறுமை
விளைந்த வாறு
மாதவி னெடுமுரைத்தான் சோமேச னடிக்கமல
மருச்சித் தேத்த. (சக)

அதைக் கேட்ட முனிவர் மகிழ்ந்து, நீ சோமநாதரைத் தரிசிக்கவேண்டுமென
மனத்தில் நினைக்கும்போதே வறுமை தீர்ந்ததன்றே!
உன்னிதயத்திலே சிவபிரான் வீற்றிருக்கின்றனெனக் கூறுதல்.

வந்தனனிக் காலையென வழங்கிடலும் வரமுனிவன்
மகிழ்ந்து கூறு
மெந்தைபிரான் சோமேச னடிபரவ நீமனத்தி
லெண்ணு முன்னே
முந்துகொடு வறுமையெலாந் தீர்ந்தனைநின் னிதயமலர்
முளரி மீதே
கொந்துமல ரிதழிபுனை கோமுரத் தெம்பெருமான்
குடிகொண் டானால். (சஉ)

ஆனாலும், சோமநாதருக்குரிய ஒப்பற்ற விரதமாகிய சோமவார விரதத்தை உனக்கு உபதேசிக்கின்றேனென்று அதனைக் கூறுதல்.

ஆயினுமோர் சிவவிர தமுபதேச முறையுனக்கே
யறைவன் கேட்டி
மேயவருள் சுரந்தளிக்குஞ் சோமேசன் றனக்குரிய
விரத மாகுந்
தூயநிலாக் கலைநிறைந்த சோமனுமன் னதுபுரிந்து
துகடீர்ந் துய்ந்தா
ரபதினந் தொறுமுதயஞ் சோமவா ரம்மெனப்போ
மரிய பாவம். (சஉ)

சோமவாரவிரதம் அனுஷ்டிக்கவேண்டிய காலத்தையும் முறையையுங் கூறுதல்.

விருச்சிகமே முதலாக மேடத்தின் விளங்குகதிர்
மேவுங் காறுந்
தெரித்துரைக்குந் தினந்தோறு முதயத்திற் றெண்ணீரிற்
றிளைத்து மூழ்கி
யருத்தியொடு நியதிமுடித் தபிமுகமேற் காகியவா
லயத்தி னெய்திப்
புரித்தசடைப் பெருமானே யவனுமை மணித்தினையும்
பொருந்தச் சொல்லி. (சக)

கூவிளத்தாற் கிளுவையான் மாவிலக்கா ளைச்சியாற்
குளிர் விளாவா
லாவலுட னருச்சித்துத் தெண்டன்வலஞ் செய்தல்விதி
முறையி னுற்றி
மேவரிய சந்திரவா ரத்தினத்தில் விசேடமுற
மிளிர்பொற் கோயி
றீவியபொன் னுடையினுன் மாலையினு லலங்காரந்
திருந்தச் செய்தே. (சஎ)

கருதரிய பரமனுக்கே யபிடேகம் பலபலவுங்
களிப்பி னூட்டிப்
பொருவரிய பஞ்சவில்லத் தொடுஞ்செழுந்தேன் மடற்கமலப்
புதுப்போ தாதி
மருமலர்கள் பலவெடுத்தே யருச்சித்து மணித்தூசு
வணிந்து பின்னர்த்
திருவமுது பரமான்ன முதலாய நிவேதித்துச்
சிறப்பி னூட்டி. (சஉ)

யரிமளிக்கு நறுந்தூபந் தீபமொடு பணிமாறப்
பண்ணி மிக்க
தெரிவரிய நமக்காரம் பன்னிரண்டும் வலம்வரலீ
சாறுஞ் செய்தே
யருமுறையின் மடந்தையர்க ணடனமொடு மைந்துதாம்
பூசை யாற்றி
யொருவரிய வுணவொழிந்து மற்றைநா ளொலிதிரைய
புனலின் மூழ்கி. (சள)

பாரண நாளிற் செய்யவேண்டிய முறைமையைக் கூறுதல்.

நஞ்சொளிருங் களத்தானைப் பஞ்சவில்லத் தாற்கமழு
நறுந்தேம் போதா
லஞ்செழுத்தா லருச்சித்துக் கோதுமையாற் பணியார
மைந்து பண்ணி
யெஞ்சலற வருத்துவித்துப் பூசைமுடித் ததன்பின்ன
ரிணர்ப்பொற் போது
நெஞ்சுகளித் திருங்குரவ னடிதூவிக் கதையவனு
னிகழ்த்தக் கேட்டே. (சஅ)

அன்னவனுக் கிருநியம் பணியாரத் தோரிரண்டு
மன்பி னீந்து
பின்னரா னடியரொடும் பாரணவு ணருந்துவதே
பேசு நீதி
யின்னபடி யிந்நோன்பு மைந்தர்மட மாதர்மன
மிசைந்து நோற்கிற்
கன்னியிடத் துறைந்தபிரான் பலவளனு மினிதளித்துக்
கதியு மீவன். (சகூ)

சோமவாரவிரதத்தினுல் மிக்க செல்வமும் பாகதியும் கிடைக்குமெனக் கூறி, மூன்னெருவன் இவ்விரதத்தை யனுஷ்டித்துக் குட்டரோகம் நீங்கப்பெற்றானென்று கூறுதல்.

இப்பரிசு நோன்பினீ நோற்றிடுக வெவ்வளமுங்
கதியு மெய்து
மைப்பழகு மணிமிடற்றுச் சோமநா யகர்கமல
மலர்த்தாள் போற்றி
யொப்பரிய விந்நோன்பு குட்டரோ கத்தழலு
மொருவ னேற்றுச்
செப்பரிய வடிவடைந்தான் முன்னமென வுரைத்துமுனி
திரும்பிப் போனான். (கூ0)

முனிவர் இவ்வாறு கூறிச் சென்றபின், தானியபட்டர் அப்போது அவ்விரதத்துக்குரிய கார்த்திகைமாதம் வர அம்மாதம் முழுவதும் அந்தத் தலத்திலிருந்து அவ்விரதத்தை அனுஷ்டித்து, பின் திரும்பித் தனது நகரமடைதல்.

இனியமொழி மேற்கொண்டா னக்காலம் விருச்சிகத்தி
லிரவி யெய்த
மனமொருப்பட் டோதியதோர் கற்பமுறை விரதமந்த
மாத மட்டு
நனிமலரி னிதழிபுனை சோமநா யகர்கமல
நடத்தாள் போற்றித்
தனதுவள நகரடைந்து தம்பிதிரு மனையிடத்திற்
சார்ந்தா னன்றே. (நக)

தனது நகர் சென்ற தானியபட்டர், தம்பியைக் காண விருப்புக்கொண்டு அவன் மனையை யடைதலும், அங்கு அச்சமயம் சகோதரனில்லாமையால் அவன் மனைவி வந்து, தானியபட்டரிடம் இப்போது பொருள் சேர்ந்திருந்தமை கண்டு, அவரை உபசரித்துத் தன் மனையில் உண்டுபோகவேண்டுமெனக் கூறுதல்.

அம்மனையிற் குறுகுதலுந் தம்பியைக்கண் டிலனவனு
ருயிராந் தேவி
செம்மைநிதி யிவனிடத்திற் சேர்ந்ததுகண் டாதரவிற்
சிந்தை கூர்ந்தே
யிம்மனையி லுணருந்தி யேகுமென வாசனமிட்
டிருத்திச் செய்ய
கைம்மலருச் சியிற்குவித்தா டம்பியைக்காண் குறுமாசை
கலந்த வாற்றால். (நஉ)

தானியபட்டர் அதற்கிசைந்து, தமது விரதமுறைப்படி சிவபிரானை யருச்சிப்பதற்காக, சகோதரன் மனைவியை யழைத்து, தான் விரதமனுஷ்டிப்பதைக் கூறி, அவ்விரத சரித்திரத்தையும் கூறுவேன் கேளென்றுரைத்தல்.

அவ்விடத்தில் விரதமுறை வெண்மதிவே ணிப்பரனை
யருச்சித் தேத்த
மவ்வனகை மடமயிலைக் கூவிவரு சந்திரவா
ரத்தி னென்பு
செவ்விவளங் கதிபளிக்கு மந்நோன்பி யாலெற்கச்
செய்கின் றேனுற்
றவ்வுலக வதன்சரித முரைத்திடநீ கேட்டியெனச்
சாற்றி னானே. (நங)

சகோதரன் மனைவி அவ்விரத சரித்திரத்தைக் கேளாது இசழ்ந்திடலும், தானியபட்டர் சிவவிரதக் கதையை யிசழ்ந்த உன் வீட்டி லுணவு செய்யேன்; பங்குனிமாதத்தில் இவ்விரதம் முற்றும்; அச்சமயம் நின் கணவனோடும் வருதியென்று கூறிச் செல்லுதல்.

பொற்றிதலைக் களபமுலைப் பொருநெடுவேற் கருநெடுங்கட்
பூவை யன்னாள்
சொற்றமொழி மேற்கொள்ளா திகழ்ந்திடலு மனநடுங்கித்
தோகை கேட்டி
சிற்பரனே பதங்கதையை யிகழ்ந்தனைநின் மனையுணவு
செய்யே னெனதுங்
கற்பமுறு மீனமதி யதனிலிந்தச் சிவவிரதங்
கணித்து முற்றும். (நச)

தானியபட்டர் தனது மனையை யடைதலும், அவர் மனைவி மிகவும் மகிழ்ச்சிகொண்டு அவரை உபசரித்தல்.

அத்தகைய திங்களினிற் கொழுநனெடும் வருதியென
வறைந்து ஞானத்
தத்துவமுற் றுணர்ந்தருளுஞ் சதுமறைபோன் றன்தமனை
சார்ந்தா னில்விற்
புத்தமுத மனைபமொழிப் பூவையது கண்டரிய
புளகம் பூத்தாள்
கொத்துமல ரவனடிதூய்த் தெண்டனிட்டாள் விழியமுதங்
கொழிக்க நின்றாள். (நடு)

தானியபட்டர் தம் மனைவிக்குத் தாம் சோமநாதரைச் சேவித்த வரலாற்றையும், முனிவரால் கூறப்பட்ட சோமவாரவிரத வரலாற்றையும் கூறுதலும், அவள் அவற்றைக் கேட்டு மகிழ்தல்.

காதடார்த்த கலகவிழிக் கற்புடைய மயில்கேட்கக்
காதல் கூரச்
சீதமதிச் சடிலமுடிச் சோமநா யகர்பதஞ்சே
வித்த வாறு
மாதவத்தின் வரமுனிவன் சந்திரவா ரவிரதம்
வலித்த வாறு
மாதரசித் தினுமுரைத்தா னன்னதுகேட் டவளுவகைக்
கடலி னுழ்ந்தாள். (நசு)

மீனமாதத்தில் தானியபட்டர் சோமவாரவிரதத்தை முடித்து,
விழாக் கொண்டாடியபோது வந்த சுற்றத்தவர்களுடன், தனது தம்பி
வறுமையுற்றவனாய் வந்தமையைக் கண்டு, இவன் மனைவி
சிவபிரான் விரதத்தை யிகழ்ந்தமையால் இவ்வாறு
வறுமையுற்றானென் றெண்ணுதல்.

மீனமதி யதனிலிந்தச் சிவவிரத விழவுமன
விருப்பி னோடுங்
தானியபட் டன்முடித்தா னதற்குவருந் தமர்களொடுந்
தம்பி சிந்தை
மானமழிந் திருநிதிபோய் வறுமையொடு மடைந்தனனவ்
வாறு நோக்கிக்
கூனன்மதி முடித்தபிரான் விரதமிவன் மனையிகழ்ந்த
குறையென் றெண்ணி. (நிஎ)

தானியபட்டர் தம்பியைத் தழுவி, முன்னர் உன் மனைவி
இவ்விரதத்தைக் கேளாதிகழ்ந்தமையால், இவ்வறுமை
வந்ததெனக் கூறி, இவ்விரதத்தை முறைப்படி இனி நீ யனுஷ்டித்தால்
முன்னரினும் பெருஞ்செல்வனுவாயென்று கூறுதல்.

பின்னவனைக் கரந்தழுவி மதிவார விரதகற்பம்
பேச வேகின்
பன்னிபைமுன் கூவியபின் னதுகேளா விகழ்ந்தனளப்
பான்மை யாலே
யின்னலுறும் வறுமையுனக் கெய்தியதவ் விரதமினி
யிழைத்தாற் செல்வ
முன்னரினு நனிகூலைக்கும் புரிதியெனக் கற்பமுறை
மொழிந்தா னன்றே (நிஅ)

தம்பியு மவ்வாறே சோமவாரவிரதத்தை யனுஷ்டித்துச்
செல்வமெய்தலும், தானியபட்டரும் பெருஞ் செல்வமடைந்து,
தவத்துடன் வாழ்தலும்.

நெறியகலா முன்னவன்கூ றியபடியே விரதமந்த
நீதி யாற்றி
வறுமையெலாந் தவிர்ந்துபெரு வளமனைத்து மவனடைந்தான்
வரிவண் டாடு
நறியகருங் கூந்தலொடு மைந்தரொடும் புகழளகை
நகர வேந்தி
லுறுநிதிய நனியீட்டித் தானிபபட் டனுந்தவத்தோ
டுறைந்தா னன்றே. (நிகூ)

இச் சரித்திரத்தைக் கேட்பவர்களும் பிறர்க்குரைப்பவர்களும்
எய்தும் பயனைக் கூறி, சூதமுனிவர் கதையினை முடித்தலும்,
கேட்ட முனிவர்கள் களிப்புறுதல்.

ஆய்ந்துரைத்த வின்னகதை கேட்பவர்க ளுரைப்பவர்க
ளளகை வேந்தில்
வாய்ந்தபெருஞ் செல்வமொடு மினிதிருப்ப ரெனச்சூதன்
மகிழ்ந்து கூறப்
பாய்ந்தபுனற் பரந்தசடைப் பண்ணவனு டலங்கமலப்
பதத்தான் மாபை
காய்ந்தபெருந் தவமுனிவ ருவகைகெடுங் கடலமிழ்ந்திக்
களித்தா ரன்றே. (கூ0)

பதினேழாவது
சோமவாரவிரதமான்மியமுரைத்த அத்தியாயம் முற்றும்.

பதினெட்டாவது
கமலாலய மான்மியமுரைத்த
அத்தியாயம்.

சூதமுனிவர் கமலாலயப் பெருமையைக் கூறத் தொடங்கல்.

மூரித்த வெண்டிரைப் பகீரதி முடிபுனை முதல்வ
னிருந்து மாநடம் புரிதரு கயிலையென் றிசைக்கும்
பெருந்த கைத்திறக் தருங்கம லாலயப் பெருமை
பரிந்து மாதவச் சூதமா முனிவரன் பகரும். (க)

மகா மேருமலை, மற்ற மலைகளை யழைத்துத் தனது மகனுகிய
மந்தரமலைக்கு மலைகளுக்காசாக முடிசூட்டவேண்டுமெனல்.

உலக நாப்பணின் மேருங்கிய வொருமக மேரு
வலகில் வெற்பெலா மழைத்துநுங் களுக்கர சாக
மலிவி லென்மக வாகிய மந்தர வரைக்கே
யிலகு நீண்முடி சூட்டுதல் வேண்டுமென் றிசைப்ப. (உ)

அதனைக் கேட்ட விந்தமலை, வலிகுறைந்த மந்தரமலைக்கு இப் பெரிய
அரசு அடங்குமா? எனக் கோபித்துரைத்தல்.

நீண்ட மால்வரை மேருவி னுரைக்குநெஞ் சழன்றே
யாண்டு விந்தைதின் றடல்வலி குறைந்தமந் தரத்துக்
கீண்டு பேர்ர சடங்குமோ வெனவெடுத் திசைத்து
மீண்டு தன்னிடை புகுந்துயர் மேருவெற் பினுக்கே. (நூ)

வலிமை, வளம், மகிமை இவைகளில் நான் மேருவுக்குக் குறைந்தவனல்ல;
சூரியனுல் வலம் வரப்படுதலொன்றுமே அதற்குள்ள விசேடம்;
இதோ யானும் என் சிகரத்தை யுயர்த்தி அச் சூரியன்
என்னையும் வலஞ்செய்து போகுமாறு செய்கின்றேனென்று
விந்தமலை நினைத்தல்.

வலியின் மிக்குறு வளத்தினின் மகிமையிற் குறையே
னலரி வானவன் வலம்வர லொன்றுமே யதிகங்
குலவு செங்கதிர்த் தேரினைக் கொடுமுடி யுயர்த்தி
விலகி யென்னையும் வலஞ்செய்விப் பேனென விசைந்து. (சு)

அவ்விதமே விந்தமலை மேருவிலும் மிக்குயர்ந்து, சூரியமண்டலம் வரை
சென்று, சூரியனை நோக்கி நான் மேருவினும் மேம்பட்ட
குலவரையாவன்; என்னையும் வலஞ்செய்து
செல்வாயெனல்.

விந்த மால்வரை மேருவெற் பினின்மிக வளர்ந்தே
யுந்து நீண்முடி யாதவன் மண்டலத் தருவிச்
சிந்து வெங்கதிர் வானவ வென்னையுந் தெரிக்கி
லந்த மேருவிற் குலவரை யென்பது மறிவாய். (ஞ)

அதைக் கேட்ட சூரியன், முன் பிரமன் சிருட்டி செய்த காலத்தில்
மேருவை வலஞ்செய்யும் வழியையே எனக்குக் கற்பித்தான்;
மேருவே மிக வுயர்ந்தது; அம்மேருவை யன்றி
உன்னை வலஞ்செய்யேனெனல்.

எனையு மவ்வணம் வலம்வரல் வேண்டுமென் றிசைக்கக்
கனைநெ டுங்குரற் கடும்பரி யேழுடைக் கதிரோ
னனைந றும்பொகுட் டந்தணன் றிருட்டிசெய் நாளி
லனைய மேருவை வலஞ்செயும் வழியெமக் கமைத்தான். (சூ)

கூறு மப்பரி சன்றியு மதன்கொடு முடிக
ளேறு முன்னதம் யாவரு மிசைப்பதற் கரிதா
மாறி லாதுபொன் மேருவை வலஞ்செய்த லல்லாற்
சீறி யுன்னையான் வலஞ்செயே னெனத்தெரித் துரைத்தான். (எ)

அதனைக் கேட்ட விந்தம் கோபித்து, தனது கொடுமுடிகளை மிக உயர்த்திச்
சூரியனது தேர், செல்லாதபடி தடுத்தல்.

என்று கூறலும் விந்தையம் பொருப்பெரி பெழலே
கன்று வெஞ்சின முருத்துதீ கடக்கரி தெனலே
நின்று தங்கிய கொடுமுடி பலபல நீட்டிக்
சென்றி டாவகை சூரியன் றேரினைச் செறுக்க. (அ)

அதனைக் கண்ட சூரியமூர்த்தி, இம் மலையின்
ஆணவத்தை அடக்குதற்ற அகத்தியமுனிவரே சிறந்தவரென நினைந்து
அவரிடஞ் செல்லுதல்.

ஓங்கு மால்வரை விந்தையி னிச்செய லுணர்ந்தே
தீங்கி ழைத்திடு மிவ்வரை யாணவஞ் சிதைக்க
வீங்க கத்திய னன்றிமற் றிலையெனக் கதிரோ
னுங்க வன்னுறை தருகுருக் கேத்திர மடைந்தான். (கூ)

தரும வேதமுந் தமிழையு மளந்தமா தவத்தோன்
பெரும கம்பல வியற்றிய புகைகரும் பெயலின்
மரும லர்ப்பொழி லிவர்ந்திடு மிருக்கையின் வாயில்
விரிசெ ழுங்கதிர் விண்ணவன் விதிர்ப்புற நின்றான். (கo)

வேறு.

சூரியமூர்த்தியின் வருகையைக் கண்ட அகத்தியர்,
அவனை அழைத்து ஆசனமிட்டு உபசரித்து, நீ இவ்விடம் வந்த
காரணமென்னை என்று வினவுதல்.

மைய றுஞ்சுடர் வானவ னிருக்கையின் வாயினின் றதுநோக்கிச்
செய்ய கேள்விய னகத்திய னழைத்தயல் செம்பொனு சனல்கி
யைய நீயிவ ணடைந்ததெ னின்மனத் தருந்துய ரெவனென்ன
வெய்ய வன்கனி வாய்திறந் தினையன விளம்புவன் விரைவோடும். (கக)

சூரியமூர்த்தி, விந்தம் மேருவுடன் மாறுகொண்டு, மிக உயர்ந்து
எனது தேர் செல்லும் வழியைத் தடுத்ததால் உம்மிடம் வந்தேன்.
நீர் எழுந்தருளிவந்து அதன் கருவத்தை அடக்கவேண்டுமென்று கூறுதல்.

பைம்பொன் மால்வரை யதனெடும் விந்தையம் பருப்பத மாறுகி
யும்ப ரென்னெடுந் தேர்செலும் வழியினைத் தடுத்ததா லுமாழ்கு
வெம்பு மேனியு மெலிந்தன னவ்வரை விளைத்தவா ணவந்தீர்ப்பா
னிம்பர் நின்னிடை யடைந்தன னெயநீ யெழுந்தரு ளுகவென்றான். ()

அதற்கு அகத்தியமுனிவர் ஒருப்பட்டுச் சென்று
விந்தமலையை யடைந்து, யான் சிவதலதரிசனஞ் செய்யத்
தெற்குத்திசை செல்லவேண்டும்;
வழிவிடுதியெனல்.

வருந்தி யாதவ னிவ்வுரை வழங்கலும் வாமுனி பதுகேட்டு
விரிந்த செஞ்சடை யசைந்திட நடந்துயர் விந்தையி னிடத்தெய்தித்
திருந்து மால்வரை கேட்டியான் றென்புலச் சிவதலந் தெரிசிப்பான்
பொருந்த வேகுதற் கொருவழி விடுகெனப் புகன்றனன் பொலன்விந்தம்.

விந்தம் அவருக்கு அடங்கித் தாழ்ந்து வழி விடுதலும், அகத்தியர் அதனைக்
கடந்து, யான் மீண்டு வருமளவும் இவ்விதம் இருத்தி,
அன்றேற் சபிப்பேன் என்று கூறிச் செல்லவும்
விந்தம் அவ்விதமே தாழ்ந்திருத்தல்.

அஞ்சி யையமே யெழுந்தரு ளுகவென வடங்கியஞ் சலிசெய்பச் [றும்
செஞ்சொன் முத்தமி ழுணர்ந்தவ னின்னிடைத் திருப்பியான் வருங்கா
விஞ்சி நீண்டிடா தித்தகை யிருக்கமே யில்லையேல் வெகுண்டுன்னை
யெஞ்ச வேசபித் திடுவனென் றலும்வரை யிருந்ததத் தகையின்றும். ()

தவத்தோர் பெருமை அரசர் பெருமையிலும் மேலென்று கூறல்.

புல்லு மாநிதி வரம்பற வீட்டிவெம் புலவுவேற் படைதாங்கி
வெல்லும் வேந்தராய் வெண்குடை கவித்தெழு மேதினி புரந்தென்னுங்
கல்லு மெய்குழைந் தூசைப்படி நிலத்தினிற் கரந்துபோ யதுவென்றூற்
சொல்லு மாதவப் பெருமையித் தகைத்தெனத் தொகுத்துரைத் திடற்பாற்றே.()

அகத்தியமுனிவர் தென்றிசை நோக்கிச் சென்று
கமலமாநகரம் அடைந்து அங்கு சிவபிரானை அருச்சித்தல்.

முனிவ னின்னணம் புரிந்தபின் றென்றிசை முகந்தனில் விரைத்தேகிக்
கனியுஞ் சிந்தைய ஞகிய காட்சியன் கமலமா நகரெய்திப்
பனிநி லாவணி புற்றிடங் கொண்டருள் பரமனை யடிபோற்றி
யினிய நல்லருட் குறிதன திரும்பெய ரிசைத்துவே றருச்சித்தான். (கசு)

இவ்வாறு அகத்தியர் கமலாலயத்தில் இருக்கும் காலத்தில்
தேவர்களுடன் காலகேயரென்னும் அசுரர்கள் யுத்தஞ் செய்தல்.

அறந்த ருப்புகழ்க் கமலமா நகரினின் முனிவனின் ணமாற்றிச்
சிறந்தி ருந்திடுங் காலையில் வானவர் தம்மொடுஞ் செருச்செய்ப
மறந்த ருந்திறற் காலகே யப்பெய ரசுரர்கள் வலந்தீண்டிப்
பறந்த லேச்சமர் புரிந்தனர் புரிந்திடும் பான்மையைப் பகர்கின்றேன் ()

வேறு.

அசுரர் தலைவனை காலப்பிரபு என்பவன் போர்செய்ய
அலங்கரித்துச் செல்லுதலை வர்ணித்தல்.

அசுரர்க ளிறைவன் காலப் பிரபுவென் றறையும் பேரான்
பசியபொன் னுடைசெய்ய மருங்கினிற் படரச் சுற்றி
யொசிதரு கொய்பஞ் சாத்திக் கொடுக்கிரு புறமுமொட்டி
வசியுறு வயிர வொள்வாட் கச்சொடும் வதிப வீக்கி. (கஅ)

ஆதவர் மழுங்குஞ் செம்பொ னவிர்மணி மகுடஞ் சூடி
மேதகு வயிரப் பட்ட நெற்றியின் மிளிர வீக்கி
காதினிற் சிவப்புச் சிந்தூங் கதிர்மணிக் குழைகள் சாத்திச்
சோதிநித் திலத்தின் கண்ட சரங்களு [ந்துவளச் சேர்த்தி.] (ககூ)

மணியெழு வனைய தோளில் வச்சிர வலயம் பூட்டி
யணிகெழு கடகஞ் சேர்த்தி யலரிளம் பருதி மார்பிற்
பணிபல விழைத்த செவ்விப் படரொளிப் பதக்கஞ் சாத்திப்
பிணைதலிட் டிணக்குஞ் சன்ன வீரமும் பிறங்கச் சூழ்ந்து. (உ0)

ஓட்டற வருக்குஞ் செம்பொ னுதரபந் தனமும் வீக்கிப்
பூட்டிய கோதை நீண்ட விரலினிற் புதையச் சுற்றி
வீட்டியா ருயிர்சிந் தம்புத் தூணியும் வெந்திற் சேர்த்துக்
கோட்டிய வரிவில் லோடும் படைபல குணித்துத் தாங்கி. (உக)

அசுரர்தலைவன் நாற்படைகளையும் அழைத்துச் செல்லுதல்.

சில்லியந் தடந்தேர் கோடி நிரைநிரை திரண்டு சூழ
மல்லலங் கரிநல் யானை யளவற மருங்கு வாய்ப்பக்
கல்லற மிதிக்கு மெண்ணில் கடும்பரித் தொகுதி சுற்றப்
பல்லியந் துவைக்கும் வீரர் படுகடற் பரப்பிற் றோன்ற. (உஉ)

கருமலை நடந்த வென்னக் கண்களாற் பொறிகள் சிந்த
வெரியழற் சிதற வெள்ளை யெயிறொடு மெயிறு தாக்க
விரிசுடர் வடிவாட் குந்தங் கப்பணம் வேல்க ளேந்திப்
பொருபுயம் புடைத்து வீரர் புனரியோ ரேழிற் போத. (உங)

வெய்யவ னுலகந் தொட்டு வீசிய கொடிக ளோங்குங்
கொய்யுளை மடங்கல் யானை குதிரைபூ தங்கள் பூண்ட
வையமேற் கொண்டு தூளி மறிகடற் பரவை தூர்க்கக்
கையமை யாத சேனை கவித்தெழு விரைவின் வந்தான். (உச)

இந்திரன் யுத்த சன்னத்தனாதல்.

விண்ணவர்க் கரசன் செய்ய விரைநறுந் தருக்க ளீன்ற
கண்ணிசூழ் தெய்வச் செம்பொற் கதிர்மணி மவுலி வேய்ந்தே
யண்ணலங் குழைகள் பூட்டி யவிர்மணி வலையஞ் சேர்த்தி
யெண்ணரும் பணிகள் யாவும் வகைவகை பெடுத்துப் பூண்டான்.

துந்துமி முழங்க மற்றைப் பல்லியந் துவைத்துச் சூழ்
வந்தரத் திமையோர் தத்த மடற்படை யேந்திப் போதச்
சந்திர வமுதந் தோய்த்துத் ததைந்துவெண் சுவரி வீச
மைந்தறும் படைக ளோடும் வச்சிரம் வயங்கத் தாங்கி. (உசு)

இருவர் படைகளும் போர்செய்யத் தொடங்குதல்.

முடிநெடுங் கவிகைத் தெய்வ முழுமதி நிலவு காலுங்
கொடிநெடுந் திண்டே ரேறிக் குலவி விண்ணும்
படிகளு நாகர் வாழும் பாதல நகரு மொன்று
யிடிபட முழங்கி யார்த்தே பெதிர்ந்தன விருவர் சேனை. (உஎ)

வேறு.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடக்கும் போரை வர்ணித்தல்.

மைம்மு கிற்பொழியு மாரியினில் வாளி யிமையோர்
கைம்ம டக்கலற வெய்தனர் கனைத்த குரல்விட்
டம்ம டற்பசுழி யற்றிட வடற் சிலிமுகம்
வெம்மை யிற்செல விடுத்தன ரரக்கர் விறலோர். (உஅ)

காலு றக்கனல் கடுஞ்சின முருத்த தெனவே
சூலம் விட்டனர் சுறுக்கொள நெருக்கி யிமையோர்
மேலெ திர்த்தபடை துண்டப்விழ வன்னவை விடுத்
தால மொத்தெழு மரக்கர்க ளறுத்தனர் களால். (உக)

மிக்க வெங்கதிர் சுழன்றுவரு வெம்மை யெனவே
சக்க ரம்பல வெறிந்தனர் தழக்கி யிமையோர்
தொக்க வெம்படை துணிந்துபிறை பென்ன விழவே
அக்க ணங்கொள்படை விட்டன ரரக்க ரடலோர். (ஙo)

பைத்த லோடுமடல் வானவர் பரந்து படையான்
மத்த மாகரி வயப்புரவி கொன்று நறவார்
மத்த மாலிநெடு வேலசுர ரென்ற கொடியோர்
சுத்த வீரர்கள் முடித்தலை துமித்த னர்களால். (ஙக)

ஈறு கொண்டலி னீடிக்குர லெழுப்பி நிருதர்
சீறி வெங்கணை சொரிந்துபொரு தேவ ருடலங்
கூறு கொண்டனர் முடித்தலை குறைத்தனர் குனித்
தூறு செங்குருதி யாறென வுவட்டெழுகு மால். (ஙஉ)

வேல றுத்தனர்கொல் வில்லினை யறுத்தனர் விறற்
சூல றுத்தனர் சுடர்க்கணை யறுத்தனர் துணைக்
கால றுத்தனர் கரத்தினை யறுத்தனர் கலா
மால றுத்ததிறல் வானவரை வஞ்ச நிருதர். (ஙங)

அசுரசேனையின் போருக்காற்றாது தேவர்படைகள் புறங்கொடுத்தல்.

மண்டி யேறின ரரக்கர்கை மடக்கி வயிரத்
தண்டு சுற்றின ரடித்தனர் தகர்ந்து தலையுட்
கொண்ட மூளைசித றச்செறி கொழுங் குருதிவாய்
விண்டு கக்கினர்க ளோடினர்கள் விண்ணவர் களே. (ஙச)

தேவர்மேலும் தன் படைகளை நிறுத்தி இந்திரன் போர்செய்தல்.

நிற்க நிற்கவென விந்திர னிறுத்தி யவரை
விற்கை கொண்டனன் விடுத்தன னடுக்க விவர்தம்
புற்கை கொண்டிடுவர் போவரினி நீச ரெனவே
மற்கை வண்[புய மடித்தனர்கள்] வானவர் களே. (ஙஞ)

விண்ண வர்க்கரச னித்தகை புரிந்திட வெகுண்
டெண்ணும் விற்கர மெடுத்தன னெதிர்க்க விரத
மண்ணு டுக்குற நடத்தினன் மடித்தன னிதழ்க்
கண்ண ழற்பொறி கனன்றுசொரி கால வசுரன். (ஙசு)

இந்திரனும் காலப்பிரபுவென்னும் அசுரர்தலைவனும் போர்புரிதல்.

மைந்த றுங்கொடு வரிச்சிலை குழைத்த திருவரு
முந்தை நாணிழலி முழக்கினர் பலைக் குவடுக
விந்தி ரன்பகழி யெய்தன னிலக்க மறவே
யந்த வெங்கணை யறுத்தன னரக்கர் தலைவன். (ஙள)

உள்ள நெக்குற வுவப்பினெடு பூசல் கருதி
வெள்ள வாரணன் விரிஞ்சன்முத லோர்கள் கணைக
ளள்ளி யாருயிர் குடிக்கவிட வன்னவை களாற்
கள்ள வஞ்சனு மடர்த்தமர் கடிந்தன னரோ. (ஙஅ)

ஆயி ரங்கண னடற்சிலை குனித்து விடுமோர்
மாய வெங்கணை யிலக்கமற [வந்து விசைவிற்]
பேய்கள் வெங்கணைமொர் கோடிகள் பிறந்து துருவி
மேய தானவர்கள் சேனையை விழுங்கி வருமால். (ஙக)

வஞ்ச நீசன்வெல் வரிச்சிலை குழைத்து விடுமோர்
விஞ்சை வாளியள வற்றநெடு வெங்க ணைகளா
யஞ்ச வோடவ ளளித்தகண மாடு மலைகை
தஞ்ச வானவர்க ளாருயிர்கள் சூறை யிடுமால். (சo)

இருவர் தேருமவர் சேனையினை மாறி யிகலிக்
குருதி யோடிய குடற்றசை சூழம்பி யொழுகக்
கருதி மண்ணிடை யரைக்குமொரு கைங்கொடி யிலே
யிய சாரிவரு மண்டகட கத்தள வுமே. (சக)

இந்திரன் காலப்பிரபுவின்மீது வச்சிரப்படையை எடுத்தல்.

கட்டி டிக்கொடி முழங்கவொளி காலு மிரத
முட்டி நீசனொரு தேரணி முரிந்து குலைய
விட்டு விண்ணவர் பாவவரு வேள்வி முதல்வன்
மட்டி லாதசுடர் வச்சிர மெடுத்தன னரோ. (சஉ)

அதனைக்கண்ட காலப்பிரபு இந்திரன்மேல் வலிய முசலத்தை யெறிதல்.

ஈது கண்டன னெயிற்றினை கெரித் தெவர்களுஞ்
சேதி யாதவொரு தேரின்மிசை யேறி நிருதன்
கோத டர்த்தவலி கொண்டுகுல வங்குலிச வீசக்
காதி யெஃகெடு கருந்தடிகொ டெற்றின னரோ. (சங)

அந்த முசலாயுதத்தால் அடிபட்ட இந்திரன் மூர்ச்சித்து வீழ,
தேவர்கள் பயந்தோடுதல்.

வன்றி றற்றடிகொ டெற்றல்கன மார்பு புதைய
வென்றி யிந்திரன் வெயிர்த்துயிர் களைத்து விழவு
நின்ற தேவதனை மாதலி நெடுங் ககனமீ
தொன்ற வேகடவ வோடினர்கள் வானவர் களே. (சச)

இந்திரன் தோற்றதைக் கண்டு, விஷ்ணுமூர்த்தி வந்து,
அசுரர்தலைவனுடன் பொருதல்.

தேவ ரோடியது கண்டுதிரை யாழி துயிலுங்
காவ லெங்தைகரு டன்பிடரி னேறி விசையின்
மேவ வோடியகல் விண்ணவரும் வந்து மிடையக்
கூவி நீசனெ டெதிர்த்தனன் பொரக்குல வியே. (சடு)

வேறு.

விஷ்ணுமூர்த்தியின் போர்ச்சிறப்பு.

சேலடர் திரைதுயிலுஞ் சிலைமுகில் விடுகருடன்
காலடி படவிழுவார் கடுவளி சுழல்சிறகர்
மேலடி படவிழுவார் கவர்தர விரிதருமோர்
வாலடி படவிழுவார் வருமட னிருதர்களே. (சசு)

கடிகமழ் துளவணியுங் கருமுகில் காகமலத்
தடிபட வதிர்முரசந் தகர்வன பலவுபருங்
கொடியொடு குடைசிதறிக் குழைவன பலவதனு
லிடிபட மடபடெனு விறுவன சிலவிரதம். (சள)

நீடுறு கறையடியா னெடுகிய கலிகெரிபட்
டோடுவ பலபரிக ளவையடி முடியுறவே
கோடுக ளுகவலறிக் குழைவன பலகரிகள்
பாடுற நிலமிசையே படிவன பலபடையே. (சஅ)

மலர்மகள் புணர்கொழுநன் வரிசிலை தொடுகணைகள்
பலபல கரியுருளப் பரிபல பலவுருளக்
கொலைபுரி கொடுநிருதர் குறையுட லொடுமுருளச்
சிலசில முடியுருளத் திரிவன சிலசிலவே. (சகூ)

கொண்டலை நிகர்குழகன் குளிர்மல ரிதழ்படுமோர்
தெண்டிரை யமுதமெனத் திகழுறும் வளையொலியா
லண்டமு முடைபடவே யடுசமர் மூடிவெனவே
மண்டைகள் வெடிபடவே மடிவர்க ணிருதர்களே. (ஙo)

கொழிதிரை நுரைசிதறிக் குருதிசெ நதியினிமிர்ந்
தொழுகெட நரிகலிகெட் டுருள்பட வொருதிரைபோ
யிழுதொடு குடர்பருகி யிடையிடை நெரிபடவே
கழுகுகள் காணமிடக் கணநிரை கதறிடுமால். (ஙக)

மறலியு மருளுறவே மாயவ னிதுபுரியத்
திறலுறு மசுரர்கொடுந் திசைதிசை செலவெவணு
மறைகட லெனவொலிசெய் தலவற வணியணியாய்
விறனனி கெழுமினரோ. [விண்ணவர் குழுமினரோ.] (ஙஉ)

வேறு.

விஷ்ணுவின் போர்த்திறத்தைக் கண்டு அசுரர்தலைவன் கோபித்து,
அவருடன் பொருதற்கு எதிரே செல்லுதல்.

நன்று நன்றிது விளைத்தன் மாயனென
நக்கு வெஞ்சின முருத்திதிழ்
தின்று தின்றிரு புயங்கள் கொட்டியடு
திண்டி றற்சிலை திருத்தியே
வென்றி தன்றிய சிலைக்கை மாயனெதிர்
விடுக தேதென நடத்தினு
னின்று நின்று பொரவருதி யென்றுகரு
நெடிய மாயனை யழைத்தனன். (ஙங)

விஷ்ணுமூர்த்தி அசுரர்தலைவன்மீது சக்கரப்படையைச் செலுத்தல்.

அசுர னின்னண முரைக்க வூழியி
னழற்பி ழம்புவிழி சிந்தவே
பகிய குல்லைபுனை மாயன் வேகமொடு
பறவை யூர்திமுன் விடுத்தனன்
பிசித முண்ணுமொரு சக்கரங் கொடுடல்
பிளவு செய்திட வெறிந்தனன்
வீசையி னெடிவரு சக்க ரத்தவற
வசுரன் வெங்கணை விடுத்தனன். (நுச)

அச் சக்கரப்படையை அசுரதலைவன் கணைகளாற் றடுத்து,
விஷ்ணுமூர்த்தியின்மீது பலகணைகளை விடுதல்.

கடனி றத்தவ னிறத்தி லெண்ணிய
கணைக ளுடுற னிறுத்தினன்
மடன்ம லர்க்கமல மங்கை கொண்கனுடல்
வாடி யுள்ளமு மயங்கினு
னடல்வ டிக்கணையின் மாரி மூவுலகு
மடைய வீசமொடு தூவினு
னுடல் விதிர்ப்புற வெருண்டு விண்ணவர்க
ளோடி யெங்கணு மொளித்தனர். (நுந)

அசுரர்தலைவன் விட்ட கணைகளால் விஷ்ணுமூர்த்தி மயங்குதலும்,
அவன்மீது சிவபிரான் போருக்கெழுதல்.

செங்கண் மாயவன் மயங்கி நொந்ததகை
திருவுளந் தெரிய வெண்ணியே
யங்க ணைந்குதிசை யும்ப டர்ந்தெழு
வளப்பரும் பெரிய பூதர்கள்
சங்கு பேரிகை மிடக்கை துந்துமி
தடாரி சல்லிய முழங்கவே
துங்க மால்விடை யுகைத்து மிக்கதொரு
சோதி நாயக னெதிர்ந்தனன். (நுசு)

வேறு.

சிவபிரான் அசுரர்தலைவனுடன் போருக்கெழுதலைக் கண்டு,
இன்றே அசுரர்கள் அழிந்தாரென்று தேவர்கள் களிப்புறுதல்.

பாலா ழிக்கும் பைம்பொ னகர்க்கும் பகையுண்டோ
மேலாய் நிற்கு மெந்தை தவிர்க்கும் வேறுண்டோ
வாலா லத்தை யொத்த வரக்க னழிவின்றே
யேலா வச்ச மென்று களித்தா ரிமையோர்கள். (நுள)

சிவபிரான் அசுரதலைவன்மீது சூலப்படையைவிடுத்து அவனைக் கொல்லுதல்.

கண்டான் வஞ்ச னிற்பதை யற்பங் கவின்மூரல்
கொண்டா னம்பொன் வெற்பொரு செங்கைக் கொடுநின்மீரன்
றண்டா லிக்கு நிருதர் குலத்துத் தலைவானு
னுண்டா லிக்கச் சூல மெறிந்தே யுயிர்கொன்றான். (நுஅ)

தலைவனிறந்தபின் அசுரர்குழாத்தைக் கணைகளாற் சிவபிரான் கொல்லுதலும்,
அசுரர்கள் கடலினுட் சென்று மறைந்திருத்தல்.

அந்த வரக்கன் பட்ட வதற்பி னரன்வாளி
சிந்த வெதிர்க்குந் தானவ செல்லாஞ் சிதைவுற்றார்
பிந்தி யொளித்துப் போன வரக்கர் [பிற்றந்தே]
முந்து திரைப்போர் வாரிதி யூடே மூழ்குற்றார். (நுகூ)

இந்த வெற்றியைக் கண்டு, தேவர்கள் சிவபிரானைத் துதித்தல்.

கன்னி யிடத்தான் செங்கம லக்கைச் சூலத்தா
லென்ன தவத்தா லிவனுயிர் விட்டா னெனநின்றார்
சென்னி யிடத்துக் கைகண் முகிழ்த்தார் சிவன்மூழ்க
மன்னு தருப்பைம் பூமழை பெய்தார் வானோர்கள். (கூ0)

இந்திரனும், விஷ்ணுவும் சிவபிரானிடம் விடைபெற்றுத் தத்தம்
பதிகளுக்கேகுதலும், சிவபிரான் கயிலையையடைதலும்.

வேறு.

வச்சிரக் காத்தி னுனு மறிதிரை மணிச்செஞ் சூட்டு
நச்சர வதனிற் றுஞ்சு நறுந்துழாய்ப் படலை பூத்த
பச்சைமே னியனு முள்ளம் பருவர லொழிந்து பைம்பொன்
கைச்சுலா முலையாள் பங்கன் கழலிணை துதித்தா ரன்றே. (கூக)

வெள்ளைமால் விடையோ னன்னோர் விளம்பிய துதியாற் செய்ய
வுள்ளநெக் குருக வார்வ முவந்தினி தனுப்ப வன்னோ
னெள்ளருங் கனக நாடு மிமிழ்திரை யிடமுஞ் சேர்ந்தார்
வள்ளலைச் சூல மேந்தும் வரதனுங் கயிலை சேர்ந்தான். (கூஉ)

சிலகாலஞ்சென்றபின் கடலில் மறைந்திருந்த அசுரர் வெளிப்பட்டு
வேள்விசெய்வார்க் கிடையூறுபுரிதல்.

இத்தகை விளைந்து நண்ணுஞ் சிலபக லிரிந்த பின்னர்
தத்துதெண் டிரையி னூடு கரந்தன ரவர்க ளெல்லா
மைத்தகு மிருளில் வந்து வளைந்துயிர்க் கிடுக்க ணுற்ற
வித்தக [மறையோர்] செய்யும் வேள்வியை யழிப்ப தானார். (கூங)

அதனல், வேள்விசெய்வாரின்றி அவியுணவு கிடையாது
வருந்திய தேவர்கள் அவ்வசுரர்களைக் கொல்ல யோசனைசெய்தல்.

அந்தணர் வேள்வி யாற்று மவியமு தழிந்த வாற்றற்
பைந்தரு நகரத் துள்ளோர் படர்வலி குறைந்தா ரன்னே
ருந்துதெண் டிரையி னுள்ளே யொளித்திடு மசுர ராவி
சிந்திடிற் பிழைப்போ மென்னுச் சிந்தையி னுணர்ந்தா ரன்றே. ()

அகத்தியமுனிவரைக்கொண்டு கடலை வற்றச்செய்தால்
அவ்வசுரரைக் கொல்லுதல் இயலுமெனல்.

தொடுகடற் சுலவு தெண்ணீர் சுவற்றியே யசுரர் தம்மை
யடுதொழில் விளக்க வேண்டு மன்னது புரிய வோங்குந்
தடவரை யடக்குங் கும்பத் தமிழ்முனி யன்றி மற்றைப்
படியினில் விசும்பி லுண்டோ பார்க்கிலத் தகைய நீரார். (கூடு)

தேவர்கள் அகத்தியமுனிவரையடைந்து, தீமைபுரியும் அசுரர்களைக்
கொல்லுதற்காகச் சமுத்திரத்தை வற்றச்செய்யவேண்டுமென்று கூறுதல்.

எனமனத் தெண்ணித் தெய்வக் குறுமுனி யிருக்கு நீலக்
கணைவரிச் சுரும்பர்ச் சோலைக் கமலைமா நகர நண்ணி
மனமுறும் விடயம் வென்ற வரமுனி யிருக்கை யெய்த
வினையவன் றடக்கை கூப்பி யாசிக ளுரைத்துச் சொல்வான். (கூக)

[அடிகணீ ரிவண்வந் தெய்து மதிசய] மறைதி ரென்னைக்
கொடியகா லேயர் தம்மிற் பிழைத்திடுங் கொலைசெய் [தீயோர்
வடியு]வெண் டிரை[நீராழி மறைக்]திருட் போது மூண்டிப்
படியினை யலைத்து வேதம் பகர்மக மழிக்கு மாற்றல். (கூஎ)

புண்ணிய வவியூ னின்றிப் பொருவலி குறைந்து நின்பா
ணண்ணினேம் புனரித் தெண்ணீர் நான்மறை முனிவ நீசென்
றுண்ணிலாங் கவர்க ளாவி யொழிப்பது புரிவோ மென்னு
வண்ணல்வா னவர்கள் கூற வகத்திய னறைவ தானுன். (கூஅ)

அதைக்கேட்ட அகத்தியமுனிவர் சிவபிரானிடம் இதற்கேற்ற வலிமையைப்
பெற்றுவருவேனென்று கூறுதல்.

நிருதர்க ளாவி மேய்ந்து நிணப்புனல் குடிக்குஞ் சூலக்
குருமதிச் சடையி னுன்பொற் குரைகழல் வழுத்தி யேத்தி
விரிகடற் றெண்ணீர் மாந்தும் வித்தையை யடைந்து பின்னர்ப்
பருகுவன் பருவ மொன்று பொறுக்கெனப் பகர்ந்தா னன்றே. ()

அகத்தியமுனிவர் கமலாலயத்தில் சிவபிரானை யர்ச்சித்தல்.

நற்றவ னுரைக்கத் தேவர் நன்றென வாசி கூறிப்
பொற்பதி யடைந்தார் தண்ணம் பொதும்பர்சூழ் கமலை தன்னிற்
சிற்பர மயமாம் பீடந் திசையிரு நான்கு நாபித்
தர்ச்சனை புரிந்தான் றெய்வ வருந்தமிழ் முனிவ னன்றே. (எ0)

ஒருபருவகாலஞ் சென்றபின் சிவபிரான் வெளிப்பட்டு,
அகத்தியமுனிவருக்குக் கடலை வற்றச்செய்ய வலிமையுண்டாகுமாறு
அருள்புரிதல்.

உணர்ந்திடும் பருவ மொன்று [கட]ந்தபி னுமைபொற் கொங்கை
மணந்தவன் வெளிப்பட் டன்ன வித்தையை வழங்கி ஞனற்
குணந்திகழ் முனிவ னுள்ளங் கொழுங்களி திளைத்தான் பின்னர்க்
கணங்கொள விமையோர் கூடிக் கமலைமா நகரஞ் சார்ந்தே. (எக)

தம்மையழைத்த தேவர்களுடன் அகத்தியமுனிவர் சென்று
கடல்நீர் முழுவதையும் பருகி வற்றச்செய்தலும், அசுரர்கள் வெளிப்படுதல்.

முனிவனீ யளக்க ருண்பான் வருகென மொழிய ஞானப்
புனிதமா தவத்தோன் சென்று புகழ்ந்துவின் னோர்க ளாடக்
குனிதிரைப் புணரி நீரார் குடங்கையா சமன மாகக்
கனியிதழ் திறந்து கொண்டான் கலங்கின வசுர ரீட்டம். (எஉ)

அவ்வசுரர்களைத் தேவர்கள் கொன்று முனிவரைப் புகழ்ந்து கூறுதல்.

கண்ணளி முனிவ னுனைத் தடங்கடல் குடித்த பின்னர்
விண்ணவ ரசுரர் தம்மை வெஞ்சம மூருக்கி வீட்டிப்
பண்ணுறு மறையால் வாழ்த்திப் பரிந்துமா தவனை நோக்கி
யெண்ணரும் பெருமை செய்தா யுனக்கினை யெவர்க ளுள்ளார். ()

தேவர்கள் யாது வரம் வேண்டுமென்று கேட்க, அகத்தியமுனிவர்
யான் பூசித்த பீடங்களை அருச்சிப்போர்க்கும்
தெரிசிப்போர்க்கும் அவர் நினைத்த காரியங்கள் ஈடேறி,
முத்தியும் கிடைக்கவேண்டுமெனல்.

எனத்தனி முகமன் கூறி யெவ்வரம் வேண்டு மென்ன
மனத்திருங் கருணை யோடும் வந்தியான் வழுத்தும் பீட
மனைத்தையு மருச்சித் தோர்க டெரிசன மணுகிச் செய்வோர்
நினைத்திடுங் கரும முத்தி நிலைபெற வேண்டு மென்றான். (எச)

தேவர்கள் அவ் வரத்தைக் கொடுத்து, அப் பீடத்துக்குச்
சித்திரபீடமெனப் பெயருங் கொடுத்துத் தம் இருப்பிடஞ் சேர்தல்.

அருந்தவ னீது கூற வவ்வரம் வழங்கி விண்ணோர்
தெரிந்தொரு பீடத் துக்குச் சித்திர பீட மென்னப்
பரிந்துபே ருரைத்துச் செப்பொற் பைந்தரு நகரஞ் சார்ந்தார்
பொருந்துமத் தலத்தின் றன்மை பெயர்கூள புகலற் பாலார். ()

இவ்வதன்றியும் கமலாலயத்திலுள்ள தேவதீர்த்தத்தைப்பற்றிய
கதையும் ஒன்றிருக்கின்றதெனச் சூதமுனிவர் கூறுதல்.

வேறு.

அறைந்த விக்கதை யன்றியு மப்பதி பொருந்துஞ்
சிறந்த தேவதீர்த் தக்கதை யொன்றுசெப் பிடுவே
னிறைந்த வன்பொடு முனிவரீர் நீவிர்கேட் கெனவே
துறந்த சிந்தையன் சூதமா முனிவரன் சொல்லும். (எசு)

வசிட்ட புத்திரர்களின் சாபத்தினால் புலையுருவடைந்த திரிசங்கு என்னும்
அரசன் கௌசிகமுனிவரை யடைதல்.

புரசை மால்வரை யிருநிதி திறைகொடு பொரும்போ
ரரசு றங்கிட முரசுறங் காமனின் றதிரும்
வரை சுருங்கிட வுயர்நெடுங் கோபுர வாயில்
விரைசெய் தார்த்திரி சங்கெனும் வென்றிவேல் வேந்தன். (எஎ)

[ஏதில் சா] பமேற் கொண்டுவெம் புலையுரு வெடுத்துத்
தீது தீர்த்துட லோடும்வா னகரிடைச் செல்லக்
கோதி லாமுனி கோசிக[ற் குறுகு]மென் றெண்ணி
மாத வன்னுறை திருமறைக் காட்டினில் வந்தான். (எஅ)

கௌசிகமுனிவரிடம் சென்ற திரிசங்கு, அபயமென்றுரைத்து
தான் சாபமடைந்த வரலாற்றைக் கூறுதல்.

அரிய மாதவ னிருக்கையின் பாங்கர்சென் றணுகி
யுரிய மெய்த்தவ நின்னடிக் கபயமென் றுரைத்து
விரிம லர்க்கர முச்சிமேன் முகிழ்த்தனன் வீழ்ந்தான்
கருதி யின்னணங் தெரித்துரை கழறுவ தானான். (எகூ)

மானுடதேகத்தோடு சுவர்க்கலோக மடையவேண்டுமெனத்
தனது குருவாகிய வசிட்டரை வேண்டியதையும், அவர் தமது
புத்திரரிடம் போகுமாறு கூறியதையும் உரைத்தல்.

ஆக்கை யோடுநற் றுறக்கவீ டடைவது கருதி
வீக்க முற்றிடு மறிவினன் வசிட்ட னே வினவ
நீக்க கெஞ்சினி னிணங்குதன் புத்திர ரிடத்தில்
வாக்கி சைத்தியென் றென்முக நோக்கினன் வலித்தான். (அ0)

வசிட்டபுத்திரர்கள் அவ்விதம் செய்ய முடியாதென மறுத்துக் கூற,
சீடர்கள் விரும்பியதை எய்துவிப்பதன்றே குரவர் கடனெனத்
தான் கூறியதை உரைத்தல்.

குரவன் வாசக மேற்கொடு குமரர்தம் மிருக்கை
மருவி யிவ்வுரை வழங்கலு மன்னவர் மறுத்தார்
பெருகு நன்னெறிச் சீடர்கள் விழைந்திடும் பெற்றி
யருள்வ தேயிருங் குரவருக் கடைவென வறைந்தேதன். (அக)

இதனால் கோபமுற்ற வசிட்டபுத்திரர்கள் சாபமிட்டதைக் கூறுதல்.

மொழியு மிவ்வுரை கேட்ட பின் முனிந்துவெஞ் சாப
மிழிகு லத்தவப் புலையனாய்ப் போவென விசைத்தார்
பழிகொள் சாபம்வந் தடைந்திடப் பழையமே தகைமை
யழிவு றுந்திரி சங்கு[யா னெனப்]பெய ரறைந்த[ான்.] (அஉ)

இச் சாபந் தவிர்ந்து, யான் உடலோடு சுவர்க்கமடையும்படி
செய்யவேண்டுமென்று கௌசிகரை வேண்டுதல்.

பெருகு மாதவ வசிட்டனீன் றருளினோர் பேசு
மரிய சாபமுந் தவிர்ந்தியா னுக்கையோ டுலகுக்குந்
தருவ ளந்தரு துறக்கமேற் சார்ந்திடுந் தகைமை
புரிதி யென்றனன் கோசிக னீதுரை புகல்வான். (அங)

கௌசிகர் திரிசங்குவுக்கு அபயங்கொடுத்து, பிரமதேவரிடம் சென்று,
திரிசங்குவின் பொருட்டுத் தான் வேள்விசெய்யப் போவதாகக்
கூறுதல்.

அஞ்சல் பார்த்திப வவ்வண்ண மளிப்பனென் றறைந்தான்
செஞ்சொ னன்மறைத் திசைமுக னவையினிற் சென்றே
விஞ்சு மெய்ப்புகழ் கிளர்திரி சங்கெனும் வேந்தன்
றஞ்ச மென்றெனை யடைந்தன னன்னவன் றனக்கே. (அச)

அவ் வேள்வியில் அவிப்பாகம் பெற வரும்படி பிரமதேவரைக் கேட்டல்.

தொக்க வாக்கையி னெடுநற் றுறக்கமெய் திடவே
மிக்க வேள்வியா னியற்றுவ லவணுற மேவித்
தக்க வானவிப் பாகநீ வாங்கெனச் சாற்ற
நக்கு நான்முக னினையன வாசக நவிலும். (அடு)

பிரமதேவர் நீசனுக்காகச் செய்யும் வேள்வியில் அவிப்பாகம் பெற
வரமுடியாதெனக் கூறி, அவிப்பாகத்தை அக்கினியிற்
சொரியும்படி கூறுதல்.

நீச னுக்குமுன் டோமறை நெறிபயில் வேள்வி
மாசு பற்றிய வாக்கையை நீக்கியே மறைதே
ராசின் மாமகம் புரிந்திடில் வருவல் மற்றன்றிப்
பேசும் வேள்விநீ புரிந்தியேற் பெருகுசெந் தழலில். (அசு)

அதனைக் கேட்ட கௌசிகர் கோபித்து, யான் விரும்பியபடியே
வேள்வி செய்குவேனென்று கூறுதல்.

அவி யனைத்தையு மளித்தியென் றறைந்தன னதனைச்
செவி மடித்தனன் கோசிகன் வெடிபடச் சிரித்துக்
கவி செழுந்தரு நகரினி னுடலொடுங் கலக்கப்
புவியி னன்மகம் புரிகுவன் புரவலற் கென்றே. (அள)

யானி ழைத்திடுந் தவவலி யெளிதல வெனவே
யான னங்குறு வோர்வெழ விழிசிவப் பாக
நான்மு கத்தவ னவையினி னவின்றன னடைந்தான்
மீன வெண்டிரைத் திருமறைக் காட்டினின் மேவி. (அஅ)

கௌசிகர் முனிவர்களை யழைத்து, திரிசங்குவின்பொருட்டு வேதாரணியத்தில்
வேள்வி செய்து, அவியுணவை அக்கினியில் ஆகுதிசெய்தல்.

இருந்த வம்புரி முனிவரை வெவரையு மழைத்தே
பொருந்தும் வேந்தனுக் கினிதுறத் தீக்கையும் புரிந்து
திருந்து சத்திர மாமகம் புரிந்தனன் றேவ
ரருந்த வந்தில ரவியினை யழலிடத் தளித்தான். (அசு)

வேள்வி முற்றிய பின் அரசன் கௌசிகரைப் புகழ்ந்து கூறுதல்.

தரும மாமக முடித்தவ பிருதகா னமும்போர்
கருது காவலன் புரிந்திட வருளினன் களித்து
விரித ருஞ்சடை முனிவனை நோக்கியே வேந்த
னரிய வேள்வியின் பலத்தினை நின்பொருட் டடைந்தேன். (கூ0)

திரிசங்கு தான் விரும்பியபடி உடலோடு சுவர்க்கமடைய முடியாவிடில்
உயிர்துறப்பேனென்று கூறுதல்.

மனம் விழைந்திடு காரிய முடித்திலன் வசிட்டன்
றனையர் காண்குறி னகைப்பர்யான் றரணிகாத் தளிபே
னினைவ ருந்தவத் தாலுயிர் நீக்குவ லெனலு
முனிவன் வெள்கின னரசனை நோக்கினன் மொழிவான். (கூக)

கௌசிகர் அவ்வாறே புகச்செய்வேனென்று கூறி,
சிவபிரானை நினைத்துத் துதித்தல்.

நின்னை யிவ்வுட லோடும்யா னிழனறுங் கருவின்
பொன்ன கர்ப்புக வருள்வனென் றபயமும் புரிந்தான்
பின்ன ரண்டங்கள் படைத்திடப் பிஞ்ஞகற் பரவிப்
பன்னு நான்மறை துதித்தன னெதிர்ந்தனன் பரமன். (கூஉ)

சிவபிரான் வெளிப்பட்டு, யாது வரம் வேண்டும் என்று வினவ,
கௌசிகர் புவனங்களெல்லாம் படைக்கும்படி தனக்கு
அருள்புரியவேண்டுமெனக் கேட்க, சிவபிரான்
அவ்வாறு கொடுத்து மறைதல்.

எவ னினைந்தனை யென்றலு மெம்பிரா னெனக்குத்
தவ லறும்படி புகழ்த்திரி சங்குவின் பொருட்டுப்
புவனம் யாவையும் படைப்பதற் கருள்கெனப் புகலச்
சிவ னதுபுரிந் தருளியே மறைந்தனன் றிரும்பி. (கூந)

பின்பு கௌசிகமுனிவர் உலகமெல்லாவற்றையும் சிருட்டிசெய்த
இந்திரர் இருவரைப் படைக்கவெண்ணுதலும்,
பிரமன் இந்திரன் முதலியோர் கௌசிகரிடம் வருதல்.

எந்தை யின்னண மறைந்தபின் முனிவர னெரியிற்
சிந்து வெஞ்சினந் தலைக்கொள வுலகெலாந் திருட்டித்
திந்தி ரப்பெய ரிருவகை படைத்திட வெண்ண
வந்து தோன்றினர் பிரமனிந் திரன்முதல் வானோர். (கூச)

பிரமதேவர் கௌசிகமுனிவரிடம் இதுவரை படைத்தவைகளை
ஏற்றுக்கொள்வோம்; இனிமேல் படைத்தற் றொழிலை
நிறுத்தல்வேண்டுமெனக் கேட்டல்.

பிரமன் மாதவ முனிவனை நோக்கியே பேசு
மிருவ கைப்பட நீபடைத் திடும்படைப் பெல்லா
மொருவ லன்றியே யுயர்ந்திடக் கடவவீங் கினிமேற்
றிருகி நீபுரி திருட்டியை நிறுத்தெனச் செப்ப. (கூடு)

கௌசிகமுனிவர் திரிசங்கு மானுட உடலோடு சுவர்க்கமடைந்தாலன்றி,
படைத்தற் றொழிலை நிறுத்த முடியாதென்றலும்
பிரமதேவர் அதற்கு இசைதல்.

தாங்கு மாக்கையி னொடுதிரி சங்கெனு மரச
னேங்கு பொன்னுல குறைந்திடி னிறுத்துவ லெனவே
யாங்கு மாதவ னுரைத்திட வருமறைக் கிழவன்
வீங்கு மன்பொடு நன்றென வேந்தனைக் கொடுபோய். (கூகூ)

பிரமதேவர் திரிசங்குவை அழைத்துச் சென்று கமலாலயத்திலுள்ள
தேவதீர்த்தத்தில் மூழ்கச்செய்து பின்பு தேவலோகத்துக்கு
அழைத்துச் சென்று விடுதலும், அரசனும் முனிவனும் மகிழ்ச்சியடைதல்.

தெய்வ மாநகர்க் கமலியிற் றேவதீர்த் தத்தி
னெய்தி யாட்டினன் பொன்னகர் நாப்பணி னிருத்தி
யையன் றன்னக ரடைந்தன னரசனுங் களித்தான்
வெய்ய கோபமுந் தணிந்தருண் முனிவனும் விபந்தான். (கூஎ)

சூதமுனிவரிடம் இக் கதையினைக் கேட்ட முனிவர்கள் மகிழ்தல்.

அண்ணன் மாதவச் சூதன்மா லடல்விடை யுகைக்கும்
பண்ண வன்கம லாலயப் பெருமையைப் பகர
நண்ணு மாமகந் தழைந்திடு நைமிசா ரணியத்
தெண்ண ருந்தவ முனிவ[ர் கேட்டினி தி]ருந்தார். (கூஅ)

கமலாலய மான்மியம் உரைத்த அத்தியாயம் முற்றும்.

பத்தொன்பதாவது
காஞ்சிபுரமான்மியம் உரைத்த அத்தியாயம்.

சூதமுனிவர் காஞ்சிபுரப் பெருமையைக் கூறத் தொடங்குதல்.

வச்சிர மிமைக்கு மிமையவெற் பளித்த
மடக்கொடி யன்புவாய்ந் [தமர்ந்தே]
[யச்சமாங்] கெறியுஞ் [சுடரிலை நெடு]வே
லையனை யருச்சனை புரியும்
பச்சிளங் கமுகம் வெள்ளியந் தகட்டிற்
பாளையீன் றிடும்பொழி லுடுத்த
கச்சிமா நகரின் பெருமையைத் தெரித்துச்
சூதமா முனிவன் கழறும். (க)

விநாயகமூர்த்திக்கு யானைமுகம் வந்த தன்மையையும், காஞ்சிப்பதியில்
அத்திகிரியில் அவர் எழுந்தருளிய தன்மையையும் கௌசிகர்
மற்றைய முனிவர்களுக்கு உரைத்தல்.

குற்றமற் றுயர்ந்த முனிவரார் மறைதேர்
கோசிக முனிவனை வினவி
வெற்றியைங் கரத்து விநாயகன் றனக்குக்
கரிமுகம் விளைந்த மேதகையு
மற்றமில் புகழார் காஞ்சிமா நகரி
லத்திவெற் பிடத்திலன் னவன்வந்
துற்றுவீற் றிருந்த தன்மையு முரைத்தி
யென்னலு மருந்தவ னுரைக்கும். (உ)

வேறு.

மூன்னோர் காலம் அசுரர்களுக் காற்றுத வின்டு முதலிய தேவர்கள்
சிவபிரானை யடைதல்.

முன்னமோர் காலங் கருங்கட னிறத்தின்
முகுந்தனை முதலவா னவர்கள்
பொன்னகர்க் கிடர்செய் கொடியதா னவர்கள்
புரிந்திடுங் கருமங்க ளெவையு
மன்னுற வரலாற் சிந்தைநொந் தழந்து
வாடின ரொருவழி நினைந்தா
ரென்னையா ளுடைய வெள்விடை யுகைக்கு
மெம்பிரான் றிருவுள மிரங்கி. (ங)

தேவர்கள் சிவபிரானைப் பணிதல்.

சிந்தையி லெளியே நினைந்திடுங் கரும
முடிக்கவுந் தீதுறு கொடிய
வெந்திற லசுரர் வினைத்திடுங் கருமஞ்
சிதைக்கவும் வித்தகத் திறத்தோர்
மைந்தனை யளிக்கி லினிதுயிர் பிழைப்பே
மென்னவே மந்தர மடைந்து
கந்தரங் கறுத்துப் புரிசடை சிவந்த
கண்ணுதற் கடவுளைப் பணிந்தார். (ச)

சிவபிரான் விஷ்ணு முதலானவர்களைக் கடைக்கணித்து நீவிர் வந்தது
எதற்காக என்று கேட்டலும் அவர்கள், அசுரர்கள் நினைத்த
காரியங்கள் தடையின்றி நிறைவேறி வருவதினால்
கவ்டமுற்றுத் தேவரீரை யடைந்தோம்
என்று கூறுதல்.

வணங்கிய முகுந்தன் முதலவா னெனை
மழுவலான் கடைக்கணித் தருளிக்
கணங்கொடு நீவி ரிவணடைந் ததுவென்
கழறுதி யென்னலுங் கரியோ
ரினங்கமழ் சுடர்வே லசுரர்கள் யாது
நினைக்கினு மன்னது நிலைபெற்
றணங்குற வலியர்க் கின்னல்செய் வதனை
யுலகின் சந்நிதி யடைந்தோம். (ரு)

அசுரர்கள் எண்ணும் காரியங்கள் தடைப்படுமாறு, இனிமேல்
எக் கருமத்துக்கும் தம்மை முதலில் நினைந்து செய்வாரது காரியங்களை
நிறைவேற்றி, மற்றையோர் கருமங்களுக்கு விக்கினஞ் செய்யக்கூடியவராகத்
தேவரீர் ஒரு புத்திரரை அளிக்கவேண்டுமென்று கூறுதல்.

செந்தழற் பிழம்பிற் றெறுசினங் கொதிக்குந்
தீதுறுங் கொடியதா னவர்கள்
புந்தியிற் கருது கருமங்க ளெவையுஞ்
சிதைக்கவு மடியர்கள் பொருந்த
முந்துறு மிதயங் கருதுகா ரியங்கண்
முடிக்கவு மொருவழி கருதி
யெந்தைநீ யளித்தி பெனக்கரு முகிழ்த்தே
யிரங்கலு மிளமதிச் சடையோன். (கூ)

சிவபிரான் அவ்வாறு அருள் செய்வோம் என்று கூறுதலும்,
விஷ்ணு முதலியோர் மகிழ்ந்து செல்லுதல்.

வேறு.

வண்ணமென் குறுநகை வழங்கி நீர்மனத்
தெண்ணிய வண்ணமே யளிப்ப னென்றனன்
கண்ணனே முதலிய களிது ளங்கிடும்
விண்ணவர் பதிபுக விடைகொ டுத்தனன். (எ)

சிவபிரான் உமாதேவியாரது இருப்பிட மேகுதல்.

ஆழியான் முதலிய வமரர் யாவரும்
வாழிமா மறைகொடு வாழ்த்தி யேகினர்
சூழிமால் வரையுரித் துடுத்த தோன்றலான்
வீழிவா யுமைதிருங் கோட்ட மேவினன். (அ)

உமாதேவியார்கோட்டத்தின் நடுவிலுள்ள சித்திரசாலையின்
அழகைக் கூறுதல்.

அன்னதி னுப்பணந் தப்பு ரத்திறைஞர்
பொன்னிழைத் திருஞ்சுவ ரெடுத்துப் பொற்புற
மன்னிய வச்சிர வளைக ளோடிவான்
மின்னகு செம்மணி மேய்ந்தி ணைக்கியே. (கூ)

அச் சித்திரசாலையில் எழு கோடி மந்திரங்களும், அம் மந்திரங்களுக்குரிய
தெய்வங்களும் சித்திரித்திருத்தல்.

எண்ணரு முலகமேழ் கோடி மந்திர
மண்ணன்மந் திரத்துரு வான தெய்வதம்
விண்ணவர் தச்சனுல் விளங்கத் தீட்டிய
தண்ணுறுஞ் சித்திர சாலை சார்ந்தனன். (க0)

சிவபிரான் உமையம்மையாருடன் சித்திரசாலையுட் புகுந்து
அச் சித்திரசாலையிலுள்ள மந்திரங்களையும் அவற்றின் தெய்வ உருவங்களையும்
காட்டி அவற்றைப்பற்றி விரித்துரைத்தல்.

அத்சிர விழியுமை யணங்குக் காங்கருஞ்
சித்திரத் தலகெலாந் தெரித்துக் காட்டினன்
வித்தக மந்திரம் விரித்துத் தீட்டிய
பத்தியி னடைந்தவை பகுத்துக் கூறினன். (கக)

உமாதேவியார் அந்த மந்திரங்களையும் அவற்றின் தெய்வ உருவங்களையும்
பார்த்து, அவற்றின் ஆதியிலிருந்த பிரணவத்தை மறுபடியும்
நாடிச் செல்லுதல்.

அந்தமந் திரங்களு மவையின் றெய்வமும்
பைந்தொடி பார்த்தனள் பரனைத் தன்னெடு
முந்திய தெய்வமா முறையிற் றீட்டிய
நந்தலில் பிரணவம் பின்னு நாடியே. (கஉ)

பிரணவத்தை நோக்கிய உமையம்மையார் மிகவுங் களிப்புறுதல்.

அடிக்கடி நோக்கின ளார்வ மீதெழப்
புடைத்தெழு வனமுலை புளகம் பூத்தனள்
விடைக்கொடி யுயர்த்தருள் விமலன் செம்முகங்
கடற்கயல் விழித்துணை கதுவக் கூறுவாள். (கங)

உமையம்மையார் இப் பிரணவ மந்திரத்தையும், அதன் தெய்வ உருவையும்
விளக்கிக் கூறும்படி சிவபிரானைக் கேட்டல்.

அருநெறி மந்திரத் தடியிற் றீட்டிய
திருவெழுத் தன்னதின் றெய்வ மாகிய
வுருவநம் வடிவினி லொளிரு மேதகை
வான்முறை விளங்கவே வழங்கு வாயெனை. (கச)

சிவபிரான் அக் கேள்விக்குடன்பட்டுப் பிரணவப் பொருளை
விளக்கிக் கூறுதல்.

உரைத்தன ளவ்வுரைக் குவகை பொங்கியே
திரைக்கடு வருந்திய செம்மல் செங்கையால்
விரைக்குழன் மடந்தையை மெய்த ழீஇக்கொடு
வரைக்கொடி கேளென மகிழ்ந்து கூறுவான் (கரு)

ஓதுமந் திரமெரை முதிக்கு மிவ்[வெழுத்
தாதிமந்] திரம்பெருக் [.....]க்
காதலா லருமறைக் கணங்கள் கூப்பிடும்
பேதியாப் பெயர்பிர னவமென் றருமால். (கசு)

[மூத்தொ]ழி னடத்திடு[.....]ராத்தமு
மொத்தளித் திடுமென தருவ மாயிடுஞ்
சத்திகண் முவருந் தழையும் வண்ணமே
யத்திறத் துயிர்க்கநின் ஞதி சத்தியாம். (கள)

வேறு.

இப் பிரணவமே நானும் நீயுமாகிய வடிவமென்று கூறுதல்.

மூன்று காலத்தின் வடிவமு மிதுமுழு முதலாய்த்
தோன்று மென்னையு முன்னையுந் துகளறக் களித்தீத
யின்ற வன்னைபுந் தந்தையு மாகுமிவ் வெழுத்தீதை
யூன்றி யின்னதி னுண்மையை யாவரே யுணர்வார். (கஅ)

இப் பிரணவமந்திரத்தின் உருவமாகிய யானையின் உருவங்கொண்டு
நாம் சேருதல்வேண்டுமென்று சிவபிரான் கூறுதல்.

சொல்லு மிவ்வெழுத் தருளினிற் றுலங்குவெம் புழைக்கை
வெல்லு மானையி னுருக்கொடு நாமுளம் விருப்பிப்
புல்ல வேண்டுமென் றிசைத்தனன் பொற்றொடி பொருந்தி
நல்ல தென்றன ஞதனுங் களிற்றுரு வெடுத்தான். (ககூ)

சிவபிரானும் உமையம்மையாரும் யானையின் உருவெடுத்துச் சேருதலும்,
உமையம்மையார் வயிற்றிலிருந்து பிள்ளையார் பிறத்தல்.

பலிம டந்தையும் பிடியுரு வெடுத்தனண் மணிக
ணிலவு சித்திர சாலையி லழகுற நிறைந்து
குலவு மன்பொடும் புணர்ந்தனர் கோற்றொடி வயிற்றி
லுலவு குஞ்சரத் திருமுகப் பிள்ளையங் குதித்தான். (உ0)

யானைமுகத்தையுடைய பிள்ளையார் பிறந்ததைக் கண்டு சிவபிரானும்
உமையம்மையாருங் களிப்புற்று, தாம் சுயவடிவெடுத்து,
புதல்வரைத் தழுவுதல்.

கரிமு கத்தவன் பிறந்தது கண்டுகண் களித்தீத
யிருவ ருந்தனி முன்னுரு வெடுத்தன ரிசைந்து
சுரிம லர்க்குழற் றோகைநின் றெடுத்தன டுலங்கு
திருமு கத்தொடு மணைத்தனள் சிவன்கையிற் கொடுத்தாள். (உக)

உமையம்மையார் புதல்வருக்கு முலைப்பால் ஊட்டல்.

எந்தை வாங்கினன் சிறுவனை முத்தமிட் டிமயப்
பைந்தொ டிக்கரங் கொடுத்தனன் கலன்பல திருத்தி
மைந்தன் வாயிதழ் மலர்க்கடை தொறும்வழிந் தொழுக
முந்து பூண்முலைப் பாலமு தருத்தினண் முதல்வி. (உஉ)

திருமுலைப்பால் உண்டபின் பிள்ளையார் நிருத்தமாடுதலும்,
சிவபிரானும் உமாதேவியாருங் கண்டு களிப்புறுதல்.

அருத்து பாலமு துண்டபி னேங்கரக் குழவி
விரித்த செம்மலர்த் தடங்கரங் கொட்டியே விளங்க
நிருத்த மாடின னிருவரு நெஞ்சுறக் களித்தார்
சுரித்த பூங்குழ லுமையவ ளினைபன தொகுப்பாள். (உந)

உமையம்மையார் இப் புதல்வருக்கு, அண்டங்களும் கணங்களும் கொடுத்து,
தனியாசருளுதல்வேண்டுமென்று கூறுதல்.

மழுவு யர்த்தருள் வரதின் மைந்தனுக் கின்னே
பழுதி லண்டமுங் கணங்களும் பரிவொடுங் கரத்தாற்
றொழுது போற்றிடு தனியர சருள்கெனச் சோதி
முழுது மன்பொடு முத்தலைச் சூலமீவற் கணங்கள். (உச)

சிவபிரான் கணங்களையும் தேவர்களையும் அழைத்தல்.

குனித் தைக்கடற் கண்டுயில் குலபந் தொடையோ
னினிய தேனவிழ் தாமரைப் பொகுட்டுறை யிறைவன்
பனிநி லாத்திகழ் வச்சிரப் படையுடைப் பகவன்
முனிவ ருள்ளவ செவரையு முறைமுறை யழைத்தான் (உடு)

சிவபிரான் கணங்களுக்கும் தேவர்களுக்கும் தலைவராகப் பிள்ளையாருக்கு
முடிசூட்டுவதாகக் கூறுதல்.

தந்தி மாமுகச் சிறுவனை மடியுறத் தாங்கி
வந்து சூழ்ந்திடு கணங்களை மாயனு தியரைப்
புந்தி யன்புற நோக்கின னுங்களைப் புரக்க
மைந்த னுக்கொளி மணிமுடி கவிப்பனென் றுரைத்தான். (உசு)

அதனைக் கேட்டுக் கணங்களும் தேவர்களும் மகிழ்தல்.

ஈச னிவ்வண முரைத்திடக் கணங்கண்மா லிமையோ
ராசி கூறினர் நன்றென வகங்களி திளைத்தார்
மூசி வண்டின மிடைந்திடு மிதழிமோந் தலைத்து
வீசு வெண்டிரை நதிபுனை வேணியெம் பெருமான். (உஎ)

சிவபிரான் பிள்ளையாரை அரியாசனத்தின்மீதிருத்தித் திருமுடி புனைதல்.

அரும றைப்படி கருமங்க ளனைத்தையு மாற்றிக்
கரிமு கத்தொரு குழவியைக் கைகளா லெடுத்தீத
பெரியி மைத்திடு மணிபரி யணைமிசை யிருத்தி
விரிசெ முங்கதி ரெனமிளிர் மணிமுடி மிலைத்தான். (உஅ)

சிவபிரான் தமது சின்னங்களாகிய அரவு, மதி, கொன்றை என்பனவற்றையும்

முடியின்மீது சூட்டி, அரசுங் கொடுத்தல்.

தனது முத்திரை யரவமுந் தண்ணிலா மதியும்
புனைக றுந்தண ரிதழியு மணிமுடி புனைந்தா
னினைவ ருங்கணைத் தலைமையு நெடியவன் முதலோர்
மனமொ ருப்பட வணங்கிடு மரசமே வழங்கி. (உக)

சகல விக்கினங்களுக்குந் தம் பிள்ளையாரைத் தலைவராகச் செய்தல்.

எண்ண ரும்பல விக்கினங் களுக்கிறை யாக
நண்ணு தன்மையு மளித்த னறுந்துழாய் வணையுங்
கண்ண னுன்முக னிந்திரன் முதலிய கடவுள்
விண்ண கத்துளீர் நீவிரெக் கருமமும் விரும்பி (உ0)

நீவிர் எக் கருமத்தையும் இவரை நினைத்துச் செய்கில் அது
எண்ணியவண்ணமே முடியும்; இவரை நினைக்கமாட்டாத அசுரர்களது
கருமங்களை இவர் விக்கினப்படுத்துவார் என்று சிவபிரான்
தேவர்களுக் குரைத்தல்.

மனத்தி லெண்ணிய வண்ணமே முடிக்கமற் றசுரர்
நினைத்த காரியம் விக்கினப் படுத்திகின் றவரைச்
சினத்து வெஞ்சமம் புரிந்திடச் சிந்துர முகத்தோன்
றனக்கி ருந்தகை யளித்தன மென்றுசாற் றினனால். (உக)

சிவபிரான் கூறியவற்றைக் கேட்ட தேவர்கள் மனமகிழ்ந்து
பிள்ளையார் திருவடிகளை வணங்குதல்.

பவள வார்சடைப் பண்ணவ னின்னணம் பகர
வுவகை பொங்கினர் கரியவன் முதலிய வும்பர்
சிவன ளித்தருள் சிந்துரத் திருமுகத் தவன்பொன்
னவிர்சி லம்படி வணங்கினர் நறவுமி ழலரால். (உஉ)

தேவர்கள் பிள்ளையாரைப் பூசித்து, விடைபெற்றுத் தத்தம்
இருப்பிடங்களுக் கேகுதல்.

தெண்டி ரைக்கடற் றெள்ளமு தக்கட முதல
வுண்[டி]யன்னவற் கடியுறை கொடுத்தவ ரொளிருந்
தண்ட வெண்பிறைச் சடிலியைத் திரும்பவுந் தொழுதா
ரண்டர் நாயக னனுப்பவன் னவர்பதி யடைந்தார். (உங)

பிள்ளையார் சிவபிரானையும் உமையம்மையாரையும் வணங்கி,
கணங்களோடுஞ் சென்று திருவிளையாடல் செய்துகொண்டிருத்தல்.

இவை விளைந்தபி னிறைவியை யமலனை யிறைஞ்சிக்
கவள வாரணத் திருமுகன் கணத்தவ ரோடுந்
தவல றும்பெருந் தனிவிளை யாட்டயர்ந் திருந்தா
னுவகை பொங்கினன் புனல்விளை யாடவென் றுணர்ந்தே. (உச)

பிள்ளையார்புனல் விளையாட எண்ணிப் பாற்கடலை யடைந்து கலக்கி,
திருமால் லக்ஷ்மி சேடனுட்பட அக் கடலைத் தமது புழைக்காத்தால் எடுத்தல்.

பொருத வெண்டிரைப் பாற்கடல் புகுந்தது கலக்கிப்
பரும வெம்பணைப் புழைக்கர மெடுத்தனன் பதறிக்
கரிய மாயனுங் கமலையுஞ் சேடனுங் கலந்து
திரியு மீனமுங் காத்துளை சுழிபொடுஞ் செறிந்தார். (உஞ)

பிள்ளையார் திரும்பவும் பாற்கடலை முன்போலிருக்குமாறு விடுதல்.

கடையிற் றோன்றிய காலனைக் கடுவளி யுயிர்த்துப்
படரும் பாற்புன றிரும்பவும் பண்ணவன் விடுத்தா
லெடிய மாயனும் படைகளு நீங்கருந் திருவும்
விடவ ரவமு மீனமும் விழுந்தன வேறுய்.

அப்பொழுது தனியே விழுந்துகிடந்த திருமாலின் பாஞ்சசன்னியத்தைப்
பிள்ளையாரது கணத்தவர் எடுத்துக்கொள்ளல்.

அன்ன காலையிற் பாஞ்சசன் னியத்தையைங் கரத்தோன்
மன்னும் வெங்கணத் தவர்கரம் பற்றினர் மறுகிப்
பொன்னங் கொம்பொடு சேடனும் பூவைமே னியனு
மின்ன நீர்ந்தொரு புன்பிறப் பெனக்குழ மினரால். (உஎ)

விஷ்ணுமூர்த்தி தன்பம் நீங்கி, தமது படைகளாகிய
வாள், சக்கரம், வில், கதை என்பவற்றை எடுத்து, பாஞ்சசன்னியத்தைக்
காணுது பாற்கடல் முழுவதும் தேடி வருந்துதல்.

பொற்பொ லங்கொடி புணர்முலை மார்புறக் கரியோன்
மற்ற டம்புயந் தழுவினள் சேடனும் வணங்கிச்
சொற்ற ருந்துதி துதித்தனன் திகிரிவெஞ் சுடர்வாள்
விற்பொ ருங்கதை யெடுத்தனன் வெள்வளை காணுன். (உஅ)

அப்பொழுது பாஞ்சசன்னியத்தைப் பிள்ளையாரது கணங்கள் முழக்குதல்.

பானி றத்தொளிர் வலம்புரிக் குளப்பதை பதைத்து
நீணி றத்தின னெடுங்கடன் முழுவது நேடி
மான முற்றுற வருந்திடுங் காலையின் மகிழ்ந்தே
யானை மாமுகன் கணத்தவ ரதுமுழக் கினரால். (உகூ)

திருமால் அச் சப்தத்தைக் கேட்டு, தமது வலம்புரியென அறிந்து, தமது கணத்தலைவரை நோக்கி, பிள்ளையாரது கணங்களை யடைந்து அவ் வலம்புரியை வாங்கி வருமாறு கூறி அனுப்புதல்.

ஆர்த்த பேரொலி வலம்புரி யொலியென வறிந்தே
தீர்த்தன் றன்கணத் தலைவரைத் திருமுகங் குளிரப்
பார்த்து வாரண முகத்தவன் கணங்களைப் பரவி
வார்த்தை பின்புற வழங்கிவெள் வளையினை வாங்கி. (சஅ)

திருமாலின் கணத்தலைவர் பிள்ளையாரது கணங்களை யடைந்து வணங்கி, இச் சங்கு திருமாலுடையதாதம்; ஆதலால் அவர் வலம்புரியைத் தருதல்வேண்டுமென்று கேட்க, பிள்ளையார் கணத்தவர் மறுத்தல்.

வருதி சென்றலு மன்னவர் வல்வினைந் தேகிக்
கரிமு கத்தவன் கணங்களைக் கைமுகிழ்த் திறைஞ்சி
யரிம லர்க்கர [வளையிது] வளிபருக் கிரங்கித்
தருதி சென்றலுங் கொடுத்தில ரன்னவர் தளர்ந்தார். (சக)

இச் செய்தியைத் திருமாலிடம் அவரது கணத்தலைவர் கூறுதலும், திருமால் விநாயகக்கடவுளை யடைந்து வேண்ட அவர் கொடுக்க முடியாதெனல்.

திரும்பி மாயவன் றிருமுனஞ் சிந்துர முகன்றாள்
விரும்பு மெய்க்கண மளித்தில வளையென விளம்பச்
சுரும்பு மூசிய துளவினன் சுடர்வரை யளித்த
வரும்பு வாணகை பயந்தரு ளாணைமுன் னடைந்தான். (கஉ)

இறைவ வென்வலம் புரியினை யருள்கென விசைக்கப்
பிறைநெ டுஞ்சடைப் பிஞ்ஞக னளித்தருள் பெருமா
னறைதல் வேண்டுவ தல்லயா னளிக்கில னெனலும்
நிறைய ழிந்துளம் வருந்தின னெடியகார் முகுந்தன். (கங)

அதனைக் கேட்டு வருந்திய திருமால் சிவபிரானை யடைந்து வணங்கி, எனது பாஞ்சசன்னியத்தைப் பிள்ளையாரது கணத்தவர் எடுத்துக்கொண்டனர். யான் பிள்ளையாரிடம் இரந்தும் அவர் மறுத்தனர். தேவரீர் அதனை வாங்கிக் கொடுத்தருளவேண்டுமெனக் கேட்டல்.

வளைந்த பொற்சிறைக் கருடன்மேல் கொண்டுவா ணணவுங்
கிளர்ந்த வெள்ளியங் கிரிமுக டடைந்தனன் கிட்டிக்
களங்க னியினிற் கறுத்திடுங் கண்டனைக் கண்டா
னுளங்க னிந்தனன் பூசனை யாற்றிநின் றுரைப்பான். (சச)

அண்ண னின்னரு ளாற்றிரை யாழியிற் றுயின்றோன்
வண்ண வாரண முகத்துநின் மதலைபாங் கடைந்து
தண்ண றும்புனற் றனிவிளை யாட்டயர்ந் ததனு
லெண்ணி யோதுதற் கரியதோ ரின்னல்பட் டிடைந்தேன். (சஙு)

ஆய வேல்வையில் வலம்புரி யிழந்தன னதைநின்
சேயி டத்துறை கணத்தவர் செங்கைதொட் டெடுத்தார்
போயி ரத்தலும் புகர்முக னளித்தில னவரை
நீய ழைத்தினி வாங்கியு யருள்கென நிகழ்த்த. (சஙு)

அதைக் கேட்ட சிவபிரான், பிள்ளையார்மீது நாம் பெருவிருப்புடையேம்; ஆதலினால் இதைப்பற்றி அவரிடம் யாதும் கூறோம். நீ, காஞ்சிப்பதியிலுள்ள அத்திகிரியிற் சென்று பிள்ளையாரை முறைப்படி பூசித்தால், அவர் உனது பாஞ்சசன்னியத்தைத் தருவரென்று கூறுதல்.

வேறு.

கொல்லு மழவெள் விடையுகைத்தோன் குளிர்வெற் பளித்த கோற்றேனுர்
சொல்லி கமல முகமோக்கிச் சற்றே நகைத்துத் துழாய்மாலை
புல்லு மருமக் கரியநெடும் புயலைத் திரும்பி முகம்பார்த்து
வெல்லுங் திகிரித் திருமாலே கேட்டி யெனவே விளம்புவனால். (சள)

இமய மளித்த பசுங்கொடிக்கு மெமக்குங் கரியின் முகத்தோன்பா
லமைவி லாத பெருவிருப்ப மதனு லொன்று மறைகிலதீ
கமையி னூருவாய் விழிதுயிலுங் காஞ்சிப் பதியி லத்திகிரித்
தமர வரிவண் டிசைமூரலுந் தண்ணம் பொழில்சூழ் தடங்குகையில். (சஅ)

உனது தவள வலம்புரிப்பே ருரைத்து மதவா ணமுகனே
யெனது மொழியா கமப்படிநீ யிறைஞ்சில் வளைதந் திடுவனென
நினது மொழியாற் றுயர்தீர்ந்தே னென்ன நிமல னடிவணங்கித்
தனது மலர்க்கண் டுயில்காஞ்சித் தடவெற் படைந்தான் சக்கரத்தோன்.

விஷ்ணுமூர்த்தி காஞ்சிப்பதியில் அத்திகிரியை யடைந்து, முறைப்படி பிள்ளையாரைப் பூசித்தலும் அவர் விஷ்ணுவின் முன் தோன்றியருளல்.

அந்த வரையின் பெருங்குகையி னுனை முகத்தோன் றனிவிம்பஞ்
சிந்தை மகிழ்ந்து தாபித்துத் தெய்வ மறையின் விதிப்படியே
முந்து பெரும்பூ சனையாற்றி முன்னந் தரைவீழ்ந் திடவிரங்கித்
தந்தி முகத்தோன் வெளிப்பட்டுச் சற்றே முறுவ னகைத்தருளி. (ரு0)

பிள்ளையார் உனது விருப்பம் யாதெனக் கேட்டலும், திருமால் தனது பாஞ்சசன்னியத்தைத் தந்தருளவேண்டுமென்று கேட்க, பிள்ளையார் அதைக் கொடுத்தருளல்.

பையா யிரங்கொண் டறிவுபிர்க்கும் பாம்பிற் றுயிலும் பகும்புயலே
மெய்யார் மறையின் படிபூசை விளைத்த விருப்ப முரைத்தியெனக்
கையா முளரி யிதழ்புதைப்பக் கண்ணீர் ததும்பக் கருத்திளகி
யையா வெனது வலம்புரிநீ யருள்க வெனவு மதுவுளித்தான். (ருக)

பிள்ளையார் சங்கினைக் கொடுத்து, இன்னும் வேண்டிய வரங்களைக் கேட்குதியெனலும், திருமால் காஞ்சிப்பதியிலுள்ள இவ் வத்திகிரியில் தேவரீர் எக்காலத்து மிருந்து உலகத்தைக் காத்தருளவேண்டுமெனக் கேட்க, பிள்ளையார் அதற் கிசைந்து அவ்விடத் தெழுந்தருளி யருள்செய்துவருதல்.

கன்னங் கருணை மதங்கரைக்குங் களிறு கரிய நெடுமாலே
யின்னம் வரங்கள் வேண்டுவன தருவல் கேட்க வெனலுமலர்ப்
பொன்னங் கொடிசேர் மணிமார்பன் புகலு நகமோ சேழினுஞ்சீர்
மன்னுந் தகைசே ரிக்காஞ்சி யத்தி கிரியின் மணிக்குகையில். (நுஉ)

பொருந்துந் திருப்புண் ணியகோடி யீசன் பொலன்சன் னிதியின்மகிழ்ந்
திருந்து புவனத் துயிர்ப்பயிர்கட் கெல்லா வரமு மளித்திபெனத்
திருந்துங் கருணை யுவட்டெடுக்கச் செம்ம லவண்வீற் றிருந்தனன்வண்
டருந்து நறவத் துளவோனு மன்பு கொழித்தே தவணிருந்தான். (நுஊ)

இக் கதையைக் கேட்போர் எய்தும் பயனைக் கூறி, காஞ்சிப்பதியைக் குறித்து மற்றுமொரு கதையுளதென்று சூதமுனிவர் கூறத் தொடங்குதல்.

சொல்லுங் கதையைப் படிப்போர்கள் கேட்போ ரெவருந் தொலைபாத
செல்வங் கிளைத்து நனிவாழ்வா ரின்னு மனைய திருநகரின்
மல்லன் மகிமை தருங்காதை யொன்று புகல்வேன் மல்விடையம்
வெல்லுந் தவத்தீர் கேட்கவெனச் சூத முனிவன் விளம்புவனால். (நுசு)

ஆலகால விஷாக்கினியினால் விஷ்ணுமூர்த்தியினுடல் கருகியதைக் கூறல்.

வேறு.

விரிதிரை முகட்டெழும் விடத்தை வெள்விடை
யொருதனி யெப்பிரா னுண்ணு முன்னமே
பெருகுமவ் விடத்தினுற் பிறங்கு மாயன்மெய்
கருகிட வகந்தழல் கதுவ வாடினான். (நுடு)

விஷ்ணுமூர்த்தி அந்த விஷாக்கினிக்காற்றுது காஞ்சிப்பதியை அடைந்து பூசைபுரிதல்.

கழனியின் வளமுறு கச்சி மேவியே
யழகிய விலிங்கமொன் றமைத்துத் தன்பெய
ரெழிறிகழ் கிட்டிண விலிங்க மென்றுரைத்
தொழுகிய வன்புவாய்த் துள்ள நெக்குற. (நுகூ)

விஷ்ணுமூர்த்திக்குச் சிவபிரான் வெளிப்பட்டு யாது வேண்டுமென்று கேட்டல்.

பூசனை புரிந்தனன் புரியுங் காலையின்
மாசறு மதிமுடி வரதன் முன்றினை
னேசற நின்பெய ரிலிங்கத் தென்னிடை
நேசமோ டருச்சனை யியற்று நீயென்றி. (நுஎ)

விஷ்ணுமூர்த்தி விஷாக்கினியினால் உண்டாய சுரத்தைத் தணித்தருளவேண்டுமெனக் கேட்டல்.

உரைக்குதி யென்னலு மாய னுதுவான்
றிரைக்கடன் முகட்டினி லெழுந்த தீவிட
மருத்தியி னியநீ யருந்து முன்னமே
யெரித்தெறு காலியி னெனது மேனியும். (நுஅ)

கறுத்தது வகந்தழற் கதுவும் வெஞ்சுரம்
பொறுத்திட லரியதாற் பூசை செய்தன
னெறுத்திட வெந்தழ லருத்த வெஞ்சுர
மறுத்திட வேண்டுமென் றுரைவ ழங்கினான். (நுக)

சிவபிரான் உமையம்மையார் பூசித்த ஏகாம்பரலிங்கத்திற் பூசைசெய்தால் இச்சுரம் தணியுமென்று கூறுதல்.

விண்டிவை பகர்தலும் விமலன் கூறுவான்
பண்டரு மொழியுமை பரிந்து பூசைசெ
யெண்டிசை புகழுமே காம்ப ரப்பெயர்
கொண்டதொ ரிலிங்கத்திற் குலவி நாடொறும். (நுo)

வாழுவே மன்னதின் மருங்கி லெம்மிருந்
தாழ்சடைச் சந்திர சமீபத் தெய்தியக்
கேழ்கிளர் மதிப்பெயர் கெழுமு வைகுதி
சூழ்கனற் சுரமகஞ் சுடுத றீருமால். (நுக)

விஷ்ணுமூர்த்தியாற் பூசிக்கப்பெற்ற லிங்கத்தை வணங்குவோர் எய்தும் பேற்றைக் கூறிச் சிவபிரான் மறைதலும், விஷ்ணுமூர்த்தி அவ்வாறு பூசித்து மேன்மையடைதல்.

என்னிடை முன்னர்வந் தென்னை யேத்துவோர்
மன்னிய வைகுந்த மருவி வாழுவார்
நின்னுடைப் பெயரினு னீயி றைஞ்சிய
தன்னிக ரிலிங்கத்தை வணங்கித் தாழுவார். (நுஉ)

முத்தியை யடைவரென் றுரைத்து மூசுதேன்
மத்தலர் சடையினான் மறைந்து போயின
னத்தகை கரியவ னவண டைந்தன
னெத்திசை யவர்களு மிறைஞ்சி வாழ்த்தவே. (நுங)

காஞ்சிப்பதியைக்குறித்து மற்றுமொரு கதையுள்ளதெனச் சூதமுனிவர் கூறத் தொடங்குல்.

ஈதலா லொருகதை யின்னு மப்பதிக்
கோதுகே ளுளத்துரி சறுத்து முத்தியிற்
காதலார் முனிவரீர் கருதிக் கேட்கெனச்
சூதமா முனிவரன் சொல்லு வானரோ. (நுச)

தக்ஷிணகைலாயத்தில் மகாகாளன் என்னும் பாம்பு சிவபெருமானைப் பூசித்தல்.

மிக்கவெம் பணிக்குலத் துதித்த மேன்மையான்
றக்கவண் புகழ்மகா காளன் றண்பொழின்
மைக்கரும் புயலுலாம் வான மேற்படும்
தக்கிண கயிலையிற் சிவனை யேத்தினன். (சுருி)

அப்பூசைக்கு மகிழ்ந்து சிவபிரான் வெளிப்பட்டு யாதுவேண்டுமென்று கேட்க, மகாகாளன் பாம்புருவத்தை நீக்கியருளல்வேண்டுமென்று கேட்டல்.

அன்னவ னேத்தலு மமலன் நோக்கியே
யென்னைநீ விரும்பின தெனலு மேழையேன்
மன்னிய பணியுரு மாற்ற வேண்டினன்
புன்னெடுஞ் சடைமுடிப் புனித வென்றனன். (சுசு)

சிவபிரான் காஞ்சிப்பதியில் ஓர் இலிங்கந்தாபித்துப் பூசிப்பாயாயின் உனது பாம்புருவம் நீங்குமெனக் கூறல்.

என்றலு நாதனுங் கிசைக்குங் காஞ்சிபோய்ப்
பொன்றிக ழிலிங்கமொன் றமைத்துப் பூசனை
துன்றிருங் களியுளந் தளங்க நீசெயி
லொன்றிரும் பணியுரு வொழியு மென்றனன். (சுஎ)

மகாகாளன் காஞ்சிப்பதியில் இலிங்கந்தாபித்து பூசைசெய்தல்.

செஞ்சடை யெம்பிரா னீது செப்பலு
நஞ்சடை யெயிற்றுடை நாகர் கோமகன்
கஞ்சம்விண் டலர்மடுக் காஞ்சி நண்ணியே
பஞ்சதீர்த் தக்கரைப் பரப்பின் பாங்கரில். (சுஅ)

பெருகொளி யிலிங்கமொன் றமைத்துப் பெட்புறக்
கருதிவண் பெயர்மகா காள வீசனென்
றுரிமையி னுரைத்தன னுள்ள நெக்குறப்
பொருவரு பூசனை புரிதல் செய்தனன். (சுசு)

அப்பூசையின் பயனால் மகாகாளன் பாம்புருவம் நீங்கி முத்தியடைதல்.

இன்னணம் பூசனை யியற்ற வெய்திய
பன்னக மெனுங்கொடும் படிவ னீக்கினு
னன்னலக் தருசுரர் வடிவ நண்ணினன்
பின்னரு முத்தியின் பேறும் பெற்றனன். (எ0)

காஞ்சிப்பதியைப்பற்றிய வேறொரு கதையினைச் சூதமுனிவர் கூறுதல்.

வேறு.

பகருமிக் காதை யன்றி யின்னுமப் பதிக்கு வேறு
நிகரருங் காதை யொன்று நிகழ்த்துவ னெறியி னேடு
முகமலர்ந் தினிது ஞான முனிவரீர் கேட்க வென்னத்
தகளறுத் துயர்ந்த தெய்வச் சூதமா முனிவன் சொல்லும். (எக)

தாருகாசுரனைக் கொன்ற முருகப்பிரான் திருக்கயிலையில் வருதலும், சிவபிரானும் உமையம்மையாரும் விநாயகமூர்த்தியும் அவரைச் சீராட்டி விடுதல்.

சோரிவேற் றடக்கை ஞானச் சுந்தர முருகப் பிள்ளை
தாருகா சுரனை வீட்டித் தனிவிளை யாடல் செய்து
சீருலாங் கயிலை நாப்பண் சினகர மடைந்து நாதன்
வேரிநாண் மலர்ப்பொற் பாதம் விபப்புற வணங்கி நின்றான். (எஉ)

நறைமலர்க் கடப்ப வேளை நயந்துசெங் கரத்தால் வாரி
யிறைவியுங் கலைவெண் டிங்க ளிவர்சடை யெப்பி ரானு
முறைமுறை சீராட் டாடி முற்றிய பின்ன ரன்னை
னிறையொளி யிமைக்கும் பைம்பொ னெடுநிலை வாயில் வந்தான். (எங)

மணிக்கடைப் புறத்து ஞான வாரண முகத்தோன் கண்டே
யணிக்கரத் தெடுத்துச் செய்ய வானனத் தணைத்து மோந்து
தணிப்பருங் காதல் பொங்கத் தழுவினன் விடுக்க நீங்கிக்
கணிப்பருங் கணங்க ளோடுங் கருதியாட் டயருங் காலை. (எச)

திருக்கயிலையில் பிரமதேவர் முருகப்பிரானை வணங்காது உட்புகுந்து சிவபிரானைப் பூசித்து மீளல்.

செந்துணர்ப் பசும்பொற் றோட்டுத் தெய்வதக் கமல மேய
வந்தணன் முனிவ ரோடு மமலனை யிறைஞ்ச வாங்கு
வந்தனன் முருக வேளை வணங்கிடா துள்புக் கெய்தி
யெந்தையைப் பூசை யாற்றித் திரும்பவு மேகுங் காலை. (எடு)

அதனைக் கண்ட முருகக்கடவுள் பிரமனை நோக்கி, நீ யாவன்? உனது நாடெது? நீ கற்ற வித்தை யாவை? எனக் கேட்டல்.

முருகனுங் கவனைநோக்கி முகிணகை சிறிது கோட்டி
யருகழைத் தெவன்கொ னீயுன் னம்பொரு டேது நாடி
யொருவுரு தெந்த வித்தை யுணர்ந்தனை யுரைத்தி யென்னத்
திருமகள் கொழுந னுந்தித் திசைமுக னுரைப்ப தானான். (எசு)

பிரமதேவர் தன்பெயர் முதலியவற்றைக் கூறல்.

பண்ணுறு மறைக ளோதும் பங்கய னென்பே ரெந்தாய்
தண்ணறுந் தாரு வோங்குஞ் சத்திய லோக மென்னு
டெண்ணரும் வித்தை யீச னிசைத்திட வுணர்ந்தே னென்னக்
கண்ணழல் கதுவ நோக்கிக் கந்தவே ளுரைப்ப தானுன். (எஎ)

முருகப்பிரான் நீ வித்தையெல்லா முணர்ந்தனையாயின் அவ் வித்தைக்கெல்லாம்
முதலெழுத்து எதுவென்று கேட்க, பிரமதேவர் பிரணவமே
முதலெழுத்தென்று கூறுதல்.

சொற்றிடும் வித்தை யெல்லாந் துகளற வுணர்ந்தா யென்னின்
மூற்றுமவ் வித்தைக் கெல்லா முதலெழுத் துரைத்தி யென்னப்
பொற்றுணர்க் கமல மேய புங்கவன் பொருவி லாத
பெற்றியின் சிறந்த தெய்வப் பிரணவ மாகு மென்ரு ன். (எஅ)

முருகப்பிரான் அவ்வெழுத்தின் பொருள் யாது என்று கேட்க, பிரமதேவர்
சிவபிரானதும் விஷ்ணுமூர்த்தியினதும் தனதும் உருவமே
அதன் பொருளென்று கூறுதல்.

அவ்வெழுத் ததனுக் கோது மரும்பொரு ளுரைத்தி யென்னக்
கொவ்வையங் கனிவாய் வாணி கொழுநனுங் குரைக்குந் தாவு
நவ்வியங் கண்ணி பங்கன் வடிவுமென் வடிவு நாரப்
பவ்வமேற் றுயிலு மாயன் வடிவுமாம் பகரி லென்ரு ன். (எகூ)

அதைக் கேட்ட முருகக்கடவுள் கோபித்து, இப் பிரமனைச் சிறையில்
வைக்குதி என்று தமது கணங்களுக் குரைத்தலும், அவர்கள் அவ்வாறே
அவனைச் சிறையில் வைக்க, முருகப்பிரான் படைத்தற்றொழில் புரிதல்.

என்றலுங் கனன்று சீறி யெறிசுட ரிலேவ லெந்தை
நின்றிடுங் கணங்க ளேக்கிப் பிரமனை நீர்மை பெல்லாங்
குன்றிடச் சிறையில் வைக்க வென்னலுங் கொடுபோய் வைத்தார்
துன்றிய புவன முற்றும் படைத்தனன் றேறுகை யூர்தி. (அ0)

இச் செய்தியையெல்லாம் முனிவர்கள் சிவபிரானிடம் உரைக்க, சிவபிரான்
பிரமனது பிழை பொறுத்தோம்; அவனைச் சிறையினின்று
விடுதலை செய்கவென முருகக்கடவுளுக்குக் கூறும்படி
நந்திதேவரை அனுப்புதல்.

இன்னண நடந்த வெல்லா மிருந்தவ முனிவ ரேகித்
தென்னிடு சுரும்பார் கொன்றைச் சிவனிடத் துரைத்தா ரன்னோன்
மன்னிய முனிவர் செம்பொன் மலர்முக நோக்கிக் கூறும்
பன்னிய மறைக்கு முன்னும் பிரணவம் பகுத்துச் சொல்லில். (அக)

என்னுறு வடிவுஞ் செவ்வே ளிருந்தகை வடிவு மென்று
முன்னுறு மறைக ளெல்லா மொழிந்தன மறந்தான் போலு
மன்னவன் பிழைத்து பாற்ற மறைந்தது பொறுத்தோ மென்னுப்
பன்னியாங் குரைத்து ஞான நந்தியைப் பார்த்து நீபோய். (அஉ)

நந்திதேவர் சிவபிரானது ஆஞ்ஞையைக் கூறி, பிரமனைச் சிறைவிடும்படி
முருகப்பிரானிடம் கேட்க, அவர் மறுத்துரைத்தல்.

கந்தனுக் குரைத்து வேதன் கவலுறு சிறைநீக் கென்ன
நந்திநா யகன்போய்ச் செவ்வே ணறைமலர்ச் சரணம் போற்றி
யெந்தையா ருரைத்தார் வேத னிருஞ்சிறை விடுக்க வென்ன
மைந்துறு தடந்தோட் செவ்வே ளவ்வுரை மறுத்தா னன்றே. (அங)

இதனை நந்திதேவர் சிவபிரானிடம் உரைக்க, சிவபிரான் புன்னகை புரிந்து,
உமாதேவியாருடன் முருகவேளிடம் செல்லுதல்.

சூலந் தடக்கை நந்தி திரும்பினன் சுருதி யோனை
வீரவே ளிளவல் காவல் விடுத்தில னெனவே பச்சை
யாரணி சடையி னானுக் குரைத்தன னீயன் சற்றே
மூல்செய் தூமையா ளோடு முருகவேள் கோயில் புக்கான். (அச)

முருகக்கடவுள் சிவபிரானைப் பணிதலும், சிவபிரானும் உமாதேவியாரும்
அவரை எடுத்துத் தழுவுதல்.

தந்தைதன் வரவு நோக்கித் தடப்புயம் பொருமு வோடி
யெந்தைபொற் கமலப் பாத மிமையவெற் பளித்த தெய்வப்
பைந்தொடி சரணப் போது பாவியே நிலத்தின் வீழ்ந்தான்
மைந்தனைக் கமலக் கையால் வாரியே யெடுத்துக் கொண்டான். (அடு)

நவமணி நகுபொற் கோயி னுப்பணைர் பீடத் தேறிக்
கவர்மதி நுதலி யோடுங் கண்ணுத லிருந்தான் பொங்கு
முவகையோ டுமையாள் வாங்கி யுச்சிமோந் தவனை ஞானச்
சிவனது மடியிற் கோலச் செங்கையா லெடுத்து வைத்தாள். (அசு)

சிவபிரான் பிரமனைச் சிறைவிடும்படி முருகவேளிடம் கூறுதல்.

விரிசடைப் பவள மேனி விண்ணவன் சிறுவன் றன்னை
யிருகையாற் றழுவிக் கொண்டா னிளநிலா முறுவல் பூத்தான்
முருகநின் முனிவு தீர்ந்தே முளரியங் கோயின் மேய
வருமறைக் கிழவன் றன்னைச் சிறைவிடுத் தளித்தி யென்ரு ன். (அஎ)

முருகப்பெருமான் பிரமனைச் சிறையினின்றும் விடுவித்து,
சிவபிரான் திருமுன்பு கொண்டுவந்து விடுதல்.

பாறுதொட் டுலவு சூலப் பண்ணவன் வார்த்தை மேற்கொண்
டாறுமா முகத்தோ தான் கூறு மருமறைக் கிழவன் றன்பாற்
சீறிய முனிவு தீர்ந்தான் சிறைவிடுத் தவனைச் செங்க
ணேறுயர்த் தவன்முன் கொண்டு விடுத்தன னிறைவ னேக்கி. (அஅ)

சிவபிரான் பிரமதேவரை அனுப்பிவிட்டு, முருகக்கடவுளை நோக்கி, நீ முதலில்
என் சொல்லை மறுத்தமையினால் காஞ்சிமாநகரம் சென்று
இலிங்கந் தாபித்து, அருச்சனை புரிவாயாக என்று கூறிவிடுதல்.

புன்னகை புரிந்து வேதப் புனிதனை யனுப்பிப் பின்னர்
கொன்னவிர் வடிவே லேந்துங் குழகனை வதன நோக்கி
யென்னுரை முன்னர் நீத்த பிழையினுக் கிளைய னீபோய்க்
கன்னலங் கழனி சூழுங் காஞ்சிமா நகர நண்ணி. (அக)

முருகப்பிரான் காஞ்சிப்பதியை யடைந்து, இலிங்கந் தாபித்துப்
பூசை செய்துவருதல்.

அருள்பெறு மிலிங்கந் தாபித் தருச்சனை புரிதி யென்று
வரிவளை மடந்தை போடு மழுவலா னிருக்கை சேர்ந்தான்
முருகவே ளுவகை பொங்க முதல்வனை யுமையை யேத்திக்
கரியமஞ் சுறங்குஞ் சோலைக் காஞ்சிமா நகாஞ் சார்ந்தான். (கூ0)

அந்நகர்க் குடபால் வைகு மழகொளி மகாகா ளேசன்
சன்னிதி மருங்கு ஞானத் தகையரு ளிலிங்க மொன்று
மன்னுற வமைத்துத் தன்பேர் வழங்கிடு மவையி லோர்ந்து
பன்னிய தேவர் சேனு பதிப்பெய ரினிது சாற்றி. (கூக)

காஞ்சிப்பதியில் குமரகோட்டம் என்றோர் இருக்கை செய்து,
அவ்விடத்து முருகப்பெருமான் எழுந்தருளியிருத்தல்.

பூசனை புரிந்தா னந்தப் புண்ணிய நகரந் தன்னிற்
பேசரு மிருக்கை யொன்று பெருவளத் தோடுஞ் செய்தே
யேசிலாக் குமர கோட்ட மெனப்பெய ரிசைத்துக் கோல
மாசிலாப் பிரம சாரி யாகவாங் கமர்ந்தா னன்றே. (கூஉ)

குமரகோட்டத்தைத் தரிசிப்போர் எய்தும் பேறு.

கந்தவேண் மருவு கோட்டங் கண்ணுறத் தெரிசித் தோர்கள்
வெந்தொழிற் புலைய ரென்னில் விரவிய பிறப்பே சோழ
மந்தணர் தலைவ ராவ ரந்தண ராதி யாய
முந்திய குலத்தோ ரென்னின் முத்திபை யடைவர் மாதோ. (கூங)

சூதமுனிவரிடம் காஞ்சிப்பதியின் காதைகளைக் கேட்ட முனிவர்கள் மகிழ்தல்.

மருந்தினு மினிய தீஞ்சொல் வரிச்சிலைப் புருவ மேந்துங்
கருந்தடங் கண்ணி பங்கன் காஞ்சிமா நகரின் காதை
திருந்தவே சூதன் சொல்லத் தெய்வத மறைக ளோது
மருந்தவ முனிவர் யாரு மதிசய மடைந்தா ரன்றே. (கூச)

பத்தொன்பதாவது
காஞ்சிபுரமான்மியம் உரைத்த அத்தியாயம் முற்றும்.

இருபதாவது
திருக்காளத்திமான்மியமுரைத்த அத்தியாயம்.

சூதமுனிவர் திருக்காளத்தியின் மகிமையை உரைக்கத் தொடங்கல்.

சிகரம் வானண வியதிருக் காளத்தி மகிமை
மசர வார்திரை விடமயின் றவன்வசிட் டனுக்குப்
பகரும் வண்ணமே பரிவோடும் பகருவ னென்ன
நிகரி லாத்தவச் சூதமா முனிவ னிகழ்த்தும். (க)

காஷ்மீரகண்டத்தில் ஓர் பாதகனை சுத்திரன் முற்பிறப்பிற் செய்த
புண்ணியத்தினால் ஓர் சிவயோகியை யடைதல்.

கணிகொள் பூம்பொழி லுடுத்தகாற் மீரகண் டத்தி
லணிகொள் பொன்னகர்க் கிணையொரு வளநக ரதனிற்
